# துணிச்சலான புதிய திட்டம்

வில்லார்டு ஆர். எஸ்பி

MAHARAJAH SERFOGI'S SARASWATHI
TANJORE
T
689
89
D05

# துணிச்சலான புதிய திட்டம்

(Bold New Programme)


வில்லர்ட் ஆர். எஸ்பி

எழுதியது

மொழிபெயர்ப்பு:

பா. லோகநாதன்


N-I

Published by arrangement with Harper Brothers. All rights reserved by Harper Brothers, 49 East 33rd St., New York 16, N.Y. Copyright, 1950, by Willard R. Espy.

---

Published by Higginbothams Ltd. and Printed by A. Sendall at
The Associated Printers (Madras) Ltd., Madras.

துணிச்சலான புதிய திட்டம்

ஹார்ப்பர் & பிரதர்ஸ் அநுமதியுடன்
தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது

THE TANJORE MAHARAJAH SERFOJI'S SARASVATI MAHAL LIBRARY * TANJORE *

# முன்னுரை

தொழில் வளத்தில் பின்தங்கியிருக்கும் பிரதேசங்கள் முன்னேற்றமடைவதற்கான தூண்டுகோலாக அமெரிக்க ஜனதிபதி ட்ரூமன் அறிவித்த நாலாவது அம்சம் என்ற துணிச்சலான புதிய திட்டம் ஒரு முக்கிய காரியத்தைச் சாதித்திருக்கிறது. அது வர்த்தகர்களையும் அரசியல் நிபுணர்களையும் சங்கடமான உறவில் பிணைத்திருக்கிறது. வர்த்தகம் ஒத்துழையாமலிருக்கலாம், அல்லது தேசீய, சர்வதேச நலன்களைப் புறக்கணித்து உடனுக்குடன் லாபம் சம்பாதிப்பதிலேயே முனையலாம் என்று அரசியல் நிபுணர் அஞ்சுகிறார். வர்த்தகரின் பயமோ வேறு விதமானது. தம்முடைய முதலீட்டை எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் அரசியல் விவகாரங்களில் சம்பந்தப்படுத்தாமலிருக்க விரும்புகிறார். அவருடைய அச்சத்திற்குக் காரணமிருக்கிறது. இதற்குமுன் அவர் கையைச் சுட்டுக் கொண்டிருக்கிறார்.

இருப்பினும், அமெரிக்க வர்த்தகரின் சொந்த நலனை உலக சமாதானத்திற்கும் சுபீட்சத்திற்கும் பயன் படுத்திக் கொள்ளலாம் என்பதில்தான் இந்த துணிச்சலான புதிய திட்டம் உதித்திருக்கிறது. முன்பே முன்னேற்றமடைந்திருக்கும் நாடுகள் யுத்தத்திலேற்பட்ட நாசத்திலிருந்தும் மீள உதவி செய்ய சர்க்கார் மானியங்களை எதிர்பார்க்கும் மார்ஷல் திட்டத்தைப் போன்றதன்று நாலாவது அம்சத் திட்டம்.

மார்ஷல் திட்டத்திற்கு முதல் வருஷச் செலவு 500 கோடி ரூபாய்க்கு மேலாயிற்று. நாலாவது அம்சத் திட்டத்தின் முதல் வருஷச் செலவு 5 கோடி ரூபாய்க்கு அதிகமாகாது. அதனுடன் சேர்ந்தாற்போல உலக பாங்கிலிருந்தோ அமெரிக்காவிலிருந்தோ பொது நலனுக்கான கடன்கள் கொடுக்க வேண்டியிருக்கும். ஆனாலும், சர்க்காரின் வேலை இத்திட்டத்தில் மட்டுப்

பட்டேயிருக்கிறது. தொழில் நுட்ப வசதியளித்து, ஊக்கமும் உற்சாகமும் உண்டாக்கி ஆலோசனை சொல்வதுடன் அதன் காரியம் நின்றுவிடுகிறது. பின் தங்கிய பிரதேசங்களில் தொழிற்சாலைகள் நிறுவி, அப்பிரதேசங்கள் ஸ்திரமாக நிலைத்திருக்கச் செய்யும் பெரிய வேலையை அந்தந்த பிரதேசங்களின் முயற்சியாலேயே செய்து முடிக்க வேண்டும். அவ்வரிய சேவைக்கு ஒத்தாசையாக அமெரிக்காவிலிருந்து தனிப்பட்டவர்களிடமிருந்து முதல் கிடைக்க வேண்டும்.

மற்ற யாரும் அவ்வளவு நன்ருகச் சாதிக்க முடியாததைத் தாம் செய்து காட்டுவதற்கான சந்தர்ப்பம் முதலாளிகளுக்குக் கிடைத்திருக்கிறது. நாலாவது அம்சத் திட்டத்தில் முதலாளிகள் பங்கெடுத்துக் கொள்ள மறுத்தாலும் பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சிக்கான முயற்சிகள் எவ்வாறே நடந்தேறும். முதலாளிகள் அதில் கலந்து கொள்ளவில்லையென்ருல் அவர்களுக்கு எதிராக அத்தகைய வளர்ச்சி ஏற்படலாம்.

சர்வதேச நலனுக்கென்ருலும் முதலைப் போடவேண்டுமென்று யாரும் கட்டாயப்படுத்த முடியாது. அப்படி கட்டாயப் படுத்திஞல், பிறகு அது தனிப்பட்டவர் முதல் என்று சொல்ல முடியாது. தேசீய காரணங்களுக்காக மட்டும் ஒரு முதலாளி தன் பணத்தை ஒரு தொழிலில் முதலாகப் போடமாட்டான். அத் தொழில் மூலம் லாபம் சம்பாதிக்க வேண்டுமென்றுதான் அவன் பணம் செலவு செய்வான். இப்போதிருப்பதைவிட அமைதியான நிலைமை முன்பு வெளி நாடுகளிலிருந்தபோதுகூட அமெரிக்க முதலாளி தன்னுடைய அலுவல்களை உள்நாட்டிலேயே கவனித்து வந்தான். அயல் தேசங்களில் முதல்போட முனைந்தபோது, 1920-ம் ஆண்டில் ஏற்பட்டதுபோல், பிற்பாடு அதற்கு அவன் வருத்தப்படவேண்டியிருந்தது.

தொழில் நுட்ப வசதியளிப்பதற்கும் மேலாக தனி முதலாளிகள்மூலம் பண உதவி செய்ய வேண்டிய கட்டம் வருவதற்

குள் சர்வதேச நிலைமை சீர்திருந்த வேண்டும். நியாயமான லாபம் கிட்டும் என்ற நம்பிக்கை முதலாளிகளுக்கு உண்டாக வேண்டும். தாங்கள் முதல் போட்டிருக்கும் நாடுகளில் தங்களுக்கெதிராக அந்நாடுகள் நடவடிக்கைகள் ஏதும் எடுக்கமாட்டா என்ற உத்தரவாதத்தை முதலாளிகள் எதிர் பார்ப்பார்கள்.

அமெரிக்க முதலாளிக்கு இதெல்லாம் சாதாரணமாகத் தெரிந்த விஷயம்தானே எனத் தோன்றுகிறது. பின்தங்கிய தேசங்களில் பல அவன் சுற்றுப் பிராந்தத்திலே இருப்பதையே விரும்பாததுதான் அவனுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. தனக்கு லாபம் கிடைத்தாலும், தான் ஒரு நல்ல காரியத்தைச் செய்கிருன் என்று அவன் நினைக்கப் பார்க்கிருன். வல்லரசுகள் பல வருஷங்கள் தங்கள் வலிமையைத் துஷ்பிரயோகம் செய்ததின் பலனுக, தன்மீது அப்பிரதேசங்களில் அவநம்பிக்கை தோன்றியிருக்கிறது என்பதை அவன் உணர முடியவில்லை. கார்ல் மார்க்ஸ் கொள்கைகளைப் பின்பற்றுவோர் இந்த அவநம்பிக்கை நியாயமானதென்ற எண்ணத்தைப் பரப்பி வருகிருர்கள்.

ஆகவே, தனி முதலாளிகள் தங்கள் பணத்தைப் பின்தங்கிய நாடுகளின் முன்னேற்றத்திற்காகப் போடும்படி தூண்டுவதுடன் நாலாவது அம்சத் திட்டம் நிற்பதற்கில்லை. உபயோகமற்ற கட்டுப்பாடுகள் விதிக்காமல் அந்த பணத்தை வாங்கி பயன்படுத்திக் கொள்ளும்படி பின்தங்கிய தேசங்களைத் தூண்டியாக வேண்டும். அதனுல் இருதரப்பிலும் பாதுகாப்பு அவசியமாகிறது. முதல் போடுவதைப் பற்றிய விதிகளை ஐக்கிய நாடுகள் நிர்ணயிக்கலாம். எனினும் ஒவ்வொரு முயற்சிக்கும் தனிப்பட்ட பிரச்னை எழும். ஒவ்வொரு தேசத்திலும் வெவ்வேறு கும்பல்கள் வெவ்வேறு யோசனைகளைப் பிரச்னையைத் தீர்ப்பதற்குக் கூறலாம்.

ஏகாதிபத்திய சுரண்டல் என்ற பயம் 1900-ம் ஆண்டின் நிலைமையைப் பற்றியதே தவிர அந்நிலமை இப்போது நீடித்திருக்கவில்லையென்பதே அமெரிக்கர் கருத்து. 1950-ம்

ஆண்டின் பிரச்னைகள் வேறு விதமானவை. அமெரிக்க முதலாளிகள் வெளி நாடுகளில் தவறுகள் செய்திருக்கலாம். ஆனால் அதே பிராந்தியங்களிலுள்ள உள்நாட்டு முதலாளிகளை விட அமெரிக்கர் நன்ருகவே நடந்து கொண்டு வந்திருக்கின்றனர்.

அமெரிக்கர்மீது சொல்லப்படும் குற்றச் சாட்டு சுரண்டலைப் பற்றி மட்டுமல்ல. பொருளாதாரச் சுரண்டலைவிட அதிகமாக அமெரிக்கரின் பெருமைத் தனத்தைப் பின்தங்கிய நாடுகளில் கண்டு சிலர் அஞ்சுகின்றனர். அமெரிக்கர் அயல் நாட்டிற்குச் சென்ருல் அவர்கள் தனித்து நின்று உள்நாட்டினரை அலட்சியமாகப் பாவிக்கின்றனர் என்றொரு குற்றச் சாட்டு. ரஷ்யாவுக்கெதிராக பலம் திரட்டுவதில் தங்களைச் சேர்த்துக் கொள்ள நாலாவது அம்சத் திட்டத்தை உபயோகிப்பார்கள் என்று பின்தங்கிய தேசங்களில் சிலர் பயப்படுகிருர்கள். அத்தகைய வல்லரசுப் போராட்டங்களில் தங்களைப் பிணைத்து வைப்பதை அவர்கள் விரும்பவில்லை.

பின்தங்கிய பிரதேசத்தை முன்னுக்குக் கொண்டு வருவதென்பது மிகக் கடினமான, சிக்கல்கள் நிறைந்த செயலாகும். பொருளாதாரம் மட்டுமின்றி சமூக சாஸ்திரம் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆள் பலம் மட்டுமின்றி ஆத்மீக ஞானமும் அவசியம். பொருள் உற்பத்தியைப் பெருக்குவதோடு சேவை முடிந்துவிடவில்லை. எல்லா மக்களுக்கும் பயன்படும்படி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

நாலாவது அம்சத் திட்டத்தை எதிர்த்து இன்னும் பல சிக்கல்கள் இருக்கின்றன. வெளி நாட்டு முதல் பக்கபலமாக இருக்குமே தவிர, முன்னேற்றத்திற்கு அவசியமான பெருந்தொகைகள் உள்நாடுகளிலேயே கிடைக்க வேண்டும். ஆனால் பின்தங்கிய தேசத்தில் நிறைய பணம் எங்கிருந்து தோன்றும்? வரி வசூல் மூலம் சேகரித்தால், தனிப்பட்டவர் முயற்சியோ, ஸ்திரமான நடுத்தர வகுப்பினரோ எழ முடியுமா? ஸ்திரமும்

சுபிட்சமும் பொருந்திய உலகத்தை ஸ்தாபிக்க, புரட்சியிலோ பிற்போக்கான கொள்கைகளிலோ நம்பிக்கை வைக்காத நடுத்தர வகுப்பு வலிமையுடன் வாழ வேண்டியது அவசிய மல்லவா ? சில பின்தங்கிய நாடுகளில் முதலாளிகள் தங்கள் தொழிலாளர்களின் சம்பளத்தை இருமடங்காக்கினர். தொழி லாளர்களோ வாரத்தில் ஆறு நாட்களுக்குப் பதில் மூன்று நாட்கள் மட்டும் வேலை செய்யத் தொடங்கினர். மூன்று நாட் கள் வேலைக்குக் கிடைக்கும் சம்பளம் அவர்களுடைய தேவைக் குப்போதும். அப்படிப்பட்டவர்களின் தேவையை எப்படி அதிகமாக்குகிறது ?

சாமான்களை வாங்குவதற்கு ஜனங்களிடம் பொருள் வசதி யில்லாதபோது, தங்குதடையின்றி வியாபாரம் செய்வதற்கு வேண்டிய பெரிய பிரதேசங்களில்லாதபோது, அதிகமாக உற் பத்தியைப் பெருக்கி என்ன லாபம் ? தேசீய உணர்ச்சியின் காரணமாகத் தோன்றும் பிரச்னைகளை எப்படி சமாளிப்பது? கால னிகளாயிருந்த நாடுகளில் தொழில்வளம் பெருக ஆரம்பித்த வுடன் லாபகரமற்ற தங்கள் தொழிற்சாலைகளைக் காக்கும் பொருட்டு அந்நாடுகளில் அயல்நாட்டு முதல், வியாபாரம் ஆகியவை மீது தடைகளை விதித்தால் என்ன செய்வது ?

எவ்வளவுதான் தீர்க்கமாக யோசித்துத் திட்டம் வகுத்தா லும் சரி, இம்மாதிரி எழும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது. நடைமுறையில் அவற்றிற்கு வழி தேட முடியும். தவறுகளைத் தவிர்க்க முடியாது. சிநேக பாவம் முன்னேறி சுதந்திரமும் சுபிட்சமும் பெற்று விளங்கும் உலகத்தை நிர்மா ணிக்க பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். . தொழில் நுட்ப வசதியும், பின்தங்கிய தேசங்களுக்குத் தனிப்பட்டவரின் பொரு ளுதவியும் அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் இரண்டாகும். நாலாவது அம்சம் என்று அதைச் சொல்வதற்குக் காரணம் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையை வர்ணிக்கும் திட்டத் தின் நாலு அம்சங்களில் அது நாலாவதாக விளங்குவதுதான்.

ஐக்கிய நாடுகளை ஒரு முகமாக அமெரிக்கா ஆதரித்து நிற்க வேண்டுமென்பது முதல் அம்சம். மார்ஷல் திட்டம், சர்வதேச வர்த்தக சங்கம் முதலியவையோடு பொருளாதார ஒத்துழைப்பை ஸ்தாபிக்க வேண்டுமென்பது இரண்டாவது அம்சம். வட அட்லாண்டிக் உடன்பாட்டின்படி ஒருமித்த பாதுகாப்பை நிலை நாட்ட வேண்டுமென்பது மூன்றாவது அம்சம். நாலாவது அம்சம் இந்த மூன்று அம்சங்களுடன் சேர்ந்தே நிற்கிறது. தொழில் வளம் பெருகிய நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதென்பதுமட்டும் அமெரிக்க நோக்கமன்று. உலக பொருளாதார நிலைமையை ஒழுங்குபட அமைக்க வேண்டுமென்பதே அதன் நோக்கம். உலக சமாதானத்தைப் போலத்தான் சுபிட்சமும். ஓரிடத்திலுள்ள வறுமை மற்றோரிடத்திலுள்ள சுபிட்சத்தைப் பாதிக்காமலிருக்காது.

நாலாவது அம்சம் ஒரு சட்டம் அல்ல. அது ஒரு கொள்கையை, மனப்பாங்கை விவரிக்கிறது. அமெரிக்க காங்கிரஸ் அதற்கு வேண்டிய சட்டத்தை நிறைவேற்று முன்பே அந்த கொள்கை அமலிலிருந்து வந்திருக்கிறது. உதாரணமாக, 1949-ல் குறைந்த செலவில் பொருளாதார கூட்டுறவு நிர்வாகம் தேசீய சீனாவில் லட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கை நிலையை அபிவிருத்தி செய்திருக்கிறது.

இப் புஸ்தகத்தின் நோக்கம் இதுதான் : இன்றைய சமுதாயத்தில் யுத்தத்தையும் எதேச்சாதிகாரத்தையும் தவிர்க்கவேண்டுமானால் துணிச்சலான புதிய திட்டமாகிய நாலாவது அம்சம் போன்றது அவசியம். கம்பளி பூச்சி பட்டுப் பூச்சியாக மாறுவதைப் போலவேதான் அமெரிக்க வர்த்தகத்தின் வளர்ச்சியும் நாலாவது அம்சத்தில் வந்து நின்றிருக்கிறது. மற்ற நாடுகளின் உதவியும் ஒத்துழைப்பும் அவசியமென்றாலும், நாலாவது அம்சத்தைப் போன்ற திட்டத்தைத் தலைமை வகித்து நிறைவேற்றி வைப்பதற்கான தகுதியும், ஆற்றலும், குணமும் அமெரிக்க மக்களிடையே பொருந்தியிருக்கின்றன.

ஆகவே, இது உற்சாகமூட்டும் நூல். "நாசம், நாசம், நாசம்," என்று என் பக்கத்திலிருப்பவர்கள் அலறுவது எனக்குக் கேட்கிறது. அணுக்குண்டு, ஜலவாயுக் குண்டு, அவற்றின் நாசகார வேலையைப் பற்றி அவர்கள் பறை சாற்றி வருகிறார்கள். ஜகமெங்கும் பசிப் பிணி மக்களை வாட்டும் காலத்தை எதிர் பார்க்காமல் அவர்களால் சாப்பிட முடியாது. நம்பிக்கை யென்பது அவர்களுடைய ஜாதகத்தில் இல்லை. அமெரிக்காவிலும்கூட சுதந்திரம் நலிந்து சர்க்கார் ஆதிக்கம் பெருகி வருகிறதல்லவா, என்கிறார்கள். இன்னொரு பொருளாதார மந்தம் தலை தூக்கப் பார்க்கிறதே என்கிறார்கள். அவர்கள் கண்களில் எங்கு பார்த்தாலும் கம்யூனிஸ்டுகள் தென்படுகிறார்கள்.

ஏதேச்சாதிகாரம் நாளுக்குநாள் பலமதிகரித்து வருகிறது, ஜனநாயகத்தின் சக்தி குன்றி வருகிறது என்று அவர்கள் நடுங்குகிறார்கள். ஆனால், மரணத்தின் ஒலி கேட்டால் அது சுதந்திரத்தின் அலறல் அல்ல. என் பக்கத்திலுள்ளவர்களை நடுங்கச் செய்யும் கம்யூனிஸம் எதிர்காலத்தின் பேரொலியல்ல. எல்லாம் வல்ல சர்க்கார் அதிகாரத்தின் கீழ் அகப்பட்டு அவதியுறும் மனிதனின் அடிமைத் தனத்தின் கடைசி குமுறல் தான் அது. புரட்சியின் நாதம் கேட்கிறோம், வாஸ்தவம்தான். இரண்டாவது உலக யுத்தத்தில் அநேகமாக ஒரே நாளில் உற்பத்தியை இருமடங்காக அதிகரிக்க அமெரிக்காவை உதவிய புரட்சியைப் போன்று அது இருக்கலாம்.

சுதந்திர மக்களின் சக்தி ஆக்க வேலையில் ஈடுபடச் செய்வதே கம்யூனிஸ அட்டகாசத்தின் விளைவாக இருக்கலாம். ஜனநாயகம் தன்னுடைய தவறுகளை உணர்ந்து வருகிறது, எச்சக்தியை வளர்க்க வேண்டுமென்று அறிந்து வருகிறது. கம்யூனிஸம் ஜனநாயகத்தை அழிக்கவில்லை, ஜனநாயகத்தின் தத்துவம் பரிணமிக்குமாறு கட்டாயப்படுத்துகிறது, அவ்வளவுதான்.

பழைமையின் உளுத்துப்போன கட்டுக்கோப்பு உதிர்ந்துபோகாமல் காக்கவோ, அல்லது கம்யூனிஸம் பரவாமல் தடுக்கவோ

நாலாவது அம்சத்தை அநுசரித்தால் அது வருந்தத்தக்க தவருக முடியும், நோக்கமும் வெற்றி பெருது. ரஷ்ய நட்டுவனின் இசைக்குத் தகுந்தவாறு நடனமாடும் விதமாகவே முடியும். உண்மை என்னவென்ருல், ரஷ்யாவும் அமெரிக்காவும் அத்யந்த நண்பர்களாக இருந்தாலும்கூட, நாலாவது அம்சத் திட்டம் இப்போது போலவே அவசியமானதாயிருக்கும் ; அமெரிக்க யுக்தியின் இயற்கையான விளைவாக விளங்கும்.

துணிச்சலான இப்புதிய திட்டம் ராணுவப் பாதுகாப்புக்குப் பதிலாகத் தோன்றியதல்ல. எனினும், ஜனநாயக நாடுகள் சேமித்து வரும் யுத்த தளவாடங்களை உபயோகிக்காமலிருப்பதற்கான சிறந்த வழி நாலாவது அம்சம்தான்.

நாலாவது அம்சம் உலகத்தை அமெரிக்காவின் பிரதிபலிப்பாக மாற்றி விடாது. அல்லது தேங்கிப்போய்க்கிடக்கும் பொருளாதார நிலைமையை அமெரிக்க பணமும் தொழில் நுட்பமும் மட்டும் சீர்திருத்தி விடாது. பின்தங்கிய நாடுகள் தாங்கள் செய்ய வேண்டிய வேலையைத் திறம்பட முடிக்க உதவும், ஊக்கமளிக்கும், அவ்வளவுதான். முன்னேற்றத்தின் மார்க்கமும் அமெரிக்காவுக்குப் பிடித்த விதமாய் இல்லாமல் போகலாம். அதைப்பற்றிக் கவலையில்லை. அமெரிக்கர் ஏதேச்சாதிகாரிகள் அல்ல, திறமையிலும் முயற்சியிலும் நம்பிக்கையுள்ளவர்கள்.

சோவியத் முறை நாலாவது அம்சத் திட்டத்தினுல் அதிர்ந்துவிடுமென்று யாரும் எதிர் பார்க்கவில்லை. அமெரிக்கர்கள், சீனர்கள் போகும் வழி ஒன்றென்ருல், அதேபோல ரஷ்யர்களும் அவர்களுக்கென்று ஒரு பாதையை வகுத்துக்கொண்டிருக்கிருர்கள். ஆனுல், எதிர்காலம் ரஷ்யாவின் தயவிற்குக் காத்திருக்கவில்லையென்பதை நாலாவது அம்சம் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்க முடியும்.

# பொருளடக்கம்

## முதல் பாகம்

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | திட்டத்தின் அடிப்படை .. .. .. .. | 15 |
| 2. | விலகி நிற்பது சாத்தியமா? .. .. .. | 30 |
| 3. | பட்டினிச் சாவைத் தவிர்க்க முடியுமா? .. .. | 51 |
| 4. | சாம்ராஜ்யம் மறைந்தது: நாலாவது அம்சத் திட்டம் உயதமாயிற்று .. .. .. .. | 73 |
| 5. | நல்ல அயலான் கொள்கை—ஒரு மணியோசை .. | 96 |

## இரண்டாம் பாகம்

| | | |
|---|---|---|
| 6. | தென்னமெரிக்கா தேறிவருகிறது .. .. | 119 |
| 7. | ஆப்பிரிக்கா—இருள் விலகுகிறது .. .. | 139 |
| 8. | பாலைவனத்தில் பூந்தோட்டம் .. .. .. | 151 |
| 9. | ஆசியாவின் மத்திய கேந்திரம் .. .. .. | 159 |
| 10. | ஆசியாவை ஆசியர்கள்தாம் காப்பாற்ற வேண்டும். | 172 |
| 11. | ஓஷினியாவும் சீனுவும் .. .. .. .. | 190 |
| 12. | சுதந்திர ஐரோப்பா—உடலில்லை .. .. .. | 202 |
| 13. | அடிமை ஐரோப்பா—தலையில்லாப் பிண்டம் ... | 207 |

மூன்றும் பாகம் பக்கம்.

14. கூட்டுறவே திறவுகோல் .. .. .. .. 217

15. வேண்டிய சக்தி இருக்கிறதா ? .. .. .. 223

16. மெஷினும் பணமும் .. .. .. .. 229

17. மகத்தான முடிவு .. .. .. .. 234

அநுபந்தம்—1.

இந்தியாவில் தயாராகிவரும் பிரதான முன்னேற்றத் திட்டங்கள் .. .. .. .. .. .. 248

அநுபந்தம்—2.

இந்திய—அமெரிக்கத் தொழில் நுட்ப ஒப்பந்தம் .. 251

# திட்டத்தின் அடிப்படை

1949-ம் ஆண்டில் அமெரிக்க காங்கிரஸ் கூட்டத்தை அங்கு ரார்ப்பணம் செய்யும்போது ஜனுதிபதி ட்ரூமன் தம் பேருரை யின் நாலாவது அம்சத்தில் தேசத்தின் கொள்கையாக பின் வருமாறு கூறினர்: "நம் விஞ்ஞான அறிவு, தொழில்நல முன்னேற்றம் ஆகியவற்றின் பலன்களைப் பின்தங்கிய பிரதேசங் களின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் பயன்படுமாறு ஒரு துணிச்சலான புதிய திட்டத்தை நாம் மேற்கொள்ள வேண்டும்." அதில் அமெரிக்க முதலாளிகள், விவசாயிகள், தொழிலாளர் கள் ஆகியோரின் ஒத்துழைப்பிற்கு அவர் அறை கூவினர். இப் பணியில் மற்ற நாடுகளையும் உதவும்படி கேட்டுக் கொண்டார்.

இம் மகத்தான யோசனையை பொதுப்படையாகத்தான் ஜனுதிபதி அறிவித்திருந்தார். அவர் மனதிலிருந்த குறிப் பிட்ட பிரதேசங்கள் ஏதுமில்லை. ஆகக்கூடிய செலவையும் மதிப்பிட்டுச் சொல்லவில்லை. அதனுல் சிலர் ஜனுதிபதியின் உரையை ஒன்றுமில்லாத விஷயம் என்று சொல்லித் தள்ளி விட்டார்கள். "ஏதாவது பேச வேண்டுமோ இல்லையோ, அதற் காக அவர் அதைச் சொல்லி வைத்தார்," என்று விமர்சனம் செய்தார்கள்.

ஆனுல் கூடிய சீக்கிரமே அவர்களுடைய முடிவு தவருனது என்று நிரூபணமாயிற்று. ஐரோப்பிய அபிவிருத்தி திட்டத் திற்கு எவ்வாறு ஜெனரல் மார்ஷல் 1947-ம் ஆண்டில் ஹார் வார்டில் தம் பேருரை மூலம் அடிகோலினுரோ, அவ்வாறே ட்ரூமனும் அமெரிக்காவை மற்றொரு புதிய பாதையில் நடத்திச் செல்கிருர், அதிலிருந்து திரும்புவது சுலபமல்ல, என்பது தெளிவாயிற்று. சில அமெரிக்கர்கள் இதை உடனே உணர்ந் தனர். ஹிரோஷிமாமீது அணுக்குண்டு வீசிய செய்தி கேட்ட போது எப்படி திடுக்கிட்டார்களோ, அதைப்போல இப்போதும்

அவர்கள் மலேத்து விட்டார்கள். முன்கூட்டி அறிவிக்காமல், இவ்வளவு பிரம்மாண்டமானதொரு திட்டம் எப்படி உருவக மாயிற்று என்று அவர்கள் வினவினர்கள்.

அதற்குப் பதில் இதுதான் : திட்டம் துணிச்சலானதென்ரு லும் சிறிதளவில் புதிதல்ல. மேனுட்டுத் திறமையைப் பின் தங்கிய பிரதேசங்களில் பயன்படுத்தி வறுமையையும் பிற்போக் கையும் தகர்த்தெரிய வேண்டுமென்ற கருத்து உட்ரோ வில் ஸன் காலத்திலேயே தோன்றியது. இன்னம் வசீகரமான ரூபத்தில் ஹெர்பர்ட் ஹூவர், பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் ஆகியோரின் அபிலாஷையாக இருந்து வந்தது. “ஏதோ ஒரு காலத்தில்” ஏற்படக்கூடிய கனவாக இரண்டாவது உலக யுத்தத் திற்கு வெகு நாட்களுக்கு முன்பே அது சிந்திக்கப்பட்டு வந்தது.

அதற்கான கடைக்கால் அமெரிக்க வர்த்தகர்கள், மிஷனரி கள், லாபத்தைக் கருதாது உழைக்கும் ஸ்தாபனங்கள், தொழில் நுட்ப விற்பன்னர்கள், சர்க்கார் ஸ்தாபனங்கள் முதலியோரால் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில், திருவிதாங்கூரில் 80 லட்சம் டாலர் செலவில் அம்மோனியம் ஸல்பேட் என்ற பொருளே தயாரிக்கும் தொழிற் சாலேயை வில்லியம் டி. பாலி நிர்மாணித்து முடித்தார். சரியான எருவைக் கண்டிராத நிலத்தில் அம்மோனியம் சல்பேட் போடுவதால் நெல் விளேச்சல் இருமடங்காகலாம். அமெரிக்க முயற்சியின் பயனுக, இன்னும் சில காலத்தில் திருவிதாங்கூர் வாசிகளுக்குப் பஞ்சப் பயம் குறையும். பெங்களூரில் விமானங் களேத் தயாரிக்கும் தொழிற்சாலேயில் தொழிலாளர்களுக்கு அமெரிக்காவில் கிடைக்கும் சிறந்த சாதனங்களுக்குச் சமமாகச் சம்பளமும் மற்ற வசதிகளேயும் மிஸ்டர் பாலி ஆரம்பித்து வைத்தார். மூன்று வருஷங்களுக்குப் பிறகு அமெரிக்காவில் அதற்குச் சமமாக உள்ள தொழிற்சாலேகளேவிட 23 சத விகிதம் சீக்கிரமாக பெங்களூர் தொழிற்சாலேயில் விமானங்கள் செய்யப் பட்டு வருகின்றன.

அமெரிக்க தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக் கூடியதற்குச் சமமாக இந்தியாவில் பயர்ஸ்டோன் கம்பெனி தனது தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறது. அமெரிக்க திறமையைவிட அதிகமாகக் கூட தொழிலாளர்கள் இந்தியாவில் வேலை செய்கிறுர்கள் என்பதைக் கண்டிருக்கிறது.

உபயோககரமான சேவை செய்வதற்கு, அமெரிக்கருக்குச் சொந்தமான கம்பெனிகள் அயல்நாடுகளில் பெரிதாகவோ, பொருளாதாரத் துறையில் முக்யத்துவம் வாய்ந்ததாகவோ இருக்க வேண்டுமென்பதில்லை. அநேகமாக அவை காட்டி வைக்கும் உதாரணமே அவற்றின் பிரதான சாதனையாக விளங்குகிறது. அவையிருக்கும் பிரதேசத்தினர், அவற்றின் தொழிலாளர்கள் ஆகியோரின் நலனுக்காக ஓரளவு பொறுப்பை ஏற்றுக்கொள்வதில் பலனிருக்கிறது என்பதை அவை நிரூபித்திருக்கின்றன. அதற்கு உதாரணமாக ஈக்வடாரில் உள்ள எம்போடெல்லடோரா நாஷனல் என்ற கம்பெனியைச் சொல்லலாம். 1946-ம் ஆண்டில் சுமார் நூறு ஈக்வடார் மக்களை பெப்ஸிகோலா என்ற பானத்தை புட்டியில் போடுவதற்காக அது அமர்த்தியது. தொழிலாளர்கள் மட்டுமின்றி, மானேஜர், எஞ்சினியர் போன்ற முக்கிய சிப்பந்திகளும் ஈக்வடார் வாசிகளே. பெப்ஸிகோலா குடிப்பதற்கு இனிய பானமாயிருக்கலாம். ஆனுல் முக்கியமான உணவு என்று அதைச் சொல்ல முடியாது. அது இல்லாமலே ஈக்வடார் மக்கள் வாழ்ந்திருக்கலாம். எனினும் இந்த கம்பெனி அந்நாட்டுத் தொழிலாளர்களுக்கு ஒரு முக்கிய சேவை செய்திருக்கிறது. தொழிலாளர்-முதலாளி உறவு சுமுகமாக இருப்பதற்கான ஒரு நூதனமான வழியைக் காண்பித்திருக்கிறது.

முதலில், லாபகரமாக வியாபாரம் செய்வதற்குத் தடையாக பல இடையூறுகள் இருப்பதை இக்கம்பெனி கண்டது. நூற்றுக்கு 40 பேர்தான் வேலைக்கு வருவார்கள். அதற்காக ஈக்வடார் வாசிகளைத் தூற்றிக்கொண்டிருக்காமல், கம்பெனி தொழிலாளர்களுக்கென ஒரு வைத்தியரை நியமித்தது.

நோயாளித் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்குவதற்குப் பதிலாக, மேனாட்டு வைத்திய முறையில் அவர்களுக்கு சிகிச்சை அளித்தது. க்ஷயம் உள்ளவர்களை ஓய்வுப்பண்ணைகளுக்கு அனுப்பியது. வேலை செய்ய முடியாத நாட்களுக்கும் நோயாளித் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுத்துவந்தது. சீக்கிரமே நோயாளிகளும் சுகம்பெற்று மறுபடியும் வேலைக்கு வந்தனர். இருப்பினும், பொதுவாக தொழிலாளர்களுக்குச் சாமர்த்தியம் போதாது, சரியான உணவு அருந்துவதில்லை. ஆகவே, முதலாளிகள் கம்பெனியிலே ஹோட்டல் ஒன்றை வைத்து தொழிலாளர்களுக்கு இலவசமாக ஆரோக்கியமான சாப்பாடு கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். அதன் பலன் என்ன? நூற்றுக்கு 95 பேர் கிரமமாக வேலைக்கு வர ஆரம்பித்தார்கள், பொருளுற்பத்தியும் இரு மடங்காகப் பெருகியது.

தொழிலாளரிடையே திருட்டுத்தனமுண்டு என்று சிலர் கம்பெனியிடம் சொன்னார்கள். ஈக்வடார் தொழிலாளிக்குச் சாதாரணமாக சராசரி இரண்டரை ரூபாய்க்கும் குறைவாகவே ஒரு நாளுக்குக் கூலி கிடைக்கும். கம்பெனித் தொழிலாளர்கள் சம்பளத்தை ஆறேகால்ரூபாய் என்று முடிவு செய்தார்கள். கம்பெனியில் திருட்டுத்தனம் தலைகாட்டவில்லை.

வர்த்தக முன்னேற்றத்தில் மட்டுமின்றி அமெரிக்கரின் கொள்கைகளையும் கருத்துகளையும் பரப்புவதிலும் கூட தனிப்பட்டோரின் முயற்சி பாராட்டத்தக்கது. அமெரிக்க படங்கள் மீது நமக்கு அபார மோகமில்லாமலிருக்கலாம், இருந்தாலும் உலகம் பூராவும் அமெரிக்காவைப்பற்றி மக்கள் அறிந்து கொள்ள ஹாலிவுட் மதிப்பதற்கரிய சேவை செய்திருக்கிறது என்பதை நாம் மறுக்கமுடியாது. அமெரிக்க தொழில் நுட்பங்களைக் கற்றுக்கொடுக்க அயல்நாட்டு மாணவர்களை ஒவ்வொரு வருஷமும் வெஸ்டிங்ஹவுஸ் போன்ற பல அமெரிக்க ஸ்தாபனங்கள் அழைத்துவருகின்றன. 11 மொழிகளில் 19 பதிப்புகளாக 70 லட்சம் பிரதிகளுக்கு மேல் ரீடர்ஸ் டைஜஸ்ட் என்ற பத்திரிகை ஒவ்வொரு மாதமும் விற்கிறது. மா

நிலம் முழுதும் மக்களின் ஆசைகளும் கனவுகளும் ஒரு வகைப்பட்டவை என்பதை நிரூபிக்க வேறு என்ன சான்று வேண்டும் ?

பின்தங்கியுள்ள பிரதேசங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்தையும், அவற்றின் முன்னேற்றத்தினால் உண்டாகக்கூடிய நன்மையையும் லாபமின்றி சேவை செய்துவரும் ஸ்தாபனங்கள் நன்கு உணர்ந்திருக்கின்றன. குறைந்த செலவிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது சாத்தியம் என்பதை இந்த ஸ்தாபனங்கள் செயல்மூலம் காட்டியிருக்கின்றன. மத்திய கிழக்குப் பிரதேசங்களில் சேவை செய்துவரும் நியர் ஈஸ்ட் பவுண்டேஷன் என்ற ஸ்தாபனத்தின் வருஷாந்திரச் செலவு சில ஆயிரம் டாலர்கள்தான். ஆனால் நாட்டுப்புறங்களின் முன்னேற்றத்துக்காக அது கிராமம், கிராமமாகச் செய்துவரும் தொண்டினால் பல்லாயிரக்கணக்கான மக்களின் நிலை உயர்ந்திருக்கிறது. ஜன்ம ஜன்மங்களாய் நீடித்திருந்த கொள்ளை நோய் போன்ற வியாதிகளை ராக்பெல்லர் பவுண்டேஷன் அகற்றியிருக்கிறது.

நல்லெண்ணமும் உயர்ந்த தத்துவங்களும் மனதில் படிய வேண்டுமானால், தேகம் நோயால் மெலிந்து வாடியிருப்பது அசம்பாவிதம் என்ற உண்மையை மத போதகர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அவர்கள் ஆங்காங்கே கோயில்(சர்ச்)களை நிர்மாணிப்பதுடன் நிற்கவில்லை. ஆஸ்பத்திரிகள், கல்லூரிகள், உழவுத் தொழில் கற்றுக்கொடுக்கும் பண்ணைகள் முதலியவற்றையும் பின்தங்கிய தேசங்களில் கட்டிவருகிறார்கள்.

பத்து ஆண்டுகளுக்குமுன் உலக முன்னேற்றத்துக்கான தொரு திட்டமென்பது ராக்கெட் விமானத்தைப்போல அசம்பாவிதமானதாய் தோன்றியிருக்கும் சாதாரண அமெரிக்கனுக்கு. ஆனால் அவனுக்கும் தெரியாமலே சிறிது சிறிதாக அவனது மனம் அத்தகைய திட்டத்திற்குப் பக்குவமாகி வந்திருக்கிறது. தென்னமெரிக்க நாடுகள் விஷயத்தில் அனுஷ்

டிக்கப்பட்ட சிநேகபாவமான கொள்கை, ஈடுக்குக்கடன் என்ற திட்டம், இரண்டாவது உலக யுத்தம், யுத்தத்தில் சேத மடைந்த நாடுகளுக்கு உதவி யளிப்பதற்காக உண்டான ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம், ஐக்கிய நாடுகள், ரஷ்யாவுக்கும் மேனுடு களுக்குமிடையே தோன்றி வளர்ந்த வேறுபாடு, கடைசியாக மார்ஷல் திட்டம் எல்லாம் இந்த மனப்பக்குவத்திற்குக் காரண மாயிருந்தன.

மற்றவர்கள் முன்னேற உதவுவதன்மூலம் நாம் முன் னேறுவது சாத்தியமென்ற கருத்து கொண்ட மார்ஷல் திட்டம் ஐரோப்பாவுக்கு உகந்ததென்றுல் சுதந்திர உலகிலுள்ள மற்ற நாடுகளுக்கும், அக்கொள்கை நியாயமானதாயிருக்கவேண்டும் என்று சிலர் கூற ஆரம்பித்தார்கள். 1949-ம் ஆண்டில் அமெரிக்காவில் தோன்றிய பொருளாதார மந்தம்போன்ற நிலைமை பின்தங்கிய தேசங்களை அபிவிருத்திசெய்வதன் அவ சியத்தை வற்புறுத்தியது.

ஐரோப்பிய தொழில்வளம் முன்னிருந்த நிலைமையை அடைந்துவிட்டால், சர்வதேச கூட்டுறவு தேக்கம் அடைந் திருக்கும் தற்சமயத்தில் பொருள்களை வியாபாரம் செய் வதற்கு வேண்டிய அளவு வசதியிராதென்பது வெளிப் படையாயிற்று. குறுகிய பிரதேசத்துக்குள் உயிர்போகுமளவு வர்த்தகத்தில் போட்டியிடுவதால், வர்த்தக யுத்தமே விளையும். அதைத் தொடர்ந்து, நாணயத் தேக்கம், அதிக இறக்குமதி வரி, நாணய மதிப்பைக் குறைத்தல் போன்ற நட வடிக்கைகள் தோன்றும். நிலைத்திருக்கக்கூடிய அமைதிக் கும், சுபிட்சமான உலகத்திற்கும் மேற்சொன்ன நடவடிக்கை கள் விரும்பத்தக்க பீடிகைகள் என்று யாரும் சொல்ல மாட்டார்கள்.

அவற்றிற்குப் பதிலாக, ஆசியா, ஆப்பிரிக்கா, தென்னமெ ரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் முதலியவற்றில் செழிப்புள்ள புதிய மார்க்கெட்டுகளை ஏற்படுத்துவதன்மூலம் வர்த்தக யுத்

தத்தைத் தடுக்கலாம் என்னும் எண்ணம் பொருளாதார நிபுணர்கள், வர்த்தகர்கள் முதலியோருக்குத் தோன்றியது.

இன்று உலகத்திலுள்ள மக்களில் பாதிக்குமேற்பட்டவர்கள் அரை வயிறு உணவுமின்றிக் காலங் கழிக்கின்றனர். உடலை விட்டு உயிர் நீங்காமல் காப்பதிலேயே அவர்களின் சக்தி வற்றிப்போய் விடுகிறது. வறுமையிலும், மடைமையிலும் அவர்கள் ஆரோக்கியமற்ற சூழ்நிலையில் நாட்களைக் கடக்கின்றனர். சாதாரணமாக, ஓர் அமெரிக்கன் மணம்புரிந்து கொள்ளலாமா வேண்டாமா என்று யோசிக்கக்கூடிய பிராயத்தில், அவர்கள் மடிகிறார்கள். இந்தியாவில் ஒரு தொழிலாளிக்கு தினம் நாலணாத்தான் வருமானம் கிடைக்கலாம். சீனாவில் ஒரு மணிநேர வேலைக்கு ஓரணாகூட கிடைக்காமலிருக்கலாம். எகிப்திலுள்ள சில தொழிலாளிகளின் வருஷாந்திர வருமானம் 95 ரூபாய்தான்.

ஆமாம், அதைப்பற்றி நமக்கென்ன கவலை? மனிதர்களுக்கு இயற்கையாகத் தோன்றக்கூடிய அனுதாபம் இருக்கவே இருக்கிறது. ஆனால் அதுமட்டுமே சர்க்காரின் திடமான கொள்கையாக உருவகமாகிவிடாது. ஆக்க வேலையில் ஈடுபடக்கூடிய அமோகமான, அரிய மனுஷ்ய பலம் வீணாகிறதே என்று கவலைப்படலாம். ஆனால் இதுவரை பயன்படாத ஒன்று வீணாகப்போகிறதே என்று உலகம் கண்ணீர் வடிக்கப்போவதில்லை. ஆகவே, பின்தங்கிய பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கு உதவி செய்யுமாறு அமெரிக்காவை உந்த வேறு முக்கிய காரணங்கள் இருக்கின்றன. அவையாவன: அமெரிக்கர் உள்பட மற்ற மக்கள் அபிவிருத்தியடைவதற்குப் பெருந்தடையாக இன்று பின்தங்கிய பிரதேசங்கள் இருந்து வருகின்றன. அப்பிரதேசங்களிலுள்ள நிலை தடுமாறிய சமுதாயம் புரட்சிக்கும் யுத்தத்திற்கும் என்றென்றும் தயாராகக் காட்சியளிக்கிறது. கடைசியாக, அவை ஜனநாயகப் பாதையில் முன்னேற்றமடைய சந்தர்ப்ப மளிக்கப்படாவிட்டால், கம்யூனிஸம் அல்லது அதைப்போன்ற பிற்போக்குக்கொள்கைகள் வேரூன்ற

ஆரம்பித்துவிடும். பிறகு எதேச்சாதிகாரக் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும் தீவாகவே நாம் நிற்க வேண்டியிருக்கும்.

அதற்குப் பதிலாக, பட்டினி மறைந்து, செல்வம் பெருகினுல், சுகாதாரத்துடன் பின்தங்கிய பிரதேசங்கள் வாழ ஆரம் பித்தால், மரக்கலப்பைகள் போய் இரும்புக் கலப்பைகள் உப யோகத்துக்கு வந்தால், மனிதவர்க்கமே சீரடைவதற்கு வேண் டிய சக்தி இடைக்கும்.

பொருளாதாரத் துறையில், அபிவிருத்திக்கு அளவே இல்லே. அமெரிக்கர்கள் உபயோகிக்குமளவு உலகத்தில் எல்லோரும் உபயோகித்தால், இப்போது உற்பத்தியாவதைப்போல நாலு மடங்கு சோப் வேண்டியிருக்கும். அமெரிக்கர்கள் உடுப்பதற்கு வேண்டியிருக்கும் அளவிற்கு மற்றவர்கள் பஞ்சை உபயோகித் தால், பஞ்சு உற்பத்தி மூன்று மடங்கு அதிகரிக்கவேண்டும். உலகத்தின் மற்ற பாகங்களில் நாளே இன்னும் 2 கோடி மைல்கள் புதிய சாலேகள் கட்டினுலும், அமெரிக்காவிலுள்ள சாலேகளின் நீளம் அதிகமாகவே இருக்கும். இதே வித மாகத்தான் டெலிபோன், மோட்டார் கார், ரேடியோ விஷயத்தி லும். பின்தங்கிய தேசங்களிலுள்ள மக்களின் வாழ்க்கையில் அபிவிருத்தி ஏற்பட்டால், அமெரிக்கரின் வாழ்க்கைத் தரமும் முன்னேறும்.

துணிச்சலான புதிய திட்டத்தை அறிவித்தது முதல், அமெ ரிக்காவின் தனிப்பட்டவரின் முதலும் நுட்பத்திறனும் உல கத்தை உய்விக்க வர்த்தக முறையில் உபயோகப்படும் என்பதை அநேகமாக எல்லா அமெரிக்கரும் ஒப்புக்கொண்டனர்.

ஆனுல் தீர்த்துவைக்க வேண்டிய பல சிக்கல்கள் தோன் றின. நாலாவது திட்டம், சர்க்கார் செலவு செய்வதற்கான திட்டமாக மாறிவிடலாம் என்று முதலாளிகள் பயந்தனர். நாஸுக்கான புது பொருளாதார அரசியல் ஏகாதிபத்தியத்தை மறைக்க வெளியிட்டிருக்கும் திட்டமாயிருக்கலாம் என்று மித வாதிகள் அஞ்சினர்.

அம்மாதிரி ஆபத்துகளைத் தவிர்க்க நாலாவது திட்டத்தின் கர்த்தாக்கள் மிக ஜாக்கிரதையாகவே ஆரம்பித்தார்கள். அமெரிக்க காங்கிரஸுக்கு அவர்கள் சமர்ப்பித்த மசோதாக்கள், இப்போது பரவியிருக்கும் நடவடிக்கைகளை வரிசைக் கிரமமாக விஸ்தரித்துக்கொண்டுபோவதோடு நிற்பதாகத் தோன்றியது உற்சாகிகளுக்கு.

உண்மையாகவே, அனுபவம் என்ற உரை கல்லில் சோதித்துச் செப்பனிட்டு வெளியிட்ட மசோதாக்களே அவை. அயல்நாட்டு விவசாயிகள், தொழில் முதலாளிகளுக்கு நுட்ப வசதி அளிக்குமாறு அவை சர்க்காரைக் கேட்டுக்கொண்டன. உதவியைப் பெறுவோர், செலவில் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளவேண்டும். அத்துடன், நாணய மாற்று வசதியின்மை அல்லது ஸ்வாதீனமிழக்கச் செய்தல்போன்ற அசாதாரண நிலைமையினால் அமெரிக்க முதலுக்கு உண்டாகக்கூடிய நஷ்டத்திற்கு ஈடு கொடுக்க வேண்டுமென கூறப்பட்டது. அமெரிக்க சர்க்கார்மட்டும் வாக்கு அளித்தால் போதாது, உதவி ஏற்கும் நாடுகளும் அம்மாதிரி வாக்குறுதி அளிக்கவேண்டுமென முதலாளிகள் வற்புறுத்தினர்.

ஜனாதிபதியின் பேருரையினால் உந்தப்பட்டு, அமெரிக்காவின் ஆதரவு கிடைக்குமென்ற நம்பிக்கையில், ஐக்கிய நாடுகளின் பொருளாதார சமூக கவுன்ஸில் தொழில் நுட்ப உதவிக்கானத் திட்டமொன்றைத் தானே தயாரித்து வெளியிட்டது. 1949-ம் வருஷத்தில் அத்திட்டத்தை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஏகமனதாக ஒப்புக்கொண்டது. நாலாவது திட்டத்தின் ஒரு பகுதி அல்லவென்றாலும், ஐக்கிய நாடுகளின் திட்டம் அமெரிக்க திட்டத்துக்கு ஒத்தாசையானதாகவேயிருக்கும். அமெரிக்க முதலும் தொழில் திறமையும் அத்திட்டம் நிறைவேற உதவி செய்யும்.

நாலாவது திட்டத்தைப் பொறுத்தவரை, சுபிட்சம் பொருந்திய உலகம் பரிணமிக்க எடுத்துக்கொள்ளும் முதல் நடவடிக்கை

களில் டென்னஸ்ஸி பள்ளத்தாக்கு திட்டம்போன்ற பிரம்மாண்டமான முயற்சிகள் சேர்ந்திரா. அதற்குப் பதிலாக, தொழில் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான நிலைமையை ஏற்படுத்தக்கூடிய குறிப்பிட்ட சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்படும். அச்சீர்திருத்தங்களுக்கு ஆகக்கூடிய செலவு வெகு குறைவாகவே இருக்கும். சில சமயம் செலவில்லாமலேயும் முடிந்துவிடும். பிற்காலத்தில் எப்படிப்பட்ட பெரிய திட்டங்கள் சாத்தியமென்றாலும், தற்சமயம் விவசாயிகளும் தொழிலாளர்களும் சிறந்த வழிகளில் வேலை செய்ய கற்றுக்கொடுப்பது அனுபவசாத்தியமானது.

"ஒவ்வொருவரும் ஒரு தோல்வாளி வைத்துக்கொண்டு வாய்க்காலிலிருந்து மூவர் வரிசையாக நின்றுத் தண்ணீர் எடுத்து வயலுக்குப் பாய்ச்சும் காட்சியை நான் கண்டிருக்கிறேன்," என்று ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய இலாகா டைரக்டர் ஜெனரல், நாரிஸ் இ. டாட், கூறுகிறார். "தங்கள் குடும்பங்கள் வயிற்றுக்கு நிறையாமல் உண்டு காலங்கழிக்க போதுமான அளவே அவர்கள் உழுது பயிர் செய்ய முடிகிறது. தெருக்களில் தோண்டுவதற்காக சாதாரண பெட்ரோல் பம்ப் உபயோகப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். அப்படிப்பட்ட பம்பினால் பத்தடி ஆழத்திலிருந்து அவர்கள் நாள்முழுவதும் உழைத்து இறைக்கும் தண்ணீரை ஒரு மணி நேரத்தில் இறைத்து முடிக்கலாம்," என்கிறார் அவர்.

பெரிய அணைக்கட்டுகள் கட்டி முடிக்குமுன் அவர்கள் கிணறுகள் தோண்டிச் சாகுபடி செய்துவரலாம் என்றுகிர் மிஸ்டர் டாட். புதிய புதிய பிரம்மாண்டமான தொழிற்சாலைகள் ஏற்படும்வரை அவர்கள் சிறு கடைகளில் மண்வெட்டிகளையும் அரிவாள்களையும் செய்யலாம். தொழிற்சாலைகளிலிருந்து உரம் கிடைக்கும்வரை, செடி கொடிகளை வளர்த்து எருவாக்கி பூமியைச் செழிக்கச் செய்யலாம். ஆஸ்பத்திரிகள் தோன்றும் வரை, சுகாதார முறைப்படி வாழ முயன்று, ஒரு சில மருந்து வகைகளின் உதவியால் மலேரியாபோன்ற நோய்

களைத் தடுக்கலாம். இந்தியாவில் மட்டும் 1949-ம் வருஷத்தில் 10 கோடி மக்கள் மலேரியாவுக்கு இலக்கானுர்கள். 1950-ம் வருஷத்தில் அமெரிக்கா அடைந்திருக்கும் பொருளாதார நிலைமையைத் தாங்களும் அடையவேண்டும் என்று யோசித்துக் கொண்டிராமல், அமெரிக்கா 1800-ம் ஆண்டில் சாதித்திருந்த தொழில் முன்னேற்றத்தை முதலில் பின்தங்கியிருக்கும் தேசத்தினர் அடைய முயலவேண்டும் என்கிருர் மிஸ்டர் டாட்.

தங்கள் சக்தியைக் கொண்டே பின்தங்கியிருக்கும் பகுதிகள் உற்பத்திச் சாதனத்தைப் பெருக்கி, விளைபொருள்களைத் துரிதமாகச் செய்யப் பழகிக்கொண்டால், சர்க்கார் உதவியின்றி நிர்மாணிக்கமுடியாத பிரம்மாண்டமான திட்டங்களுக்கும் அவை தயாராயிருப்பதாகக் கருதலாம். இத்தகைய முன்னேற்றம் சில சமயங்களில் நாலாவது அம்சத் திட்டத்துடன் சேர்ந்தாற் போல ஏற்பட்டு வரலாம். திட்டங்கள் வகுப்பதற்கும், அஸ்திவார வேலைகள் செய்வதற்கும் நாலாவது அம்சம் உதவி செய்யலாம். ஆனுல், ஆறுகளுக்கு அணைக்கட்டுகள் கட்டவும், பாலைவனங்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்து வைக்கவும் வேண்டிய பணம் நாலாவது அம்சத்திட்டத்திலில்லை. அம்மாதிரி காரியங்களுக்கு அவசியமான பொருளுதவி ஏற்றுமதி—இறக்குமதி பாங்க் அல்லது உலக பாங்க் போன்ற ஸ்தாபனங்களிடமிருந்துதான் கிடைக்கும். அவைகளும் ஒவ்வொரு திட்டத்தையும் சாங்கோபாங்கமாகப் பரிசீலனை செய்து தகுதியானது என்ற முடிவுக்கு வந்த பின்னரே கடன் கொடுக்கும்.

பணமும், மெஷின்களும், அவைகளை நிர்மாணித்து நடத்துவதற்கான திறனும் இருந்தால் வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்கக்கூடிய முன்னேற்றத் திட்டங்களை அமெரிக்க என்ஜினீயர்கள் உதவியைக் கொண்டுப் பின்தங்கிய நாடுகள் தயாரித்து வைத்திருக்கின்றன. கிறிஸ்து காலத்திற்கு முன் மூன்று கோடி மக்கள் வாழ்ந்திருந்த ஈராக்கில் நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தினுல், இக்காலத்திலும் பல கோடி மக்கள் குடியேறி வாழ முடியும் என்று 1946-ம் ஆண்டில் ஹெர்

பர்ட் ஹுவர் கூறினுர். மத்திய கிழக்குப் பிரதேசத்தின் நிலைமையையே அடையாளம் தெரியாமல் மாற்றக்கூடிய ஜார் டன் பள்ளத்தாக்குத் திட்டமொன்றை நிலப்பாதுகாப்பு நிபுண ரான வால்டர் லாவுடர்மில்க் சமீபத்தில் விளக்கினுர். பதினைந்து ஆண்டுகளில் நாற்பது கோடி மக்களின் வாழ்க்கைத்தரம் இரு மடங்கு உயருவதற்கான திட்டத்தை இந்தியா வகுத்திருக்கிறது.

மாறிவரும் பிரதேசங்களான தென்னமெரிக்கா போன்ற நாடுகளில், முன்னேற்ற வேலைகள் மும்முரமாக இப்போதே நடந்து வருகின்றன. மற்ற இடங்களில், பொருளுதவியையும், வேண்டிய சாமான்களையும் எதிர்பார்த்து நிற்கிருர்கள். சில பிரம்மாண்டமான திட்டங்கள் இன்னும் பல வருஷங்களுக்குக் கனவின் லட்சியங்களாகவே இருக்கலாம். எல்லாத் திட்டங் களையும் நிறைவேற்றிவைப்பதற்கான சாதனம் இப்போது உல கில் இல்லை. ஆனுல் கூடிய சீக்கிரமே வேண்டிய சக்தியும் சாதனமும் கிடைக்கும்.

திட்டங்கள் நிறைவேறிக் காட்சியளிப்பதற்குமுன், அவை ஒவ்வொன்றிற்கும் வேண்டிய பணத்தைச் சம்பாதிக்க வேண் டும். ஒவ்வொரு புதிய திட்டமும் அத்தியாவசியமான தேவை யைப் பூர்த்தி செய்கிறதா என்பதை நிச்சயம் செய்துகொள்ள வேண்டும். உலகத்திலுள்ள பொருளாதாரத் தொழிலியல் வசதிகள் எல்லா திட்டங்களுக்கும் போதுமானவையாக இல் லாததால், அத்தியாவசியமான திட்டங்களையும் வரிசைக் கிரம மாக எடுத்துக்கொள்ள வேண்டிவரும். இவ்வாறெல்லாம் யோசித்துத் திட்டங்களை நிறைவேற்றிய பின்பும் அவற்றின் முழுப் பலனையும் இந்தியா போன்ற பின்தங்கிய பிரதேசங் களில் அரைத்தலைமுறைக்குக் காணமுடியாது. எத்தியோப் பியா, சீனு முதலிய நாடுகளில் ஒரு தலைமுறை கழியவேண்டி யிருக்கலாம்.

இருக்கும் வசதியைப் பலவகைப்பட்ட திட்டங்களில் வீணுக் கும்படி தூண்டுதல்கள் தோன்றலாம். உதாரணமாக காரா

புக் இரும்பு தொழிற்சாலையை இரும்புச் சுரங்கங்களுடன் பிணைப்பதற்கு இரட்டை இருப்புப்பாதை அவசியமென்று துருக்கியர்கள் நினைக்கலாம். அதற்கு வேண்டிய செலவை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளவேண்டுமென வற்புறுத்தலாம். உண்மையில், இப்போது இருந்துவரும் இருப்புப்பாதையைத் திறமையாக உபயோகித்துக்கொள்ள அவர்களுக்கு வழி காட்டினால் போதும். புதிய பாதையை உண்டாக்கக் கோடிக்கணக்கில் செலவு செய்வதற்குப் பதிலாக சில ஆயிரங்கள் செலவில் துருக்கிய ரயில்வே அதிகாரிகளுக்கு வேலை நுட்பங்களைக் கற்றுக் கொடுத்தால் அதிக பலன் கிடைக்கும்.

துணிச்சலான புதிய திட்டத்தின் விளைவாக, முன்னேற்றத் திட்டங்களை நடைமுறையில் சாத்தியமானவையென்று தீர்மானித்து, அமைதியான அரசியல் சூழ்நிலையில் தொழிலியல் தலைவர்கள் நிறைவேற்றினால், வெற்றிக்குச் சமமான அளவில் செலவை மட்டுப்படுத்தலாம். முதலீடுக்குத் தகுந்த வருமானத்தை எதிர் பார்க்கலாம்.

வேண்டிய முன்னேற்பாடுகள் நடந்த பின்பே தனிப்பட்டவர்கள் முதல் போடக்கூடிய கட்டம் எழும். முதல் போடுவோர் உலக அபிப்பிராயம் வரையறுக்கும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படவேண்டும். சுயநலச் சுரண்டலை இந்நிபந்தனைகள் தடுக்கும். உள்ளூர்களில் ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை உள்ளூர்க்காரர்களே மேற்பார்வையிடவேண்டி வரலாம். "உள்ளூர் விவகாரங்களில் அயல்நாட்டுப் பொருளாதார அரசியல் சக்திகள் தலையிடுவதற்கு ஒரு வழியாக" இவ்வுதவியைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என ஐக்கிய நாடுகள் கட்டளையிட்டிருக்கிறது. எங்கெங்கு சாத்தியமோ அங்கெல்லாம் உள்ளூராரின் பொருளுதவியை நாடவேண்டும். உள்ளூர்த் தொழிலாளர்களைக் கொண்டுத் திட்டங்களை நிறைவேற்றவேண்டும்.

உதவிபெறும் நாடுகளும் கற்கவேண்டிய விஷயங்கள் உள: படாடோபத்துடன் செய்வதுதான் ஒரு காரியத்தை வெற்றி

கரமாக முடிப்பதற்கான சிறந்த வழி என்று எப்போதும் நினைக்கக்கூடாது. சுயமுயற்சியால் வளர்ந்தால்தான் தொழில் முன்னேற்றம் நிலைத்திருக்கும். தரையிலிருந்தே கட்டடம் கிளம்ப வேண்டும்.

வெளிநாட்டு மூலதனத்தைக் கட்டுப்படுத்த பல நாடுகள் இப்போது வெவ்வேறு நிபந்தனைகளை ஏற்படுத்தியிருக்கின்றன. தொழிலியல் முன்னேற்றத்துக்காக அந்நிய பொருளுதவி கிடைக்கும்போது சம்பந்தப்பட்ட நாடுகள் அத்தகைய நிபந்தனைகளை நீக்கவேண்டிவரும்.

அதற்கு வேண்டிய உடன்பாடுகள் முன்கூட்டியே கையெழுத்தாகும். அயல் நாட்டுப் பொருளுதவிக் கட்டாயமாக வேண்டியிருக்கும் பல நாடுகளில் அதற்கு அவசியமான பொருளாதார முன்னேற்றம் முதலில் உண்டாக வேண்டியிருக்கும்.

அடுத்துவரும் அத்தியாயங்களில், அப்படிப்பட்ட பொருளாதார முன்னேற்றத்துக்கான முயற்சி பயன் தரத்தக்கதா, அல்லது கடைசியில் அதனுல் ஜனங்களின் வாழ்க்கை நிலை இன்னும் மோசமாகிவிடுமா என்பதை ஆராயலாம்.

வெளிநாட்டு மூலதனம் எப்போது அர்த்தமுள்ளதாயிருக்கிறது, எப்போது அனர்த்தம் விளைவிக்கிறது என்று முடிவு கட்ட கடந்த நூற்றுண்டில் பிரிட்டனுக்குண்டான அனுபவத்தை அலசிப் பார்க்கலாம்.

தான் உண்டு தன் வாழ்வு உண்டு என்ற நிலைமையிலிருந்து, மறைமுகமற்ற ஏகாதிபத்தியம், ஏகாதிபத்தியத்திற்குப்பின் டாலர் ராஜதந்திரம், டாலர் ராஜதந்திரத்திற்குப்பின் "நல்ல அயலான் கொள்கை"யும், துணிச்சலான புதிய திட்டமும் என்ற அமெரிக்க சரித்திர மாறுதல்களின் உட்கருத்தையும் கவனிக்கலாம்.

உலகம் ஒரு குடைக்கீழ் என்பது மாற்றமுடியாத நியதியா, அல்லது அமெரிக்கா விரும்பினுல் உலக அரங்கிலிருந்து அது

விலகிக்கொள்ள முடியுமா என்பதை முதலில் முடிவு செய்து கொள்ளலாம். உலக அரங்கிலிருந்து விலகிக் கொள்ளவேண்டுமென்ற சபலம் அமெரிக்கரிடையே பரவியிருக்கிறதென்பதை யாரும் மறுக்கமுடியாது. அப்படி அவர்கள் விலகிக்கொண்டால் என்ன நேரிடும் ?

# விலகி நிற்பது சாத்தியமா ?

இரண்டாவது உலக யுத்தத்தின்போது “நல்ல அயலான் கொள்கை”யின் பொருளாதார உபசித்தாந்தமாக அமெரிக்கா தென்னமெரிக்க நாடுகளுக்கு பிரதி மாதம் பல லட்சம் டாலர்கள் பொருளுதவி அளித்துவந்தது. ஜப்பான் சரணகதி அடைந்த ஆறு மாதங்களுக்குப் பிறகு, அப்பொருளுதவி அநேகமாக நின்றுவிட்டது. பொருளாதார நிலைமை நிதானமாக அபிவிருத்தியடைவதன்மூலம் ஆட்சி நீடிக்கும் என்று நம்பிக்கை வைத்திருந்த பல மிதவாத தென்னமெரிக்க சர்க்கார்கள் 1949-ம் வருஷத்தின் இறுதிக்குள் மறைந்து போயின.

அந்த உதாரணத்தைக் கண்கூடாகக் கண்டபின், துணிச்சலான புதிய திட்டம் தொடர்ந்து நிறைவேறும் என்ற நம்பிக்கையில் தனது எதிர்காலத்தைப் பணயம் வைக்கும் எத்தேசமும் சில வாக்குறுதிகளை அமெரிக்காவிடமிருந்து எதிர்பார்ப்பது இயற்கையே. ரஷ்யக் கரடியுடன் போராடும்போது, மற்றவர்களையும் தங்களையுமே வசீகரிக்க உதவும், அயலானுடன் ஒத்து வாழ முற்படும் இந்த முயற்சி எவ்வளவு தூரம் யுத்த அணிகலனுடன் காட்சியளிக்கிறது? ரஷ்யக்கரடி தொந்தரவு நீங்கியதும், நாலாவது அம்சத் தொல்லைகளை யெல்லாம் கை கழுவிவிட்டு, முன்போல தங்கள் கூடாரங்களுக்குள்ளேயே பல தலைமுறைகளாகச் சுபிட்சமாக வாழ்ந்து வந்ததைப்போல வாழ்ந்து வரலாம் என்ற உணர்ச்சி அமெரிக்கர்களுக்கு உண்டாகலாம் அல்லவா ?

“அயல்நாட்டு ஆதிக்க பயமில்லையென்றால் ஏற்படமுடியாத, இதுவரை ஏற்பட்டிராத அளவிற்குக் கம்யூனிஸத்தின் இறுக்கத்தினால், சுதந்திர நாடுகள் ஒன்றுகப் பிணைக்கப்பட்டு வருகின்றன,” என்று வின்ஸ்டன் சர்ச்சில் கூறியது உண்மையே.

ஆனல் பயத்தினல்மட்டும் தோன்றும் கூட்டுறவு பயம் நீங்கிய வுடன் சிதறிப்போவது சகஜம். அல்லது கூட்டுறவு நிலைத்திருக்கும்போதே அது நீடித்திருப்பதற்கான வழிகளைச் சாதுர்யத்துடன் மேற்கொள்ளவேண்டும். அவ்வழிகளை மேற்கொள்வதற்கு முக்கியமாக மனிதர்களின் மனேநிலை பக்குவமடைய வேண்டும்.

தனித்து நிற்கவேண்டும் என்ற கொள்கையைப் பிடிவாதமாக வற்புறுத்தும் நபர்கள் அமெரிக்க அரசியல் வட்டாரத்திலும் மற்ற இடங்களிலும் இன்னும் இருந்து வருகிருர்கள். நெருக்கடியான சமயத்தில் அவர்களுடைய செல்வாக்கினுல் ஏற்படக்கூடிய விளைவை நாம் அலட்சியப்படுத்த முடியாது. ஆனல் அதைவிட சர்வதேச கூட்டுறவுக்குப் பெரிய விரோதியாக விளங்குவது அமெரிக்க தேசக் கட்டுக்கோப்பின் வளர்ச்சியாகும்.

1920-ம் ஆண்டிலேயே அப்போது உள்நாட்டுக் காரியதரிசியாகவிருந்த பிராங்க்ளின் கே. லேன் பின்வருமாறு கூறினர்: "பிரஜைகள் மட்டுமின்றி சர்க்கார்களும் பொருளாதாரப் போட்டியில் கலந்து கொண்டு, தங்களை வர்த்தகக் கம்பெனிகளாகத் தாங்களே மாற்றிக்கொண்டால், வர்த்தக அசூயை காரணமாக எழும் தகராறுகளைத் தீர்க்கலாமென்பது சாத்தியமாகாத விஷயமாகும்."

சக்திவாய்ந்த மத்திய அரசாங்கம் தனது சுயாதிபத்தியத்தை அதிகரித்துக்கொள்ள தன்னல் முடிந்தவரை முயற்சி செய்யாமலிருக்காது. கொள்ளைக் கூட்டத்தாரின் தாக்குதல்களினின்றும் பிரஜைகளைச் சர்க்கார் பாதுகாப்பதானலும் சரி, புதிதாகத் தோன்றிய தொழில்வளங்களைப் பாதுகாப்பதற்காகப் பாதுகாப்புவரிகள் போடுவதானலும் சரி, ஏற்றுமதிப் பொருள்களைத் தனது கப்பல்களிலேயே எடுத்துப்போவதானலும் சரி, விவசாயப் பொருள்களின் விலைகள் குறைந்துபோகாமல் பார்த்துக்கொள்வதானலும் சரி, சர்க்கார் தான் செய்யும் ஒவ்வொரு

சேவை மூலம் அது தனது பலத்தையும் ஆதிக்கத்தையும் அதிகரித்துக்கொள்கிறது. சக்திபொருந்திய அரசாங்கம் சர்வ தேசச் சட்டத்திற்கு உடன்பட்டிருப்பதில் உற்சாகம் காட்டப் போவதில்லை.

அதேபோல, உள்ளூர் நலன்களுக்கும் கடைசியாக நிலைக்கக் கூடிய சர்வதேச நலன்களுக்குமிடையே தோன்றும் தகராறு களும் சுலபமாகத் தீரக்கூடியவையல்ல. உதாரணமாக, இன் றைய அமெரிக்கா அனுபவத்தின் பயனாக தீர்க்கதரிசனம் வாய்ந்த அயல்நாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து வரு கிறது. எனினும், விவசாயப் பொருள்களின் விலை குறைந்து போகாமலிருக்க வருஷத்திற்கு நூறு கோடி டாலர்கள் அர சாங்க நிர்வாகம் செலவு செய்வது அவசியமாகிறது. அதனால், வெண்ணெய், கம்பளி, சர்க்கரை, கோதுமை, பஞ்சு முதலிய பொருள்கள் விஷயத்தில், லாபமற்ற இறக்குமதி தடைகளை விதித்து, மிகுந்திருக்கும் பொருள்களை வெளி நாடுகளில் திணிக்கவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிறது. அயல் நாடுகளில் பொருள்களைத் திணிப்பதால், சர்வதேச ஒற்றுமை ஏற்படாது. அதற்குப் பதிலாக, ஜான் டேவன்போர்ட் கூறியதுபோல, "குறைந்த காப்புவரி, இணைக்கிணையான வர்த்தகம் போன்ற கொள்கைகளை அது அர்த்தமற்றதாக்கி, உலக வர்த்தகம் வளர வேண்டுமென்னும் லட்சியம் வெறும் வாய்ப்பேச்சாகவே நிற் கும்படி செய்துவிடுகிறது."

உள்நாட்டு நெருக்கடி ஏற்பட்டால், உலகத்தின் மற்ற பாகங் களை அமெரிக்கா உதாசீனம் செய்துவிடும் என்று தீர்மானித்து விடக்கூடாது. ஆனால் அமெரிக்கா அயல்நாட்டு விவகாரங் களில் உள்ள பிணைப்பை அறுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசை என்னவோ உந்தித்தள்ளும். அந்த ஆசையினால் ஏற்படக்கூடிய விபரீதங்களில் நம்பிக்கை வைத்துத்தான் ரஷ்யா தனது அயல்நாட்டுக் கொள்கையை வெகுதூரம்வரை உரு வாக்கியிருக்கிறதெனலாம்.

இப்போதே பொதுஜன அபிப்பிராயத்தை உண்டாக்கக்கூடிய சிலர் ரஷ்யா எதிர்பார்க்கும் பாதையில் அமெரிக்காவைத் தள்ளிவிட முயலுகிறார்கள். பரந்துவரும் கம்யூனிஸத்தைத் தடுக்கும் சக்திவாய்ந்த துணிச்சலான புதிய திட்டத்தை அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவராயிருந்து கட்சியிலிருந்து விலகிய ஏர்ல் பிரௌடரும் தோற்றுவித்தவை யென்று கூறுகிறார்கள். "வெளிநாடுகளுக்கு நாம் அனுப்பி வைக்கும் பணத்தால், அதே அளவுக்கு நமது மூலதன முன்னேற்றம் தடைப்பட்டுவருகிறது," என்று அக்கட்சியினரில் ஒருவரான ஹென்ரி ஹாஸ்லிட் குறைகூறுகிறார்.

உண்மையிலேயே பொருளாதார மந்தம் தோன்றினால், அமெரிக்கா தனது தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொண்டு, தனது நலன்களைக் கவனித்துக்கொள்ளவேண்டு மென்று இன்னும் நியாயமாகத் தோன்றும் முறையில் வாதிக்க மற்றவர்கள் கிளம்பலாம். அமெரிக்கா ஒரு தேச மல்ல, ஒரு கண்டம், ஏன் ஓர் அர்த்தகோளம் என்பதைச் சுட்டிக் காட்டுவார்கள். மிகுந்திருக்கும் பொருள்களை அயல்நாடுகளுக்கு விற்கவேண்டிய அவசியமில்லை. சர்க்கார் முன்னேற்றத் திட்டங்கள்மூலம் அமெரிக்க மக்களுக்கே விநியோகிக்க ஏற்பாடு செய்யலாம். பொருளாதாரத் துறையில், தொந்தரவளிக்கும் ரஷ்யா, பசியால் வாடும் கோடிக்கணக்கான மக்கள், யுத்தங்கள், யுத்த பயங்கள்டங்கிய கீழ் நாடுகள் அமெரிக்காவுக்கு அவசிய மானவையல்ல, அவை அமெரிக்காவுக்கு ஒரு தொல்லையே என அவர்கள் வாதம் செய்யலாம்.

நாளை பூமி அதிர்ந்து கீழ்நாடுகள் அனைத்தும் அழிந்துவிட்டு, மேற்குப் பாதி மட்டும் சேதமின்றிச் சுற்றி வர ஆரம்பித்தாலும், அமெரிக்கர்கள் தங்கள் தேவைக்கான பொருள்கள் எதும் இல்லாமல் தவிக்க வேண்டியிராது என்று அவர்கள் கூறலாம்.

சர்வதேச மன்றத்தில் அமெரிக்காவிடம் நம்பிக்கை வைக்கலாம் என்று ஐயந்திரிபற நிரூபிக்கும்படியான சமயம் அமெ

ரிக்காவுக்கு எப்போது நேரிடுமென்று யாருக்கும் தெரியாது. ஆனால் அப்போது வெளியாகக் கூடிய முடிவு இன்று பதினைந்து கோடி அமெரிக்கர்கள் நினைக்கும் விதத்தில் உருவகமாகிறது. மனிதர்களாயிருப்பதால், அமெரிக்கர்களும் சுயநலவாதிகள்தான். ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா கண்டங்களிலுள்ள நாடுகளின் தொல்லைகளில் ஈடுபடாமல் அமெரிக்கர்கள் சுபிட்சமாக வாழமுடியுமென்று அவர்கள் தீர்மானமாக நம்பினால், உலகத்தின் ஏனைய பாகம் எக்கேடு கெட்டாலும் அமெரிக்கர்களும் தங்களுடைய இரும்புத் திரையை நிர்மாணிக்க ஹேது உண்டு. ஆகவே, தனித்து நின்றால் அமெரிக்காவின் எதிர்கால நிலைமை எவ்வாறு இருக்குமென்று கவனிப்போம்.

விவசாய, உலோகப் பொருள்களின் உற்பத்தியிலும், உபயோகத்திலும் அமெரிக்கா தேசங்களின் முன்னணியிலிருக்கிறது. தனது எல்லைகளுக்குள் அல்லது வெகு சமீபத்திலேயே அமெரிக்கரின் வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களும் தாவர வர்க்கங்களும் அநேகமாகக் கிடைக்கின்றன.

சில துறைகளில் அமெரிக்கா இப்போதுதான் உள்நாட்டு வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்திருக்கிறது. சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பை நூதன முறைகளால் இருமடங்காகப் பெருக்க முடியுமென அமெரிக்க விவசாய இலாகாவின் 1938-ம் ஆண்டின் வெளியீடு அறிவித்தது. யுத்தத்தின்போது, அமெரிக்காவில் சாகுபடியாகும் நிலப்பரப்பு மூன்று கோடி ஏக்கர்கள் அதிகமாக விஸ்தரிக்கப்பட்டது. உணவு உற்பத்தியும் மூன்றில் ஒரு பங்கு அதிகமாயிற்று. 1954-ம் ஆண்டில் அமெரிக்காவின் உணவு உற்பத்தி அபிவிருத்தி செய்யப்பட்டு புதிய முறைகளை மேற்கொள்வதன்மூலம் இன்னும் 20 சத விகிதம் பெருகலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் நோக்கும்போது, கிழக்கு அர்த்தகோளம் அமெரிக்காவுக்கு இன்றியமையாதது என்று தோன்றுதுதான்.

அமெரிக்காவில் கிடைக்காத உலோகப் பொருள்கள் அநேக மாகக் கிழக்கு அர்த்தகோளத்திலேயே கிடைக்கின்றன. அமெரிக்காவில் விளையாத விவசாயப் பொருள்கள் தென்னமெரிக்காவில் அபரிமிதமாக விளைகின்றன. வாழைப்பழம், காப்பி, டீ, கற்பூரம், எண்ணெய் வகைகள் முதலியன தென்னமெரிக்காவில் விளைகின்றன. அமெரிக்காவில் முக்கிய மாக இறக்குமதியாகும் மற்ற விளைபொருள்களுக்குப் பதிலாக செயற்கைப் பொருள்கள் உண்டாக்குவதில் விஞ்ஞானிகள் முனைந்திருக்கிறார்கள். ரப்பருக்குப் பதிலாக உபயோகமாவதற்குச் செயற்கை ரப்பர் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டுத் தொழிற்சாலைகளில் செய்யப்பட்டுவருகிறது. இன்னும், அமெரிக்காவிலேயே எல்லா விளைபொருள்களையும் பயிர் செய்வதற்கான மார்க்கங்களைக் கண்டுபிடித்து வருகிறார்கள். அமெரிக்க வீடுகளின் கூறைகள்மீதும் கூடிய சீக்கிரம் வாழைமர நிழல் ஊசலாடிக்கொண்டிருக்கலாம்.

மற்ற நாடுகளுடன் போக்குவரத்து வைத்துக்கொள்ளாத அமெரிக்காவின் பொருளாதார நிலைமை எவ்வாறு அபிவிருத்தியடையும்? உற்பத்தி அபிவிருத்திக்குத் தகுந்தவாறு விற்பனையைப் பெருக்கி, மக்கள் வாழ்க்கை நிலையை முன்னேறச் செய்வது எப்படி? சர்க்கார், தொழிலாளர்கள், முதலாளிகள், விவசாயிகள் எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து இன்னும் புதிய திட்டங்கள் வகுத்துப் பணம் செலவு செய்ய வேண்டும். சில உதாரணங்கள் :—

1. இன்று அமெரிக்காவில் 75 லட்சம் வீடுகள் வசிக்க லாயக்கற்ற நிலையில் இருக்கின்றன. அவற்றை இடித்து விட்டுப் புதிய வீடுகள் கட்டுவதற்கு 5,000 கோடி டாலர்கள் செலவாகும். 50 வருஷகாலத் திட்டமூலம் ஆயிரக்கணக்கான அமெரிக்கர்களுக்கு வேலை கிடைக்கும்.

2. முப்பது கோடி ஏக்கர் பயிர் நிலம் தரிசு விழாமல் போகவேண்டுமானால், அதற்கு இப்போதே பாதுகாப்பு முறைகளைக் கையாளவேண்டும். 450 கோடி டாலர்கள் செலவாகும்.

3. தரிசு விழ ஆரம்பித்த 115 லட்ச ஏக்கர் நிலத்தில் உழுது பயிர் செய்துவரும் ஐந்து லட்சக் குடியான குடும்பங்களைப் புதிய நிலங்கள் இருக்குமிடத்துக்கு அனுப்பிவைக்க 50 கோடி டாலர்கள் வேண்டிவரும்.

4. மேற்கே 210 லட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி இருக்கிறது. 300 கோடி டாலர் செலவு செய்தால் நீர்ப்பாசன வசதியுள்ள நிலப்பரப்பை இருமடங்காக்கலாம். ஒரு குடும்பத்திற்கு 120 ஏக்கர் நிலம் என 1,80,000 புதிய குடியான குடும்பங்களுக்கு நிலம் அளிக்கலாம்.

இவ்வாறே இன்னும் பல அபிவிருத்திகள் செய்வதற்கு இடமுண்டு. எல்லா திட்டங்களையும் நிறைவேற்றவேண்டுமானால் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகும், 10,000 கோடி டாலர்களுக்குமேல் செலவாகும். அப்போதும் புதிய திட்டங்களை உருவாக்க வாய்ப்பு உண்டு. ஆகவே, அயல்நாடுகளுக்கு உதவி புரிவதற்காகக் கோடிக்கணக்கில் செலவு செய்துவரும் பணத்தை அமெரிக்க சர்க்கார் உள்நாட்டின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்திக்கொள்வது நல்லதல்லவா? பெருவிலும் இந்தோனேஷியாவிலும் சந்தேகாஸ்பதமான முன்னேற்றத் திட்டங்களில் செலவு செய்வதற்குப் பதிலாக தனிப்பட்ட மூலதனத்தை அமெரிக்க தொழிற்சாலைகளில் போடுவது சிறந்ததல்லவா? அவ்வாறு சர்க்காரும் தனிப்பட்டோரும் அமெரிக்க தொழிலியல் முன்னேற்றத்திற்கான வழிகளை மேற்கொண்டால், அமெரிக்க பொருளாதாரத்துக்கு அவசியமான அயல் நாட்டு வர்த்தகத்தின் மதிப்பைக் குறைக்கலாமல்லவா?

மேற்கூறியவாறு வாதம் செய்வதில் அர்த்தமிருப்பதாகத் தோன்றலாமே ஒழிய அது தர்க்க சாஸ்திரத்திற்கு ஒவ்வாதது.

உதாரணமாக, அமெரிக்கா பொருளாதாரத் துறையில் தனித்து நிற்கமுடியும் என்று வாதாடுவோர் தென்னமெரிக்காவையும் அமெரிக்காவின் ஒரு பகுதியாகப் பாவிக்கின்றனர். ஆனால் தென்னமெரிக்கா அமெரிக்க ஐக்கிய அரசாங்கங்களின்

ஒரு பாகமல்ல. அமெரிக்க தற்காப்புத் திட்டத்தில் தென்னமெரிக்கா பங்கெடுத்துக் கொள்ளுகிறதென்பது வாஸ்தவம் தான். ஆனால் யுத்த காலத்தில் எதிரி நாடு தென்னமெரிக்காவில் ராணுவ நிலையங்களை நிறுவித்து, அங்கிருந்து உலோக விவசாயப் பொருள்கள் ஏற்றுமதியாகாமல் பார்த்துக்கொள்வதை அமெரிக்கா தடுக்கமுடியுமென்று இதுவரை நிரூபிக்கப் படவில்லை. உரேனியம் போன்ற முக்கிய தாதுப்பொருள்கள் இருக்கும் வட கானடா கூட எதிரியால் தாக்கப்படலாம்.

யுத்த காலத்தில் தென்னமெரிக்க பொருள்கள் நிச்சயமாக அமெரிக்காவுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமானால் இப்போதே அமெரிக்கா தென்னமெரிக்காவை ஆக்கிரமிக்க வேண்டும். தனித்து நிற்கவேண்டுமென்னும் கொள்கை நேராக ஏகாதிபத்திய பாதையில் தேசத்தைத் தள்ளிவிடும்.

உள்நாட்டில் கிடைக்கும் தாதுப் பொருள்களைத் தவிர வேறு வழியில்லையென்றால், அமெரிக்கா தனக்குள்ள வசதிகளை வெகு சீக்கிரமே உபயோகப்படுத்திவிடும். அவற்றிற்கு ஈடு செய்வதும் துர்லபம். கடந்த ஐம்பது ஆண்டுகளில் அமெரிக்கா உலகம் முழுவதுமே அதற்குமுன் உபயோகித்ததைவிட அதிகமான தாதுப்பொருள்களை உற்பத்தி செய்து உபயோகித்து வந்திருக்கிறது. அத்தாதுப் பொருள்கள் போனது போனதுதான். மறுபடியும் கிடைக்காது. உயர்ந்த ரக இரும்பு அமெரிக்காவுக்குக் கிடைத்துவரும் அளவு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. உயர்ந்த ரக தாமிரம் இன்னும் முப்பத்திநாலு ஆண்டுகளுக்கே கிடைக்கும், ஈயம் பன்னிரண்டு வருஷங்களுக்குத்தான் காணும் என்று 1949-ம் ஆண்டில் சுரங்க இலாகா அறிவித்தது. மற்ற உலோகப் பொருள்கள் விஷயத்திலும் நிலைமை இப்படித்தான் இருக்கிறது.

அமெரிக்காவின் தாதுப்பொருள்கள் வசதி அபரிமிதமானதாயிருந்தும், கீழ் நாடுகளிலிருந்து முக்கிய பொருள்கள்

கிடைத்து வந்ததால்தான் அமெரிக்கா இப்போதிருக்கும் உன்னத ஸ்தானத்தைப் பொருளியல் துறையில் அடைந்திருக்கிறது. சில முக்கியமான உலோகப் பொருள்களுக்கு ரஷ்யா, துருக்கி, ரொடீஷியா, பெல்ஜியன் காங்கோ, பிரஞ்சு மொராக்கோ முதலிய நாடுகளை அமெரிக்கா நம்பியிருக்கிறது.

அமெரிக்காவின் இறக்குமதியில் 67 சத விகிதம் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்கள். சிறிய அளவில் ஒரு பொருள் இன்று இறக்குமதியானாலும், அது ஒரு பெரிய தொழிலை வளர்த்துவர அமெரிக்காவுக்கு உதவுகிறது. ஐந்து கோடி மக்கள் வேலை செய்துவரும் உணவுப் பொருள்கள் தயாரிக்கும் பன்னிரண்டு கம்பெனிகள் சுமார் 150 லட்சம் டாலர்கள் பெறுமான வாசனைத் திரவியங்களை வெளிநாடுகளிலிருந்து வருவதை எதிர்பார்த்துக் கிடக்கின்றன.

இரு மகா யுத்தங்களுக்கிடையேயுள்ள காலத்தை ஒரு தலைமுறையென்று வைத்துக்கொண்டால் அடுத்த யுத்தம் ஆரம்பிப்பதற்குள் 33 முக்கிய மூலப்பொருள்களில் 21 அமெரிக்காவில் கிடைப்பது நின்றுவிடும் என்று சுரங்க இலாகாவின் புள்ளிவிவர அதிகாரி எல்மர் டபிள்யூ பெஹர்ஸன் கூறுகிறார். பெட்ரோல், தாமிரம், ஈயம், துத்தநாகம் போன்ற பொருள்களின் உற்பத்தியில் அமெரிக்கா மற்ற நாடுகளைப் பல வருஷங்களாகத் தோற்கடித்து வந்தது. அப்பொருள்கள் அடுத்த மகாயுத்தத்தின்போது அமெரிக்காவிலேயே கிடைக்காது என்கிறார் அவர்.

பெஹர்ஸன் கூறுவது தவறாக இருக்கலாம். புதிய புதையல்கள், சில சமயங்களில் பிரம்மாண்டமான புதையல்கள், நாளுக்குநாள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. எனினும், யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு அத்தியாவசியமான 68 மூலப்பொருள்கள் போதிய அளவிற்கு அமெரிக்காவில் இப்போதே கிடைக்கவில்லை. நெருக்கடி நேரிட்டால், பணச் செலவைப் பொருட்படுத்தாது, பாதரஸத்தைத் தவிர மற்ற

எல்லா முக்கிய பொருள்களையும் வேண்டிய அளவிற்கு அமெ ரிக்கா சேமித்துக் கொள்ளலாம். ஆனால் அது சாத்திய மாவதற்குப் பணத்தை விரயம் செய்து மட்ட ரக உலோகங்களை உபயோகிக்கவேண்டிவரும். அமைதி நிலவும் காலங்களி லேயே, உள்நாட்டிலிருக்கும் மட்ட ரக உலோகங்களுக்குப்பதி லாக அயல்நாட்டு உயர்ந்த ரக உலோகங்களை உபயோகிப்பது லாபகரமானது. உள்நாட்டு மட்ட ரக உலோகங்களைக் கொண்டு மோட்டார் கார்கள் செய்தால் அவற்றின் விலை 50 சத விகிதம் உயரும். இன்று சர்வ சாதாரணமாக வீடுகளில் உபயோகித்து வரும் எலெக்ட்ரிக் சாமான்கள் அரிதாகிவிடும்.

அமெரிக்காவின் அயல்நாட்டு வர்த்தகத்தின் உண்மையான பொருளாதார மதிப்புத்தான் என்ன? 1947-ம் ஆண்டின் முதற்பாதியில் விவசாயிகள் அல்லாமல், ஏற்றுமதியினால் உண் டாகும் தொழில்களில் 25,00,000 அமெரிக்கர்கள் வேலை செய்து வந்தனர். விவசாயிகளல்லாத தொழிலாளர்களின் எண் ணிக்கையில் அது $5\frac{1}{2}$ சத விகிதத்துக்கு மேலாகும். 1939-ம் ஆண்டிலிருந்த எண்ணிக்கையைப் போல மூன்று மடங்கு. அந்த தொழிலாளர்களில் அநேகர் இரும்புத் தொழிற்சாலை களிலும், நிலக்கரி சுரங்கங்களிலும், மெஷின்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்து வந்தனர். அயல்நாடுகளினின்றும் வெற்றிகரமான போட்டி அத்தொழிற் சாலைகளில் இல்லாததால், அவற்றின் தொழிலாளர்களுக்கு 1939-ம் ஆண்டில் காப்புவரியின் தயவால் பிழைத்துவந்த தொழிற்சாலைகளில் வேலை செய்வோருக்குக் கிடைத்த சம் பளத்தைப்போல இருமடங்கு கிடைத்துவந்தது.

அதோடு, 1947-ம் ஆண்டில் அமெரிக்கா தான் உற்பத்தி செய்த விவசாயப் பொருள்களில் பத்தில் ஒரு பங்கை ஏற்றுமதி செய்தது. விவசாயத் தொழில் சரியான பொருளாதாரத் தன்மை பெற்று நடக்க வேண்டுமானால், இன்று அமெரிக்கா இன்னும் அதிகமாக ஏற்றுமதி செய்ய வேண்டும். 1930-ம் ஆண்டில் ஆரம்பமான அமெரிக்க விவசாயப் புரட்சியின் பயனாக,

இன்று அமெரிக்கர்கள் உண்பது போக மீதி 25 சத விகிதம் நின்று விடுகிறது. அதையும் அவர்களே தின்னும்படி செய்ய வேண்டும், அல்லது விளைபொருளைக் குறைக்க வேண்டும், அல்லது மிகுந்ததை அழிக்க வேண்டும், அல்லது வெளிநாடு களுக்கு அனுப்ப வேண்டும்.

யுத்தத்துக்குமுன் ஏற்பட்ட பொருளாதார மந்தத்துக்கு முன்பே, வஃளவில் பாதி பஞ்சையும், ஐந்தில் ஒரு பங்கு கோதுமையையும், ஐந்தில் இரண்டு பங்கு புகையிலையையும், மூன்றில் ஒரு பங்கு பன்றிக் கொழுப்பையும், ஆறில் ஒரு பங்கு ஆப்பிள்களையும், ஐந்தில் இரண்டு பங்கு உலர்ந்த பழங்களையும், கால் பாகம் விவசாய மெஷின்களையும் அமெரிக்கா வெளி நாடுகளுக்கு விற்று வந்தது. 40 சத விகிதம் டைப்ரைட்டர்கள், 30 சத விகிதம் அச்சடிக்கும் மெஷின்கள், 14 சத விகிதம் மோட்டார் கார்கள் ஏற்றுமதி செய்து வந்தது. இன்று பல பொருள்கள் இன்னும் அதிகமாகவே அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதியாகின்றன.

சமீபத்தில் தொழிற்சாலைகளிலும் வயல்களிலும் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது. அதற்குத் தகுந்தாற்போல, உபரிப் பொருள்களை வாங்கும் சக்தி பெறுமளவு, சமூக பொருளாதார மாறுதல்கள் அமெரிக்காவில் தோன்றவில்லை. முன்பிருந்ததைவிட அதிக ஏக்கர்களை அமெரிக்கர் உழுது வருகின்றனர், அதிக தொழிற்சாலைகளை நிறுவியிருக்கின்றனர். அதற்குக் காரணம் உள்நாட்டில் பொருள்களுக்கிருக்கும் கிராக்கி மட்டுமல்ல. வெளி நாடுகளின் தேவைகளையும் பொருத்தே இந்த அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்காவில் உற்பத்தியாகும் பொருள்கள் அனைத்தும் அமெரிக்காவிலேயே விலைபோகும் நாள் எப்போதாவது தோன்றலாம். ஆனால் அந்த நாள் விடியுமுன், அமெரிக்க வாழ்க்கைத் தரம் அபாரமான அளவிற்கு முன்னேறவேண்டும்.

வெளிநாட்டு வர்த்தகத்தினுல் உபரி உற்பத்தி செலவாவ தாலேயே சில பெரிய தொழிற்சாலேகள் அமெரிக்காவில் பிரம் மாண்டமான அளவில் பொருள்களேத் தயார் செய்து வருகின் றன. வெளிநாட்டு வர்த்தகம் இல்லேயென்ருல், மூலப் பொருள்களின் தேவை ஒரு புறம் இருக்க, மோட்டார் கார், ரேடியோ முதலிய சாமான்களின் விலே அமெரிக்கர்களும் வாங்க இயலாத அளவிற்கு உயர்ந்து விடும். அமெரிக்காவின் தென் ராஜ்யங்கள் பஞ்சை ஏற்றுமதி செய்யவில்லேயென்ருல், குடும்பத்துக்குத் தேவையான பொருள்கள் அப்பிரதேசங்களில் விற்பது குறைந்துவிடும். லட்சக் கணக்கான விவசாயிகள் தங் கள் விளைபொருள்களே அயல்நாடுகளுக்கு அனுப்பாமல்போனுல், விவசாயத்துக்கு அவசியமான மெஷின்களே அவர்கள் வாங்குவது குறைந்து போகும்.

1949-ம் ஆண்டில் அமெரிக்காவின் எஃகு உற்பத்தி யுத்தத் துக்கு முன்னிருந்ததைவிட 12 சத விகிதம் அதிகமாகியிருந்தது. பல பொருள்களே இன்று அமெரிக்கா இருமடங்கு, மும்மடங்கு அதிகமாக உற்பத்தி செய்கிறது. உற்பத்தி பெருகப் பெருக, ஏற்றுமதியின் அவசியமும் அதிகமாகிறது. ஏற்றுமதி நின்று விட்டால், பெருத்த அளவில் பொருள்களேத் தயாரிக்கும் தொழிற்சாலேகளில் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் களுக்கு வேலேயிராது. தொழிலாளர்களுக்கு வேலேயில்லேயென் ருல், அவர்களுக்குப் பொருள்களே வாங்கும் சக்தி குறைந்து விடும். அதனுல், அமெரிக்க வர்த்தகர்கள் பயப்படும் பொரு ளாதார மந்தம் பீடிக்க ஆரம்பிக்கும். மந்தமின்றிச் செல்வம் தழைக்க ஏற்றுமதி இன்றியமையாதது.

ஏற்றுமதி செய்ய வேண்டும், இறக்குமதியும் இருந்தாக வேண்டும். அமெரிக்கப் பொருள்களே வாங்கும் பொருட்டு அமெரிக்கர் மற்ற தேசங்களுக்கு எப்போதுமே டாலர்களே வெகு மதியாகவோ கடனுகவோ கொடுத்துக்கொண்டிருக்க முடியாது. மற்ற தேசத்தினர் டாலர்களேச் சம்பாதித்தாக வேண்டும்.

ஐரோப்பிய கூட்டுறவு நிர்வாகத்தின் அறிக்கையின்படி 1914-1949-ம் ஆண்டுகளில் அமெரிக்காவின் இறக்குமதியைக் காட்டிலும் ஏற்றுமதி 10,100 கோடி டாலர்கள் அதிகமாக இருந்தது. அதே காலத்தில் வெளிநாடுகளுக்கு அமெரிக்க சர்க்கார் 6,800 கோடி டாலர்கள் கடன்களாக அளித்தது. அநேகமாக அவை இன்னும் திருப்பித் தரப்படவில்லை. தனி நபர்கள் 1,050 கோடி டாலர்கள் அயல்நாடுகளுக்கு அனுப்பினுர்கள். கிட்டத் தட்ட அதே தொகையை வர்த்தகர்கள் மூலதனமாகப் போட்டிருந்தார்கள். அயல்நாட்டு டாலர் இருப்பாக அமெரிக்காவில் இருந்த 1,550 டாலர்களைக் கரைத்து விட்டனர். உலக பாங்க் 100 கோடி டாலர்கள் கடனுகக் கொடுத்தது. அதாவது, அமெரிக்காவின் இறக்குமதியைக் காட்டிலும் அதிகமாயுள்ள ஏற்றுமதியின் விலையை அமெரிக்க வர்த்தகர்களும் வரி கொடுப்போர்களும் விஷயத்தைக் கிரஹிக்காமலே ஏற்றுக் கொண்டார்கள்.

பொருள்களை வெளிநாடுகளிலிருந்து தருவிப்பதால் அமெரிக்க உற்பத்திக்குப் பங்கம் விளையுமென்றும், வெளிநாடுகளில் தொழிலாளருக்குக் கொடுக்கப்படும் கூலி மிகவும் குறைவாயிருப்பதால், அவர்களுடன் அமெரிக்க தொழிலாளர்கள் போட்டியிட முடியாதென்றும் சில சமயம் கூறப்படுகிறது. ஆனுல் உண்மை அதற்கு முற்றிலும் மாருனது. உலகில் மற்ற பாகங்களிலிருக்கும் தொழிலாளர்களைக் காட்டிலும் அமெரிக்க தொழிலாளர்கள் திறமைசாலிகள், அதிகமாக பொருள் உற்பத்தி செய்கிருர்கள். உணவு, வீடு வசதிகளைப் பெற்று வருகிருர்கள். உதாரணமாக யுத்தத்துக்கு முன்பே பிரிட்டிஷ் தொழிலாளர்கள் செய்யும் வேலையைப்போல் இருமடங்கு அமெரிக்க தொழிலாளர்கள் ஒரு மணி நேரத்தில் செய்து வந்தனர். 75 வருஷ காலமாக அமெரிக்கா இறக்குமதி செய்ததைவிட அதிகமாகப் பொருள்களை ஏற்றுமதி செய்து வந்ததென்பது அமெரிக்காவின் நல்லெண்ணத்தைக் காட்டுவதோடு, அமெரிக்க பண்டங்களின் உயர்வையும் நிரூபிக்கிறது.

தனித்து நிற்கும் பொருளாதாரக் கொள்கையால் தனி நபர்களுக்கு ஏற்படக் கூடிய அசௌகரியங்கள் மூலம் அது எவ்வளவு தவறுனது என்று நிரூபிப்பது தமாஷாகத் தோன்றலாம். ஆனுல் ஒரு தனி மனிதனது சிறு அசௌகரியம் 15 கோடியால் பெருக்கப்பட்டால் பெரிய தேசீய ஆபத்தாக முடியலாம்.

பிட்ஸ்பர்க்கில் இரும்புத் தொழிற்சாலேயில் ஜிம் பீபடி என்பவன் வேலே செய்து வருகிறுன் என்று வைத்துக் கொள்வோம். அவன் குடும்பத்தின் சங்கடத்தைச் சற்றுக் கவனிப்போம். ஜிம் பீபடிக்கு ஒரு கெட்ட வழக்கம். காலேயில் படுக்கையை விட்டு எழுந்திருக்குமுன் சிகரெட் குடிக்க விரும்புவான். கிழக்கு அர்த்தகோளம் பூமியை விட்டு மறைந்த பின்பு, அவன் படுக்கையிலிருந்தே கையை நீட்டி, பக்கத்திலிருக்கும் பெட்டியிலிருந்து ஸிகரெட் ஒன்றையெடுத்து, பற்ற வைத்து, புகையை வலிக்கிறுன். உடனே ஆத்திரத்துடன் ஸிகரெட்டை ஜன்னல் வழியாக வெளியே எறிந்து விடுகிறுன். அவனுக்கு அது "சப்" பென்று இருக்கிறது. உற்சாகம் தரவில்லே. உள் நாட்டு புகையிலேயை மட்டும் கொண்டு தயாரிக்கப்பட்டதால் அந்த ஸிகரெட் வைக்கோலேப் போல ருசிக்கிறது அவனுக்கு. கிரீஸ், துருக்கி, ஸிரியா முதலிய நாடுகளின் புகையிலேயோடு அமெரிக்க புகையிலேயையும் கலந்து இன்னும் 57 தேசங்களிலிருந்து தருவித்த பொருள்களின் சேர்க்கையால் தயாரிக்கப் பட்ட ஸிகரெட்டுகளின் குணம் எவ்வளவு மேன்மையாயிருந்தது என்று பீபடிக்கு ஞாபகம் வருகிறது.

ஸ்ரீமதி பீபடி வசீகரமான தோற்றமுடையவள். சருமம் மிருதுவாக இருக்க கிரீம் உபயோகிப்பது நல்லது என்பதை அவள் அநுபவத்தில் கண்டிருக்கிறுள். உதடுகளுக்கு இலேசாக வர்ணம் தீட்டிக்கொள்ளுவது வழக்கம். ஆனுல் இன்று காலே எழுந்தவுடன் அவள் கிரீம் ஜாடி காலியாயிருப்பதைக் காண்கிறுள். மையை எடுத்து உதடுகளில் பூசினுல் மண்ணும் கல்லுமாய் உதடுகளே அரிக்கிறது. அவற்றிற்கு வேண்டிய சில முக்கிய

மூல வஸ்துக்கள் கிழக்கு அர்த்தகோளத்திலிருந்து வந்தாக வேண்டும்.

காலையில் டீ குடிக்க வரும்போது ஸ்ரீமான் பீபடியோ ஸ்ரீமதி பீபடியோ உற்சாகத்துடன் இல்லை. ஸ்ரீமதி பீபடி காலையில் தேநீர் அருந்திப் பழக்கம். டீ இந்தியாவைவிட சமீபத்தில் எங்கும் விளைவதில்லை. ஸ்ரீமான் பீபடி சர்க்கரையைச் சேர்த்துக் கொண்டு காப்பி குடிக்கிறார். ஐரோப்பாவும் ஆசியாவும் இல்லையென்றால் நாளை பிரேஸிலும் க்யூபாவும் மறைந்து போகலாம். பிறகு அவர் காப்பிக்கு என்ன செய்வது என்ற கவலை அவரைத் துன்புறுத்துகிறது.

பீபடி வேலை செய்துவந்த மில் சில நாட்களாக மூடியிருக்கிறது. சீக்கிரமே திறக்கும் என்பது அவர் நம்பிக்கை. மில் மூடியிருப்பதற்குக் காரணம் சில கலப்பு உலோகங்கள் கிடைக்காததுதான். உயர்ந்த ரக எஃகு செய்வதற்கு 50 தேசங்களிலிருந்து 40 நானுவிதமான மூலப் பொருள்கள் தேவை.

பீபடி வீட்டின் மற்றொரு அறைக்கு எரிச்சலோடு போகிறார். நாற்காலி ஒன்றில் அயர்ந்து உட்கார்ந்து ரேடியோவைத் திருப்புகிறார். மைக்கா பளிங்கு கிடைக்காததால் ரேடியோ ஒழுங்கற்றுக் கிடக்கிறது என்பதை மறந்து விட்டார். மைக்கா இந்தியாவிலிருந்து வரவேண்டும்.

காலைச் செய்தியை ரேடியோவில் கேட்பதற்குப் பதிலாக, மனைவியின் பேச்சைக் காது கொடுத்துக் கேட்கிறார். அவள் முனகுவதற்கோ அளவில்லாமல் இருக்கிறது. பட்டணத்தில் எங்குமே கைப்பை கிடைக்கவில்லையாம் அவளுக்கு. அதற்கென்ன செய்வது? கைப்பை செய்வதற்கு வேண்டிய தோல் வகைகள் இந்தியாவிலிருந்தும் தென்னாப்பிரிக்காவிலிருந்தும் வரவேண்டும். ஸ்ரீமான் பீபடி ஜோதிடம் சொல்லுவதுபோல பிரேஸில் தேசமும் காற்றோடு காற்றாய் மறைந்து விட்டால், அவளுக்கு காலில் அணிய பாதரக்ஷையும் கிடைக்காது. அதற்கு வேண்டிய பன்றித் தோலுக்கு எங்கே போவது? அமெரிக்க

சர்க்கார் தானே பன்றித் தோல் வியாபாரம் ஆரம்பிக்கலாம். பன்றித் தோல் தயாரிப்பதற்காக எடுக்கும் ஆட்களில் தானும் ஒருவனுயிருப்பானே என்று பீபடிக்குத் தோன்றுகிறது.

பல வாரங்களாக ஸ்ரீமதி பீபடி டாக்டர் பராமரிப்பில் இருந்து வருகிருள். அவளுக்கு எழுதிக் கொடுத்த மருந்து தீர்ந்து விட்டது. மறுபடியும் அந்த மருந்து வேண்டுமென்று டெலிபோன் செய்வதற்கில்லை. இந்தியாவிலிருந்து மைக்கா வருவதில்லை. அதனுல் புதிய டெலிபோன் ஸெட்டுகள் கிடைப்பதில்லை. அதன் பலன் பீபடி வீட்டில் டெலிபோன் இல்லை. மருந்து வாங்குவதற்குப் பீபடியே கடைக்குச் செல்கிருன். முற்றத்தைக் கடந்ததும், வீட்டைப் பார்த்து எரிந்து விழுகிருன். வீடு லட்சணமற்று இருக்கிறது. சீனு, இந்தியா, பிரான்ஸ் ஆகிய தேசங்களிலிருந்து வேண்டிய பொருள்கள் வராததால் வர்ணம் கிடைப்பதில்லை.

மோட்டார் காரில் போகலாமா என்று யோசித்தான். பிறகு நடந்தே போவது என்ற முடிவுக்கு வந்தான். இந்தக் காலத்தில்தான் பெட்ரோல் விலை கிராக்கியாய் இருக்கிறதே! பெட்ரோல் தென்னமெரிக்காவிலிருந்து வந்தாக வேண்டும், அல்லது நிலக்கரியைக் கொண்டு செய்த செயற்கை எண்ணெயை உபயோகிக்க வேண்டும். இம் முறைகளால் உள்நாட்டுப் பெட்ரோல் சீக்கிரமே தீர்ந்து போகாமல் பாதுகாக்கப்பட்டு வருகிறது. போதாதற்கு, எஃகு அல்லாமல், தன் கார் செய்யப்படுவதற்கு 31 மூலப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து வந்துகொண்டிருந்தன. இப்போது பீபடி வைத்திருக்கும் கார் சீக்கிரத்தில் உபயோகமற்றதாகிவிட்டால், புதிய காருக்கு எங்கே போவான் ?

இருக்கிற ஏமாற்றங்கள் போதாதென்று, கடைக்குப் போனதும், தனக்கு வேண்டிய மருந்து கடையில் இல்லையென்று அறிகிருன். அம்மருந்துக்கு வேண்டிய சேர்வைகள் கிழக்கிந்தியா, சீனு தேசங்களில் கிடைப்பவை.

பீபடியைப் போன்ற குடும்பங்களுக்கு நேரிடும் மேற்சொன்ன தொல்லேகள் சாதாரணமானவை. ஆனல் அமெரிக்கா தேசம் பல பீபடிகளேக் கொண்டது. அவர்களுடைய தேவைகளும் அதிருப்தியுமே வருங்காலத்தில் அமெரிக்கா எப்பாதையில் செல்கிறதென்பதை நிர்ணயிக்கும். மருந்துக் கடையை விட்டுத் தெருவில் பீபடி நடக்க ஆரம்பித்ததும், வளர்ந்து வரும் கறுப்பு மார்க்கெட்டை ஒழிக்க எடுத்துக் கொள்ளும் வீணை முயற்சியில் போலீஸ் அங்கே வந்து சோதனே போட ஆரம் பிக்கலாம். பீபடி தான் ஏன் மருந்துக் கடைக்கு வந்திருந் தான் என்று போலீஸுக்குச் சொல்லியாக வேண்டும். தான் யார் என்பதை நிரூபிக்கச் சர்க்கார் சீட்டைக் காண்பித்து, தன் வயது என்ன, தான் எங்கு வேலே செய்கிருன் என்றெல் லாம் பீபடி போலீஸுக்குச் சொல்ல வேண்டும். அப்போது அது சாதாரண தொல்லேயாகாது. தான் அமெரிக்க பிரஜை என்ற விஷயத்தில் பெருமை கொள்ளும் பீபடி அரசாங்கத்தின் அ37965 × 22-ம் நம்பர் பிரஜையாக மாறி விடுகிருன். அதா வது, அவன் தன் தனித்தன்மையை யிழந்து ஆடுமாடுகளேப் போல் சர்க்கார் கணக்கில் ஒரு நபர் என்ற அந்தஸ்தை அடைந்து விடுகிருன். பீபடி வெளிக் கிளம்பினதிலிருந்து சர்க்கார் ஒலிபரப்பு மூலம் அறிவிக்கப்படும் ஒரு செய்தி அவன் காதைத் துளேக்கிறது. கானடாவிலிருக்கும் யுரேனியம் புதைய லிலிருந்து உலோகம் எடுக்க அமெரிக்கா உரிமை கோரியது. அதைக் கானடா நிராகரித்துவிட்டது. கானடா மறுபடியும் யோசித்துப் பதில் அளிக்க அமெரிக்கா 24 மணி நேரம் அவகாசம் கொடுத்திருப்பதாகச் சர்க்கார் அறிக்கை கூறுகிறது. இதையும் சாதாரணமானதொரு தொல்லேயென்று தள்ளிவிட முடியாது.

பொதுமக்களுக்கு நேரக் கூடிய இவைபோன்ற எல்லா சொந்த சங்கடங்களேயும் சேர்த்துப் பாருங்கள். முடிவு அடிமைத் தனமும் யுத்தமும்தான் என்பது விளங்கும்.

நாளே உலகத்தில் அமெரிக்கா மட்டும் இருக்கிறதென்ற நிலேமை உண்டானல், மிகுந்த சர்க்கார் ஆதரவினல்தான்

தேசத்திலுள்ள முக்கிய கைத்தொழில்கள் காலந்தள்ள முடியும். இறுதியில் கைத்தொழில்கள் எல்லாம் சர்க்காருக்குச் சொந்தமாகி விடலாம். அதனுல் தொழிலாளர் திறமை குறையும். பொருள்களின் விலை உயரும். தனிப்பட்டோர் முயற்சி நசிந்துபோகும்.

நீர்ப்பாசனத் திட்டங்கள், வீடு கட்டும் திட்டங்கள், இலவச சிகிச்சை, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் முதலியவற்றிற்காகச் சர்க்கார் கோடிக் கணக்கில் பணம் செலவு செய்தாலொழிய அமெரிக்க பொருளாதார நிலைமை நீடிக்காது. சர்க்கார் திட்டங்கள் மேன்மையானவையாயிருக்கலாம். ஆனுல் பல திட்டங்கள் ஒரே சமயத்தில் திணிக்கப்பட்டால், தனி மனிதனின் அன்ருட அலுவல்களில் சர்க்கார் அடிக்கடி குறுக்கிட நேரிடும். நெருக்கடியைத் தவிர்க்கவோ, தன் வாழ்க்கை மேம்படவோ உற்சாகமூட்டுவதற்குச் சர்க்கார் முயற்சியைச் சாதாரண அமெரிக்கன் வரவேற்பான். ஆனுல் சர்க்கார் முயற்சியாலேயே தேசத்தின் பொருளாதாரம் நிலைத்திருக்கிறதென்ற நிலைமையை அவன் விரும்பமாட்டான்.

அமெரிக்கா தனியாயிருந்தால் நேரிடக் கூடிய விபரீதங்களை ஆராய்ந்தோம். ஆனுல் அமெரிக்கா தனியாக நிற்க முடியாது. மற்ற நாடுகளும் இன்னும் இருக்கின்றன, இருந்து வரும், நம்மோடு அளவளாவ விரும்பும் நாடுகளைத் தள்ளி வைத்து வெளிநாடுகளோடு எவ்வித சம்பந்தமில்லாமல் காலந்தள்ள வேண்டுமென்ருல், தேசத்தில் கட்டுப்பாடுகள் ஓங்கி விடும். சுயேச்சையான சர்க்கார் கொடுங்கோல் புரியும். கொடுங்கோல் அன்றி ஒரு கண்டத்தைச்சுற்றி மதில்கள் எழுப்ப முடியாது.

கடந்த 150 வருஷங்களில் இங்கிலாந்து போலீஸ் உத்தியோகம் நடத்தி வந்து, சர்வதேச நிலைமை ஒழுங்காக இருந்தது. அமெரிக்கா ஒதுங்கி நின்று காலங் கழிப்பது சாத்தியமாயிற்று. இன்று சர்வதேச நிலைமை ஒழுங்கற்றுக் கிடக்கிறது. அமெரிக்

காவைத் தவிர வேறு வல்லரசு இன்று நிலைமையைச் சரிப் படுத்தும் சக்தியைப் பெற்றிருப்பதாகச் சொல்ல முடியாது. ஸ்திரமான உலகத்தில்தான் அமெரிக்கா ஒதுங்கி நிற்க முடியும். அமெரிக்கா ஒதுங்கி நின்றால் ஸ்திரமான உலகம் இருக்க முடியாது. அது தர்ம சங்கடமான நிலைமைதான். அமெரிக்கா தன் விவகாரங்களைத் தானே கவனித்து வருவதற்கு ஏதாவது சந்தர்ப்பமுண்டென்றால், அது மற்ற மக்களின் விவகாரங்களை யும் கவனித்துக்கொண்டாலொழிய முடியாது. அதுவும் முழு மனதுடன் பல நூற்றாண்டுகளுக்கு மற்றவர்களின் விஷயங் களில் கவனம் செலுத்த வேண்டும்.

ஒதுங்கி நிற்கும் கொள்கையின் கதி குறுகிய காலத்தின் போக்கைக் கவனிக்கும்போது இந்த நிலைமையிலிருக்கிறதென் றால், எதிர்கால நன்மையை உத்தேசிக்கும்போது நிலைமை இன்னும் மோசமாகிவிடுமென்பது தெளிவாகும். அடிமைத் தனம் மட்டுமல்ல, அமெரிக்கா அழிவையும் தேடிக்கொள்ளும் படி நேரிடும்.

அதிசயமாக நாளை ரஷ்யா யோக்கியமான நாடாக மாறிவிட் டாலும், அமெரிக்கா பொருளாதாரத் துறையில் தான் உண்டு தன் வாழ்வு உண்டு என்ற கொள்கையைக் கடைப் பிடித்தால் யுத்தத்தை வருந்தி அழைப்பதாகும். உலகத்தில் மூன்றில் இரு பாகங்களிலுள்ள இன்றைய நிலைமை யுத்தம் மூள்வதற் கான சூழ்நிலையை வளர்க்கக் கூடியதாயிருக்கிறது. ரஷ்யா இருந்தாலும் இல்லாவிட்டாலும், துன்பமும் அதிருப்தியும் இருக்கும் இடங்களில் கம்யூனிஸ்டுகளோ அவர்களின் மனப் பான்மையுள்ள மற்றவர்களோ தோன்றத்தான் செய்வார்கள். அமெரிக்காவின் சுமுகமான உதவியும் ஆதரவும் இல்லையென் றால் மனித சமுதாயத்தின் ஒரு பாதி சமட்டி-அரிவாள் கொள் கையைப் பின்பற்ற நேரிடலாம். இன்னும் பல ஆண்டுகளுக்கு அமெரிக்காவின் உதவியும் நட்பும் மற்ற நாடுகளுக்கு வேண்டி யிருக்கின்றன.

அயல் நாட்டுத் தொல்லைகளில் ஈடுபடவில்லையென்றால் அமெரிக்கா இன்னும் சுபிட்சமான நிலையை அடைய தனது வசதிகளை உபயோகித்துக் கொள்வது நினைப்பதற்கு ரம்மியமாக இருக்கும். ஆனால் இதுவரை ஏற்பட்ட அபிவிருத்தியைக் குலைப்பதற்கு அமெரிக்கா நிச்சயமாகக் கடைப்பிடிக்கக் கூடிய கொள்கை ஒதுங்கியிருப்பதுதான். அமெரிக்கா தனது செய்கையாலேயே தனது நண்பர்களை விரோதிகளாக்கிக் கொள்ளும். அது உற்பத்தி செய்யும் பொருள்களில் பெரும்பான்மை யுத்த முஸ்தீப்புக்காக ஒதுக்கி வைக்க வேண்டி வரும். கைகளில் தளைகள் அணிந்து வாழ்க்கையை நடத்தி வரும் நிலைமை ஏற்பட்டுவிடும்.

நம் கண் முன்னாலேயே பூலோகம் கரமுட்டி அளவிற்குச் சுருங்கி விட்டது எனலாம். இந்த நிலைமையில் ஒதுங்கி நிற்பதென்பது நியாயமற்றது மட்டுமல்ல, அசாத்தியமானதும்தான். உலகத்தின் மற்ற பாகங்கள் அமெரிக்காவுடன் சேரவில்லையெனில் அமெரிக்காவுக்கெதிராக அவை ஒன்று சேரும். பல கருத்துகளும், தத்துவங்களும், பழக்க வழக்கங்களும் கொண்ட கிழக்கு அர்த்தகோள நாடுகளுடன் அமெரிக்கா நெருங்கிப் பழகத் தயங்கினால், கடைசியில் இரு சாராருக்கும் ஏற்படக்கூடிய சர்வ நாசம் இரு பாகங்களையும் பிணைத்து வைக்கும்.

ஒதுங்கி நிற்பதற்குப் பதிலாக அமெரிக்கா அநுசரிக்கவேண்டிய கொள்கை எளிதானதல்ல. தனது தொழில் முதலாளிகளும் தொழிலாளர்களும் முதலில் ஓரளவு தியாகம் செய்ய வேண்டியிருந்தாலும், அமெரிக்கா சுதந்திர வர்த்தகத்துக்காக ஓயாமல் பொறுமையுடன் உழைக்க வேண்டும். தனக்கு நியாயமானதென்று தோன்றும் கருத்துகளை மற்ற நாடுகள் ஏற்காவிடினும் அவற்றோடு அமெரிக்கா ஒத்துழைக்க வேண்டும். உள்நாட்டில் சௌகரியமாய்ச் செலவு செய்யக் கூடிய பணத்தை வெளிநாடுகளில் செலவு செய்ய வேண்டும். தன்னுடைய வியாபாரத்துக்குக் கூடிய சீக்கிரத்தில் போட்டி உண்டாகும் என்றாலும், மற்ற நாடுகளின் தொழிலியல் முன்

னேற்றத்துக்கு அடிகோல வேண்டும். மற்ற நாடுகளும் தம் சுயநலத்திலேயே கண்ணும் கருத்துமாய் இராதென்ற நம்பிக்கையில் அமெரிக்கா சுயநலமற்ற சேவைக்குத் தயாராக வேண்டும்.

ஒதுங்கி நின்று வாழ்ந்த நாட்கள் எவ்வளவு சுகமாய் இருந்தன என்று அமெரிக்கர்கள் யோசித்துப் பார்த்து ஆயாசப் படலாம். ஆனால் அவர்கள் பின்நோக்கிச் செல்ல முடியாது. இன்று சுபிட்சமான சுதந்திர அமெரிக்கா உலகத்தைக் காக்க முடியுமென்றால், நாளை சுபிட்சமான சுதந்திர உலகமே அமெரிக்காவை ரட்சிக்க முடியும்.

# பட்டினிச் சாவைத் தவிர்க்க முடியுமா?

பழைய உலகம் எக்கேடு கெட்டாவது போகட்டும் என்று நினைக்கும் அமெரிக்கர்களுக்குச் சக்தி வாய்ந்த நண்பராக இருப்பவர் காலஞ் சென்ற மால்தூஸ் என்ற இங்கிலீஷ் பாதிரி என்று சொல்லலாம். 150 ஆண்டுகளுக்கு முன்பு அவர் ஒரு கருத்தை வெளியிட்டார். கிடைக்கும் உணவு போதாத நிலைமைக்கு மனித சமுதாயம் பெருகிவிடும். பிணியும் பஞ்சமும் யுத்தமும் ஏற்படுவதன் மூலமே ஜீவிதம் நடக்கும் என்று அவர் கணக்கிட்டு அபிப்பிராயம் தெரிவித்தார்.

மால்தூஷியனுக்கு, அதாவது மால்தூஸ் அபிப்பிராயங்கள் சரியானவையென்று நம்புவோனுக்கு, பசிப்பிணியால் வாடும் நாட்டிற்கு அளிக்கும் பண உதவியோ பொருளுதவியோ வியர்த்தம், அதனுல் அந்நாட்டின் துயரங்கள் இன்னும் அதிகமாகும் என்று தோன்றும். அவனுடைய கருத்தின்படி, மனிதர்களுக்கு உணவு அதிகமாகக் கிடைத்தால், ஜனத்தொகை இன்னும் அதிகமாகும். ஜனத்தொகை அதிகமானுல், ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் உணவின் அளவு குறையும். சாப்பிடுவதற்கு ஆட்கள் அதிகமாகும்போது, சாப்பாடு இல்லாமல் தவிக்கும் மக்களும் அதிகமாவார்கள். அதாவது, உணவே பட்டினியை வளர்க்கிறதென்ற சித்தாந்தம் மால்தூஷியனுக்கு.

மால்தூஷியன் இவ்வாறு அஞ்சுவதற்கும் காரணங்கள் இருக்கின்றன. பதினேழாம் நூற்றுண்டிலிருந்த ஜனத்தொகை இப்போது ஐந்து மடங்கு பெருகியிருக்கிறது. கடந்த நூறு வருஷங்களில் இரு மடங்காகியிருக்கிறது. பத்தே ஆண்டுகளில் இரண்டு கோடி மக்கள் அதிகமாகியிருக்கின்றனர். இந்த அளவில் ஜனத்தொகைப் பெருகி வந்தால் இருபத்தியோராம்

நூற்றுண்டின் முதலில் 450 கோடி மக்கள் பூலோகத்தில் வாழ் வார்கள். அவர்களில் இரண்டு கோடி மக்கள் ஒவ்வொரு வருஷமும் பட்டினியால் மடிவார்கள் என்று மால்தூஸியன் வருந்துகிறுன்.

ஆகவே, சிறிது சிறிதாக அழிந்து போய்க்கொண்டிருக்கும் பழைய உலகத்திற்கு அமெரிக்கா உதவி செய்வது வீண், முட்டாள்தனம் என்பது அவன் கட்சி. இந்த நிலைமையில், முதலாளிகள் போடும் பணமும், சர்க்கார் அளிக்கும் கடனும், தனிப்பட்டோர் கொடுக்கும் தர்மமும் கொடுமையைத் தணிப்ப தற்குப்பதில் வளர்த்து வரும். மார்ஷல் திட்டம், சர்வதேச பாங்க், சுதந்திர வியாபாரத்துக்கான உடன்பாடுகள் போன்ற எல்லா சர்வதேசக் கூட்டுறவு முயற்சிகளும் பலனற்றவை. அதற்குப் பதிலாக, வரப்போகும் அழிவிலிருந்து எப்படியாவது தப்பித்துக்கொள்ளத் தன் சக்தியையும் வசதிகளையும் காப்பாற்றிக் கொள்வதே அமெரிக்காவின் கடமை என்று தீவிர மால்தூஸியன் கருதுகிறுன்.

இவ்வாறு அவன் ஒரு துருவத்திலிருந்து எச்சரிக்கை செய்து வந்தால் மற்றெரு துருவத்தில் சிலர் மேழிச் செல்வத்திற்கு அளவு எதும் கிடையாது என்று வாதிக்கின்றனர். மனிதன் தன் அறிவாற்றலால் வெகு சீக்கிரமே நிலைமையைச் சமா ளித்துக் கொள்ள முடியும். பிறகு ஜனத்தொகையின் பெருக்கை எப்படிக் குறைப்பது என்பதற்குப் பதிலாகத் தன் தொந்தியை எப்படிக் குறைப்பது எனச் சஞ்சலப் படுவான் என்கிறுர்கள் அவர்கள்.

கிடைக்கும் உணவு போதாத நிலைமைக்கு ஜனத்தொகை பெருகி விடுமா? அப்படியாயின், அமெரிக்கா தனது உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்துக்கொண்டு துப்பாக்கிகளைச் செப்ப னிடவேண்டுமா? மனித சமுதாயத்திற்கு அவசியமான உண வுப் பொருள்களனைத்தும் பொருளியல் திறனுல் உற்பத்தி செய்ய முடியுமா? முடியுமென்றுல், இப்போது கோடிக் கணக்

கான மக்கள் பசியால் வாடுவது சீக்கிரமே தீர்ந்து போகும். அமெரிக்கர்கள் தங்கள் உணவுப் பொருள்களின் விலையைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பிக்கலாமா? அல்லது உணவு உற்பத்திக்கும் ஜனத்தொகை அபிவிருத்திக்கும் நடக்கும் போட்டி இயற்கையானதல்லவா? சமுதாய பொருளாதாரக் கோளாறுகளால் ஏற்பட்ட விளைவா அது? அப்படியாயின், பின்தங்கிய நாடுகள் மற்ற நாடுகளைப் போல சுபிட்சமடைய உதவி செய்வது சாத்தியமா? இக் கேள்விகளுக்குச் சரியான பதில் என்ன என்று ஆராயவேண்டும்.

உலகில் பயிர் செய்யப்படும் நிலம் இன்னும் எவ்வளவு அதிக உணவை உற்பத்தி செய்ய முடியும்? இன்று விவசாயிகள் 70 லட்சம் சதுர மைல் அல்லது 400 கோடி ஏக்கர்களை உழுது பயிரிடுகிறார்கள். அந்நிலத்திலிருந்து விளையும் உணவுப் பொருள்கள் அநேகமாக நமக்குக் காலந்தள்ளப் போதும். ஆனால் உயிருடன் வாழும் எல்லா மக்களும் வயிறு நிறைய புசிக்க வேண்டுமானால், உணவு உற்பத்தி இன்னும் 50 சத விகிதம் பெருக வேண்டும்.

இப்போது விளையும் பயிர்களிலேயே வெவ்வேறு தானியங்களின் அளவு மாற்றியமைக்கப்பட்டால், தற்சமயம் உற்பத்தியாகும் உணவைக்கொண்டே எல்லோரும் பட்டினி கிடக்காமல், தேகம் க்ஷீணமடையாமல் வாழலாம் எனப் பல நிபுணர்கள் கருதுகிறார்கள். மனிதன் உட்கொள்ளவேண்டிய உணவின் அளவு அவன் அருந்தும் உணவைப் பொறுத்திருக்கிறது.

உதாரணமாக, யுத்தத்தின்போது நண்பர்கள் குழாம் என்ற சமாஜத்தினர் ஐரோப்பாவுக்கு ஒரு கப்பல் நிறைய உணவு அனுப்ப விரும்பினர். கப்பலில் இருக்கும் இடத்தில் கோதுமை, எண்ணெய் போன்ற பொருள்கள் எந்தெந்த அளவுக்கு அனுப்பினால், புஷ்டிதரும் உணவு அதிகமான அளவுக்கு அனுப்ப முடியுமென்று அவர்கள் யோசித்தார்கள். மஸ்ஸாச்சூஸெட்ஸ் நகரத்திலுள்ள தொழிலியல் நிலையத்திலிருக்கும் நிபுணர்

ஒருவரைக் கலந்தாலோசித்தார்கள். நிபுணர் ஒரு வாரம் கணக்கிட்டுப் பார்த்தார். சரியான சேர்வையால் ஒரு கப்பலில் அனுப்பக் கூடிய உணவின் போஷணையை 50 சத விகிதம் அதிகமாக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

உலகத்தில் விளையும் பயிர்களையெல்லாம் அம்மாதிரியே தேவைக்குத் தகுந்தவாறு மாற்றினால், உணவு உற்பத்தி ஒரு படிகூட அதிகமாக்காமல், இப்போதிருக்கும் உணவுப் பற்றுக் குறைத் தொல்லையை ஒழிக்கலாம். சமப்படுத்திய உற்பத்தி, சமப்படுத்திய உணவு புசித்தல் என்பவையெல்லாம் எதிர்காலக் கனவுகளாகவேதான் நின்று விடும். மக்களின் உணவு சம்பந்தப்பட்ட பழக்க வழக்கங்களை மாற்றுவது எளிதல்ல. இன்றைய பழக்க வழக்கங்களின்படி, உலக ஜனத்தொகையைப் போஷிக்க இப்போது கிடைக்கும் உணவைவிட 50 சத விகிதம் அதிகம் வேண்டும். பயிரிடப்படும் 70 லட்ச சதுரமைல் விஸ்தீரணத்தில் இந்த அதிகப்படி தானியத்தை விளைவிப்பது சாத்தியமா ? ஹார்வார்டின் பூமண்டல சாஸ்திர இலாகாவின் தலைவரும், உலக வசதிகளைப் பற்றிய ஆராய்ச்சி நிபுணருமான கிர்ட்லி எவ். மாத்தர் சாத்தியமென்கிறார்.

கடந்த 25 ஆண்டுகளில் ஜனத்தொகைத் துரிதமாகப் பெருகினும், அதைவிட வேகமாக உணவு உற்பத்தியும் பெருகி வந்திருக்கிறதென்பதை அவர் சுட்டிக் காண்பிக்கிறார். 1900-ம் ஆண்டில் அமெரிக்காவில் ஓர் ஏக்கருக்கு 60 பறைகள் தானியம் விளைந்தது. இன்று சிறந்த விதையை உபயோகித்து 100 பறைகள் விளைவிக்க முடிகிறது. 50 வருஷங்களுக்கு முன் சிறந்த கோதுமை விதை உற்பத்தி செய்தது இன்று அமெரிக்காவில் கிடைக்கும் சிறந்த வித்து உற்பத்தி செய்வதில் பாதி தான். மாரி காலத்தில் ஒரு ஏக்கருக்கு 120 பறைகள் விளையக் கூடிய கோதுமையை விருத்தி செய்திருப்பதாக ரஷ்யா அறிவித்திருக்கிறது.

இதற்குள்ளாகவே பலனளித்திருக்கும் உத்தி முறைகளைக் கையாளுவதன் மூலம் அமெரிக்க வயல்களிலிருந்து கிடைக்கும்

விளைபொருள்களை இரு மடங்கு, நாலு மடங்கு அதிகமாக்கலாம் என்று மாத்தர் மதிப்பிடுகிறார்.

உரம் உபயோகித்தல், நிலத்தின் செழிப்பைப் பாதுகாத்தல், பயிரைச் சேதம் செய்யும் பூச்சிகளை அழித்தல், சிறந்த விதைகளை உபயோகித்தல் ஆகிய முறைகளினால் அமெரிக்காவில் தற்சமயம் பயிர்த் தொழிலை அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். டென்னஸ்ஸி பள்ளத் தாக்கில் 60 லட்சம் ஏக்கர்களுள்ள 42,000 பண்ணைகளில் உரம் உபயோகிப்பதால் உண்டாகும் நன்மையைப் பற்றி பரீட்சை நடந்தது. புதிய மெஷின்களையோ அதிக ஆட்களையோ உழவர்கள் உபயோகிக்கவில்லை. செயற்கை உரத்தை நிலத்தில் போடுவதன் மூலம் அவர்கள் உற்பத்தியை 30 சத விகிதம் பெருக்கினர். உரம் அதிகமாக உபயோகிக்கப் பட்ட வயல்களில் விளைச்சல் 60 சத விகிதம் பெருகிற்று.

மனிதர்களைப் போலவே செடிகளும் வெளித்தெரியாத பசியால் வாடலாம். ஆகவே செடிகளுக்கு அத்தியாவசியமான உணவு வகைகள் கிடைக்கும்படி உழவர்கள் கவனித்துக்கொள்ள வேண்டும். அதிர்ஷ்ட வசமாக நிலத்திற்குப் போட வேண்டிய எரு வகைகள் அபரிமிதமாகக் கிடைக்கின்றன. செடிகளின் உணவுக்கு அவசியமான 20 மூல வஸ்துக்களில் பல இயற்கையாகவே கிடைக்கின்றன. உதாரணமாக, தர்க்கியதம் காற்றிலிருந்தே கிடைக்கிறது. புழு, பூச்சி, நாலு கால் பிராணி ஆகிய ஜீவ ராசிகளும் இயற்கைக்கு அனுசரணையாகப் பூமிக்குத் தேவையான ஆகாரத்தை அளிக்க உதவுகின்றன. பூமியிலுள்ள உபத் திரவங்களை நீக்கக் கையாளும் முறையில் நிபுணர்கள் ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ள வேண்டும். களையை அழிக்கும் மருந்தினால், விளைச்சல் 25 சத விகிதம் பெருகும். கரும்பு அதிகமாக விளைவிப்பதற்கும் அம்மருந்து உபயோகப்படுகிறது. எனினும், நல்லதோ கெட்டதோ தழையுள்ள செடிகளையெல்லாம் அது கொன்றுவிடுகிறது. சந்தர்ப்பம் கிடைத்தால், களைகளை நீக்குவதுபோலவே அம்மருந்து பஞ்சையும் வள்ளிக்கிழங்கையும் பாழாக்கிவிடும். டாக்டரிடம் கலந்தாலோசித்து மருந்து குடிப்

பது போலவே, நிபுணர்களைக் கேட்டு 2,4-D என்ற அம்மருந்தை உபயோகிக்க வேண்டும்.

பூச்சிகளைக் கொல்லும் DDT என்ற மருந்து விஷயமும் அப்படித்தான். அமெரிக்காவில் பயிர்களை 15 சத விகிதம் பூச்சிகள் அரித்துவிடுகின்றன. விமான மூலம் பரந்த வெளிகளில் DDT மருந்தைத் தூவுவதால் பயிர்களுக்கு விளையும் சேதம் பாதிக்குக் குறையும். நிபுணர்கள் கூறுவதுபோலப் பக்குவமாய் உபயோகித்தால் நிலத்திற்கோ பயிர்களுக்கோ சேதமின்றி உழவர்கள் பயனடையலாம்.

களைகள், பூச்சிகள் ஆகியவற்றைவிட பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கக்கூடிய தொந்தரவு நிலத்தின் செழிப்பின்மைதான். அதனால் சாம்ராஜ்யங்கள் அழிந்து போயிருக்கின்றன. பூமியின் மீதுள்ள மண் கரைந்து போவதால் ஒவ்வொரு வருஷமும் அமெரிக்காவுக்கு 300 கோடி டாலர்கள் அல்லது 5 லட்சம் ஏக்கர்கள் நஷ்டம். ரஷ்யா, ஆப்பிரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா, தென்னமெரிக்கா கண்டங்களிலும் நிலைமை மோசமாகவே இருக்கிறது.

பூமி மண்ணைப் பாதுகாக்க மனிதன் எடுத்துக்கொண்ட முயற்சிகள் இதுவரை பலிக்கவில்லை யெனினும், இறுதியில் அவன் வெற்றியடையலாம். 15 வருஷங்களாக அமெரிக்காவில் அமுலிலிருக்கும் நிலப் பாதுகாப்புத் திட்டம் எதிர்காலத்தில் மனிதன் என்ன சாதிக்க முடியும் என்பதைத் தெளிவாக்குகிறது. உழும்போது குன்றுகளின் போக்கைப் பின்பற்றும்படி ஆயிரக் கணக்கான உழவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டது. செங்குத்தான சரிவுகளில் தண்ணீர் ஓட்டத்தைத் தடுப்பதற்காக மரங்களை வளர்க்கும்படி புத்திமதி கூறப்பட்டிருக்கிறார்கள். 1947-ம் ஆண்டில் மட்டும் அமெரிக்காவில் இரண்டு கோடி ஏக்கர்களில் நிலப் பாதுகாப்பு முறையைக் கையாண்டிருக்கிறார்கள். 1970-ம் ஆண்டிற்குள் 30 கோடி ஏக்கர்கள் பாதுகாக்கப்படும்.

சர்க்கார் நிபுணர்கள் ஆரம்பித்து வைத்த இத்திட்டங்களை விவசாயிகளே விஸ்தரித்து நிறைவேற்றி வருகிறார்கள். உதாரணமாக, வட டெக்ஸாஸிலிருந்து கானடா எல்லைவரை இன்று வரிசையாக 30 கோடி மரங்கள் தழைத்தோங்குகின்றன. அவையெல்லாம் சென்ற 13 வருஷங்களில் வைக்கப்பட்டவை. அதற்குமுன் இன்று உயிருள்ள மனிதன் நினைவுக்கு எட்டும் காலம் வரை அங்கே ஒரு மரம்கூட வளர்ந்ததில்லை. 25,000 சதுர மைல் நிலப்பரப்பிலுள்ள அம்மரங்கள் காற்றின் போக்கை மாற்றும் 40,000 கருவிகளின் வேலையைச் செய்கின்றன. காற்றின் போக்கை மாற்றுவதுடன், சீதோஷ்ண நிலையைக் குளிர்ச்சியாக்குகின்றன. மாரிகாலத்து உறை பனியை நிறுத்திக்கொள்கின்றன. பயிர்கள் தீயால் அழிந்து போகும் அபாயம் குறைந்திருக்கிறது. நிலத்தில் ஈரம் வற்றிப் போவது மட்டாகிறது. ரஷ்யாவிலும் இதேபோல ஒரு திட்டம் நடந்து வருகிறதாம். 1948-ம் ஆண்டில் ரஷ்யாவில் 25 லட்சம் ஏக்கர்களில் மரங்கள் வைத்திருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

உழவன் தன் நிலத்தைச் சரியான வகையில் சாகுபடி செய்யும் வழியை அநுபவங்களின் வாயிலாக ஐரோப்பாவில் வெகு காலத்துக்கு முன்பே அறிந்து கொண்டான். இப்போதுதான் அதன் அவசியத்தை மற்ற நாடுகளில் உணர்ந்து வருகிறார்கள். பிரிட்டனில் சாதாரணமாக வழங்கி வரும் சாகுபடி முறைகளை, உலகத்தில் பயிர் செய்யப்படும் நிலப் பரப்பின் ஒரு பாதியாகிய 200 கோடி ஏக்கர்களில் கையாண்டால் இன்று பூலோகத்தில் வாழும் மக்கள் அனைவரும் வயிரார உண்டு, மிகுதியும் தோன்றும் என பிரிட்டிஷ் விஞ்ஞானியான ஜே. டி. பெர்னல் கூறுகிறார். உலகிலுள்ள பயிர் நிலங்களிலெல்லாம் சிறந்த முறைப்படி விவசாயம் செய்தால் நம் தேவைக்கு 20 மடங்கு வரை பயிர் உற்பத்தியாகும் என்கிறார் அவர்.

அவர் மிகைப்படக் கூறுகிறார் என்று வைத்துக்கொண்டாலும், இன்று உலகிலுள்ள பண்ணைகளில் உற்பத்தியைப் பெருக்க முடியும், அவ்வாறு உற்பத்தி பெருகுவதால் அப்

பண்ணைகளின் செழிப்புக்கு நஷ்டம் வராது என்பது தெளிவாகிறது. அடுத்த பத்து ஆண்டுகளில் 90 சத விகிதம் உலக உணவு உற்பத்தி அதிகரிக்க வேண்டுமென ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய இலாகா கூறுகிறது. அது கனவல்ல, நடைமுறையில் சாத்தியமாகக்கூடிய திட்டம்தான். அவ்வாறு உணவு உற்பத்தி அதிகரித்தால் எல்லோரும் ஆரோக்கியத்துடன் வாழப் போதிய உணவு கிடைக்கும். அந்த வேலையை எப்படிச் செய்து முடிப்பது என்று வினவினுல், உணவு விவசாய இலாகா பின்வரும் உதாரணங்களைக் காட்டுகிறது : யுத்த காலத்தில் பிரிட்டன் தன் உணவு உற்பத்தியை 60 சத விகிதமும் அமெரிக்கா 35 சத விகிதமும் அதிகரித்திருக்கின்றன.

தற்சமயம் பயிராகிவரும் நிலங்களைக் கொண்டு இன்று உயிருடன் வாழும் மக்களைப் போஷிக்கலாம் என்றுல்மட்டும் போதாது. இன்னும் ஐம்பது ஆண்டுகளில், 50 கோடி நபர்கள் அதிகமாக உலகில் நடமாடலாம். அவர்களுக்கும் உணவு கிடைப்பதற்கு, உழக்கூடிய நிலப்பரப்பை விஸ்தரிக்க என்ன வாய்ப்பு இருக்கிறது ?

பூலோகத்தில் நிலப்பரப்பின் மொத்த விஸ்தீரணம் 520 லட்சம் சதுர மைல். இன்று 70 லட்சம் சதுர மைல்தான் மனிதன் உழுது பயிரிடுகிறுன். சமீப காலம் வரை, இன்னும் 20 லட்சம் சதுர மைல்களுக்கு மேல் உழுவதற்கு லாயக்கான நிலம் கிடையாதென்று எண்ணி வந்தார்கள். எஞ்சியுள்ள நிலம் சாகுபடிக்குப் பிரயோஜனமற்றது என்று முடிவு கட்டியிருந்தார்கள்.

பூமண்டல நிபுணர்கள் சமீபத்தில் இவ்வபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டனர். உழக்கூடிய மொத்த நிலப்பரப்பு கிட்டத்தட்ட 245 லட்சம் சதுர மைல் என்று இப்போது மதிப்பிடுகிறுர்கள். அதாவது, மொத்த நில்ப்பரப்பில் பாதி சாகுபடிக்கு லாயக்கானது என்றுகிறது. நடைமுறையில் அது இன்றே நாளோ சாத்தியமாவப் போவதில்லை. எனினும்,

நேற்று தரிசு நிலமாகக் கிடந்தது நாளை மிகச் செழிப்பான பூமியாகக் காட்சி அளிக்குமாறு தற்கால முறைகளால் முடியு மென்பது உண்மை.

இப்போது போகும் வேகத்தில், ஒவ்வொரு வருஷமும் அமெரிக்க விவசாயிகள் 10 லட்சம் ஏக்கர்களை பயிர் நிலமாகவோ புல் தரையாகவோ "உண்டாக்கி" வருகின்றனர். சென்ற 25 வருஷங்களில் அமெரிக்க விவசாயிகள் சுமார் 4 கோடி ஏக்கர் நிலத்தை அதிகமாக பயிர்த் தொழிலுக்குப் பயன்படுத்தி யிருக்கின்றனர் என "விவசாய நிலைமை" என்ற நூலில் எச். எச். ஊட்டன் கூறுகிறுர்.

நிலத்தை மீட்பதில் மெஷின்கள் பெரிதும் பயன்பட்டிருக் கின்றன. பாறைகளை உடைப்பதும், மரங்களை வீழ்த்துவதும், வேர்களை அப்புறப்படுத்துவதும் பல மாதங்களாக மனிதர்கள் வியர்க்க வியர்க்கச் செய்ய வேண்டிய வேலைகளல்ல இன்று. சில மணி நேரங்களில் டிராக்'டர்களும் புல் டோஸர்களும் அவ் வேலைகளைச் செய்து முடித்து விடுகின்றன. 1930-ம் ஆண்டில் அமெரிக்காவின் 58 லட்ச பண்ணைகளில் ஆறில் ஒருவரிடம்கூட டிராக்டர் இல்லை. இன்று சுமார் 40 லட்சம் பண்ணைகளில் டிராக்டர்கள் இருக்கின்றன. பிரிட்டன் போன்ற நாடுகளில் பயிர்த் தொழிலில் இன்னும் தீவிரமாக மெஷின்களை உபயோ கிக்கின்றனர்.

நீர்ப்பாசனமும் முக்கியமானது. நீர்பாசனத்தால் இன்று 15 கோடி ஏக்கர் நிலம் உலகில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இன்னும் 30 கோடி ஏக்கர் நிலம் சாகுபடி செய்யலாம். கடல் நீரினின்றும் உப்பை எடுத்துவிடுவது இப்போது சாத்தியமா கிறது. அடுத்த பத்து வருஷங்களில் கடல் நீரைக் கொண்டு கடலோரத்திலுள்ள உலர்ந்த பிரதேசங்களில் நீர்ப்பாசன முறையில் பயிர் செய்வது சாத்தியமாகலாம்.

அடர்ந்த காடுகளை நீக்கி நிலத்தை சாகுபடி செய்தால் ஏற்படக்கூடிய அபிவிருத்தி நீர்ப்பாசன முறையால் புதிய

நிலத்தில் சாகுபடி செய்வதற்கு எத்தனையோ மடங்கு அதிக மாகும். சுமார் 500 கோடி ஏக்கர்கள், அதாவது இப்போது உலகிலுள்ள பயிர் நிலத்தைவிட அதிக விஸ்தீரணமான பூமியை இவ்விதமாகக் கரும்பு, நெல் முதலிய பயிர்கள் விளை விக்க உபயோகிக்கலாம் என்று விவசாய இலாகா அதிகாரி ஒருவர் மதிப்பிடுகிறார்.

பயிரிடும் காலம் குறுகியதாயுள்ள வடக்குப் பிரதேசங்களில் தானியங்களைக் குறுகிய காலத்திலேயே விளைவிக்கலாமென்று விஞ்ஞானிகள் நிரூபித்திருக்கிறார்கள். அதனால் மனிதன் கைபடாத 30 கோடி ஏக்கர் நிலம் சாகுபடிக்கு உபயோகமாகும்.

ஆகவே, இப்போதுள்ள நிலப்பரப்பைக் கொண்டு இப்போ திருக்கும் ஜனத்தொகையைப் போஷிக்க எவ்வாறு முடியுமோ அவ்வாறே ஜனத்தொகையில் ஏற்படக்கூடிய பெருக்கத்தையும் புதிய நிலங்களில் உணவு உற்பத்தி செய்து சமாளித்துக் கொள்ளலாம். அதற்கப்புறமும் ஜனத்தொகை பெருகிக் கொண்டே போனால், உணவு வசதிகளிலும் அபிவிருத்தி உண் டாக வேண்டுமே, அது முடியுமா ?

விஞ்ஞான ஆராய்ச்சியைக் கொண்டு யோசித்தால் முடியு மென்றே சொல்ல வேண்டும். மரத்திலிருந்து சர்க்கரை எடுக்க லாம். சூரியனிடமிருந்துச் செடிகள் சக்தியைக் கிரஹிக்கும் வேகத்தைத் துரிதப்படுத்தலாம். நிலமில்லாப் பண்ணைகளை நிர்மாணிக்கலாம். கடலில் ஆழமில்லாப் பிரதேசங்களில் தாவர வர்க்கங்களை வளர்க்கலாம்.

ருசியுள்ள, புஷ்டி தரும் உணவுப் பொருள்கள் எத்தனையோ நாம் அறியாமலே நம்மைச் சுற்றி மலிந்து கிடக்கின்றன. தக் காளிப் பழத்தைக் கடும் விஷம் என்று கருதிய நாட்களைச் சில அமெரிக்கர்கள் இன்றும் மறக்கவில்லை. சில வருஷங்களுக்கு முன்பு வரை அவரைப் பட்டாணிச் சாப்பிடக் கூடிய பொருள் என்று அமெரிக்கருக்குத் தெரியாதிருந்தது. எனினும்

கோதுமையை விட அவரைப் பட்டாணியில் சத்து அதிகமிருக்கிறது. அவரைப் பட்டாணியைக் கொண்டு தயாரிக்கப்படும் சாப்பாடு நாலணு ஐந்தணு வீதம் ஆயிரக் கணக்கில் இப்போது செலவாகிறது.

மெக்ஸிகோவில் விளையும் மால்வா என்ற செடி மற்ற எல்லா உணவுப் பொருள்களைக்காட்டிலும் அதிகமான சத்தைப் பெற்றிருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறுர்கள். "நாகரிகமான" மெக்ஸிகர்கள் அதைத் தழையாக பாவித்து வந்தார்கள்.

சாதாரணமாக இன்று பயிராகும் பொருள்களில் ஒரு பகுதிதான் மனிதனின் உணவாக உபயோகமாகிறது. உதாரணமாக, 700 கோடி பறை அரிசி ஒரு வருஷத்தில் அறுவடை ஆகிறது. அதில் 75 சத விகிதம் உணவாகப் பயன்படுகிறது. அந்த நிலைமை இப்போது மாறிவருகிறது. யுத்தத்தின் போது எம். யோனுன் மாலிக் என்ற பாரசீக அமெரிக்கன் ஒரு புது வழியை உண்டாக்கியிருக்கிறுர். அதன்படி நெல்லிலிருந்து உமி எடுக்கப்பட்டால் அரிசியின் சத்து இருமடங்கு அதிகரிக்கிறது. அரிசியைத் தீட்டுவதன்மூலம் இடிக்கும் சத்துள்ள தவிடு அரிசியிலிருந்து எடுக்கப்படமாட்டாது. மாலிக் திட்டம் இப்போது உலகம் பூராவும் பரவி வருகிறது. எல்லோரும் அவ்வழியில் உமியைப் போக்கினுல், அரிசியின் உணவுச் சத்து 25 சத விகிதம் அதிகமாகும்.

தானியம் உண்பதற்கு ருசியாக இருக்கிறதே, வைக்கோல் ஏன் தின்பதற்கு ருசியாக இல்லையென்று நீங்கள் யோசித்ததுண்டா ? விவசாய நிபுணர்கள் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறுர்கள். ரத்தத்திலிருந்துச் சத்துள்ள பாகத்தை மட்டும் எடுப்பதைப் போலவே அவர்கள் கோதுமை முதலிய செடிகளின் தண்டுகளிலிருந்து மட்டுமல்லாமல் புல், தழை முதலியவற்றிலிருந்தும் உணவுச் சத்தை எடுத்துக்கொள்வதில் வெற்றியடைந்திருக்கிறுர்கள்.

மஸ்ஸாச்சூஸெட்ஸ் தொழிலியல் நிலேயத்தில் பரீக்ஷார்த்த மாக ஆறுபேர் ஐந்து நாட்களுக்கு ஆடுமாடுகளின் இறையி லிருந்து தயாரித்த உணவைமட்டும் அருந்திவந்தனர். அவர் கள் ஆரோக்கியத்துடன் இருந்ததோடு, ஐந்து நாட்கள் கழிந்த பின்பும் அதே ஆகாரத்தைத் தின்ன விரும்பினர். வரு ஷத்துக்கு 72 ரூபாய் செலவில் ஒருவன் தனக்கு வேண்டிய ஆகாரத்தை வைக்கோல் முதலிய பொருள்களிலிருந்து எடுத் துக்கொள்ளலாம். ருசியில்லேயென்ருலும், வேண்டிய சத்து இருக்கும் என்று அந்த நிலேயத்தின் அதிகாரிகளில் ஒருவரான டாக்டர் ராபர்ட் எஸ். ஹாரிஸ் கூறுகிருர்.

வழக்கத்தில் உணவுச் சத்தை மட்டும் சாப்பாடாக உப யோகிப்பது துர்லபம். மற்ற உணவுப் பொருள்களோடு சேர்த் துச் சாப்பிடவே அது உபயோகப்படும். ருசியும் சத்தும் கலந்து பல ரகங்களிலிருந்தால் உணவு பூர்ண பலனே அளிக்கும்.

அதிக மரங்களே வளர்த்து, மரத்திலிருந்துச் சர்க்கரை செய் வதன்மூலம் 1,500 கோடி மக்களே, அதாவது இன்றுள்ள ஜனத்தொகையின் ஆறு மடங்கை, உலகம் ஆதரிக்க முடியு மென்று ஜெனரல் எலெக்ட்ரிக் கம்பெனியின் ரசாயன சாஸ்திரி யான ஈஜன் ஜி. ராக்கோ நம்புகிருர்.

நிலத்தின் உதவியின்றியே பயிர் செய்ய முடியுமென்று சொன்னல் 25 வருஷங்களுக்கு முன்பு எந்த விவசாயியும் சிரித்திருப்பான். எனினும், அவசியமிருந்தால் ஆழமில்லா குட்டைகளில் போஷகமான கலப்பு நீரைக் கொட்டி அவற்றில் பண்ணேகளே நிர்மாணிக்கலாமென்பதைப் பரிசோதகத் தொழிற் சாலேகள் தெளிவாக்கியிருக்கின்றன. அதற்கு ஆகும் செலவு அபாரமாய்த்தானிருக்கும். அம்மாதிரிப் பண்ணேகளே ஏற் படுத்தும் நிர்ப்பந்தம் நேரிடவேண்டாமென்றே பிரார்த்திப்போம். ஆனல் சந்தர்ப்பம் ஏற்பட்டால், செய்வது சாத்தியமே. நிலத் தில் பயிர் செய்வதே திறமையற்றது, பழமையான முறை என்கிருர்கள் சில விவசாய நிபுணர்கள்.

விசாலமான உணவு வசதியை இன்னும் நாம் உபயோகிக்க வில்லை. சமுத்திரம் 14 கோடி சதுர மைல் விஸ்தீரண முள்ளது. பூமியின் நிலப்பாகத்தைப் போல சுமார் மூன்று மடங்கு. ஒவ்வொரு சதுர மைலும் ஜீவனுடன் துடிக்கிறது. கடலோரத்தில் ஆழமில்லா நீர்ப்பரப்பு 5 சத விகிதம்தான். இருந்தாலும் பயிரிடப்படும் நிலப்பரப்பின் விஸ்தீரணம் பொருந் தியது. அதில் மனிதர் சாப்பிடக்கூடிய கடல் தாவர வர்க் கங்களை வளர்க்கலாம். கடலில் வளரும் தழையை ஒட்டகங் களுக்கு உணவாகப் பல நூற்றுண்டுகளாகட் டுனிஸ்வாசிகள் அறுவடை செய்து வந்தார்கள். பல சீனர்களும் ஜப்பானியர் களும் அதைச் சாதாரண உணவாகப் புசிக்கின்றனர்.

1947-ம் ஆண்டில் நார்வீஜிய மானுட சாஸ்திரியான தார் ஹியர்டால் ஒரு கட்டுமரத்தில் பெரு தேசத்திலிருந்து பிரஞ்சு ஓஷினியாவுக்கு யாத்திரை செய்தபோது ஒரு மீன் வலையைத் தம்முடன் எடுத்துச் சென்றார். அதைக்கொண்டு தினமும் 5 அல்லது 10 பவுண்டு பிளாங்டன்னைப் பிடித்து அவரும் அவருடன் கூட இருந்தோரும் புசித்தார்கள். பிளாங்டன் என்பது கடலில் மிதக்கும் ஒருவகைச் செடி அல்லது ஜந்து. மிகவும் சிறியதாக இருக்கும். "எங்கள் கூட்டத்தில் நால் வருக்கு அது மிகவும் பிடித்திருந்தது," என்கிறார் ஹியர்டால்.

ஒரு கஜ ஆழமுள்ள ஓர் ஏகர் கடல் நீர் 1,400 பவுண்டு எடையுள்ள ஆகாரம் அளிக்கும். அவசியமானல் வியாபாரம் செய்யக்கூடிய அளவில் அவ்வாகாரத்தைச் சேகரிப்பதைத் தடுக்க எக்காரணமுமில்லை. இவ்வசதி இருப்பதால், மனித னுக்கு அவன் குடிக்கும் தண்ணீரைப்போல உணவும் அள வற்ற தன்மையைப் பெறமுடியும்.

இத்தனை அரிய சந்தர்ப்பங்களிருக்கும்போது, உணவுக்காகக் கவலைப்படுவானேன் ? நாம் அறிந்திருக்கும் உண்மைகளை இன் னும் போதிய அளவுக்குப் பயன் படுத்திக்கொள்ளாததே கவலைக்குக் காரணம். இன்று உலகில் 50 கோடி உழவர்கள்

இருக்கிறார்கள். அவர்களில் அநேகருக்கு எழுதப்படிக்கத் தெரியாது. மாறுதல் என்றால் நடுங்குபவர்கள் பலர். நில மண்ணைப் பாதுகாத்தல், மெஷின்களை உபயோகித்தல், நீர்ப் பாசனம், எருப் போடுதல், சிறந்த விதைகளை உபயோகித்தல் போன்ற விஷயங்களை அவர்களுக்குப் போதிப்பதற்குப் பத்து ஆண்டுகளுக்கு மேலாகும்.

உலக ஜனத்தொகையோ பெருகிக் கொண்டுவருகிறது. பட்டினியும் அதிகரித்துவருகிறது. பின்தங்கிய உலகத்தைப் பொறுத்தவரை மால்தூஸ் கூறியது உண்மையே, எழுத்தறிவில்லாமல், நோயும் பசியும் வாட்டும் மக்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு, அவர்களைப் பாதுகாக்கக்கூடிய வழிகளை அவர்களுக்குப் போதிப்பதும் கஷ்டமாகும். பிரச்னையும் அமெரிக்கர் கைகளை விட்டு விட்டு உலக நெருக்கடியாக மாறி விடலாம்.

ஜனத்தொகை ஆராய்ச்சி இலாகாவைச் சேர்ந்த கை இரவிங் பர்ச் கூறுகிறார்.

"சீனா, இந்தியா, ரஷ்யா, மத்திய கிழக்குப் பிரதேசங்கள், ஆப்பிரிக்கா, தென்னமெரிக்கா முதலிய நாடுகளில் அதிக உணவும் சுகாதார வசதிகளும் அளிப்பதால் மரண விகிதாசாரத்தைக் குறைத்தால், அந்நாடுகளிலுள்ள மிகுதியான ஜனத்தொகை 25 வருஷங்களில் இருமடங்காகிவிடும்; அதாவது வில்லியம் வாய்க்ட் கூறியதைப்போல் பிறப்பு விகிதாசாரத்தையும் குறைக்க முயன்றாலொழிய ஜனத்தொகை அதிகமாகி வரும்.

"இந்தியாவின் மரண விகிதாசாரத்தைப் போர்ட்டோ ரிக்கோவின் அளவுக்குக் குறைத்தால் இப்போதுள்ள பிறப்பு விகிதாசாரப்படி ஒரு நூற்றாண்டில் நம் பூமியைப் போல ஐந்து பூமியில் ஜனங்களைக் கொண்டு நிரப்பிவிடும். சீனாவும் அப்படியே செய்யும். ரஷ்யாவும் தென்னமெரிக்காவும் அதைச் சாதிக்க அதிக காலம் ஆகாது."

இந்த சங்கடமான நிலைமையைச் சமாளிக்க வழி என்ன? பர்ச், வாய்க்ட், போன்றவர்கள், குடும்ப வளர்ச்சியை மட்டுப் படுத்தும் திட்டத்தை ஆதரிக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டத்தை உலகத்தின்மீது திணிப்பதென்பது மெதுவாக ஏற்படக் கூடியது, மன அவஸ்தையை உண்டாக்கக்கூடியது. உதாரணமாக, இந்தியாவில் பொருளாதாரம், மதம்; ஆண்-பெண் உறவு எல்லாம் ஒன்றோடு ஒன்றாக மதாசாரமாகக் கலந்திருக்கிறது. வரும் ஆண்டுகளில் ஜனத்தொகையை மட்டுப்படுத்துவது அவசியமாயிருக்கலாம். ஆனால் அது உயர்த்தப்பட்ட வாழ்க்கை நிலைமையின் பலனாக இருக்குமே ஒழிய காரணமாக இருக்காது.

பிறப்பு விகிதாசாரம் பல சிக்கலான காரணங்களைப் பொறுத்திருக்கிறது. பன்னிரண்டு வயதில் மணம் புரிந்துகொள்ளும் பெண்கள் 25 வயதில் மணந்துகொள்ளும் பெண்களைவிட அதிகக் குழந்தைகளைப் பெறுவார்கள். மக்கள் பட்டினி கிடந்தால், அதனால் உண்டாகும் அகால மரணத்தைச் சமாளிக்க அவர்களுக்குப் பிரகிருதி நிறையக் குழந்தைகளைக் கொடுத்துவைக்கும். ஜெர்மன் சிறைகளில் வேலைசெய்யமுடியாமல், சரியாகப் பேசக்கூடச் சக்தியற்ற கைதிகளுக்கு ஆண்-பெண் உறவைப்பற்றியே சதா ஞாபகமிருந்தது. பட்டினியால் சில வாரங்களில், ஏன் சில நாட்களில் இறக்கப்போகும் ஆத்மாக்களுக்கும் குழந்தைகளுக்கும் தகப்பன்களாகும் சக்தி இருக்கிறது.

வாழ்க்கையில் விவாஹத்தைத் தவிர வேறு சுகங்களும் சிரத்தைகளும் ஒருவனுக்கிருக்குமாகில் அவனுக்கு உண்டாகும் குழந்தைகளின் எண்ணிக்கையும் குறையும். படிப்பும் வாழ்க்கைத்தரமும் உயர உயர, வம்ச விருத்தியைத் தடை செய்வதற்கான மார்க்கங்களைப்பற்றிய அறிவு பரவும். பிறப்பு விகிதாசாரம் குறையும்.

மனிதன் அதிக சுகங்களுடன் வாழ்ந்தால், தன் குழந்தைகளை வளர்ப்பதற்கு வசதிகள் நிரம்ப அவனுக்கு இருந்தால், அவனுக்கு மெதுவாகவே குழந்தைகள் பிறக்கின்றன. 1876-ம் ஆண்டிலிருந்து 1936-ம் ஆண்டு வரை 50 ஆண்டுகளில் மேற்கு ஐரோப்பா அமெரிக்கா ஆகிய பிரதேசங்களில் பிறப்பு விகிதாசாரம் பாதிக்குமேல் குறைந்துவிட்டது.

அதிக உணவு இருந்ததாலேயே அவ்விடங்களில் பிறப்பு விகிதாசாரம் குறைந்துவிடவில்லை. அதிக உணவும் சுகாதார வாழ்க்கையுமே தொழிற் புரட்சியினால் மேற்கத்திய மக்களுக்குக் கிடைத்திருந்தால், பிறப்பு விகிதாசாரம் குறைவதற்குப் பதிலாக அதிகமாகியிருக்கலாம் என்று நம்புவதற்குக் காரணங்கள் இருக்கின்றன.

தொழில் வளமும் நகரங்களும் பெருகப் பெருகப், பெரிய குடும்பம் பொருளாதாரச் சுமையென்ற நிலைமை ஏற்பட்டது. 150 வருஷங்களுக்கு முன் வேலை செய்யும் அமெரிக்கர்களில் பத்தில் ஒன்பது பேர் உழவர். நாலு குடும்பங்கள் வேலை செய்வதன்மூலம் கிடைக்கும் வருமானம் ஐந்து குடும்பங்களை ரட்சிக்கும். அத்தகைய நிலைமையில், ஒவ்வொரு குழந்தைக்கும் பொருளாதாரத் துறையில் கிராக்கி அதிகமிருந்தது. அவன் நாளை அறுவடை அறுப்பான், பசுக்களை ஓட்டிப் பால் கறப்பான்.

இன்றைய நிலைமை வேறு. அமெரிக்காவிலுள்ளவர் எல்லோரும் சுகமாக ஜீவித்திருக்க அவசியமான உணவையும், வெளிநாடுகளுக்கு அதிகமாக ஏற்றுமதிசெய்வதற்கான உணவையும் உற்பத்தி செய்ய அமெரிக்க ஜனத்தொகையில் 20 சத விகிதத்துக்குக் குறைவாக மக்கள் சாகுபடியில் ஈடுபட்டிருந்தால் போதும். பண்ணைகளிலும்கூட பன்னிரண்டு மனிதர்களின் வேலையை ஒரு டிராக்டர் செய்துமுடிக்கக் கூடுமாகையால், பெரிய குடும்பத்தினால் பலன் ஒன்றுமில்லை. தொழில் வள முன்னேற்றத்தினால் தோன்றிய மற்ற தொழில் முறைகளில்,

அதாவது வியாபாரம், சேவகம், தொழிற்சாலைகள் போன்ற வையிலும், குழந்தை பொருளாதார நஷ்டத்தையே குறிக்கிறது. ஆறு வயதுப் பையனை அவனது பெற்றோர்கள் வேலைக்கு விட பிரியப்பட்டாலும், சட்டம் முடியாது என்று கூறும். குறைந்தது 16 வருஷங்கள்வரை, அநேகமாக இருபது ஆண்டுகள்வரை அவனுக்கு உணவளித்து, உடையுடுத்தி, வீட்டில் வைத்துக் கல்வி பயில்விக்கவேண்டும். அதனால் ஏற்பட்ட முடிவென்னவென்றால் குடும்பங்களின் அளவு குறைய ஆரம்பித்துவிட்டது. பொருளாதாரத் துறையில் இன்னும் அதிகக் குழந்தைகள் இருப்பதால் சௌகரியமே என்ற நிலைமை ஏற்பட்டால் அமெரிக்க குடும்பங்களில் குழந்தைகளின் எண்ணிக்கைப் பெருக ஆரம்பிக்கலாம். ஆனால் அதற்கு முன் அவ்வாறு பெருகுவது சாத்தியமில்லை.

தொழில்வளம் பெருகிவரும் சமுதாயத்தில், பிறப்புகள் குறையும் காலத்திற்குப் பிறகே ஜனத்தொகைப் பெருக்கம் நிற்கும் காலம் தோன்றும். அதற்கு முக்கிய காரணம் இதுதான். பிறப்புகள் குறைவதற்குள்ள காரணங்களாலேயே ஆயுளும் நீடிக்கிறது. 25 வயதில் மணம்புரிந்துகொண்ட மங்கை பன்னிரண்டு வயதில் கணவனுடன் வாழ்க்கை நடத்த முற்பட்ட சகோதரியைக் காட்டிலும் குறைவாகக் குழந்தைகள் பெறலாம். ஆனால் அதிக காலம் உயிருடன் வாழ்ந்திருக்கலாம். பன்னிரண்டு குழந்தைகளைச் சுமந்து பெற்றெடுத்த தாயைக்காட்டிலும் மூன்று குழந்தைகளின் தாயார் அதிக நாட்கள் உயிரோடிருக்கலாம். அதேபோல வறுமையிலும் வற்றிய மார்பிலும் வளரும் குழந்தையைக் காட்டிலும் வாழ்க்கைச் சௌகரியங்களுக்குக் குறைவில்லாத இல்லத்தில் பிறந்த குழந்தை சிசு நோய்களால் தாக்குண்டு ஜீவனை விடாமலிருப்பது சகஜம்.

பிறப்பு விகிதாசாரம் பாதிக்குக் குறைந்தபோது ஐரோப்பாவில் ஜனத்தொகை 60 சத விகிதம் அதிகமாயிற்று. ஆனால் பிறப்புகள் குறையக் குறைய சில காலத்திற்குப் பிறகு ஜனத்

தொகையும் சுருங்க ஆரம்பிக்கும். ஆயிரம் பேர்களுக்கு வருஷத்தில் இருபதுக்கும் குறைவாகக் குழந்தைகள் பிறந்தால், ஜனத்தொகை அபிவிருத்தி அடியோடு நின்றுவிடுகிறது. அப்படிப்பட்ட நிலைமையை மேற்கு ஐரோப்பாவும் அமெரிக்காவும் அடைந்துவிட்டன. தற்சமயமுள்ள ஆயுள்காலம் பிரமிக்கத் தகுந்த அளவுக்கு நீடித்தாலொழிய இந்த நூற்றுண்டு முடிவதற்குள் ஜனத்தொகைப் பெருக்கத்துக்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் முற்றுப்புள்ளி போட்டாகிவிடும்.

மலிவாகப் பொருள் உற்பத்தி செய்வதற்குப் போதிய யந்திரங்கள் கிடைக்கும்வரை தாய் தந்தையர் குடும்பங்களைப் பெருக்கிக் கொண்டு போவார்கள். தொழிலியல் முன்னேற்றம் அடைந்தாலொழிய யாருக்கும் கல்வி கற்க நேரமில்லை. தொழிலியல் முன்னேற்றமின்றி சுகாதார திட்டங்களினுல் ஒரு பிரயோசனமுமில்லை. அதிக ஜனங்கள் இன்னும் அதிகமான துக்கங்களுடன் வாழ்க்கையோடு போராடுவார்கள். அவ்வளவுதான். ஆனுல், தகுதியான முறையில் தொழிலியல் அபிவிருத்தி செய்யப்பட்டால் முன்னேற்றமடையாதென சொல்லக் கூடிய பிரதேசமில்லை.

இந்தியாவை அதற்கு உதாரணமாகச் சொல்லலாம். இந்தியாவில் அடிக்கடி பஞ்சங்கள் உண்டாகின்றன. ரோஜா மொட்டு மலராவதற்குள் லட்சக்கணக்கானவர் மடிகின்றனர். எனினும், பத்து வருஷங்களுக்கொரு முறை கணக்கெடுத்துப் பார்த்தால், ஸ்பெயின், போலந்து, அல்லது இங்கிலாந்து தேசத்தின் ஜனத்தொகையைக் காட்டிலும் அதிகமாக இந்தியாவின் ஜனத்தொகை பெருகிவருகிறதென்பது தெரிகிறது. மதம், சீதோஷ்ண நிலை, இளமை விவாகம் எல்லாம் இப் பெருக்கத்தில் பங்கெடுத்துக் கொள்ளுகின்றன. வாழ்க்கைத் தரம் தாழ்ந்திருக்கிறது. வாழ்க்கையில் ரஸனை தோன்றக்கூடிய அம்சங்கள் குறைவு. "வரவுக்கும் செலவுக்கும் சரிக்கட்ட நடத்தும் உற்சாகமற்ற வாழ்க்கைப் போராட்டத்தில் தன் மனைவியும் உடலின்பமும்தான் சற்று ஆறுதலையும் களிப்பையும்

அளிக்கக்கூடும் என்று ஒவ்வொரு மனிதனும் நினைக்கும்படி இருக்கிறது," என்கிறார் பென்ஸில்வேனியா சர்வ கலாசாலையைச் சேர்ந்த டாக்டர் எஸ். சந்திரசேகர்.

1870-ம் ஆண்டிலிருந்து 1930-ம் ஆண்டு வரை இந்தியாவைப்போல் ஐரோப்பா இருமடங்கும் அமெரிக்கா நாலு மடங்கும் பெருகியது வாஸ்தவம்தான். ஆனால் அப்பெருக்கத்துக்கு காரணம் ஐரோப்பிய அமெரிக்க மரண விகிதாசாரங்கள் குறைவாயிருந்ததுதான்.

இந்தியாவிலும்கூட இந்நூற்றாண்டின் ஆரம்ப முதல் பிறப்பு விகிதாசாரம் நிதானமாய் விழுந்து கொண்டே வருகிறதென் கிறார் கிர்ட்லி மாத்தர். தொழிலியல் முன்னேற்றத்தின் அலைகள் இந்தியர்களின் பாதங்களை மோத ஆரம்பித்ததிலிருந்து ஜனப் பெருக்கத்தின் வேகம் பிறப்பு சம்பந்தப்பட்டவரை தணிந்து வருகிறது. 1920-ம் ஆண்டிலிருந்து 1940-ம் ஆண்டுக்குள் இரும்புக் காரைகளின் உற்பத்தி ஆறுமடங்கும் எஃகு உற்பத்தி ஐந்து மடங்கும் அதிகமாகியிருக்கின்றன. யந்திர சாலைகளையும் பொதுஜனங்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளையும் விஸ்தரிப்பது நேரு சர்க்காரின் முக்கிய திட்டமாகும். கடல் அலையின் நிச்சயத்துடன் தொழிலியல் அபிவிருத்தி மூழ்கிக்கிடக்கும் பல கோடி இந்திய மக்களை உந்தித் தள்ளிவருகிறது. ஜனங்களின் வாழ்க்கைத்தரம் நிதானமாக உயர்வதற்கான முறையில் அந்த அபிவிருத்திச் சரிவர நடந்தேறுமா என்பது பார்க்கவேண்டிய விஷயம். ஆனால் அத்துடன் நாகரிக வாழ்க்கையும் பிறகு பிறப்புகளின் எண்ணிக்கையில் குறைவும் தொடர்வது நிச்சயம்.

இந்தியாவில் பிறப்பு விகிதாசாரம் குறைவதை மதாசாரக்கொள்கைகள் மட்டுப்படுத்தலாம், ஆனால் தடுக்கும் என்று சொல்ல முடியாது. கத்தோலிக்க இத்தாலியை இக்கருத்துக்கு உதாரணமாகச் சொல்லலாம். 1870-ம் ஆண்டிலிருந்து 1940-ம் ஆண்டிற்குள் இத்தாலியில் பிறப்பு விகிதாசாரம் ஏறக்குறைய 40 சதவிகிதம்

குறைந்துவிட்டது. அமெரிக்காவிலும்கூட ஒரே பொருளாதார; சமுதாய அந்தஸ்திலுள்ள கத்தோலிக்கர்களுக்கும் புராட்டஸ்டன்டுகளுக்கும் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையில் கவனிக்கவேண்டிய அளவுக்கு வித்தியாசமில்லை.

அடுத்த நூற்றுண்டின் மத்தியில் இந்தியாவில் பிறப்பு விகிதாசாரம் குறையும் அளவு மரண விகிதாசாரத்தில் ஏற்படக் கூடிய வீழ்ச்சிக்குக் கிட்டத்தட்ட சரிக்கட்டிப்போகும் என்று நிபுணர்கள் மதிப்பிடுகிறுர்கள். பிறகு ஜனத்தொகை 70 கோடியில் மிதந்து வரும் என்பது அவர்கள் துணிபு. ஆனுல் அந்த அளவில் நிலைமை நிதானமாய் நிற்பதற்கு உணவு வசதிகள் பெருகினுல் இந்தியாவின் தொழிலியல் அபிவிருத்தியும் துரிதமாக முன்னேறவேண்டும். இந்தியாவைப் போலத் தான் ஜப்பானும். ஜப்பானில் கடந்த 25 வருஷங்களாகப் பிறப்பு விகிதாசாரம் கீழ் நோக்கிச் சென்று வருகிறதென மாத்தர் அபிப்பிராயப்படுகிறுர்.

சுமார் முப்பது வருஷங்கள் பின்னடைந்திருக்கலாம், ஆனுல் இந்தியாவிலும் ஜப்பானிலும் தொழில் வள அபிவிருத்திக் கேற்றுற்போல ஜனத்தொகை மேற்கு ஐரோப்பியா சென்ற பாதையிலேயே போகிறதென ஜனத்தொகைப் போக்கைப்பற்றிய இந்திய ஆராய்ச்சியாளர்களில் முதன்மையானவரான டாக்டர் ராதாகமல் முகர்ஜி நம்புகிறுர். "மனிதக் குடும்பம் இப்போதுள்ள எண்ணிக்கை எக்காலத்திலுமே இருமடங்காகப் பெருகுவது நிச்சயமில்லை," என்று டாக்டர் மாத்தர் கூறுவது உண்மையாக வேண்டுமானுல், ஒழுங்கான முறையில் தொழில் வளம் வளர வேண்டும்.

ஜன சங்கை நிபுணர்களில் அமெரிக்காவில் பிரசித்தி பெற்றவர் ரேமண்ட் பேர்ல். 1660-ம் ஆண்டிலிருந்து 1937-ம் ஆண்டுவரை உலக ஜனத்தொகையின் வளர்ச்சியை அவர் ஒரு வளைந்த கோட்டின் மூலம் கோட்பாடிட்டிருக்கிறுர். இப்போது ஏற்பட்டுவரும் ஜனப்பெருக்கத்தை அவர் அதில் கணக்

கெடுத்துக் கொண்டிருக்கிறார். எனினும் இன்னும் 150 வருஷங்களில் உலக ஜனத்தொகை முந்நூறு கோடிக்குமேல் போகாது என்று அந்த கோடு காண்பிக்கிறது. இன்று 225 கோடி மக்கள் உலகில் வாழ்கின்றனர்.

இந்த நூற்றாண்டின் இறுதியில் வெள்ளையரின் எண்ணிக்கை உச்ச நிலையை அடையும். எதிர்காலத்தில் அவர்களது எண்ணிக்கை 100 கோடிக்குச் சற்றுக் குறைவாகவே இருக்கும். மற்ற நிறத்தினர் ஒன்றுக்கு இரண்டுக்குமேல் அதிகமான மெஜாரட்டியோடு இருப்பர். அம்மாதிரி ஏற்படக் கூடிய நிலைமையை நினைத்துச் சிலர் பயந்துவிடலாம். அப்படிப்பட்டவர்கள் மனச்சாந்தி அடைவதற்கான காரணம் உண்டு. கடந்த இருநூறு வருஷங்களுக்கு முன்பு நால்வரில் ஒருவராகவே வெள்ளையர் இருந்தனர். அந்தக் காலத்திலிருந்த அவர்களது நிலையைக்காட்டிலும் எதிர்காலத்தில் அவர்களுடைய நிலைமை இன்னும் மேம்பட்டதாகவே இருக்கும்.

இருக்கும் உணவு வெகு குறைவு, ஜனத் தொகையோ மிக அதிகம் என்ற பிரச்னையைத் தீர்க்கத் தொழில் வளமும் நகரங்களின் வளர்ச்சியும்தான் மேற் கொள்ளக்கூடிய வழி. அதை நாடக பாணியில் சொல்லித்தீர்த்துவிட முடியாது. ஓர் இரவிலோ, ஓர் ஆண்டிலோ, அல்லது பத்து வருஷங்களிலோ பிரச்னை தொலைந்தது என்று சொல்லிவிடக்கூடிய வழியுமல்ல அது. ஆனால் அந்த ஒரே வழிதான் உண்டு, அதுவே சரியான வழி.

நாலாவது அம்சத்திட்டம் தொழிற்சாலைகளைக் காட்டிலும் பண்ணைகளில்தான் உதயமாகிறது. ஆனால் இறுதியில் தொழில்வளம் பெருக வேண்டுமென்ற நோக்கம் அதற்கில்லையென்றால், நாலாவது அம்சத் திட்டத்துக்கே அர்த்தமில்லாமல் போகும். உலகத்திலுள்ள ஒவ்வொரு பின்தங்கிய பிரதேசத்திலும் விவசாய முறைகளைச் சீர்திருத்த வேண்டும். புதிய முறைகளைப் பழக்கத்தில் கொண்டுவரவேண்டும். நிலத்தைக்

கொலை செய்வது கொலைதான் என தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் அது போதாது. முற்போக்கான சுகாதாரமும் கல்வி முறைகளும் ஏற்படவேண்டும். ஆனால் அதுமட்டும்கூடப் போதாது. போக்கு வரத்து சாதனங்கள் அபிவிருத்தியடைய வேண்டும். பெருவிலிருந்தும் ஈரானிலிருந்தும் பொருள்கள் உலகின் மற்ற பாகங்களுக்குத் துரிதமாகப் போகவேண்டும். உலகின் மற்ற பாகங்களிலிருந்து ஈரானும் பெருவும் பொருள் களை விரைவில் பெறவேண்டும். வாழ்க்கைக்கு அத்தியாவசிய மான பண்டங்கள் இன்னும் சரி சமமான அளவில் பகிர்ந் தளிக்கப்பட வேண்டும். இவையெல்லாம் நடந்தேறினால் கூடப் போதாது. இவற்றைத் தொடர்ந்து தொழில்வளம் விருத்தியாக வேண்டும். அப்போதுதான் இவற்றினால் ஏற் படக்கூடிய நன்மைகள் நிலைத்திருக்கும். தொழில்வள முன் னேற்றம் இறுதியாக அடைய வேண்டிய இலட்சியம். நாலா வது அம்சம் அதற்கு அவசியமான முதல்படி.

# சாம்ராஜ்யம் மறைந்தது: நாலாவது அம்சத்திட்டம் உதயமாயிற்று

பெஞ்சமின் பிராங்க்ளின் ஒரு சமயம் தமக்குப் பரிச்சயமான சிறுவன் ஒருவனுக்குப் பத்துத்தங்க நாணயங்களும் பின்வரும் குறிப்பும் அனுப்பினுர் : " இப்பணத்தை நான் உனக்கு அளிப்ப தாகப் பாசாங்கு செய்யவில்லே. நான் உனக்கு அதைக் கட னுகத்தான் கொடுக்கிறேன். நீ உன் நாட்டிற்குத் திரும்பும் போது ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபடத் தவறமாட்டாய். அப் புறம் உனக்கிருக்கும் கடன்களேயெல்லாம் காலாகாலத்தில் தீர்க்கும் சக்தி உனக்கு உண்டாகும். அச்சந்தர்ப்பத்தில், உன்னேப்போன்றே ஒரு யோக்கியன் சங்கடமான நிலேமையில் இருப்பதை நீ கண்டால், அவனுக்கு இப்பணத்தைக் கடனுகக் கொடுத்து என் கடனேத் தீர்த்துவிடு. அவனுக்கு நல்ல காலம் வரும்போது அவனும் உன்னேப் போலவே கடனேத் திருப்பித் தந்துவிடலாம் என்று அவனுக்குச் சொல்லிவை. அப்பணம் ஒரு முட்டாளிடம் சிக்கித் தடைப்படு முன், அது பலர் கைமாறும் என நம்புகிறேன்."

துணிச்சலான புதிய திட்டத்தை மேற்கொள்ள அமெரிக்கா தயாராகும் இத்தருணத்தில் அமெரிக்கர்கள் பிராங்க்ளினது வாக்கைப்பற்றி நன்கு யோசிக்கவேண்டும். எத்தேசத்திற்கும் கடமைப்பட்டிராமல் தானுகவே அமெரிக்கா பெரியதொரு வல் லரசாக வளர்ந்துவிட்டதாக அடிக்கடி அமெரிக்கரில் சிலர் மனப்பால் குடிக்கின்றனர். உண்மை அதற்கு மாருன தாகும். சுதந்திர மணியோசை நிற்பதற்குமுன்பே அமெரிக்க பொருளாதாரத்திற்கு அந்நிய முதலாளிகள் புட்டிப்பால் கொடுத்து வளர்க்க ஆரம்பித்தனர். லூயிஸியானு பிர தேசத்தை வாங்குவதற்குப் பணம் ஹாலந்திலிருந்து வந்தது.

19-ம் நூற்றுண்டின் மத்தியில் தீவிரமானதொரு பொருளாதார மந்தம் பழைய உலகத்தில் ஏற்பட்டபோது, வெளிநாடுகளை அபிவிருத்தி செய்வதற்கான ஊக்கம் பிறந்தது. முக்கியமாக அமெரிக்காமீது கண்ணேட்டம் விழுந்தது. பழைய உலகத்திலிருந்து அமெரிக்கா பெற்ற உதவியில் ஒரு பகுதி தொழில் திறமைபெற்ற மக்களின் குடியேற்றம் என்ற ரூபத்தில் கிடைத்தது. மற்றெரு பகுதி முதலீடாகக் கிடைத்தது. அதனுல் பழைய உலகத்தைச் சேர்ந்த ஐரோப்பாவில் பொருள் உற்பத்தியும் விற்பனையும் முன்னேறத் தொடங்கின. அமெரிக்காவில் தொழில் வள முன்னேற்றம் சாதாரணமாக நடந்தேறக்கூடியதைவிட 100 வருஷங்களுக்கு முன்னதாகவே ஆரம்பமாகிவிட்டது. 1875-ம் ஆண்டு நெருங்குகிற சமயத்தில் அமெரிக்காவுக்கு வேறு எவ்வித உதவியும் செய்ய வேண்டியதில்லையென்ற நிலைமை ஏற்பட்டபோது, ஐரோப்பாவில் ஒரு புதிய நெருக்கடி தோன்றியது. ஆஸ்திரேலியா, தென்னமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆர்ஜென்டினு முதலிய நாடுகளுக்குத் தன் திறமையின் அனுகூலத்தைப் பரப்பியதன் மூலமே ஐரோப்பா அந்த நெருக்கடியிலிருந்தும் மீண்டது.

துணிச்சலான புதிய திட்டத்தில் உருவாகியிருக்கும் பண்பாடு ஆதிகாலந்தொட்டே மனித இதயத்தில் வளர்ந்துவந்திருக்கிறது. மத்திய கிழக்குப் பிரதேசங்களில் இன்று பெனிஸிலின் தொழிற்சாலைகளையும் பனிக்கட்டிச் சாலைகளையும் திறக்கும் அமெரிக்க முதலாளிகளும், இந்திய இருப்புப்பாதைகளின் அபிவிருத்திக்காகக் கடன் கொடுக்கும் அமெரிக்க முதலாளிகளும் புதிதாக எதோ சாதிப்பதாக நினைக்க வேண்டாம். பூர்வீக நாகரிகம் தழைத்திருந்த பிரதேசங்களில் ஒன்றிலிருந்து மற்றென்றுக்கு அலைந்து திரிந்து புதிய பழக்க வழக்கங்களையும், புதிய கருவிகளையும் பரப்பி வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு அடிகோலிய வணுந்திரிகளின் உதாரணத்தையே இருபதாம் நூற்றுண்டிற்குகந்த வழிகளில் அமெரிக்க முதலாளிகள் பின்பற்றி வருகிருர்கள். அவர்கள் பண்டைக்காலத்துப் பாரசீகர்,

கிரேக்கர், ரோம் நகரத்தினர், ஸ்பானியர், டச்சுக்காரர் ஆகியோரின் வாரிசுகள்.

இன்னும் சமீபத்தில் பார்க்கப்போனால், இன்று அமெரிக்கா இருக்கும் நிலைமையில் நெப்போலிய யுத்தங்களுக்குப்பின் பிரிட்டிஷார் இருந்தனர். உலகத்தின் பல பாகங்களுக்குக் கடன் கொடுத்திருந்தனர். லாபகரமாகப் பணத்தை உபயோகிப்பதற்கு வழி அதை வெளிநாடுகளில் முதலாகப் போடுவதுதான் என்பதை அவர்கள் கண்டுபிடித்தார்கள். அவர்களுடைய வாரிசுகளாகவே இன்றைய அமெரிக்க முதலாளிகள் தங்கள் பணியில் இறங்கி இருக்கின்றனர். பிரிட்டிஷாரைக் காட்டிலும் அமெரிக்கரது சேவைக் கடினமானதாயிருக்கும். ஏனெனில் பத்தொன்பதாம் நூற்றுண்டில் தனிப்பட்ட வர்த்தகர்களுடைய அலுவல்களில் தலையிடாமலிருப்பதே சர்க்காரின் முக்கிய நோக்கமாக இருந்தது. போட்டி, தனிப்பட்டவர் சொத்து, தனி மனிதனின் சுதந்திரம் போன்ற கொள்கைகளை வர்த்தக நாடுகள் ஒப்புக்கொண்டிருந்தன. அதேபோலத்தான் சுரண்டல் விவகாரமும்.

அந்நியரின் பேராசையிலகப்பட்டு நசுங்கிய பண முதலாளிகள் ஆயிரக்கணக்கில் தவித்தனர். ஆனால் தொழிலியல் முன்னேற்றம், முக்கியமாக அமெரிக்காவில், அதிவேகமாகச் சென்றது.

பின்தங்கிய பிரதேசங்களின் வளர்ச்சிக்காக பிரிட்டிஷார் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் சில அபாரமான வெற்றியை அடைந்தன. சில முற்றும் தோல்விகளாக முடிந்தன. இன்றைய நாலாவது அம்சத் திட்டத்தின் சிற்பிகளுக்கு பிரிட்டிஷாரின் வெற்றியும் தோல்வியும் இரண்டுமே படிப்பினையாக விளங்கும்.

இன்றைய அமெரிக்காவைப் போலவே, 1815-ம் ஆண்டில் பிரிட்டன் தன் பொருள் உற்பத்திச் சாதனத்தை மிகவும் அதிகமாகப் பெருக்கியிருந்தது. விலை போகக் கூடியதற்கு

அதிகமாக அந் நாட்டின் யந்திரங்கள் பொருள்களை உற்பத்தி செய்து தள்ளின. யுத்த காலத்தில் சேனைகளுக்குத் தங்கள் பண்டங்களை அனுப்பி வந்த பிரிட்டிஷ் குடியானவர்கள் சமாதான காலத்தில் தங்கள் பண்டங்களை வாங்குவதற்கு ஆட்கள் இல்லாமலிருப்பதைக் கண்டனர்.

பொருள் உற்பத்திச் சாதனத்தோடு, பிரிட்டனுக்கு மற்றொரு அநுகூலமும் இருந்தது. பிரிட்டிஷ் மக்களுக்கு அயல் நாடுகளுக்குச் செல்வதும் வியாபாரம் செய்வதும் பிரியமாயிருந்தது. தங்கள் பண்டங்களை எடுத்துச் செல்ல அவர்களிடம் கப்பல்கள் இருந்தன. பண்டங்கள் ரூபமாக இருந்த முதல் மட்டுமின்றி, பன்னிரண்டு ஐரோப்பிய புரட்சிகளால் ஏற்பட்ட அதிர்ச்சியில் கோடிக் கணக்கான பவுன்கள் ஐரோப்பாவிலிருந்து லண்டனுக்குக் கொண்டு வரப்பட்டன. கொடிய பொருளாதார மந்தத்தைத் தவிர்க்கும் பொருட்டு, பிரிட்டிஷ் பண மார்க்கெட்டு ஐரோப்பாவைத் தூக்கிவிட முயற்சி செய்தது. புது உலகத்தோடு வியாபாரத்தை வளர்க்க ஆரம்பித்தது. இந்த முயற்சிகளிலிருந்த உற்சாகம் குறைய ஆரம்பித்ததும், அது இந்தியாவுடன் உறவு தொடங்கிற்று.

இன்று அமெரிக்காவில் சிலர் வாதாடுவதைப் போலவே 1815-ம் ஆண்டிலும் தனித்து நிற்க வேண்டுமென்றும் என்ற கொள்கையுடைய பிரிட்டிஷார் தங்களுடைய எதிர்ப்பைத் தீவிரமாகத் தெரிவித்துக் கொண்டனர். "ஏழைத் தொழிலாளன் நாட்டை விட்டு வெளியேறுவதைச் சட்டம் தடுக்க முடியும். ஆனால் தேசத்தின் உயிர் நாடியான செல்வம் ஏற்றுமதியாவதைச் சட்டம் அநுமதிப்பதோடன்றி ஆதரிக்கவும் செய்கிறது. இதை எப்படிச் சகிப்பது", என்று ஏங்கினர் லார்ட் லாடர்டேல். "நமது சுபிட்சம்தான் பிரிட்டிஷ் தீவின் சொத்தாகவும் சுபிட்சமும் பரிணமிக்குமேயன்றி அந்நிய மக்களின் சுபிட்சமோ அடிமைகளின் சுபிட்சமோ அல்ல," என்று ஒரு காலைப் பத்திரிகை பிரிட்டிஷ் மக்களுக்கு ஞாபகமூட்டியது.

ஆனால் இதெல்லாம் காற்றில் ஊதிய சங்காகவே முடிந்தது. பிரிட்டிஷ் பொருள்களைத் தடுக்க ஐரோப்பிய நாடுகள் இறக்குமதி வரிகளை உயர்த்தியபோது, பிரிட்டிஷ் முதலாளிகள் பொருள்களை உற்பத்தி செய்யும் யந்திரங்களையே அந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தார்கள். தொழிலியல் அபிவிருத்தி சம்பந்தமான நுணுக்க ரகசியங்களை உள்நாட்டிலேயே பாதுகாக்கும் பொருட்டு, அவ்வித ஏற்றுமதிகளைப் பார்லிமெண்டு தடை செய்தபோது, முதலாளிகள் யந்திரங்களையே வெளி நாடுகளில் உற்பத்தி செய்தனர். அதற்கு வேண்டிய நுணுக்க விவரங்களைத் திருட்டுத் தனமாக அயல்நாடுகளுக்கு அனுப்பி வைத்தனர். பிரான்ஸ் முழுவதும் யந்திரக் கடைகளையும் ஆலைத் தொழிற்சாலைகளையும் இங்லீஷ்காரர்கள் நிறுவினர். மற்ற நாடுகளிலும் உள்ளூரிலிருக்கும் செல்வந்தர்களைத் தொழிலியல் நடவடிக்கைகளில் ஈடுபடும்படித் தூண்டினர். இருபது ஆண்டுகளுக்குள் பிரிட்டிஷார் தொழிலியல் புரட்சியை மேற்கு ஐரோப்பா முழுவதும் பரவச் செய்தனர்.

தென்னமெரிக்காவிலும் பல தேசங்களில் 1820-ம் ஆண்டிலேயே பிரிட்டிஷ் தொழிலியல் முயற்சிகள் தோன்றலாயின. பதினைந்து வருடங்களில் இரண்டு கோடி பவுன்களைத் தென்னமெரிக்காவுக்கு முதலாகப் பிரிட்டிஷார் அனுப்பியிருந்தனர். சுரங்க வேலைகளில் மிகுந்த லாபம் கிடைக்கும் என்ற ஆசையில் எத்தனையோ கடன்கள் கொடுக்கப்பட்டன. அதனால் பல மோசடிகள் ஏற்பட்டுப் பிரிட்டிஷ் மக்களில் அநேகர் பணமிழக்க நேரிட்டது. பிரேஸிலைத் தவிர மற்ற தென்னமெரிக்கக் குடியரசுகள் வாங்கின கடன்களுக்கு வட்டி கூடச் சரியாகக் கொடுக்கவில்லை. "19-ம் நூற்றாண்டின் பெரும் பகுதியில் தென்னமெரிக்க குடியரசு நாடுகளில் ஏற்பட்ட குழப்பங்கள், ஊழல்கள், பொருளாதார நாசம் இவற்றிற்கெல்லாம் முதலில் லண்டன் பண மார்க்கெட் ஊதாரித்தனமாக இருந்தது, ஒரு முக்கிய காரணம்" என்கிறார் ஒரு நிபுணர்.

ஆகவே, ஐரோப்பியத் தொழில் வளத்தை வளர்ப்பதில் பிரிட்டிஷ் முதலாளிகள் அடைந்த வெற்றியையும், தென்னமெரிக்காவில் அவர்களுக்குண்டான தோல்வியையும் ஒப்பிட்டுப் பார்ப்பதால் நன்மையுண்டு. ஐரோப்பாவில் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஆலைத் தொழிற்சாலைகளும் யந்திர சாலைகளும் நிறுவப்பட்டன. தொழிற்சாலைகள் உற்பத்தி செய்ய ஆரம்பித்து லாபம் சம்பாதிக்கும்வரை முதல் போட்டவர்களுக்கு ஒரு பைசாகூடக் கிடைக்கவில்லை. தென்னமெரிக்கா விஷயத்தில், கடன் வாங்கும் தேசம் அதைச் சரிவரப் பயன் படுத்திக்கொள்ளுமா, அல்லது திருப்பித்தர முடியுமா என்பதைக் கவனிக்காமலே கடன்கள் கொடுக்கப்பட்டன. எத்தேசத்திலுமே, பண மார்க்கெட் ஓர் உபயோககரமான ஊழியன்தான், ஆனால் பச்சாத்தாபமின்றி வேலை வாங்கும் யஜமானனும்கூட.

தென்னமெரிக்காவில் சுலபமாக லாபம் சம்பாதிக்கலாமென்ற கனவு பலிக்காமல் போகவே, பிரிட்டிஷ் முதலாளிகள் அமெரிக்க ஐக்கிய ராஜ்யங்கள்மீது தங்கள் கவனத்தைச் செலுத்தலாயினர். அப்போது அமெரிக்காவில் தொழில் வளத்துக்காகச் செலவிடுவதற்கு வேண்டிய பண வசதி மிகக் குறைவு. ஒரு மனிதனின் பண்ணையிலிருந்து கிடைக்கும் பண்டங்கள் அவனுடைய குடும்பத் தேவைகளுக்கும் மிஞ்சியிருந்ததால் அவற்றை விற்று, வரும் பணத்தைக் கொண்டு இன்னும் அதிக நிலத்தைச் செப்பனிட்டு உழுது பயிர் செய்து வந்தான். வீதிகள், கால்வாய்கள், துறைமுகங்கள், இருப்புப் பாதைகள் ஆகியவற்றைக் கட்டுவதற்குப் பணமில்லை. ஆனால் அமெரிக்கா முன்னேற்றமடைய அவ் வேலைகளைத் தொடங்குவது அவசியம் என்று சிலருக்குத் தோன்றியது. லண்டனில் எல்லையின்றிச் செல்வம் கொழித்துக் கிடக்கிறதென்பதை அவர்கள் கண்டார்கள். 1815-ம் ஆண்டிலிருந்து 1830-ம் ஆண்டுவரை பிரிட்டிஷ் முதலாளிகள் அமெரிக்காவில் சுமார் 50 லக்ஷம் பவுன்தான் முதலாகப் போட்டிருந்தனர். அடுத்த பத்து வருஷங்களில் நாலு கோடி பவுன் வந்து குவியலாயிற்று.

கால்வாய்கள் வெட்டவும், இருப்புப்பாதைகள் போடவும் இங்கிலீஷ்காரர்கள் அமெரிக்காவுக்குப் பண உதவி செய்தார்கள். மறை முகமாக அவ்வுதவி அமெரிக்கத் தொழில் வள முன்னேற்றத்துக்கும் அடிகோலியது. லண்டனிலுள்ள பாங்க் நிர்வாகிகள் பிரிட்டிஷ் பொருள்களை ஏற்றுமதி செய்ய விரும்பினார்களே ஒழிய போட்டியை வளர்க்க ஆசைப்படவில்லை. ஆனால் கடன் கொடுத்த பிறகு, அக்கடனை எவ்விதமாக உபயோகிப்பதென்று வரையறுத்து நிறுத்த முடியாது. "இந் நாட்டிலேயே பொருளுற்பத்தி செய்வதற்கு அந்நிய முதல் லட்சக் கணக்கில் போடப்பட்டிருக்கிறது," என்று 1839-ம் ஆண்டில் "நியூயார்க் எக்ஸ்பிரஸ்" என்ற பத்திரிகை அறிவிக்க முடிந்தது.

உரிய காலத்திற்கு 50 ஆண்டுகள் முன்பாகவே அமெரிக்காவில் வாணிபப் புரட்சியை ஏற்படுத்துவதில் இம் முதலீடுகள் வெற்றி பெற்றபோதிலும், இவற்றில் அநேகம் முதல் போட்டவர்களுக்கு நஷ்டத்தை விளைவித்தன. அமெரிக்கா முன்னேற்ற மடைந்தது, வர்த்தக பாங்க் முதலாளிகள் பணம் சம்பாதித்தார்கள். ஆனால் தென்னமெரிக்காவில் நடந்ததைப் போலவே பிரிட்டிஷ் விதவைகளும் அநாதைக் குழந்தைகளும் இம் மூலதனத்தின் பங்குகளை வைத்திருந்துச் சேமித்து வைத்திருந்த சொத்தை இழந்தனர். கடன் வாங்குவது சுலபமென்றறிந்த ராஜ்யங்கள் தென்னமெரிக்க நாடுகளைப் போலவே தாராளமாய்க் கடன் வாங்கின. கஷ்ட காலம் தோன்றியதும் திருப்பித்தர இயலாமல் தவித்தன. 1839-ம் ஆண்டில் ஏற்பட்ட நெருக்கடிக்குப் பிறகு ஒன்பது அமெரிக்க ராஜ்யங்கள் பத்து கோடி டாலர்கள் பெறுமான கடன்களைக் கொடுக்க முடியாதென அறிவித்து விட்டன. இந்த ராஜ்ய கடன்களுக்குத் தான் எவ்விதப் பொறுப்பும் ஏற்க முடியாதென அமெரிக்க மேல் சபைப் பட்டவர்த்தனமாய்ச் சொல்லிவிட்டது.

அதன்பலனாய் அமெரிக்காவுக்கு அயல்நாடுகளில் கிடைத்து வந்த பண உதவி நின்றுவிட்டது. ஓர் இரவில் சொர்க்கம்

நரகமாக மாறி விட்டது. ஜனாதிபதி டைலரின் பிரதிநிதியான டப் கிரீன் இன்னும் பணம் கோர பாரிஸுக்குச் சென்றபோது, ராத்ஸ்சில்ட் என்ற கோடீஸ்வரன் அவரிடம் கடுமையாகச் சொன்னார்: "ஐரோப்பிய பண விஷயங்களில் தலைமை வகித்து வரும் மனிதனை நீர் கண்டதாகவும், அவரிடமிருந்து உமது சர்க்கார் ஒரு டாலர்கூட கடனாகப் பெற முடியாதென்று அவர் சொல்லி விட்டதாகவும் நீர் உமது சர்க்காரிடம் போய்ச் சொல்லலாம்."

அயல்நாட்டு மூலதன மார்க்கெட்டுடனிருந்த அமெரிக்காவின் உறவின் முதல் கட்டத்திற்கு ராத்ஸ்சில்டின் கண்டிப்பான வார்த்தை முற்றுப்புள்ளி போட்டு விட்டது. பிரிட்டிஷாரோ தங்களிடம் வருஷத்துக்கு ஆறு கோடி பவுன்கள் மிச்சமாக நிற்பதை எங்கே மூலதனமாகப் போடலாம் என்று நோக்கினர். 1840-ம் ஆண்டில் உள்நாட்டிலேயே இருப்புப்பாதை அபிவிருத்திக்குப் பணத்தைச் செலவிட்டனர். 1850-ம் ஆண்டிலிருந்து ஐரோப்பா, கானடா, இந்தியா, தென்னமெரிக்கா, அமெரிக்க ஐக்கிய ராஜ்யங்கள் ஆகிய தேசங்களில் இருப்புப் பாதைகளை நிறுவலாயினர்.

நாளுக்குநாள் அதிகமாகப் பிரிட்டிஷ் மூலதனம் உபயோகமாவதற்கு இடம் தேடி நிற்கும் நிலையில், துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் அமெரிக்கா பணத்திற்காக அதிக காலம் திண்டாட வேண்டிய அவசியமில்லாமற் போயிற்று. தேசத்தில் அப்போதே வேலைத் திறன் பெற்றவர்கள் நிறைய பேர் இருந்தனர். பிரிட்டிஷார் செய்ய வேண்டியதெல்லாம் பணம் கொடுத்து உதவ வேண்டும். அவ்வளவுதான். பிரிட்டிஷாரும் பணம் கொடுத்தனர். 1869-ம் ஆண்டிற்குள் அவர்கள் 150 கோடி டாலர்களை மூலதனமாக அனுப்பினர். அமெரிக்காவின் கீழ்க் கரையில் உள்நாட்டு மூலதன மார்க்கெட் முன்னேறிவர ஆரம்பித்ததால், பிரிட்டிஷாரின் கவனம் அதுவரை யாரும் பிரவேசிக்காமலிருந்த மேற்கத்திய பிரதேசங்கள் மீது நாடிற்று. கான்ஸாஸ், கொலராடோ முதலிய பிரதேசங்களில் இங்கிலீஷ்காரர்கள் குடியேறினர். 1870-ம் ஆண்டிற்குப்

பிறகு முப்பது வருஷங்களில் பிரிட்டிஷ் மூலதனத்தால் அமெரிக்காவில் கால் நடைகள் விருத்தியடைந்து ஒரு சாம்ராஜ்யமாக வியாபித்தன.

1900 ஆண்டிற்குள் பிரிட்டிஷ் முதலாளிகள் 37 கால்நடைக் கம்பெனிகளை ஏற்படுத்தி, 340 லட்சம் டாலர்களுக்கு மேல் மூல தனம் போட்டனர். அவ்வருஷத்தில் அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்கு 620 லட்சம் டாலர்கள் பெறுமான மாட்டிறைச்சி ஏற்றுமதியாயிற்று. ஆனால் இச்சுபிட்சம் நீடிக்கவில்லை. அமெரிக்க கொல்லை நிலங்களின் அளவு பெரிதாகி, லாபம் குறையலாயிற்று. 1880-ம் ஆண்டிலிருந்து 1910 ஆண்டிற்குள் பிரிட்டிஷ் முதலாளிகள் 250 லட்சம் டாலர்களை இழந்தனர்.

1900-ம் ஆண்டின் இறுதியில் தொழிலியல் முன்னேற்றத்துக்கு முக்கிய கருவியாகவிருந்த பிரிட்டனின் சேவை ஒருவிதமாகப் பூர்த்தியாகிவிட்டது. உன்னத நிலையிலிருந்து பிரிட்டன் பின்னடைய ஆரம்பித்தது. தொழிலியலில் முன்னேற்றமடைந்த ஆறு வல்லரசுகளில் பிரிட்டனும் ஒன்று என்ற நிலைமை ஏற்பட்டு, பிறகு அவற்றிலும் சில நாடுகள் பிரிட்டனைவிட மேம்பட்ட ஸ்தானத்தை அடைய நேரிட்டது. பிரிட்டிஷ் மூலதனத்தால் நிறுவப்பட்ட புதிய தொழிற்சாலைகளுடன் புராதன பிரிட்டிஷ் தொழிற்சாலைகள் போட்டிபோட வேண்டியிருந்தது. பிரிட்டனிலும் முன்னிருந்ததுபோல் மூலதனம் மிஞ்சியிருக்கவில்லை. உணவு விஷயத்திலும்கூடப் பசுமையான பிரிட்டிஷ் தீவுகள் மற்ற நாடுகளை நம்பிக் காலங்கழிக்கலாயிற்று.

பிரிட்டன் பல தவறுகளைச் செய்திருக்கலாம். ஏகாதிபத்திய முறைகளைக் கையாண்டிருக்கலாம். எனினும் அமெரிக்காவின் மேற்கத்திய பிரதேசங்களில் வாழ்க்கைத்தரம் இரு மடங்காக உயருவதற்குப் பிரிட்டனின் முயற்சியே காரணம். தொழில் வளத்திற்கும், வியாபாரத்திற்கும் பிரிட்டன் அளித்த ஊக்கம் அதன் சக்தியை இன்னும் இழக்கவில்லை. 19-ம் நூற்றுண்டில் பிரிட்டன் பெற்ற அநுபவங்களின் பல்வேறு அம்சங்களை விரி

வாகப் பரிசீலனை செய்வதில் லாபமுண்டு. ஆனால் அது இங்கே சாத்தியமில்லை. எனினும் அதைப்பற்றிச் சில கருத்துக்களைச் சுருக்கமாக இங்கே கூறலாம்:

1. மூலதனமும், தொழில் நுட்பமும், அவற்றைத் தயாராகப் பெற்றுப் பலனடையக் கூடிய பிரதேசங்களில், வெற்றியடைந்து அதனால் மூலதனம் போட்டவர்களும் புண உதவி பெற்றவர்களும் லாபமடைந்தனர். அதற்கு உதாரணமாக மேற்கு ஐரோப்பாவைச் சொல்லலாம்.

2. 1820-ம் ஆண்டில் தென்னமெரிக்கா இருந்த நிலைமையைப்போல், அரசியல் பொருளாதாரத் துறைகளில் மூலதனத்தைப் பெற்று அதைச் சரிவர உபயோகிக்க லாயக்கற்ற நாடுகளில் போடும் மூலதனம் வீணாயிற்று. முதலாளிக்குப் பண நஷ்டம். பணத்தைப் பெற்ற நாடுகளுக்கும் கேடு விளைந்தது.

3. 1830-ம் ஆண்டில் அமெரிக்கா இருந்த நிலைமை மூன்றாவது விதத்துக்கு உதாரணமாய் விளங்கும். அதாவது, சில நாடுகள் அயல்நாட்டுப் பணத்தினால் பயனடைந்தன. ஆனால் பொருளாதாரத் துறையில் அநுபவமோ ஸ்திரமான நிலைமையோ அடையவில்லை. அதனால் பொருளுதவி பெற்ற நாடுகள் பொருளாதாரத் துறையில் முன்னேறின. ஆனால் மூலதனம் அளித்தவர்கள் நஷ்டமடைந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தவறுகள் எல்லாம் இருபதாம் நூற்றாண்டிலும் நேரவேண்டுமென்ற நியதியில்லை. ஆனால் துணிச்சலான புதிய திட்டத்தின் கீழ் முன்னேற்றமடையவேண்டிய பல நாடுகளில் எடுத்துக் கொள்ளப்படும் முயற்சி வீணாகலாம். பலன் கிடைப்பதும் சந்தேகமாயிருக்கலாம். ஆகவே இவ்விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாக நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

உலகத்தின் மற்றொரு பாகத்திலிருந்த நூதனமான நாடாக விளங்கிய அமெரிக்காவிடம் நம்பிக்கை வைத்துப் பிற நாடுகள்

ஒரு காலத்தில் மூலதனமும் தொழில் நுட்பமும் அளித்து உதவியதால்தான் இன்று அமெரிக்கா மற்ற நாடுகளுக்கு உதவி செய்ய முன்வரும் நிலைமையிலிருக்கிறதென்பதை அமெரிக்கர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மற்றவர்களிடமிருந்து பெற்ற உதவியை வேறு சிலருக்கு அளிக்கும் நிலைமையில் அமெரிக்கர்கள் இருக்கிறார்கள். ஆகவே மற்றவர்களது அநுபவத்திலிருந்தும் சில உண்மைகளை அறிந்து கொள்ளலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டன் மற்ற பல நாடுகளுக்குக் கடன் கொடுக்கும் தேசமாக விளங்கியது. அந் நூற்றாண்டில் அமெரிக்கா உலக அரங்கில் தோன்றியபோது அது கடன்பட்ட நாடாகவே இருந்தது. அநேகமாக அமெரிக்கா, அயல்நாடுகளுக்கு அனுப்பியது பண்டங்களேயன்றிப் பணமல்ல. ஆகவே, முதன் முதலில் அமெரிக்க ஏகாதிபத்திய நடவடிக்கைகள் முரட்டுத்தனமாய் இருந்தது இயற்கையே.

அமெரிக்கா வல்லரசாகத் திகழ்ந்த முதற் கட்டத்தில் மற்ற ஏகாதிபத்தியங்களைவிடத் தீவிரமாகவும் அதிக லாபத்தைச் சம்பாதிக்கவும் நடந்து கொள்ளத்தான் அமெரிக்கா பழங்கால ஏகாதிபத்தியங்களிடமிருந்து கற்றுக்கொண்டிருந்ததெனத் தோன்றிற்று. தன் அர்த்தகோளத்திலுள்ள மற்ற நாடுகள் மீது வெகு சீக்கிரத்தில் பூர்ணமாக ஆதிக்கம் செலுத்தலாயிற்று. மற்ற இடங்களில் பொருளாதாரச் சலுகைகளைக் கோரித் துணிச்சலுடனும் பிடிவாதத்துடனும் போராடியது.

ஏகாதிபத்திய வளர்ச்சி வெகு காலமாக ஒரு குறிப்பிட்ட பாதையிலேயே சென்று வந்தது. சூரியனைச் சுற்றிப் பூகோளம் சுற்றுவதை எவ்வளவு திட்டமாய் வரையறுத்துக் காட்டலாமோ அவ்வளவு சரியாக ஏகாதிபத்தியத்தின் போக்கையும் நிர்ணயித்துக் கூறலாம்.

ஒரு நாட்டில் அடிப்படையான பொருளாதார அபிவிருத்தி ஏற்படுகிறது. அதனால் அந்நாட்டில் அயல்தேசங்களில் உப

யோகப்படுத்தக் கூடிய மிகுதிச் செல்வம் இருக்கிறது. லாபம் அதிகமாகக் கிடைக்குமென்று தோன்றும் பின்தங்கிய பிரதேசங்களுக்குப் பணம் அனுப்பப்படுகிறது. அதைத் தொடர்ந்து மூலதனம் போட்டவர்கள் உடனே பிரத்தியேக சலுகைகளை அப்பிரதேசங்களில் கோருகிறார்கள். 'தாங்கள் கேட்கும் சலுகைகள் கிடைக்கவில்லையெனில், முதலாளிகள் தங்கள் தாய் நாட்டுச் சர்க்காருக்கு முறையிட்டு ராணுவத் தலையீடு ரூபத்தில் ஆதரவு பெறுகிறார்கள். கடைசியில், பின்தங்கிய தேசத்தின் அந்தஸ்து குறைந்து விடுகிறது. யுத்தத்தில் தோற்றோ, பிரதேசத்தில் ஒரு பகுதியை விற்றோ, சுயாதிபத்தியத்தை இழந்தோ பின்தங்கிய தேசம் மூலதனம் போட்ட நாட்டிற்குப் பணிந்துவிடுகிறது.

1875-ம் ஆண்டிலிருந்து 1925-ம் ஆண்டு வரை அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கைகளை இக் கொள்கைக்குச் சரியான உதாரணமாய் விளங்கும். பிற நாடுகளில் இருப்புப் பாதைகள், துறைமுகங்கள், பாலங்கள், போக்கு வரத்துச் சாதனங்கள் ஆகியவற்றை அமெரிக்கா நிறுவியதும் பொருளாதார ஆதிக்கத்தை ஆரம்பிக்கத் தயாராயிற்று.

அந்தக் காலத்தில் அமெரிக்கா தனது பிரதேச வரம்பைத் தாண்டிச் சென்று அலாஸ்காவையும் ஹாவாய்த் தீவுகளையும் சேர்த்துக் கொண்டது, ஸ்பெயினுடன் யுத்தம் புரிந்து அமெரிக்கா அதனிடமிருந்து போர்ட்டோரிக்கோவையும் பிலிப்பைன்ஸ் தீவையும் கைப்பற்றியது. ஸமோவா தீவு எதிர்க் கட்சிகளுடன் சேராமலிருக்கும்படி செய்தது. மற்றும் தென்னமெரிக்க நாடுகளில் பலவற்றைத் தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தது.

அதற்குப் பிறகு ஒரு விபரீதமான போக்கு ஏற்பட்டது. முதல் மகா யுத்தத்திற்குப் பிறகு அமெரிக்காவின் சக்தி அமோகமாக வளர்ந்து வருகிறது. டாலர் ஆதிக்க நடவடிக்கைகளும் அதே கதியில் முன்னேறிச் செல்லும் என்று எதிர்ப்பார்ப்பது சகஜம். ஆனால், இரண்டாவது மகா யுத்தத்தின்

நெருக்கடிகளையும் மீறி, அமெரிக்கா அதற்கு நேர்மாறான பாதையில் செல்ல ஆரம்பித்துவிட்டது. க்யூபாவின் மீதிருந்த ஆதிக்கம் தகர்த்தப்பட்டது. பிலிப்பைன் தீவுகள் சுதந்திரமடைந்தன. தென்னமெரிக்க நாடுகளில் அமெரிக்க மாலுமிகள் அட்டகாசம் செய்தார்களென்பதைப் பதினைந்து வருஷங்களாகச் சரித்திரத்தில் படித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். போர்ட்டோரிக்கோ, அலாஸ்கா, ஹாவாய்த் தீவுகள் தனி ராஜ்யங்களாகக் கூடிய நிலைமைக்கு வளர்ந்து வருகின்றன.

உலக வர்த்தகத்தில் அமெரிக்காவுக்குப் போட்டியாயிருக்கும் ஐரோப்பா யுத்த நாசத்திலிருந்தும் மீண்டுத் தலை தூக்குவதற்காக அமெரிக்கா பிரம்மாண்டமான பண உதவி செய்து வருகிறது. கடைசியாக, எல்லாவற்றையும்விட முக்கியமாக, ஏகாதிபத்தியத்தையும் காலனி முறையையும் புறக்கணித்து விட்டுப் பின்தங்கிய பிரதேசங்கள் அபிவிருத்தியடைவதற்காகத் துணிச்சலான புதிய திட்டத்தை அமெரிக்கா மேற்கொண்டிருக்கிறது.

இவ்வாறு எதிர்ப்பார்க்கக் கூடிய விளைவுக்கு மாறான பாதையில் அமெரிக்கா ஏன் செல்ல வேண்டும்? ஒரு வேளைக் கண்டனத்திலிருந்தும் தப்பித்துக் கொள்ளச் சிக்கலான ஏகாதிபத்திய முறை ஒன்றை அமெரிக்கா கைப்பற்றி வருகிறதா? அல்லது அமெரிக்கப் பண்பாட்டிற்கு ஏகாதிபத்தியம் ஒத்துவரவில்லையா? அல்லது அமெரிக்காவின் சொந்த நலனும் உலகத்துப் பொது நலனும் ஒன்றாகச் சேர்ந்து போகும்படி அமெரிக்கா அவ்வளவு உயர்ந்த நிலைமையை அடைந்து விட்டதால் பழைய விதிகள் இப்போது அர்த்தமற்றதாகிவிட்டதா?

ஏகாதிபத்திய முறையைக் கையாண்ட காலத்திலும் அமெரிக்கா அதைப்பற்றிச் சஞ்சலப்பட்டு வந்ததென்பதில் சந்தேகமில்லை. அமெரிக்கா புதிய பிரதேசத்தைச் சேர்த்துக்கொண்ட போதெல்லாம் பொதுஜனக் கிளர்ச்சிகளாலேயே அவ்வாறு செய்ததாக அமெரிக்கா நிரூபிக்க முயன்றது. அந்நியனை

அமெரிக்க ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தபோதெல்லாம் அமெரிக்கர் அவர்களை நேராக நோக்கி அவர்களைச் சுதந்திர வாழ்க்கைக்குத் தயார் செய்வதாகச் சொன்னார்கள். குழப்பங்கள் தோன்றிய பிரதேசங்களுக்கு அமெரிக்கக் கடற்படையை அனுப்பினால், அவ்வாறு அனுப்ப வேண்டிய அவசியம் நேரிட்டதைப்பற்றி அமெரிக்கா எல்லோரும் அறிய வருத்தப்பட்டது. ஆனால் இதைப்போன்ற பசப்பு வார்த்தைகள் கூறுவது சரித்திரம் தொடங்கிய காலத்திலிருந்தே உண்டான வழக்கம். யாருமே, அமெரிக்கரும்கூட, அவர்கள் கூறி வந்ததைப் போலவே அவர்கள் நினைக்கிறார்கள் என்று எண்ணியிருக்கமாட்டார்கள்.

அமெரிக்க சரித்திரமே அவர்களுடைய கூற்றுக்கு விரோதமாகத் தோன்றும். நூறு வருஷங்களுக்குள் ஒரு கண்டத்தை அமெரிக்கர் ஆக்கிரமித்துக் கொண்டனர். அதில் வசித்து வந்த சிவப்பு இந்தியரைத் துரத்தியடிக்க அமெரிக்கர் தயங்கவில்லை. அவர்கள் மன்ரோ திட்டத்தை வகுத்தது அமெரிக்க கண்டங்களில் ஐரோப்பிய ஏகாதிபத்தியம் வளருவதைத் தடுக்க மட்டுமல்ல, அமெரிக்கா தெற்கு நோக்கி வளருவதற்குச் சௌகரியம் செய்துகொள்வதற்கும்தான்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், ஏதோ மறந்தாற்போலவே அமெரிக்கா ஒரு சாம்ராஜ்யத்தை ஏற்படுத்திக் கொண்டது. ரஷ்யருக்கு ஓர் உபகாரம் செய்வதற்காக அவர்களிடமிருந்து அலாஸ்காவை அமெரிக்கா வாங்கிக்கொண்டது. ஆனால் இருபது வருஷங்களுக்கு மேலாக அச்செய்கையை அமெரிக்க பொதுஜன அபிப்பிராயம் கண்டித்து வந்தது. பாகோ பாகோ துறைமுகத்தில் கடற்படைத்தளம் கட்டிக்கொள்ளும் உரிமையடங்கிய ஒப்பந்தம் ஒன்றை, அமெரிக்கா மெதுவாக சமோவா ராஜ்யத்துடன் 1878-ம் ஆண்டில் கையெழுத்திட்டது. எனினும் அமெரிக்க ஸ்தானிகர் சமோவா ராஜ்யத்தையே அமெரிக்க ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முயன்றபோது, அவரது செய்கையை அமெரிக்கா ஆதரிக்கவில்லை.

அதேபோல் ஞாபகமறதியான முறையில்தான், அமெரிக்கா ஹவாய்த் தீவுகளைப் பெற்றது. 1887-ம் ஆண்டில் வருஷத்துக்கு 20 கோடி டாலர் பெறுமான சர்க்கரையை அமெரிக்காவுக்கு ஹவாய் அனுப்பியது. சர்க்கரைத் தோட்டக்காரர்களில் பெரும்பாலோர் அமெரிக்கர். 1890-ம் ஆண்டில் அமெரிக்காவில் மெக்கின்லிச் சட்டம் நிறைவேறியபோதுத் தங்கு தடையில்லாமல் இறக்குமதி செய்யக்கூடிய பண்டங்களில் சர்க்கரையும் ஒன்ருயிற்று. அதனுல் சர்க்கரை வியாபாரத்தில் ஹவாய் அனுபவித்துவந்த தனிச்சலுகை நின்றுவிட்டது. நிலைமையைச் சமாளிக்கச் சர்க்கரைத் தோட்டக்காரர்கள் ஒரு யுக்தி செய்தனர். ஹவாய்த் தீவுகளையே அமெரிக்காவின் இரட்சிப்புக்குள் கொண்டுவர முயற்சி செய்தனர். வாஷிங்டனும் அதற்கு உதவி புரியச் சித்தமாய் இருந்தது.

1893-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பொதுஜன அமைதியைப் பாதுகாக்க ஒரு சங்கத்தை அமெரிக்கா மீது அபிமானமுள்ள ஹவாயினர் நிறுவினுர்கள். அமெரிக்கா ஒத்தாசையாகக் கடற்படையை அனுப்பிவைத்தது. அப்படையின் பாதுகாப்பில் ஹவாய் மன்னராட்சி முடிவுற்றதாகப் பிரகடனம் செய்தனர். அமைதியாக அரண்மனையிலிருந்துகொண்டுத் தீவுகளைப் பரிபாலித்துவந்த ராணிக்கு இப்போக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. ஆனுல் பொதுஜன அமைதிப் பாதுகாப்புச் சங்கமோ தனது நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியது. அமெரிக்காவுடன் ஐக்கியமாவதற்கான விதிகளைப்பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தி முடிவுக்கு வரும்வரைத் தீவுகளைப் பரிபாலிக்க ஒரு தற்காலிக சர்க்காரை ஏற்படுத்தியது. ஒரு மணி நேரத்துக்குள் அச்சர்க்காரையும் அமெரிக்க மந்திரி அங்கீகரித்தார். ஒரு மாதம் முடிவதற்குள் ஹவாய்த் தீவுகளை அமெரிக்காவுடன் சேர்த்துக்கொள்வதற்கான ஒப்பந்தம் செனட்டுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

இங்கேயும்கூட விதியின் போக்கை ஒப்புக்கொள்வதற்கிருந்த அமெரிக்க தயக்கம் குறுக்கிட்டது. அமெரிக்க மக்கள் சாம்

ர்ாஜ்யத்தை ஸ்தாபிக்க விரும்பவில்லை. அமெரிக்க ஆட்சி பரவுவதை ஆதரிப்போரும் எதிர்ப்போருமாகிய இரு கட்சியின ரிடையே இந்த ஒப்பந்தத்தைப்பற்றிப் பலத்த விவாதம் நடந்தது. ஐந்து ஆண்டுகள்வரை செனட்டு சபை ஒப்பந்தத்தை அங்கீ கரிக்கவில்லை. கடைசியில், ஸ்பெயினுடன் மூண்ட யுத்தத் தினல் தோன்றிய தேசிய உணர்ச்சியின் வேகத்தில் ஹவாய்த் தீவுகள் அமெரிக்காவுடன் பிணைக்கப்பட்டன.

1898-ம் ஆண்டின் அமெரிக்க-ஸ்பானிஷ் யுத்தத்துடன் அமெரிக்க ஆதிக்க வேட்கை பலம்பெற்றது. புதிதாக அமெ ரிக்கா ஒரு வல்லரசு என்பதைக் கண்ட அமெரிக்கருக்கு உற் சாகம் தாங்கவில்லை. 1899-ம் ஆண்டு ஜனவரி முதல் தேதிக் குள் க்யூபா அமெரிக்கர் வசமாயிற்று. அமெரிக்கர் பிறகுக் க்யூபாவுக்குச் சுதந்திரம் அளித்தனர். ஆனால் அச்சுதந் திரம் பரிபூர்ணமானதல்ல. அத்தீவின் சுதந்திரத்தைப் பாதிக் கத்தக்க எவ்விதமான ஒப்பந்தத்தையும் அது செய்துகொள் ளாதென ஒரு விதியைப் புதிதாக ஏற்பட்ட குடியரசு தனது அரசியல் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு வற்புறுத்தப் பட்டது. அதேபோலத் தனது வரி வருமானத்துக்கும் அதிக மாகக் கடனும் வாங்குவதில்லையென்ற வாக்குறுதியையும் அக் குடியரசு கொடுக்கவேண்டியதாயிற்று. க்யூபாவின் சுதந் திரத்தைப் பாதுகாக்கக் குறுக்கிடும் உரிமையை அத்தீவு அமெ ரிக்காவுக்கு வழங்கிற்று. கடற்படைத் தளங்களைக் க்யூபாவில் நிர்மாணிக்க அமெரிக்காவுக்கு அனுமதிக் கிடைத்தது. இந்த ஷரத்துகள்படி அமெரிக்கா நாலு முறை க்யூபாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டது.

கரீபியன் பிரதேசத்தில் அமெரிக்க சுய நலனுக்கு ஆபத்து நேரிடாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமாயின் க்யூபா வுக்கு அரைச் சுதந்திரமே அளித்தது நியாயமற்றதெனினும் விளங்கக்கூடிய விஷயமாகும். அதேபோல போர்ட்டோரிக் கோவையும் அமெரிக்கா அணைத்துக்கொண்டது புரியக்கூடியதே. ஆனால் அவற்றுடன், 1898-ம் ஆண்டு டிசம்பர் மாதம் பத்தாம்

தேதி கையெழுத்தான பாரிஸ் ஒப்பந்தப்படி ஸ்பெயினுக்கு இரண்டு கோடி டாலர் கொடுத்து அமெரிக்கா பிலிப்பைன் தீவுகளைத் தன் வசமாக்கியது. இங்கே பட்டவர்த்தனமான ஆதிக்க வேட்கை வெளியாயிற்று.

பாரிஸ் ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நடத்தியவர்களில் ஒரு வரான ஒயிட்லா ரீட் என்ற அமெரிக்கர் பின்வருமாறு அச் செய்கை சரியானதென வாதித்தார்: "பஸிபிக் சமுத்திரம் இப்போது நம் கையில் இருக்கிறது. இப்பக்கத்தில் அநேகமாகப் பாதி கடற்கரைப் பிரதேசம் நம்முடையது. மிகுதியுள்ளதும் நம் ஆதிக்கத்திலிருக்கிறது. சமுத்திரத்தின் நடுவே நமக்கு ஸாண்ட்விச், அலூஷியன் தீவுகள் இருக்கின்றன. பிலிப்பைன் தீவுகள்மீது அமெரிக்க அதிகாரத்தைப் பரப்புவதன்மூலம் நாம் சீனக்கடலுக்கு வேலி போடுகிறோம். பஸிப்பிக்கின் அப்புறத்திலும் நமது நிலைமை வலுவடைந்து, நாம் அப்பாகத் தையும் இருபதாம் நூற்றாண்டில் பெருகக்கூடிய வியாபாரத் தையும் கட்டுப்படுத்த முடியும். சீனாவுக்குச் செல்ல, மற்றவர் அணுகாதபடி, நமக்குப் பிலிப்பைன் தீவுகள் கால்வைக்குமிட மாக விளங்கும். நாளை, சீனாவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் பிலிப்பைன் தீவுகளுடன் செய்யக்கூடிய வியாபார்ரம் கடுகளவான தாகவே தோன்றும்."

இக்கூற்று ஒளிவு மறைவற்ற ஏகாதிபத்தியமென்பதில் சந் தேகமில்லை. பலருக்குத் தலை சுற்ற ஆரம்பித்தது. எனி னும் லட்சக் கணக்கான அமெரிக்கர்களுக்கு இப்போக்கு வியா கூலத்தை அளித்தது. தென்னமெரிக்காவில்தான், முக்கிய மாக கரீபியன் பிரதேசத்தில், அமெரிக்கா தன் செல்வாக்கை மனம்போனவாறு உபயோகிக்க முடிந்தது. அப்பிரதேசத் தில் அமெரிக்கா தலையிட்டு ஆதிக்கம் பெற்றது கலகலப்பான விஷயமாயினும், வெளி உலக விவகாரங்களில் அமெரிக்கா வுக்கு வளர்ந்துவந்த அக்கறையையே அது காட்டுகிறது.

1914-ம் ஆண்டில் அமெரிக்கா மற்ற நாடுகளுக்குச் சுமார் 369 கோடி டாலர் கொடுக்கவேண்டிய நிலைமையிலிருந்தது.

1919-ம் ஆண்டிற்குள் அமெரிக்கா தன் கடன்களைத் தீர்த்து விட்டு அயல்நாடுகளுக்கு 1,265 கோடி டாலர் கடன் கொடுத் திருக்கிறது. 1929-ம் ஆண்டிற்குள் அத்தொகை 1,976 கோடியாகப் பெருகிற்று. பொதுவாக அமெரிக்கர் நம்பிக் கையுடன் வெளி நாடுகளில் மூலதனம் போட்டார்கள். நூற்றாண் டுகளுக்குமுன் பிரிட்டிஷார் நடந்து கொண்டதைப் போலவே, 1920–30 ஆண்டுகளில் அமெரிக்கர் பணத்தை அனுப்பி விட்டுப் பிறகு விஷயமென்ன எனக் கவனிக்கலாயினர்.

அக்காலத்தில் அமெரிக்க முதலாளிகளுக்கு உதவி செய் வதே அமெரிக்க வெளிநாட்டு இலாகாவுக்கு முக்கிய அலுவ லாக இருந்தது. முதலாளிகளிற் பலர் பணத்தை இழந்து கையைச் சுட்டுக் கொள்வதில் சமர்த்தராய் விளங்கினர். திடீ ரென, அமெரிக்க செல்வாக்கும் ஆதிக்கமும் உச்ச நிலையி லிருந்தபோது, டாலர் ஆதிக்க அரசியல் உறவுக்கு ஆபத்து ஏற்பட்டது. நோயுற்று, 1933-ம் ஆண்டிற்குள் இறந்துவிட் டது. அப்படி நேரிட என்ன நடந்தது ?

பண உதவி பெற்ற நாடுகள் பணத்தைத் திருப்பித்தர வேண்டுமாயின், அவை சுபிட்சமாகவும் நிலைபெற்றதாகவும் இருக்கவேண்டும். அவை கடன் கொடுத்த நாட்டுடன் சிநேக பாவத்துடன் இருக்கும்படி பார்த்துக் கொள்வதும் கடன் கொடுத்த நாட்டிற்கு அவசியமாகிறது. கடற்படையை அனுப்பி லாபம் பெறுவதைவிட, சிநேகபாவத்தில் சரியான லாபத்தைச் சம்பாதிப்பதே மலிவானது, திறமையானது.

ஆகவே, சுயநலனுடன் மனச்சாட்சியும் ஒன்று சேர்ந்தது. சரித்திரத்திலேயே முதன் முதலாக, ஆதிக்கத்தை வளர்த்து வரும் ஒரு தேசம் நிதானித்து, தன்னுடைய செய்கைகளை பாரபட்சமற்ற விதத்தில் ஆராய்ந்து பார்த்து, தனது செய்கை களால் நன்மையைவிட தீமையே அதிகமாக விளைகிறதென்ற முடிவுக்கு வருவது சாத்தியமாயிற்று. தடியடிப் பிரயோகம் காலத்துக்கு ஒவ்வாத கொள்கையென விளங்கிற்று. அக்

கொள்கை இனி பலனளிக்காதென்பதும் புலனுயிற்று. எங்கும் தேசீய உணர்ச்சி வளர ஆரம்பித்திருந்தது. மனிதர்களும் யோசிக்கத் தொடங்கினர். விதியின் போக்கை மனச்சாட்சி சகிக்கத் தயாராயில்லை.

அக்காலத்தைப்பற்றி ஓர் அரசியல் மாணுக்கர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்: "பாரசீகம், சீன, அயர்லாந்து, தென்னுப்பிரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளில் பிரிட்டனுக்கு ஏற்பட்ட நிலைமையைப் போலவே தென்னமெரிக்காவில் அமெரிக்காவின் நிலைமை உண்டாயிற்று. முரட்டுத்தனத்துக்குப் பதிலாக சிநேகபாவத்துடன், சுரண்டுதலை நிறுத்தி ஒத்துழைக்க விரும்புவதாய்ப் பட்டவர்த்தனமாகச் சொல்வதில் நமது புதிய தென்னமெரிக்கக் கொள்கை முனைந்தது."

1927-ம் ஆண்டில் ஜனுதிபதி கூலிட்ஜ் கூட்டுறவை ஸ்தாபிப்பதற்கான முதல் நடவடிக்கையை மேற்கொண்டார். அமெரிக்க மேற்பார்வையில் தேர்தல் நடத்துமாறு ஒன்றுக்கொன்று விரோதமாயிருந்த அரசியல் கட்சிகளை வேண்டிக்கொள்ள ஹென்றி எல்ஸ்டிம்ஸனைக் கூலிட்ஜ் நிகராகுவேயுக்கு அனுப்பினுர். அம்முயற்சியினுல் சிறிது பலன் ஏற்பட்டது. நாலு ஆண்டுகளுக்குப் பின்னர், தேர்தலை மேற்பார்வையிடுமாறு இருகட்சியினரும் அமெரிக்காவை அழைத்தனர்.

மெக்ஸிகோவிலும் கூலிட்ஜ் ஒரு புதிய வழியை அனுஷ்டித்தார். அமெரிக்கருக்குச் சொந்தமான எண்ணெய்க் கிணறுகளை மெக்ஸிகோ கைப்பற்றியதால் இரு நாடுகளுக்குமிடையே தகராறு முற்றியிருந்தது. அமெரிக்கா தன் படையை அனுப்பிக் குறுக்கிடலாமென அமெரிக்க பத்திரிகைகள் எச்சரிக்கை செய்துவந்தன. அச்சமயத்தில் ஜனுதிபதி கூலிட்ஜ் ட்வைட் மாரோ என்பவரை மெக்ஸிகோவுக்கு ஸ்தானிகராக நியமனம் செய்தார். மெக்ஸிகோ ஜனுதிபதியாயிருந்த காலஸ் இரு நாடுகளுக்குமுள்ள தகராறு தீர வழியுண்டா என மாரோவைக் கேட்டபோது மாரோ காரஸ்ஸா ஆட்சியின்போது மெக்ஸிகோ

வின் பிரதம நீதிமன்றம் அளித்த தீர்ப்பு ஒன்றைப் பிரஸ்தாபித்தார். 1917-ம் ஆண்டுக்கு முன்னதாக ஓர் எண்ணெய்க் கம்பெனி பெற்றுள்ள உரிமை ரத்தாகாதென்பதே அத்தீர்ப்பு.

அத்தீர்ப்பை மேற்கோளாகவைத்து, மெக்ஸிகோவில் பூமிக்கு அடியிலுள்ள சொத்து தேசத்தையே சாருமென மெக்ஸிகோ சர்க்கார் வாதாட முடிந்தது. 1917-ம் ஆண்டுக்குமுன் சம்பாதித்த உரிமைகளைப் புதிதாக உண்டாக்கப்படும் சட்டங்கள் பாதிக்காதென அமெரிக்க சர்க்காரும் தனது கொள்கையும் வற்புறுத்தியது. மறுபடியும் அப்பிரச்னை 1938-ம் ஆண்டில் கிளம்பியபோது, படைமூலம் தலையிடுவதாக மிரட்டி மெக்ஸிகோவின் நட்பை இழக்கத் தயாராயில்லையெனத் தீர்மானமாக அமெரிக்க அயல்நாட்டு இலாகா அறிவித்துவிட்டது.

மாரோவின் சரிதையை எழுதிய ஹெரால்ட் நிகல்ஸன் என்பவர் மாரோவின் சாதனை சரித்திர பூர்வமானதென்கிறார். "எவ்வளவு உயர்ந்த உத்தேசத்துடன் மேற்கொண்டாலும் சரி, பலாத்காரமான தலையீடு ஆதிக்கக் கொள்கையைப் பின்பற்றுவதாகும், அது அமெரிக்க மனச்சாட்சிக்கு முரணானது என்பதைத் தெள்ளென எடுத்துரைத்த முக்கியமான முதல் அமெரிக்கர் மாரோதான்," என்கிறார் நிகல்ஸன். "அயல்நாடுகளிலுள்ள தனிப்பட்டவர்களின் கடன்களைச் சர்க்கார் பலாத்காரமாய் வசூலிக்கக் கூடாதென்ற கருத்தை மாரோ பூர்ணமாக ஆதரித்தார். முதலில் எவ்வளவு ஏமாற்றமளித்தாலும், தென்னமெரிக்காவும் அமெரிக்க ஐக்கிய ராஜ்யங்களும் ஒத்துழைப்பதே கடைசியில் கிரியாம்சையில் வெற்றி தரத்தக்க கொள்கையென்று அவர் முதன் முதலாக வாதித்தார்."

இவ்வாறிருக்க, 1920-ம் ஆண்டிற்குப் பிறகு ஸம்னெர் வெல்ஸ் என்ற ராஜதந்திரி கிளம்பினார். டாலர் ஆதிக்கத்தை

அடிப்படையாகக் கொண்ட அரசியல் உறவு தவறென்று எனக் கண்டிப்பாக அவர் கூற ஆரம்பித்தார்.

"டாமினிக்கன் குடியரசுக்குள் அமெரிக்க ராணுவம் பிரவேசித்ததால் ஏற்பட்ட சந்தேகங்கள், பீதி, வெறுப்பு ஆகியவற்றைக் கவனிக்கும்போது, அமெரிக்காவின் தேசீய நலன்களைப் பொறுத்தவரை, ராணுவ ஆக்கிரமிப்பினால் விளைந்த பலன்கள் வெகு குறைவு. எந்த ராணுவ ஆக்கிரமிப்பின் விளைவும் அப்படித்தான்.

"ராணுவ ஆக்கிரமிப்பு, ராணுவத் தலையீடு, தேர்தல்களை ராணுவத்தின்மூலம் மேற்பார்வையிடுதல் ஆகிய வழிகளால் அமெரிக்கா தான் விரும்பும் பலன்களை எதிர்பார்க்க முடியாது. அதற்கு அனுஷ்டிக்க வேண்டிய முறைகள் வேறு. வர்த்தக உறவை வளர்க்கவேண்டும். கல்வி பரவ அனுகூலங்கள் செய்து தர வேண்டும். உற்பத்தி பெருகப் பண உதவி செய்யவேண்டும். தொழில் நுட்ப உதவி அளிக்க முன்வர வேண்டும். அவற்றால் பலனுண்டு."

வெல்ஸ் வற்புறுத்திய திட்டத்தை மேற்கொண்டால், ஏகாதிபத்தியம் என்னும் பதம் அர்த்தமற்ற சொல்லாகும் அளவுக்கு ஏகாதிபத்யம் உயர்த்தப்படும். அத்திட்டத்தை நடைமுறையில் கொண்டுவருவதற்கு வெல்ஸுக்குச் சீக்கிரமே சந்தர்ப்பம் கிடைத்தது. 1933-ம் ஆண்டில் புதிதாக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் அவரை உதவி ராஜாங்கக் காரியதரிசியாக நியமித்தார்.

புதிய ஜனாதிபதி தம்முடைய முதல் பிரசங்கத்தில் கூறிய தொரு விஷயம் சரித்திரத்தின் போக்கை நிர்ணயிக்கத்தக்கதாய் விளங்கியது. "உலகக் கொள்கை விஷயத்தில், நான் நல்ல அயலான் கொள்கைக்கு இத்தேசத்தைப் பிரதிஷ்டை செய்வேன். அதாவது, சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளும் அயலான். சுயமரியாதையைக் காப்பதால், மற்றவர்களுடைய உரிமைகளுக்கும் மதிப்புக் கொடுக்கும் அயலான்.

அயலார்கள் உலகத்தில், அயலார்கள் உலகத்தோடு செய்து கொள்ளும் ஒப்பந்தங்களின் புனிதத் தன்மையையும், தன்னுடைய கடமைகளையும் மதிக்கும் அயலான்.”

சில வாரங்களுக்குப் பின் இந்த “நல்ல அயலான் கொள்கை”யை நேர்முகமாகத் தென்னமெரிக்க விவகாரங்களுடன் அவர் பிணைத்துவைத்தார். “நல்ல அயலானுக விளங்குவதற்கு என்ன முக்கிய குணுதிசயங்கள் அவசியமோ அவை அமெரிக்கக் கண்டங்களின் உண்மையான ஒற்றுமைக்கும் அவசியமாகும். இக்கண்டங்களில் வசிக்கும் மக்கள் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்பதற்காகவே மன்ரோ திட்டம் ஏற்பட்டதென்பதை இக்கண்டங்களிலுள்ள ஒவ்வொரு குடியரசின் மக்களும் நன்ருக உணர்ந்து வருகின்றனர்,” என ரூஸ்வெல்ட் கூறினுர்.

1933-ம் ஆண்டில் மாண்டிவிடியோ என்ற நகரத்தில் நடந்த ஏழாவது சர்வ அமெரிக்க மகாநாட்டில்தான், தென்னமெரிக்கா விரோதிகளுக்குப் பதில் நண்பர்கள் வசிக்கும் கண்டமாக மாறுவதற்கான வழியைக் கடைசியாக அமெரிக்கா மேற்கொண்டது. அம்மகாநாட்டில் நூருண்டுகளுக்குமேல் பின்பற்றிவந்த கொள்கையை அமெரிக்கா மாற்றிக்கொண்டது. அதற்குச் சான்ருக, “ஒரு ராஜ்யம் மற்றெரு ராஜ்யத்தின் உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களில் தலையிட உரிமையில்லை,” என்ற அறிக்கையை ராஜாங்கக் காரியதரிசியான கார்டல் ஹல் ஆதரித்தார். “இனி அமெரிக்காவின் திடமான கொள்கை ராணுவத்தலையீட்டை நிராகரிப்பதாகும்,” என்று ரூஸ்வெல்ட் சில நாட்களுக்குப் பிறகு கூறிக் கார்டல் ஹல்லுக்கு ஆதரவளித்தார். ஐந்து மாதங்கள் கழிந்து அமெரிக்க தலையீட்டுக்கிடமளித்துவந்த பிளாட் திருத்தம் ரத்து செய்யப்பட்டது. அதற்கடுத்த ஆகஸ்ட் மாதத்தில் ஹாய்ட்டியிலிருந்து அமெரிக்கா தன் கடற்படையைத் திருப்பி அழைத்துவிட்டது. “நல்ல அயலான் கொள்கை” மும்முரமாக அனுசரிக்கப்பட்டு வரலாயிற்று.

உடனுக்குடன் கிடைக்கக்கூடிய பலன் என்னவென்று யோசித்தால், இரண்டாவது உலக யுத்தத்தின்போது அமெரிக்காவுக்குத் தென்னமெரிக்காவில் நம்பிக்கை வைக்கக்கூடிய நேச தேசத்தினர் ஏற்பட்டனர். சரித்திரப் போக்கில் கவனித்தால், அமெரிக்க ஏகாதிபத்தியமும் டாலர் ஆதிக்கமும் மறைந்து விட்டதென்பது எல்லோருக்கும் தெரிந்தது. நல்ல உலகப் பிரஜைகளாக வாழ்வதால்தான் அமெரிக்கரின் நலன் முன்னேறும் என்பதையும் அமெரிக்கர் உணர்ந்து கொண்டனர். இன்று நாலாவது அம்சத்திட்டம் என்ற புதிய துணிச்சலான திட்டத்திற்கான விதையை பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், கார்டல் ஹல், ஸம்னர் வெல்ஸ் ஆகியோரின் "நல்ல அயலான் கொள்கை" விதைத்து வைத்தது.

# நல்ல அயலான் கொள்கை— ஒரு மணியோசை

யேசு கிறிஸ்து சொன்னார்: "விதைக்கிறவன் விதையை விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில் சில விதைகள் வழியருகே விழுந்து மிதியுண்டன. பறவைகள் வந்து அவற்றை விழுங்கிவிட்டுப் போயின. வேறே சில விதைகள் கற்பாறையின் மேல் விழுந்தன. அவை முளைத்த பின் அவற்றிற்கு ஈரமில்லாததினால் உலர்ந்துபோயின. வேறே சில விதைகள் முட்கள் நடுவே விழுந்தன. முட்கள்கூட முளைத்து அவற்றை நெருக்கிப்போட்டன. வேறே சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவை முளைத்து ஒன்றுக்கு நூறாக, ஒன்றுக்கு அறுபதாக, ஒன்றுக்கு முப்பதாகப் பலன் தந்தன."

யேசுவின் உபமானக் கதையில் வரும் குடியானவனைப் போலவே, "நல்ல அயலான் கொள்கை" விஷயத்தில் அமெரிக்கா விதை விதைத்தது. அமெரிக்கரும் பாறைக்கல், முட் பிரதேசம், நல்ல நிலம் ஆகிய இடங்களில் விதைகளை எறிந்தனர். அவை சர்க்கார் கடன்கள், தனிப்பட்டவர்களின் மூலதனம் அல்லது தொழில் நுட்ப உதவி ஆகியவற்றில் எந்த ரூபத்தில் விதைக்கப்பட்டிருந்தாலும், அறுவடையின்போது கண்ட வெற்றி தோல்விகளைத் துணிச்சலான புதிய திட்டத்தை வகுத்து வருவோர் நன்றாக ஆராய்ந்திருக்கிறார்கள். புதிய திட்டத்தினால் ஏற்படக்கூடிய பலன்களைப்பற்றித் தெளிவான அபிப்பிராயம் ஏற்பட உலகத்தின் மற்ற பாகங்களுக்குக்கூட பொருளாதாரத் துறையில் "நல்ல அயலான் கொள்கை" யின் வெற்றி தோல்விகள் சரியான அளவுகோலாக விளங்கும். உதாரணமாக, "நல்ல அயலான் கொள்கை"யைக் குழாயைத் திறந்து மூடுவதுபோல பின்பற்றியோ, புறக்கணித்தோவிட்டால்,

நாலாவது அம்சத்திட்டம் வெகுகாலம் நீடித்துவரும் என்று பின்தங்கிய தேசங்கள் உறுதிகொள்வது முடியாத காரியம். ஆகவே தென்னமெரிக்காவில் கடந்த பதினைந்து வருஷங்களாக நல்ல அயலான் கொள்கை எவ்விதமாக அனுசரிக்கப்பட்டு வந்ததெனக் கவனிப்போம்.

நல்ல அயலான் கொள்கை அரசியல் திட்டமாக உதித்தது, பொருளாதாரத் திட்டமாக அல்ல. முதலில் அது மக்களின் உணர்ச்சிகளின் விஷயத்தில் கவனம் செலுத்தியது. ஆனால் ஜனங்களின் உணர்ச்சிகள் அவர்களுடைய பைகளிலிருக்கும் பணத்தைப் பொறுத்து இருப்பதால், தென்னமெரிக்காவில் மூலதனமாகப் போட்டிருந்த அமெரிக்கரின் பணத்தின் தொகை அதிகரித்ததில் ஆச்சரியமில்லை. 1940-ம் ஆண்டில் அமெரிக்க மூலதனம் 400 கோடி டாலர்களைத் தொட்டது. அதில் பாதி தனிப்பட்டவர்களின் மூலதனம். வர்த்தகத்திலும், சர்க்கார் பத்திரங்களிலும், நிலங்களிலும் உபயோகப்பட்டுவந்தது.

இரண்டாவது உலக யுத்தத்துக்கு முன்பே, தொழில்வள, விவசாய முன்னேற்றத்துக்காக ஏற்றுமதி—இறக்குமதி பாங்கிடமிருந்து ஆர்ஜென்டைன் சர்க்கார் ஆறு கோடி டாலர் கடன் வாங்கியிருந்தது. எஃகுத் தொழிற்சாலையைக் கட்டுவதற்காக பிரேஸில் இரண்டு கோடி டாலர் பெற்றது.

"வாழ்க்கைத்தரம் உயருவதன்மூலமே சமுதாய முன்னேற்றமும் அரசியலில் ஸ்திரமும் நம் அர்த்தகோளத்தில் உண்டாகும் என்ற துணிபுடன் இக்கடன்கள் கொடுக்கப்பட்டது," என்று ஸம்னர் வெல்ஸ் விளக்கிக்கூறினார். அவர் மேலும் சொன்னதாவது: "உண்மையான ஜனநாயகம் வளருவதற்கு உணவு, சுகாதாரம், கல்வி, போக்குவரத்து சாதனங்கள் ஆகியவற்றில் அபிவிருத்தி ஏற்படவேண்டும். பொருளாதாரக் கூட்டுறவுக்காக மேற்கொண்ட நடவடிக்கைகளால் அரசியல், ராணுவப் பாதுகாப்பு மேம்பாட்டைவதுடன், அமெரிக்கச் சரக்குகளுக்கு அதிக கிராக்கியும் ஏற்படும் என நாங்கள் நம்பினேம்."

யுத்தத்தின்போதும் அதற்கு முன்பும் அமெரிக்க சர்க்கார் தென்னமெரிக்காவுக்குக் கடன்கள் அளித்து வருகையில் தனிப் பட்டவர்கள் தொழிலியல் முன்னேற்றத்துக்காக மூலதனம் போட்டு வந்தார்கள். அமெரிக்க மூலதனம் உள்நாட்டு மூல தனத்தின் கூட்டுறவோடு புதிய தொழிற்சாலைகளை நிறுவியது. மக்களுக்கு அவசியமான துணி, உணவுப் பொருள்கள் ஆகிய வற்றை இத்தொழிற்சாலைகள் உற்பத்தி செய்தன. விலைகளைக் கட்டுப்படுத்தவில்லையாதலால், லாபம் பெருமிதமாகக் கிடைத் தது. செலவைப்பற்றி யாரும் கவனிக்கவில்லை. தேவைக் குத் தகுந்த அளவு உற்பத்தி செய்வதே கடினமாயிருந்தது. ஆர்ஜெண்டினாவில் மட்டும் 1935-ம் ஆண்டில் தொழிற்சாலை களில் வேலை செய்துவந்தவர்களின் எண்ணிக்கை 4,62,000 ஆக இருந்தது. 1941-ம் ஆண்டிற்குள் 8,29,000 ஆகப் பெரு கிற்று.

அக்காலத்தில், சர்க்கார் கடன்கள், தனிப்பட்டவர் மூலதனம் மட்டுமின்றி மூன்றாவதாக மற்றொரு வழியிலும் அமெரிக்க ஐக்கிய ராஜ்யங்களுக்கும் தென்னமெரிக்காவுக்கும் கூட்டுறவு ஏற்பட்டது. விவசாயம், சுகாதாரம், கல்வி ஆகிய துறை களில் தயாரிக்கப்பட்ட திட்டங்களுக்குத் தொழில் நுட்ப உதவியை அமெரிக்கா அளிப்பதன்மூலம் அது உண்டாயிற்று. இவ் வுதவியினால் அமெரிக்க சர்க்காருக்கோ தனிப்பட்டவர்களுக்கோ பொருட்சேதம் அதிகமாக ஏற்படவில்லை.

உதாரணமாக, தென்னமெரிக்காவில் கூட்டுறவு விவசாயப் பண்ணைகளை நிறுவ அமெரிக்க விவசாய இலாகா நிபுணர்களை அனுப்பியது. தென்னமெரிக்க விவசாய முறைகள் இதனால் அபிவிருத்தியடைந்து மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும் என்று அமெரிக்க காங்கிரஸ் எதிர்பார்த்தது.

ரியோ டி ஜெனீரோவில் அயல்நாட்டு மந்திரிகள் கூடியபோது, சுகாதாரம், கல்வி வளருவதற்காக அமெரிக்க குடியரசு நாடுகள் ஒத்துழைக்கவேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி

ணர்கள். மேற்கு அர்த்தகோளத்தின் அபிவிருத்திக்கு அதுவே சிறந்த வழியென அந்நிய மந்திரிகள் கருதினர்கள்.

ஆனல் யுத்தத்திற்குப் பிறகு ஏதோ கோளாறு ஏற்பட்டு விட்டது. ஐரோப்பாவிலும் ஜப்பானிலும் பொருள் உற்பத்தி சாலைகள் உயிர்பெற்று எழவே, கடைகளில் கிராக்கி குறைந்தது. பொருள்களின் விற்பனையில் தேக்கம் உண்டாயிற்று. புதிதாகத் தோன்றிய தென்னமெரிக்கத் தொழிற்சாலைகள் மற்றவைகளுடன் போட்டி போடக்கூடிய அளவுக்குத் துரிதமாகத் தங்கள் திறமையை அதிகரித்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களில் பல அந்நிய நாட்டுச் சரக்குகளைக் காட்டிலும் விலை அதிகம், ஆனல் மட்ட ரகம். ஆகவே தற்காப்பு வரிகள், தொழிலாளரிடையே வேலையின்மை, கூலிகளைக் குறைக்க முயற்சிகள், சமுதாயப் பொருளாதாரக் குழப்பங்கள் ஆகியவை தலை தூக்க ஆரம்பித்தன.

புதிய இயந்திரங்களோ, மூலப்பொருள்களோ வாங்குவதற்கு வேண்டிய அந்நிய நாணயமில்லாததால், தொழிலியல் முன்னேற்றம் தடைப்பட்டது. நாணய மதிப்பு குறைந்தது. பண பெருக்கத்தால் வியாபாரிகள், தொழிற்சாலை முதலாளிகள், அமைதியற்ற தொழிலாளர்கள் அனைவரும் பாதிக்கப்பட்டனர். தென்னமெரிக்க குடும்பங்களின் சுக வாழ்க்கை குலைக்கப்பட்டது.

அதன் பலன் என்னவென்ருல் பல தென்னமெரிக்க நாடுகளில் புரட்சியும் எதேச்சாதிகாரமும் பலம்பெற ஆரம்பித்தன. "1948-ம் ஆண்டில் கொலம்பியாவில் அரசியல் கிளர்ச்சிகளும், காஸ்ட்டா ரிக்காவில் புரட்சியும், மத்திய அமெரிக்காவில் அபாயகரமான கிளர்ச்சியும், பனமாவிலும், பராகுவேயிலும், பொலிவியாவிலும் வெற்றியடையாத பல கலகங்களும், சிலியில் தொடர்ந்தாற்போல் சமுதாய ராஜீய சர்ச்சைகளும், பெருவில் புரட்சியும் தோன்றின," என்கிருர் ஸம்னர் வெல்ஸ்.

இரண்டாவது உலக யுத்தம் முடிந்தபின், 1949-ம் ஆண்டு நிறைவுக்குள் அமெரிக்காவின் எல்லைக்குக்கீழே 12 புரட்சிகள் உண்டாயின. அமெரிக்காவுடனிருந்த உறவின் சுரம் குறைய ஆரம்பித்தது. தென்னமெரிக்க மக்கள் தங்களை அமெரிக்கர் அசட்டை செய்துவிட்டனர் என்று நினைக்கலாயினர்.

எனினும் நல்ல அயலான் திட்டம் தொடங்குமுன் இருந்ததைக் காட்டிலும் தென்னமெரிக்கா இப்போது நல்ல ஸ்திதியிலிருக்கிறது. தென்னமெரிக்க விஷயங்களில் தலையிடுவதில்லையென மேற்கொண்ட கொள்கை இன்னும் அமெரிக்க கொள்கைகளின் நடுநாயகமாக விளங்குகிறது. 1939-ம் ஆண்டிலிருந்த ஏற்றுமதிக்கு இப்போது டாலர் மதிப்பில் மூன்று மடங்கு அதிகமாகத் தென்னமெரிக்கா வெளிநாடுகளுக்குச் சரக்குகளை விற்றுவருகிறது. யுத்தத்துக்கு முன் ஐரோப்பாவுடன் தென்னமெரிக்கா நடத்திவந்த வியாபாரம் இப்போது மறுபடியும் பழைய அளவுக்கு அபிவிருத்தியாகி இருக்கிறது. அவ்வபிவிருத்திக்கு ஒரு முக்கிய காரணம் மார்ஷல் திட்டத்தால் ஐரோப்பிய நாடுகளில் வாங்கும் சக்தி அதிகரித்திருப்பதாகும்.

இன்று தென்னமெரிக்காவில் வாழ்க்கைத்தரம் யுத்தத்துக்கு முன்பிருந்ததைவிட உயர்ந்திருக்கிறது. எனினும் ஜனங்கள் அதிருப்தியோடும் சந்தோஷமற்றுமிருக்கிறார்கள்.

துணிச்சலான புதிய திட்டத்தை மேற்கொண்டிருப்போருக்குத் தெரியவேண்டிய நீதி இதுதான். ஒருவன் சரியாகக் கற்றுக்கொள்ளும்வரை அவன் பக்கத்திலேயே இருக்க உனக்கு விருப்பமில்லையாயின், நீர் ஆழமாயிருக்குமிடத்தில் நீ அவனுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க முன்வரக்கூடாது.

நல்ல அயலான் கொள்கையின் பொருளாதாரத் திட்டத்தை மறுபடியும் அமுலுக்குக் கொண்டுவரச் சாதகமான வழிகளை யோசனை கூறியது அரசியல் வாதிகள் அல்ல, வர்த்தகர்

கள்தாம் என்பது குறிப்பிடத்தக்கது. தென்னமெரிக்கக் குடியரசுகள் சுபிட்சமாயிருப்பதில் அக்கறைகொள்ள வர்த்தகர் களுக்கு நிர்ப்பந்தமுண்டு. 1948-ம் ஆண்டில் வெளியேறிய 90 கோடி டாலர்களில் பெரும்பகுதி தென்னமெரிக்காவுக்கு மூலதனமாகச் சென்றிருந்தது. அடிக்கடி புரட்சிகளும் அரசியல் குழப்பங்களும் அந்நாடுகளில் உண்டானல், இந்த அமெரிக்க மூலதனத்துக்கும் இதற்குமுன் போட்டிருக்கும் அமெரிக்க மூலதனத்துக்கும் ஆபத்து என்பது வெளிப்படை. ராணுவத்தின்மூலம் தலையிடுவதென்பது ஒரு நூற்றுண்டிற்கு முன் நடக்கக்கூடிய விஷயமாதலால், தென்னமெரிக்காவின் பொருளாதார நலனைச் சீர்படுத்துவதே அமெரிக்கர் அனுசரிக்கக்கூடிய சாத்தியமான வழியாக இருந்தது.

நிலைமையைச் சமாளிக்க என்ன வழியென வினவியபோது, சில தென்னமெரிக்கர்கள் மார்ஷல் திட்டத்தைப்போன்ற திட்டம் தோற்றுவித்து அமெரிக்க சர்க்கார் தென்னமெரிக்க மீட்சிக்குப் பண உதவி செய்யவேண்டுமென்றனர். இந்த யோசனை வட அமெரிக்க முதலாளிகளுக்குப் பிடிக்கவில்லை. சில அடிப்படையான முன்னேற்றத் திட்டங்களுக்கு ஏற்றுமதி-இறக்குமதி பாங்க் சிறு வட்டிக்குக் கடன்கள் கொடுக்கலாமே ஒழிய மற்றபடி பொருளாதார அபிவிருத்திக்கான வழிகளைத் தனிப்பட்ட முயற்சியில்தான் பின்பற்ற வேண்டுமென்பது அவர்களுடைய கருத்து. பிரதேச மார்ஷல் திட்டங்கள் சர்க்கார்களால் வர்த்தகம், உற்பத்தி, விநியோகம், மூலதனம் ஆகியவை கட்டுப்படுத்தப்படுவதை எதிர்பார்க்கின்றன. இவற்றுல் தனிப்பட்ட முயற்சி மறைந்து, கட்டுப்பாடு அதிகரிக்கும் என்று வட அமெரிக்க முதலாளிகள் ஆட்சேபித்தனர்.

சர்க்கார் கடன்களுக்குப் பதிலாகத் தனிப்பட்டோர் மூலதனங்களை ஒன்று சேர்த்து அதிலிருந்து தொழிலியல் முன்னேற்றத்துக்குக் கடன்கள் கொடுக்கலாம் என ஒரு தென்னமெரிக்கர் சொன்னர். அம்முறை சாத்தியமானதுதான், ஆனல் தொழிற்சாலைகள் தேசிய மயமாக்கப்பட்டால், முதலாளிகளுக்குச் சரிவர

நஷ்டஈடு கொடுக்கப்படும் என்ற வாக்குறுதி மூலதனம் கொடுத்துதவியவர்களுக்கு வேண்டியிருக்குமென வட அமெரிக்கர் அபிப்பிராயப்பட்டனர்.

தென்னமெரிக்காவில் மூலதனம் போடுவதற்கு அமெரிக்க சர்க்கார் வழி செய்து கொடுக்கும் வரை ஓர் அமெரிக்கர் காத்திருக்கவில்லை. இரண்டாவது உலக யுத்தத்தின்போது நெல்ஸன் ராக்பெல்லர் பொது அமெரிக்க விவகாரங்கள் காரியாலயத்தின் தலைவராயிருந்தார். பிறகு, சிறிதுகாலம் தென்னமெரிக்க விஷயங்களைக் கவனித்துக்கொள்ளும் உதவி அயல் நாட்டு மந்திரியாகவிருந்தார். அமெரிக்காவுக்கும் தென்னமெரிக்கக் குடியரசு நாடுகளுக்குமிடையே நட்பை வளரச்செய்வது அவருடைய வேலை. தென்னமெரிக்கர்கள் தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்ள உதவி செய்வதன்மூலமே நட்பை வளர்க்கமுடியுமென அவர் நம்பினார்.

யுத்தம் முடிந்ததும், பின்தங்கிய பிரதேசங்களின் அடிப்படைப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இரு சங்கங்களை ராக்பெல்லர் ஸ்தாபித்தார். வெனிஸூலா, பிரேஸில் ஆகிய இரு தேசங்களில் தம் முயற்சியை ஆரம்பித்தார். அவர் முதலில் தொழிற்சாலைகளை ஸ்தாபிக்கவில்லை. தொழிலியல் செவ்வனே வளரவேண்டுமானால், அதற்குத் தகுந்த மனிதர்களும், போக்குவரத்து சாதனங்களும், விவசாய முன்னேற்றமும் அவசியமென்று அவர் கருதினார். அவற்றிற்கான ஆக்கவேலைகளில் அவர் ஈடுபட்டார்.

**1949**-ம் ஆண்டிற்குள் ஒன்பது கம்பெனிகள் ஏற்பட்டன. ஒவ்வொன்றும் ராக்பெல்லர் திட்டத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதாவது, சுயச்சிரத்தையால் முன்னேற்றமடைய லட்சக்கணக்கில் பணம் கொடுக்கப்படும். ஆனால் தருமத்திற்காக ஒரு காசும் கிடைக்காது. பிரேஸிலையும் வெனிஸூலாவையும் நோக்கி, கம்பெனி நிபுணர்கள் கேட்டார்கள்:

" உங்களுக்குத் தேவையான தொழிற்சாலைகள் எவை ? அவை, தோன்றுவதற்குத் தடங்கலாக இருக்கும் காரணங்கள் என்ன?" அவற்றிற்குக் கிடைக்கும் பதிலைக்கொண்டு லாபகரமாக நிலைமையை அபிவிருத்தி செய்ய முடியுமா என்பதைத் தீர்மானித்தார்கள். நிலைமையை அபிவிருத்தி செய்யமுடியும் என்பதைக் கண்டார்கள்.

உதாரணமாக, பிரேஸிலுக்குத் தானியம் அதிகமாக வேண்டியிருந்தது. ஸாண்டா ரிட்டா என்ற ஊரிலுள்ள பண்ணை ஒன்றை ராக்பெல்லர் தம்வசமாக்கி அதில் செடிகளுக்குண்டாகும் வியாதி அணுகாத ஒரு கலப்புப் பயிரை வளர்த்தார். அதன் விதையைப் பிறகுக் குடியானவர்களுக்கு விற்றார். அது அவர்களுடைய விளைவை இருபது சத விகிதம் அதிகமாக்கியது.

நிலத்தை உழ, பூமிக்கு உரம்போட, பயிர்களை பூச்சி அரிக்காமலிருக்க மருந்து தூவ மெஷின்களை வாங்குவதற்கும் பொதுவாக பிரேஸில் குடியானவர்களுக்குப் பணவசதியில்லை. ராக்பெல்லர் அம்மெஷின்களை வாங்கிக் குடியானவர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கிறார். அம்மெஷின்களை ஓட்டுவதற்கு வேண்டிய தேர்ச்சி பெற்ற ஆட்களையும் அனுப்பிவைக்கிறார்.

உணவு உற்பத்தியையும் விநியோகத்தையும் அபிவிருத்தி செய்வதால் சீக்கிரத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் வாழ்க்கைத்தரம் உயரும் என்ற காரணத்தினால் ராக்பெல்லர் சங்கங்கள் விவசாயத்தில் முதலில் கவனம் செலுத்திவருகின்றன. சிறிய தொழிற்சாலைகளைக் கட்டுவதற்குத் தக்க சமயம் வரும்போது அவற்றிற்கு மூலதனம் கொடுத்துதவ அச்சங்கங்கள் தயாராயிருக்கும். சின்னஞ்சிறு முயற்சிகளிலேயே ராக்பெல்லர் சங்கங்கள் தங்கள் கவனத்தைச் செலுத்துகின்றன. முயற்சி தோல்வியுற்றால் நஷ்டமடையக் கூடியவர்கள் வெகு சிலரே. முயற்சி வெற்றிபெற்றால் அதைப் பெருக்கிப் பல்லாயிரக் கணக்கான மக்கள் பலனடையச் செய்யலாம்.

சாதாரணமாக நாம் நினைத்து வருவதைவிட அதிகமான சந்தர்ப்பங்கள் தனிப்பட்ட முயற்சி செலுத்துவதற்கு இருக் கின்றன என்பதை இச்சங்கங்கள் நிரூபிக்க முயலுகின்றன. சர்க்கார் ஆதிக்கத்தை வளர்ப்பதற்குப் பதிலாக சர்வதேச வர்த்தக சமுதாயத்தை ஸ்தாபிக்க உதவி செய்வதே அவற்றின் நோக் கம். அந்நோக்கத்தோடு, உள்ளூர்வாசிகளுக்குத் தொழிற் பயிற்சி அளிப்பதுடன் வெனிஸூலா, பிரெஸில் நாடுகளிலுள்ள முதலாளிகளைத் தங்கள் மூலதனத்தை ஆக்கல் காரியங்களில் செலவுசெய்யும்படி அச்சங்கங்கள் தூண்டிவருகின்றன.

அச்சங்கங்களின் கம்பெனிகள் நிலைபெற்று லாபம் சம்பாதிக் கத் தொடங்கினால், அவற்றை உள்நாட்டு முதலாளிகளுக்குப் பூர் ணமாக விற்றுவிட்டு அவற்றில் கிடைக்கும் பணத்தை மற்ற இடங் களில் புதிய திட்டங்களும் கம்பெனிகளும் தொடங்க உபயோகப் படுத்திக்கொள்ளும். லாபம் சம்பாதிக்க இயலாத கம்பெனிகளை மூடிவிடும். ஒரு கம்பெனி தன்னுடைய சாமர்த்தியத்தால் பணம் சம்பாதிக்க முடியவில்லையெனில் அதனால் அதற்கோ மற்றவர்களுக்கோ பலன் ஒன்றுமில்லை யென்பது ராக்பெல்ல ரின் அபிப்பிராயம். ஆனால் இம் முயற்சிகளைப் பற்றி அவர் அதிகமாகக் கவலைப்படவில்லை. 1949-ம் ஆண்டின் இறுதி யில் கம்பெனிகளின் அலுவல்கள் ஏமாற்றத்தை அளிக்கக் கூடியதாயிருந்தன. 1950-ம் ஆண்டில் முன்னேற்றமிருந்தது.

"பண விஷயத்தில் உலகத்தின் வறண்ட பிரதேசங்களுக்கு நீர்ப்பாசன முறையாக முதலாளித்துவம் சேவை செய்யவேண்டு மென்பது எங்கள் விருப்பம்," என்று ராக்பெல்லர் சொல்ல ஆசைப்படுவார். மூலதனம் ஒரு கிணறாக இருக்கவேண்டுமென அவர் விரும்புகிறாரெனச் சொன்னால் இன்னும் பொருத்த மாக இருக்கும். ஆழமாகத் தோண்டினால் பூமிக்கடியில் இருக்கும் நீரூற்றிலிருந்து தண்ணீர் கிடைக்குமென அவர் எதிர்பார்க்கிறார். வாய்ப்பு சரியாக அமைந்தால் வெளி நாட்டு மூலதனம் உள்நாட்டு நலன்கள் ஊற்றெடுத்து வெளியே பொங்க உதவிசெய்யும்.

தென்னமெரிக்காவுடன் அமெரிக்க சர்க்கார் ஒத்துழைத்த மூன்று விதங்களில் குறைந்த செலவில் மிகுந்த வெற்றியுடன் நிறைவேற்றப்பட்டதாகத் தோன்றியது தொழில் நுட்ப உதவியாகும். உதாரணமாக, பத்து வருஷகாலமாக நடந்துவரும் விவசாய இலாகாத் திட்டத்தின் செலவு வருஷத்தில் நாலு லட்சம் டாலர்களுக்கும் குறைவு. எனினும் 1949-ம் ஆண்டிற்குள் ஆர்ஜெண்டினு, பொலிவியா, காஸ்ட்டா ரிக்கா, பிரேஸில், கொலம்பியா, க்யூபா, டாமனிக்கன் குடியரசு, ஈக்வடார், எல்ஸால்வடார், குவாடமாலா, ஹாய்ட்டி, மெக்ஸிகோ, நிகராகுவா, பனுமா, பெரு ஆகிய பதினைந்து தென்னமெரிக்க நாடுகளில் ஆராய்ச்சித்திட்டங்களை ஆரம்பிக்க முடிந்தது.

சிறந்த பயிர்கள் மூலம் உணவு உற்பத்தி பெருகி வருவதைக் கண்டு தென்னமெரிக்க நாடுகளும் சந்தோஷமடைந்தன. 1943-ம் ஆண்டில் அவை ஐந்து லட்சம் டாலர்களை இத்திட்டங்களுக்குக் கொடுத்து வந்தன. 1948-ம் ஆண்டில் அத்தொகை ஏறக்குறைய 12 லட்சம் டாலர்களுக்கு உயர்ந்தது. அதாவது அமெரிக்கா அளித்த ஒவ்வொரு டாலருக்கும் தென்னமெரிக்க நாடுகள் மூன்று டாலர்கள் கொடுத்தன.

அமெரிக்க விவசாய இலாகாவுக்கும் வெகு திருப்தி. கூட்டுறவினுல் நெருங்கிய நட்பு ஏற்படுவதுடன் வியாபாரமும் வளர ஆரம்பித்ததல்லவா? புதிய பயிர்களிலிருந்து கிடைக்கும் வருமானம் அமெரிக்காவிலிருந்து சரக்குகளை வாங்கத் தென்னமெரிக்க நாடுகளுக்குப் பயன்பட்டது. ஆகவே விவசாயத் தொழில் நுட்ப உதவி கிழக்கு அர்த்தகோளத்திலுள்ள நாடுகளுக்கு அளிக்க இலாகா தீர்மானித்தது. 1949-ம் ஆண்டில் ஆப்கனிஸ்தான், பெர்சியா, பிலிப்பைன் தீவுகள், சயாம், ஸிரியா, சீனு, லெபனுன், ஈராக், சவுதி அராபியா, எகிப்து, கிரீஸ் ஆகிய நாடுகளுக்கு நிபுணர்கள் கோஷ்டிகள் அனுப்பப்பட்டனர்.

பொது அமெரிக்க விவகாரங்கள் இலாகா சாதித்த விஷயங்களும் போற்றுதற்குரியன. 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்

சர்க்காரால் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் வருஷம் ஒன்றுக்கு 50 லட்சம் டாலர் செலவில் வேலை செய்துவந்தது. சுமார் 300 சிப்பந்திகள் இருக்கின்றனர். அவர்களில் 200 சிப்பந்திகள் தென்னமெரிக்காவிலுள்ள 10,000 தொழிலியல் நிபுணர்களின் வேலையை மேற்பார்வையிட்டு நூற்றுக்கணக்கான திட்டங்களை நிறைவேற்றி வருகின்றனர். ஒவ்வொரு திட்டத்துக்கும் அமெரிக்க உதவி சம்பந்தப்பட்ட நாட்டுக்கும் சங்கத்துக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தப்படி அளிக்கப்பட்டு வருகிறது. திட்டங்களின் செலவில் பெரும்பகுதியைத் தாங்களே மேற்கொண்டுத் தென்னமெரிக்க நாடுகள் இவ்வித அமெரிக்க உதவியை ஆமோதித்துவந்தன.

அதிகச் செலவின்றி நிறைவேறும் இத்திட்டங்கள் உண்மையில் துணிச்சலான புதிய திட்டத்தின் அடிப்படையில் கிளம்பியவை. அதை ஜனாதிபதி ட்ரூமன் நன்கு உணர்ந்திருந்தார். பொது அமெரிக்க விவகாரங்கள் இலாகாவை 1950-ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதி மூடியிருக்கவேண்டும். ஆனால் அது தொடர்ந்து இன்னும் 5 வருஷங்கள் நடக்க வேண்டுமென்றும் அதற்குச் செலவுக்காக அளிக்கப்படும் மானியம் 50 லட்சம் டாலர்களிலிருந்து 100 லட்சம் டாலர்களாக உயர்த்த வேண்டுமென்றும் ஜனாதிபதி அமெரிக்க காங்கிரஸுக்குச் சிபார்சு செய்தார்.

அச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி சொன்னதாவது : " இத்திட்டங்கள் சில வருஷங்களாகச் சோதிக்கப்பட்டு நல்ல பலன்களைத் தருகின்றன என்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. நமது விஞ்ஞான, தொழிலியல் முன்னேற்றத்தின் பலன்களைப் பின் தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் திட்டம் ஒன்றை நாம் தொடங்கவேண்டுமென நான் சமீபத்தில் கூறினேன்.

"மேற்கு அர்த்தகோளத்தில் அத்திட்டத்திற்கு வேண்டிய பலமான அஸ்திவாரத்தை நாம் முன்பே போட்டிருக்கிறோம்.

மேற்சொன்ன திட்டத்தினுல் உண்டாகக் கூடிய பலன்கள் என்ன என்பதை நிதரிசனமாகக் காட்டியிருக்கிறேம். ஐக்கிய அமெரிக்க ராஜ்யங்கள் உள்பட, ஒவ்வொரு குடியரசும் மற்ற அமெரிக்க நாடுகளில் ஏற்படும் பொருளாதார, சமூக, பல்கலை முன்னேற்றத்தினுல் சக்தி பெறுகிறது. அமெரிக்க கண்டங்களிலுள்ள ஜனங்களின் வாழ்க்கைத்தரம் உயருவதற்காக முயலும் இச்சர்வதேசக் கூட்டுறவைத் தொடர்ந்து நடத்துவதால், நமது கொள்கையின் உயரிய நோக்கங்களுக்குக் கிரியாம்சையில் பாடுபட்டவர்களாவோம்."

ஏற்றுமதி-இறக்குமதி பாங்க் கடன்கள் யுத்தத்தின்போது தென்னமெரிக்க நாடுகளின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய உபயோகப்பட்டன. ஆனுல் சில சமயங்களில் அவற்ருல் ஒரு கெடுதலும் விளைந்தது. நிறைய ஒளஷதங்களை உட்கொள்ளுபவன் பிறகு ஒளஷதங்களின்றி ஆரோக்கியமாய் வாழ முடியாமற்போவதுபோலத், தொடர்ந்து பண உதவி கிடைத்தால்தான் சம்பந்தப்பட்ட நாடுகளில் தொழிலியல் வளர்ச்சி தங்கு தடையின்றி ஏற்படும் என்ற நிலைமை உண்டாயிற்று. வேண்டும்போதெல்லாம் பண உதவி அளிக்கவேண்டுமென்பது அமெரிக்கக் கொள்கையல்ல. இனிச் சர்க்கார் கடன்கள் கொடுக்கும்போது ஒரு பழைய விதியைக் குறிப்பிடுவது நல்லது. அதாவது வேண்டிய தொகையில் கால் பாகமோ பாதியோ அமெரிக்க சர்க்கார் கொடுக்கும், மீதிப் பணத்தைக் கடன் வாங்கும் நாடு உள்நாட்டு வசதிகளிலிருந்து பெறவேண்டும்.

நல்ல அயலான் கொள்கையிலிருந்து அமெரிக்கர்கள் இன்ஞெரு உண்மையையும் உணர்ந்திருக்கிருர்கள். பல பின் தங்கிய தேசங்கள் அந்நியர் சுரண்டலைத் தவிர்க்கத் தொழிலியல் அபிவிருத்தி அவசியமெனக் கருதுகின்றன. ஆனுல் தொழிலியல் அபிவிருத்திப் பிறர் கட்டாயத்தால் உண்டாகாது. ஒரு நாட்டில் வியாபாரம் செய்வதற்கு விஸ்தீர்ணமான பிரதேசமோ, அந்நாட்டு மக்களுக்கு மதிப்பிற்குறிய வாங்கும்

சக்தியோ இல்லையென்று வைத்துக்கொள்வோம். பொருள்களைப் பெருவாரியாக உற்பத்தி செய்துக் குவிக்கக்கூடிய தொழிற்சாலைகளை அத்தகைய நாடுகளில் நிறுவுவது ஆபத்தான விஷயம்.

கூடியவரை, தொழிலியல் அபிவிருத்தி ஒரு நாட்டின் பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்ய ஏற்படவேண்டுமேயன்றி, இயற்கையாக உண்டாக்கக்கூடிய தேசீய அபிலாஷையைத் திருப்தி செய்வதற்காக அதை மேற்கொள்ளக்கூடாது. இரண்டாவதாகக் கவனிக்க வேண்டிய விஷயத்தை முதலில் எடுத்துக்கொள்வதற்கு உதாரணமாக வெனிஸூலாவில் யுத்தத்தின்போது ரேயன் தொழிற்சாலைகளைக் கட்டியதைச் சொல்லலாம். அத்தொழிற்சாலைகள் நஷ்டமடைந்து மூடப்படாமலிருக்கச் சமீபத்தில் அந்நாடு அந்நிய ரேயன்மீதுள்ள இறக்குமதி வரியை 150 சத விகிதம் அதிகரிக்க வேண்டியதாயிற்று. எனினும் மிகச் சாதாரண அடிப்படையான விஷயமான முட்டை உற்பத்தியில் வெனிஸூலா அக்கரை காட்டவேயில்லை. அதற்குத் தேவையான முட்டைகள் வெளிநாடுகளிலிருந்து வருகின்றன. ரேயன் துணி உற்பத்தியைவிட முட்டைகள் உள்நாட்டிலேயே கிடைப்பதற்கான வழிகளை வெனிஸூலா அனுசரித்திருந்தால், வெனிஸூலா மக்களுக்கு அம்முயற்சி அதிக பயனளித்திருக்கும்.

எனினும், தென்னமெரிக்க நாடுகளில் அமெரிக்கா இவ்வளவாவது சாதிக்க முடிந்திருக்கிறதேயென்பதுதான் யாவருக்கும் தோன்றக்கூடிய விஷயம். யுத்த பிற்கால பிரச்னைகளில் தென்னமெரிக்க நாடுகள் தவிக்கின்றன என்பது முக்கியமல்ல. இப்பிரச்னைகளிருந்தும், அந்நாடுகளின் பொருளாதார நிலைமை 1939-ம் ஆண்டிலிருந்ததைவிட உயர்ந்திருப்பதே முக்கியமான விஷயம்.

அந்நாடுகளின் பல இன்னல்களையும் பயங்களையும் கடலில் இறங்கும் படகோட்டிக்கு ஒப்பிடலாம். அவனுக்கு வேண்டிய தைரியமும் சாமர்த்தியமும் சுலபமாகத் தவறு நேராமல் கிடைத்துவிடாது. கடலில் இறங்கித்தான் படகோட்டுவதில்

தேர்ச்சியடைய முடியும். பழைய பிரச்னைகள் தீராமலிருப்ப தாலோ, புதிய பிரச்னைகள் தோன்றுவதாலோ தென்னமெ ரிக்காவில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியை அலட்சியம் செய்து விடக்கூடாது. அப்படி அலட்சியம் செய்வதால், இன்னும் செய்து முடிக்கும் ஆக்க வேலைகளில் சிரத்தையில்லாமல் போய்விடும்.

இவ்வாறு சொல்வதால் தென்னமெரிக்காவின் பிரச்னை கள் உண்மையானதோ முக்கியமானதோ அல்லவென்று சொல் வதாக அர்த்தமில்லை. அப்பிரச்னைகள் கவனிக்க வேண்டிய வையே. சமீபத்தில் தொழிலியல் முன்னேற்றமடைந்துள்ள எந்நாட்டிற்கும் ஒரு விஷயம் தெளிவாகத் தெரிந்திருக்கும். அதாவது தொழிலியல் முன்னேற்றம் பல நெருக்கடிகளைக் கொண்டது. ஒன்றன்பின் ஒன்ருய்த் தோன்றத்தான் செய்யும்.

துணிச்சலான புதிய திட்டம் வருமுன் ஒலித்த மணியோசை யாக விளங்கியது நல்ல அயலான் கொள்கை. அக்கொள்கை நடைமுறையில் என்ன பயனளித்ததென்பதை நன்கறிந்த, தென்னமெரிக்க விஷயங்களில் முப்பது வருஷங்களுக்கு மேல் அனுபவமுள்ள ஓர் அமெரிக்க அதிகாரி சமீபத்தில் மூன்று வருஷத் திட்டமொன்றைச் சிபார்சு செய்தார். அது கவனத் துக்குரியது. அவர் வெளியிட்ட திட்டத்தில் கீழ்க்கண்ட சிபார்சு கள் அடங்கியிருக்கின்றன :

1. அமெரிக்கா முதலிய அயல்நாடுகளிலிருந்து மூல தனம் பெற முயற்சி செய்ய சித்தமாயிருக்கும் தென்ன மெரிக்க நாடுகளின் உறுதியான கூட்டுறவு திட்டங்களுக்கு உதவி செய்ய அதிகார பூர்வமாய் பணம் ஒதுக்கிவைத்தல்.

2. தென்னமெரிக்காவில் வர்த்தகத்திலீடுபட்டுள்ள தனி மனிதர்கள், சங்கங்கள் ஆகியவற்றின் வருமானவரிப் பளுவைக் குறைத்தல்.

3. வர்த்தகத்துக்கும் தொழிலியல் அபிவிருத்திக்கும் தனிப்பட்ட அமெரிக்கரிடமிருந்து கடன்கள் கிடைக்க வழிசெய்தல்.

4. பொது அமெரிக்க விவகாரங்கள் இலாகாவின் வைத்திய சுகாதாரத் திட்டங்களைப் பெருக்கி, அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து வைத்தல்.

5. தென்னமெரிக்கர்கள் அமெரிக்க கம்பெனிகளிலும் சங்கங்களிலும் தேர்ச்சிபெற வசதி அளித்தல்.

6. புது உற்பத்திப் பிரதேசங்களுக்குப் போக்கு வரத்துச் சாதனங்கள் தோன்ற பெரும்பாதைகள் அமைக்கப் பண உதவி அளித்தல்.

"இத்தகைய திட்டம் ஒழுங்காக நிறைவேற்றப்பட்டால் நஷ்டம் எதும் விளையாது," என்கிறார் அந்த அதிகாரி. தென்னமெரிக்க நாடுகளுடன் பிற்காலத்தில் அமெரிக்கா எவ்விதமான கூட்டுறவை ஸ்தாபித்தாலும் ஒரு விஷயம் மட்டும் தெளிவாகத் தோன்றும். அமெரிக்கா அளிக்கக்கூடிய பொருள், தொழில் நுட்ப உதவியின் மதிப்பு அது எவ்வளவு தூரம் தென்னமெரிக்க நாடுகளில் அபிவிருத்திக்கான பற்றுதலையும் விழிப்பையும் உண்டாக்குகிறதென்பதைப் பொறுத்திருக்கிறது. அமெரிக்காவிலிருந்து வெளிநாடுகளின் உதவிக்காக அனுப்பக்கூடிய பணம் பூராத்தொகையையுமே தென்னமெரிக்கா தன் முன்னேற்றத்துக்காக எதிர்பார்த்திருந்தால், அதன் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாய்த்தான் இருக்கும். அமெரிக்காவில் மூலதனமாகக் கிடைக்கக்கூடிய அத்தனை டாலர்களையும் தென்னமெரிக்காவுக்கு மட்டும் அனுப்பிவைத்தாலும் உள்நாட்டு முயற்சியும் ஊக்கமுமில்லையெனில் கடலில் பெருங்காயத்தைக் கரைத்ததுபோலத்தான். சாலையோரத்திலும் கற்பாறைப் பிரதேசங்களிலும் விதைக்கப்பட்ட மூலதனம் பயிராகாமல் மறைந்துதான் போகும்.

ஆனால் நல்ல நிலத்தில் விதைத்தால், அமெரிக்க மூலதனமும், தொழில் நுட்ப உதவியும், வறுமை, ஏமாற்றம், குரோதம் ஆகியவற்றைப் போக்கிச் சுபிட்சம், திருப்தி, அமைதி என்ற பயிர்களை வளர்க்கும்.

## இரண்டாம் பாகம்

# முன்னுரை

போர்ச்சுகீஸிய மாலுமியான அன்டோனியோ கால்வோ 1550-ம் ஆண்டில் பனமா பூசந்தி நடுவே ஒரு கால்வாய் வெட்ட வேண்டுமென்று யோசனை சொன்னார். அவரது திட்டம் பூர்த்தியடைந்து வெற்றியடைய 364 வருஷங்கள் ஆகுமென்று அவர் அப்போது நினைத்திருக்கமாட்டார். 1880-ம் ஆண்டில் பிரஞ்சுக்காரரான பெர்டினண்ட் டி. லெஸ்ஸப்ஸ் அதற்கான வேலையைத் தொடங்கியபோது அதற்கு வேண்டிய யந்திர சாதனங்கள் எல்லாம் இருந்தன. அப்படி யிருந்தும், ஊதாரித்தனத்தாலும், ஊழல்களாலும், மஞ்சள் காய்ச்சல் என்ற நோயாலும் திட்டம் தோல்வியுற்றது.

பனமா கால்வாயைக் கட்டி முடிப்பது சாத்தியம் என்ற நிலைமை ஏற்படுமுன், சுகாதார வசதிகள், தகுந்த இருப்புப் பாதைகள், உணவு, தண்ணீர், திறம்பெற்ற தொழிலாளர்கள், சாமர்த்தியமான நிர்வாகம் ஆகியவற்றை நிச்சயப்படுத்திக்கொள்ளவேண்டும். அவையின்றி கோடிக்கணக்கான பணத்தையும் உயர்ந்த வேலைப்பாட்டையும் கால்வாய் வெட்டுவதற்காக விரயப்படுத்தியது சல்லடையில் நீரை எடுக்கும் முயற்சியாகப் போயிற்று.

அதேபோல இன்று பல பின்தங்கிய பிரதேசங்களில் பிரம்மாண்டமான தொழிலியல் திட்டங்களில் பணத்தை வாரி இறைப்பது அர்த்தமற்ற செயலாக முடியும். முதலில் சல்லடைத் துவாரங்களை அடைக்கவேண்டும். உலக பாங்கில் கோடிக்கணக்கான டாலர்கள் இருக்கின்றன. அவற்றைப் பல நாடுகளில் மூலதனமாகப் போடாததற்குக் காரணம் அக்கறையின்மையல்ல. பணத்தைச் சரிவர உபயோகித்துக் கொள்ளக்கூடிய

திட்டங்கள் இல்லாமையே. ஒரு தேசம் ஐந்து கோடி அல்லது ஐம்பது கோடி டாலர் கடன் கேட்பதால், அப்பணத்தை அது நன்கு பயன்படுத்திக்கொள்ளுமென்று நிரூபணமாகிவிடாது.

இன்று தொழிலியல் அபிவிருத்திக்காகக் கிடைக்கக்கூடிய அயல்நாட்டுச் சர்க்கார் கடன்களோ, தனிப்பட்டவர்கள் மூல தனமோ வெகு குறைவு. அதற்கு முக்கிய காரணம் வெளி நாட்டு மூலதன விஷயத்தில் சாதாரணமாக அனுஷ்டிக்கப் படும் விரோத மனப்பூான்மையாகும். இரண்டாவது காரணம் கடன் வாங்கும் நாடுகளில் பணத்தை டாலர் நாணயமாக மாற்றுவதற்குள்ள வசதிக்குறைவு. மூன்ருவதாக, உள் நாட்டில் சுகாதாரம், தொழிலாளர் எண்ணிக்கை, உணவு, போக்குவரத்து சாதனங்கள், ஜனங்களின் வாங்கும் சக்தி, பொதுஜன நிர்வாகம் ஆகியவற்றிலுள்ள குறைகள்.

தொழிலியல் அபிவிருத்திக்காக வெளி நாடுகளிலிருந்து சர்க்கார் கடன்களோ தனிப்பட்டோர் மூலதனமோ கிடைக்க வேண்டுமெனில் இந்த அடிப்படை நிலைமைகளில் அபிவிருத்தி ஏற்படவேண்டும். அத்தகைய அபிவிருத்தி சாத்தியமாவதற்குத் திறமையான நிர்வாக அமைப்பும், பொருளாதாரக் கொள் கையும் தேவை.

ஆகவே, நாலாவது அம்சத்திட்டம் பரிணமிப்பதில் இரண்டு தனியான அம்சங்களைப் பின்வரும் அத்தியாயங்கள் விவரிக் கின்றன. பல தேசங்களில் தயார் செய்துள்ள முக்கிய முன் னேற்றத் திட்டங்களில் சில உதாரணங்களை விவரிக்கின்றன. அத்துடன் அம்முன்னேற்றத் திட்டங்கள் நிறைவேறுவதற்கு அவசியமான மாறுதல்கள் பொருளாதார அடிப்படையில் எவ் வாறு ஏற்படவேண்டும் என்றும் குறிப்பிடுகின்றன.

நாலாவது அம்சத்தில் எத்திட்டங்களை எந்த வரிசைக்கிர மத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கப்படும். முதலில் சில ஆண்டுகளுக்கு நாலாவது அம்சத்திட்டம் அமு

துக்குவராது. எல்லா நாடுகளுக்கும் ஒரே சமயத்தில் உதவி யளிக்கப்போதுமான தொழிலியல் நிபுணர்கள் இல்லை. பணம் போதிய அளவுக்குக் கிடைக்காது. பணமும் நிபுணர்களும் கிடைத்தாலும், சில நாடுகள் நாலாவது அம்சத்திட்டத்தின் பலன்களைப் பெறமாட்டா. உதாரணமாக, நாலாவது அம் சத்திட்டம் சீனவிலோ, ரஷ்யாவிலோ, கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலோ அமுலுக்கு வராது.

ஆனால் அப்பிரதேசங்களின் தேவைகளும் கீழ்வரும் அத்தி யாயங்களில் குறிப்பிடப்படும். ஏனெனில், நாலாவது அம்சத் திட்டத்தின் முக்கிய கருத்து ஆப்பிரிக்க மத்திய கேந்திரப் பிரதேசங்கள் மட்டுமின்றி ரஷ்யா, சீன ஆகிய நாடுகளையும் வியாபிக்கிறது. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் தேவைகளும் என்ன என்று கவனிக்கப்படும். தொழில் நுட்ப அபிவிருத்தி யும் தனிப்பட்டோரின் மூலதனமும் பின்தங்கிய தேசங்கள் மட்டுமின்றித் தொழில்வளம் பொருந்திய நாடுகளுக்கும் அவ சியமே.

பொருளாதார முன்னேற்றம் திடீரென ஏறபடக்கூடியதல்ல. மெதுவாக ஆரம்பித்து பல சந்ததிகள் காலமாகலாம். அதற்கு அவசியமான சூழ்நிலையைத் தொழில் நுட்ப வசதியளித்து மட்டும் உண்டாக்கிவிட முடியாது. மனம் பக்குவமடைவ தோடு இதயமும் ஆக்க வேலையில் ஈடுபடவேண்டும். அமெரிக்கா குருட்டுத் தனமாகத் தொழில் வளத்தில் முன்னேறிய போது தொழில் நுட்பங்கள் மட்டுமின்றி அது இன்னும் பல படிப் பினைகளைக் கற்க வேண்டியதாயிற்று. தொழில்வள அபி விருத்தி ஒரு பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல. சமுதாயக் கட்டுக்கோப்பிலும் மாறுதல்கள் உண்டாகின்றன. சொந்தக் காரனது பெட்டி நிறைந்தால் மட்டும் போதாது, பொது ஜனங் களின் நலனுக்கும் தொழிற்சாலைகள் உதவி செய்யவேண்டும்.

தொழிலியல் அபிவிருத்தியால் அதிகமான பேருக்குப் பலன் கிடைத்தால் அந்த அளவுக்குத் தொழிலியல் முதலாளிகளுக்கு

லாபமுண்டு என்பதை அமெரிக்கர் உணர்ந்தார்கள். அது முக்கியமான படிப்பினையாகும். அதை மற்றோர்களுக்கும் நினைவூட்டுவதால் தொழில் வள முன்னேற்றம் கொடுந்தன்மையற்றுக் கருணையோடு மக்கள் நலனைப் பராமரிக்க வழி தேடலாம். பக்குவமடையாத மக்கள்மீது மிகவும் முற்போக்கான தொழில் நுட்பங்களைச் சுமத்துவதைத் தடுக்கலாம்; இல்லையெனில் சோவியத் யூனியனில் ஏற்பட்டது போல உள் நாட்டில் கொடுங்கோல் ஆட்சியோ அல்லது வெளிநாட்டு ஏகாதிபத்தியமோ தோன்றிவிடும்.

எதேச்சாதிகாரம் நிலவும் நாட்டில் மக்களில் பெரும்பான்மையோர் விவசாயிகளாயினும் திடீரெனப் பிரம்மாண்டமான தொழிற்சாலைகளைக் கட்டி முடிக்கலாம். ஜனநாயக ஆட்சியில் அது சாத்தியமில்லை. பெரிய தொழிற்சாலைகளால் பயன் பெறக்கூடியவர்கள் பின்வரும் சந்ததியார். அவற்றால் தற்சமயம் எவ்வயிற்றையும் நிரப்பமுடியாது, எவ்வுடலுக்கும் உடை அளிக்கமுடியாது, எவ்வீட்டிற்கும் கூரை போடமுடியாது. ஜனநாயக ஆட்சியில் மக்களுக்கு அவசியமான பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய சிறிய தொழிற்சாலைகளையே முதலில் கட்டவேண்டியிருக்கும்.

விவசாயப் பொருள்களைச் சந்தைகளுக்குக் கொண்டுவந்து விற்க நல்ல பாதைகள் வேண்டும். பாதைகளைக் கட்டுவதற்கு முன்பு பண்ணைகளைச் செப்பனிடவேண்டும். விவசாயத் தொழில் செவ்வனே நடக்கவில்லையெனில், ஆசையோடு நிறுவப்படும் தொழிற்சாலைகள் அதிக நாட்களுக்கு நீடிக்காது. நீடித்தாலும் பல வருஷங்கள்வரை அவற்றால் நன்மைக்குப் பதில் தீமையே உண்டாகும்.

“ஆரம்பிக்கும்போதே, அதிக பொருட் செலவில் பெரிய பெரிய திட்டங்களைத் தொடங்குவதில் அர்த்தமில்லை,” என்கிறார் நாரிஸ் இ. டாட். “அரிவாள் உபயோகிப்பவர்கள்

எல்லோரும் வீச்சரிவாள் உபயோகிக்கும்படி செய்தால் நாம் நூறு வருஷங்கள் முன்னேறிவிட்டதாகக் கொள்ளலாம்."

மிஸ்டர் டாட் 1949-ம் ஆண்டில் உணவு உற்பத்தியாகும் பிரதேசங்களிலெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்து பார்வை யிட்டார். இந்தியாவில் இன்னும் நெற் பயிர்களைக் கையா லேயே சேமித்துக் கையாலேயே போரடிப்பதைக் கண்டார் அவர். ஜப்பானிலோ போரடிப்பதற்கு இரும்பால் செய்யப் பட்டச் சில ஆணிகள் பொதிந்த மெஷினை உபயோகித்துவந் தார்கள். இதனால் போரடித்தல் சீக்கிரமாக முடிகிறது. மிஸ்டர் டாட் யோசனையின்பேரில் ஜெனரல் டக்லஸ் மக் ஆர்தர் ஜப்பானிலுள்ள இந்தியப் பிரதிநிதிக்கு ஒரு போரடிக்கும் கருவியைப் பரிசாக அளித்தார். இப்போது அக்கருவியை இந்தியாவில் உபயோகிக்க ஆரம்பித்திருக்கின்றனர். இன்னும் பத்து ஆண்டுகளில் இந்தியாவின் நீர்ப்பாசனத் திட்டங்களைக் காட்டிலும் துரிதமான பலனை இப்போரடிக்கும் கருவி உணவு உற்பத்தி முயற்சியில் உண்டாக்கலாம்.

உலகிலுள்ள மக்களில் பாதிபேர் அரிசியையே முக்கிய உண வாக அருந்துகின்றனர். ஜப்பானில் நெல் விளையும் அள வுக்கு ஆசியாவின் மற்ற பாகங்களில் உற்பத்தி பெருகினால் அப்பிரதேசங்களில் இப்போது கிடைக்கும் அரிசி 13,00,00,000 டன் களிலிருந்து 30,00,00,000 டன்களாக அதிகரிக்கும். விதைப்ப தற்கு நல்ல ரகமான நெல்லை உபயோகிப்பதன்மூலம் அவ்வாறு நெல் உற்பத்தியை அதிகரிக்க முடியும். இன்னும் அரிசியைத் தீட்டுவதிலும் அதிலுள்ள சத்துள்ள பாகத்தை நீக்கி விடாமலிருந்தால் உற்பத்தியாகும் நெல் அதிகமாக உபயோ கப்படும்.

உலகத்தில் வேலையற்றிருப்போருக்கெல்லாம் வேலையளிக்கு மாறு பிரம்மாண்டமான முன்னேற்றத் திட்டத்தை உலகம் பூராவும் மேற்கொள்ள வேண்டுமென நினைப்பவர்களுக்கு நாலாவது அம்சத்திட்டம் ஏமாற்றமளிக்கும். அமெரிக்க முத

லாளிகளின் ஒத்தாசையை எதிர்பார்க்கிறதென்பதற்காக நாலாவது அம்சத்திட்டத்தைச் சிலர் கண்டிக்கிறார்கள். அமெரிக்க முதலாளிகளை அணுகுவதே பெரிய குற்றமென்பது அவர்கள் துணிபு. அமெரிக்கர்கள் இன்று பெருமை கொள்ளும் தொழிலியல் சாதனைகளைப் பின்தங்கிய பிரதேசங்களில் தற்சமயம் பயன்படுத்திக்கொள்ள முடியாதென்ற உண்மையை அவர்கள் கவனிப்பதில்லை. அமெரிக்கர்கள் பெரிய பெரிய மெஷின்களை உபயோகிப்பது சர்வ சாதாரணமாகிவிட்டாலும், பின்தங்கிய தேசங்களின் தேவைகளிற் பல சொற்பமானவை என்பதை மறக்கிறார்கள்.

பல பின்தங்கிய நாடுகள் இன்று தங்கள் பொருளாதார வசதிகளைப் பற்றிச் சரியாக உணர்ந்திருக்கவில்லை. தென்னமெரிக்கா, மத்திய கிழக்கு, கிழக்க ஆசியா ஆகிய பிரதேசங்களிலுள்ள 32 நாடுகளில் இரண்டு தேசங்களில்தான் சரியான தொழிலாளர் புள்ளி விவரங்கள் கிடைத்தன என்றுச் சமீபத்தில் நடத்திய ராஜாங்க இலாகாவின் ஆராய்ச்சியிலிருந்து தெரிய வருகிறது. அயல்நாட்டு வர்த்தகம், தேசீய வருமானம், கால்நடை ஆகியவற்றைப்பற்றி எட்டு நாடுகளில்தான் புள்ளி விவரங்கள் கிடைத்தன. மைக்கா, படிகப்பச்சை போன்ற உலோகப் பொருள்கள் நாட்டில் எவ்வளவு இருக்கின்றனவென்று இந்தியாவுக்கு இன்னும் தெரியாது. அதேபோலத் தன் காடுகளுக்கடியிலுள்ள எண்ணெய் ஊற்றுகளைப்பற்றி பிரேஸிலுக்கு ஒன்றும் தெரியாது.

உணவு உற்பத்தியை எப்படிப் பெருக்குவது, நிலத்தை எப்படிப் பராமரிப்பது, தண்ணீர் வசதிகளை எவ்வாறு உபயோகப்படுத்திக்கொள்வது, கால்நடைகளை எப்படிக் காப்பது, கிடைக்கும் மீன்களை எப்படிப் பிடிப்பது என்று பல பின்தங்கிய தேசங்களுக்குத் தெரியாது. தனி மனிதர்களுக்கு வாங்கும் சக்தியை அதிகரிக்கக்கூடிய கூட்டுறவு ஸ்தாபனங்கள் இல்லை. அவசியமான பண்டங்களையும் கருவிகளையும் வாங்குவதற்குக் கடன்கொடுக்கக்கூடிய ஸ்தாபனங்கள் கிடையாது. உற்பத்தி

செய்யும் பண்டங்களை விவசாயிகள் சேதமாக்குமுன் சந்தைகளுக்குக் கொண்டுபோய் விற்பதற்குத் தகுந்த நல்ல பாதைகள் இல்லை.

சுமார் 30 கோடி மக்கள் இன்று மலேரியாவால் தாக்குண்டு சக்தியிழந்து கிடக்கின்றனர். ஆயிரக்கணக்கான குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுடைய வியாதிகளின் காரணமாக குருடாகப் பிறக்கின்றன. நூறு கோடி ஜனங்கள் எழுதப் படிக்கத் தெரியாமல் இருக்கின்றனர். அவர்களிற் பலருக்குக் கூட்டவோ கழிக்கவோ கூடத்தெரியாது.

சுகாதாரம், விவசாயம், எழுத்தறிவு, சமுதாயப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் அடிப்படையான அபிவிருத்தியேற் படுவதற்கு முதலில் பின்தங்கிய தேசங்களில் திட்டம் போட வேண்டும். சில இடங்களில் சேர்ந்தாற்போலப் பெரிய அணைக் கட்டுத் திட்டங்கள் மூலம் இயற்கை வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வது சாத்தியமாகலாம். ஆனால் அத்தகைய திட்டங் களிற் பலவற்றைப்பற்றிப் பலத்த விவாதங்கள் நடந்திருப்பி னும், இன்னும் பல ஆண்டுகள்வரை அவற்றை நிறை வேற்ற இயலாது.

பொருளாதார விவகாரங்களைக் கவனிக்கும் ஐக்கிய நாடு களின் இலாகா அத்திட்டங்களைப்பற்றிப் பின்வருமாறு கூறு கிறது : " முதலாவதாக, அத்திட்டங்களிற் பல காகிதத்தில்தான் பிரமாதமாகத் தோன்றுகின்றனவே தவிர உண்மையில் அல்ல. ஒரு திட்டத்தைத் தயாரித்த பிறகு அதைக் கல்லும் மண்ணும் கொண்டுகட்டி முடிப்பதற்குள் நேரக்கூடிய இடையூறுகள் பல இருக்கின்றன.

" இரண்டாவதாக, குறிப்பிட்ட பிரதேசங்களின் பிரச்னை களிற் பல உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டியவை. அத்தகைய நடவடிக்கையால் நேரக்கூடிய பலாபலன்களைக் கூடப் பூர்ணமாக விசாரிப்பதற்கு அவகாசம் இருக்காது. அந் நடவடிக்கைகளினால் விரிவான திட்டம் வகுப்பது தடைப்பட்டா லும், அம்மாதிரி நடவடிக்கைகளை எடுத்துப் பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதை ஆதரிப்பது நல்லது. ஏனெனில், சிறு வீடு

கட்டிப் பெருவாழ்வு வாழ்வதுபோல், சிறு ஆரம்பங்களே பிற்பாடு பெரிய முயற்சிகள் செய்வதற்கு முக்கியமானவை களாகத் தோன்றலாம்."

எனினும் காரியத்தில் ஈடுபடுமுன் கனவு காணத்தான் வேண்டும். பின்தங்கிய தேசங்களிலுள்ள மக்கள் கனவு காணும் சக்தியை இழந்துவிட்டால், அவர்கள் உருப்படமுடியாது. ஆனால் அவர்கள் அச்சக்தியை இழந்துவிடவில்லை. அவர்கள் கனவு கண்டிருப்பவையெல்லாம் என்றைக்காவது பலிப்பது திண்ணம். அன்டோனியோ கால்வோவின் கனவு கடைசியில் பனமாக் கால் வாயாக மாறவில்லையா ? அமெரிக்க உதவியின்பயனாக நூற்றாண்டுகள் கழிந்து நிறைவேறக்கூடிய திட்டங்கள் பல வருஷங்களில் நிறைவேறலாம்.

அடிப்படையான பொருளாதாரச் சூழ்நிலை அமைந்தபின் தொழிலியல் முன்னேற்றம் ஏற்படுவது சுலபம். முற்காலத் தில் தொழிலியல் முன்னேற்றத்தின் போக்கு நிர்ணயமற் றிருந்தது. தகுதிவாய்ந்த தொழிற்சாலைகள் பிழைத்தன. மற்றவை மறைந்தன. பின்தங்கிய தேசங்களில் எதிர்காலத் தில் தொழில் வளம் சர்க்கார் கட்டுப்பாடுகளுடனே விருத்தி யாகும். அதிலும் ஓர் ஆபத்து இருக்கிறது. தகுதியற்ற பிரதேசத்தில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த அதிகாரி களுக்குத் தோன்றலாம். சிற்பி அழகாக இதயம், வயிறு முதலியவற்றை வரையலாம். ஆனால் இதயத்துடிப்பை உண்டுபண்ணமுடியாது. ஆத்மாவை மறந்து சிருஷ்டிக்க ஆரம்பித்தால் பிராங்கன்ஸ்டீனைப்போல கொடூரமான அமா னுஷ்யப் பிறவியை உண்டாக்கிய தோஷம் ஏற்படும்.

துணிச்சலான புதிய திட்டத்தின் அடிப்படைக் கருத்துகளை மனதில் வைத்துக்கொண்டுச் சிரமமான முதல் காரியங்களைப் புறக்கணித்துவிடுவது சுலபம். அதேபோலச் சிறிய விஷயங் களிலெல்லாம் சரியாகக் கவனம் செலுத்திவிட்டு முக்கியமான நோக்கத்தைக் காற்றில் விட்டுவிடுவதும் சகஜம். இவ்விரு தவறுகளையும் எந்த அளவுக்கு நாலாவது அம்சத் திட்டம் தவிர்க்கிறது என்பதைப் பொறுத்திருக்கிறது அதன் இறுதி யான வெற்றி அல்லது தோல்வி.

# தென்னமெரிக்கா தேறிவருகிறது

சமீபத்தில் பெருவின் அரசியல் தலைவர்களில் ஒருவர் தம் நாட்டின் பொருளாதார நிலைமையை ஓர் உதாரணத்துடன் விளக்கினார். பெருவின் கடற்கரைப் பிரதேசங்கள் அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா ஆகிய நாடுகளைப்போல் இருபதாம் நூற்றாண்டில் வாழ்கிறது ; உள்நாட்டிலுள்ள "இந்திய"த்திட்டுகள் பதினாறும் நூற்றாண்டில் வாழ்கிறது ; அமேஸான் பள்ளத்தாக்கு இன்னும் பிந்திய காலத்திலிருக்கிறதென்று அவர் கூறினார். அதாவது பின்தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்திக்கெனத் திட்டங்களை ஒரே ரீதியில் சுமத்தமுடியாது. சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பிரதேசத்தின் நிலைமையை ஆராய்ந்து அதற்குத் தக்கவாறு திட்டங்களை மாற்றி அமைக்க வேண்டுமென்பது அவர் வாதம்.

சீதோஷ்ண நிலை, ஜனத்தொகை, இயற்கை வசதிகள், பொருளாதாரச் சமுதாய முன்னேற்றம் ஆகிய எல்லா விஷயங்களிலும் தென்னமெரிக்காவிலுள்ள இருபது குடியரசு நாடுகளும் வெவ்வேறு விதமாக இருக்கின்றனவென்பது வெளிப்படை. ஆர்ஜென்டினா, பிரேஸில், சிலி, க்யூபா, மெக்ஸிகோ, உருகுவே ஆகிய நாடுகளில் தொழிலியல் வளர்ச்சி ஓரளவு ஏற்பட்டிருக்கிறது. மத்திய அமெரிக்காவோ நூற்றுக்கு நூறு விவசாயப் பிரதேசமாக இன்னும் இருந்துவருகிறது.

தென்னமெரிக்கா முழுவதையும் எடுத்துக்கொண்டால் அதில் வசிப்பவர்களில் மூன்றில் இரண்டு பேருக்கு விவசாயமே ஜீவனோபாயமாக இருந்து வருகிறது. அவர்களில் அநேகர் தங்கள் விளைவைக்கொண்டே வாழ்ந்து வருகின்றனர். 1938-ம் ஆண்டில் அமெரிக்கரின் சராசரி வருஷாந்திர வருமானம் 510 டாலர்களாயிருந்தபோது, ஆர்ஜென்டைனில் ஒரு நபரின்

வருமானம் 156 டாலர்கள், சிலியில் 126 டாலர்கள், மெக்ஸி கோவில் 60 டாலர்கள், பொலிவியாவில் 39 டாலர்கள், பிரேஸிலில் 33 டாலர்கள்.

எனினும், இப்பின்தங்கிய நாடுகள் மிகச் செழிப்பானவை. உலகத்துக்குத் தேவையான வாழை, காப்பி அப்பிரதேசங் களில் விளைகின்றன. உலகத்தில் கிடைக்கும் வெள்ளியில் 43 சத விகிதம், கொக்கோவில் 31 சத விகிதம், சர்க்கரையில் 26 சத விகிதம், செம்பில் 20 சத விகிதம், தோல் வகைகளில் 20 சத விகிதம், தகரத்தில் 18 சத விகிதம், செம்மறியாட்டு ரோமத்தில் 16 சத விகிதம், பெட்ரோலில் 15 சத விகிதம் இப் பிரதேசங்கள் அளிக்கின்றன. அமேஸான் பள்ளத்தாக்கில் ரப்பர் எதேச்சையாக விளைகிறது. இயற்கையான வெடிப்பு வர்க்கங்கள் தென்னமெரிக்காவின் மேற்குக் கடற்கரையோரத் தில்தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

பூமியின் நிலப்பரப்பில் 90 லட்சம் சதுர மைல் உள்ள இந்நாடுகள் அமெரிக்காவைப்போல் மும்மடங்கு விஸ்தீர்ண முள்ளவை. ஆனால் ஜனத்தொகை அமெரிக்காவின் ஜனத் தொகைக்குச் சமமாக இருக்கிறது. அதாவது, தென்ன மெரிக்கா முழுவதிலும், 15,00,00,000 மக்கள் வசிக்கின்றனர். தென்னமெரிக்காவில் ஒரு சதுர மைலில் வசிக்கும் ஜனங் களுக்கு மும்மடங்கு ஜனங்கள் அமெரிக்காவில் ஒரு சதுர மைலில் வசிக்கிறார்கள். தென்னமெரிக்கரில் பெரும்பான் மையோர் கலப்பு ஜாதியினர். அதாவது சிவப்பு இந்தியர், வெள்ளையர் 'ஆகிய இரு வகுப்பினருக்கும் பிறந்தவர்கள். சில நாடுகளில், உதாரணமாக பிரேஸிலில் நீக்ரோ வம்சத்தின ரும் உண்டு. மற்ற பிரதேசங்களில் இருப்போர் அநேகமாக வெள்ளையர்களே.

தென்னமெரிக்கருள் இத்தனை வேற்றுமைகள் தென்பட் டாலும் அவர்களுக்குப் பொதுவாக ஒரு பிரமை உண்டு.

எவ்வாறுவது இருபதாம் நூற்றுண்டின் நாகரிக வாழ்க்கையை அடைவதென்ற தீர்மானம் அவர்கள் கொண்டிருக்கிறுர்கள். நாடு எவ்வளவு சிறிதாயிருந்தாலும் சரி, வறுமையுற்றிருந் தாலும் சரி, ஒவ்வொரு தென்னமெரிக்க சர்க்காரும் தனக் கென்றுச் சொந்த தொழிலியல் பொருளாதாரத் திட்டம் ஒன்றைத் தயாரித்து வைத்திருக்கிறது.

சில தேசீய வரம்புகளேயும் மீறிப் பொது நலனுக்காகப் பாடுபட்டிருக்கின்றன. உதாரணமாக, விசாலக் கொலம்பியா கப்பல் கம்பெனியில் கொலம்பியாவுக்கு 45 சத விகிதமும், வெனிஸுலாவுக்கு 45 சத விகிதமும், ஈக்வடாருக்கு 10 சத விகிதமும் சொந்தம். ஆர்ஜென்டின, உருகுவே, பிரே ஸில் ஆகிய மூன்று நாடுகளும் பலனடைய உருகுவே நதியி லிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய வேலேப்பாடு நடந்து வருகிறது.

தென்னமெரிக்கர்களுக்கு மின்சாரச் சக்தி அலாதீன் விளக்கு போன்றது. தொழில் வளம் பெற்ற உலகத்தின் எல்லா நல்ல அம்சங்களும் அவர்களுக்கும் கிடைக்குமென்பது அவர் களுடைய உறுதி. அந்தக் கனவைச் சிதற அடிக்க தேசீய வரம்புகள் அனுமதிக்கப்படவில்லே. 1949-ம் ஆண்டில் ஐக் கிய நாடுகளின் சமூகப் பொருளாதாரச் சபையில் பேசியபோது சிலியின் பிரதிநிதி சொன்ஞர்: "தென்னமெரிக்க நாடுகளுக் குத் தனித்தனியான முன்னேற்றத் திட்டங்கள் இருக்கக் கூடாது. தேகாரோக்கியம், கூலி, கல்வி, சமூகப் பாதுகாப்பு ஆகிய அம்சங்களேக் கணக்கிலெடுத்துக்கொண்டுப் பொதுவானப் பொருளாதார முன்னேற்றத்திட்டம் இருக்கவேண்டும்."

ஆனல் தற்சமயம் தென்னமெரிக்க நாடுகளிற் பல தனித் தனியான முன்னேற்றத் திட்டங்களே அமைத்துக் கொண்டிருக் கின்றன. அத்திட்டங்களே நிறைவேற்றுவதிலும் அவை ஒரு வித வெறியோடு மும்முரமாய் வேலே செய்து வருகின்றன. தேசீய அல்லது பிராந்திய முன்னேற்றச் சங்கங்கள் மூலம்

இந்நாடுகள் முன்னேற்ற வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றன. அச்சங்கங்களின் அமைப்பு, நிர்வாகம் முதலிய விஷயங்களில் ஒன்றுக்கொன்று அதிக வித்தியாசமிருப்பினும், அவற்றின் நோக்கங்கள் ஒருவகைப் பட்டவை. அமெரிக்கா 150 வருஷங்களில் அடைந்த விவசாய, தொழில்வள முன்னேற்றத்தை ஒரு சந்ததியின் காலத்தில் இந்நாடுகள் அடைய முயற்சி செய்கின்றன.

# பிரேஸில்

பிரேஸில் நாட்டில் ஒரு பக்கம் ராக்பெல்லர் சங்கத்தின் முயற்சியால் அடிப்படையான பொருளாதாரச் சூழ்நிலையில் அபிவிருத்தி ஏற்பட்டுவந்தால் மற்றொரு பக்கத்தில் பிரேஸில் சர்க்கார் ஆரம்பித்திருக்கும் பிரம்மாண்டமான முன்னேற்றத் திட்டங்கள் நடந்துவருகின்றன. பிரேஸிலிய மக்கள் கூறுவது இதுதான் : புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்குமுன் விவசாயம் அபிவிருத்தி அடைய வேண்டுமென்று சொல்வதெல்லாம் சரிதான். இன்று உலகிலேயே மிகப் பெரிய தேசங்களில் பிரேஸில் மூன்றாவது ஸ்தானத்தை வகிக்கிறது. மேற்கு அர்த்தகோளத்தில் பிரேஸில்தான் மிகப் பெரிய நாடு. ஆகவே அது தன் விவசாயத்தைச் சரிப்படுத்திக்கொள்ளும் போதே தொழில் வளத்தையும் பெருக்கிக்கொள்ளப்போகிறது. அமெரிக்காவிலிருந்து வரும் எஃகை விட உள்நாட்டிலேயே தயாராகும் எஃகு இருமடங்கு விலையானாலும் சரி, பிரேஸில் பொருளாதாரத் துறையில் சுதந்திரமடைய விரும்புகிறது. 1944-ம் ஆண்டில் பிரேஸில் திட்டக்கமிஷன் ஒரு திட்டத்தைத் தயாரித்தது. அதன்படிப் பதினைந்து வருஷங்களுக்குள் பிரேஸிலின் தேசீய வருமானம் ஐந்து மடங்கு உயரும்.

அவசரமான முறையில் தொழில் வளத்தைப் பெருக்குவதால் ஏற்படும் குறைகள் அடிக்கடி பிரேஸிலியர் கவனுத்துக்கு வந்திருக்கின்றன. உதாரணமாகச் சமீபத்தில் பிரேஸிலில் ஒரு மோட்டார் கார் தொழிற்சாலையைக் கட்டும்படி மோட்டார் கார்கள் உற்பத்தி செய்யும் அமெரிக்க முதலாளி ஒருவனை பிரேஸிலியர்கள் வேண்டிக்கொண்டார்கள். அவர் முடியாதென்றுவிட்டார். பிரேஸிலில் இரும்பு கிடைக்கிறது. அதைக் கொண்டு எஞ்சின்களையும் மேல்கட்டுக்கோப்புகளையும் தயாரிக்கலாம். ஆனல் மற்ற பாகங்களுக்கு என்ன செய்வது ? செய்த

கார்களை விற்பதற்கு வேண்டிய விநியோக முறைக்கு எங்கு போவது ? பெரிய தொழிற்சாலை பல சிறிய தொழிற்சாலைகள் ஒன்று சேர்ந்து உண்டாகவேண்டியதென்பதை பிரேஸிலியர்கள் உணரவேண்டும் என்று அந்த அமெரிக்க முதலாளி கூறினார்.

ஆனால் மோட்டார் கார்கள், ரேடியோக்கள், சீதளமாக்கும் சாதனங்கள் ஆகியவற்றிற்கு பிரேஸிலில் அதிக கிராக்கியிருக்கிறது. அதேபோல ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள், புத்தகசாலைகள் போன்றவைகளுக்கும் கிராக்கியிருக்கிறது. ஸ்திரமான தொழில் வளர்ச்சியால் ஏற்படக்கூடிய எல்லா வசதிகளையும் பெறவேண்டுமென்ற அவா பிரேஸிலில் எல்லோரிடமும் தோன்றியிருக்கிறது. இன்றோ நாளையோ பிரேஸில் மோட்டார் கார் தொழிற்சாலைகள் நிறுவத்தான் செய்யும்.

நல்ல சரக்குகளுக்கு இன்றுத் தென்னமெரிக்காவில் கிராக்கி அதிகம். அதனால் பல நாடுகள் பிரேஸிலுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வசதியிருக்கிறது. எதிர்காலத்தில் அவ்வாறே தொழில்வளம் நிறைந்தபிறகு அமெரிக்காவுக்குப் போட்டியாகவும் பிரெஸில் திகழலாம்.

ரியோ டி ஜெனீரோவில் ஸியர்ஸ், ரோபக் என்ற கம்பெனியின் அநுபவத்தை உதாரணமாகச் சொல்லலாம். அக்கம்பெனியின் கடை 1949-ம் ஆண்டில் திறக்கப்பட்டபோது முதல் நாளன்று 1,23,000 பேர்கள் கடைக்கு வந்து வியாபாரம் செய்தனர். அவர்களில் பலர் சூரியோதயத்திலிருந்து கதவருகே காத்திருந்தவர்கள். கடைக்கு அன்றைய வசூல் 5,50,000 டாலர்கள். ஸியர்ஸ் கம்பெனித் தலைவரான ராபர்ட் வுட் சந்தோஷத்துடன் சொன்னார் : "தென்னமெரிக்காவிலுள்ள ஒவ்வொரு முக்கிய நகரத்திலும் நாங்கள் ஒரு கடையைத் திறக்கப் போகிறோம்."

ஸியர்ஸ் கம்பெனியின் ரியோ டி ஜெனீரோவிலுள்ள கடையிலுள்ள சரக்குகளில் 80 சத விகிதம் பிரேஸிலிலேயே பிரேஸில்

முதலாளிகளால் உற்பத்தி செய்யப்பட்டவை. இதைவிட இன்னும் ஆச்சரியகரமாய் வெற்றியடைந்த வர்த்தகரும் உண்டு. பிரேஸிலிய வர்த்தகரான லாரோ கார்வல்ஹோ பிரேஸிலிய வர்த்தகர்களும் தகுந்த வாய்ப்பு ஏற்பட்டால் அமெரிக்க வர்த்தகர்களைத் தோற்கடித்து விடுவார்கள் என்பதை நிரூபித்தார்.

லாரோ கார்வல்ஹோ பதினோராவது வயதில் வியாபாரத்தில் இறங்கியவர். இளைஞனாக இருக்கும்போது தெரு முனையில் சுருட்டு விற்று வந்தார். அதில் நல்ல லாபம் கிடைக்கவே, சுருட்டு விற்பதை விட்டுவிட்டு ஆரஞ்சு கூடைக்குத் தாவினார். மகன் இவ்வளவு சமர்த்தனாயிருக்கிறானே என்று சிறிதும் எண்ணாமல் அவருடைய தகப்பனார் அவரைத் தெருக்கோடியிலிருந்த பள்ளிக்கு அனுப்பி வைத்தார். 1931-ம் ஆண்டில் கார்வல்ஹோ ஒரு கடையை ஆரம்பித்தார். அந்தக் காலத்தில், ஏன் இப்போதும்கூட, பிரேஸில் கடைக்காரர்கள் வியாபாரம் செய்யும் முறை ஒரே விதமானது. அதாவது ஒரு சில பணக்காரர்களுக்குச் சில சரக்குகளை அதிக விலைக்கு விற்றுப் பணம் சம்பாதிப்பது. இம்முறையில் ஏதோ தவறு இருக்கிறது என்று தோன்றியது கார்வல்ஹோவுக்கு. அமெரிக்காவுக்குச் சென்று அங்கே தேவையான பொருள்களை மலிவாக விற்கும் கடைகள் பல இடங்களில் அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டார். அவ்வாறே, தம் நாட்டிலும் மலிவாக தேவையான பொருள்களை விற்க ஆரம்பித்தார். எனினும் விற்பனை அதிகரிக்கவில்லை. பிரேஸிலியரிடம் பணம் இல்லை. அதற்கு ஒரு வழியைக் கண்டு பிடித்தார் கார்வல்ஹோ. வாடிக்கைக்காரர்களுக்கு ஒவ்வொரு சீட்டு கொடுத்தார். அச்சீட்டில் அவரவர்களுக்கு எந்தத் தொகை வரை கடன் கொடுக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அச்சீட்டில் கண்டுள்ள பணத்தை வாடிக்கைக்காரர்கள் பத்து மாதங்களில் திருப்பித்தர வேண்டும். அதுவரை அவர்கள் கடையில் தங்களுக்கு வேண்டிய பொருள்களைச் சீட்டில் குறிப்பிட்டிருக்கும் தொகைக்கு மேல் போகாதபடி வாங்கிக் கொள்ளலாம்.

நகரம் பூராவும் அவர் இந்த முறையைக் கையாண்டார். இன்று அவர் கடைகளில் 70 சத விகிதம் இம்முறையில் வியாபாரம் நடக்கிறது. 3,00,000 பிரேஸிலியக் குடும்பங்கள் அவர் கடையில் பற்று வரவு வைத்திருக்கின்றன. 1940-ம் ஆண்டில் ரியோ நகரத்தில் அவருடைய கடை மற்றெல்லாக் கடைகளையும் விடப் பெரிதாயிற்று. கார்வல்ஹோவுக்கு அமெரிக்க விளம்பர முறை மிகவும் பிடித்திருந்தது. ஆனால், அவர் அதற்கும் ஒரு படி மேலே போனார். அமெரிக்க வர்த்தகர்கள் தங்கள் சரக்குகளை விளம்பரம் செய்ய ரேடியோ நிலயங்களில் சில மணி நேரம் குத்தகைக்கு எடுத்தால், அவர் ஒரு ரேடியோ நிலையத்தையே வருஷத்தில் ஒரு முறை ஒரு மாதத்துக்கு வாடகைக்கு வாங்கித் தம் வியாபாரத்தைப் பெருக்கினார்.

கார்வல்ஹோ தம் கடையின் பங்குகளில் 83 சத விகிதத்தை தம் உறவினருக்குக் கொடுத்துவிட்டார். எனினும் முன்பு இழைத்ததைவிட அதிகமாகப் பணம் சம்பாதித்து வருகிறார் இப்போது. அவருடைய தொழிலாளர்களுக்கு நிறைய சம்பளம் தருகிறார். அவர்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கின விலைக்குக் கொடுக்கிறார். இலவசமாக வைத்திய சிகிச்சை அளிக்கிறார். தற்சமயம் அவர் ஒரு வர்த்தகக் கல்லூரியைக் கட்டி வருகிறார். அங்கே பிரேஸிலிய இளைஞர்கள் நவ நாகரிக வர்த்தக முறைகளைப் பயில வசதி அளிக்கப்படும்.

லாரோ கார்வல்ஹோவின் சரிதையைப் பற்றி ஊன்றிச் சிந்திக்க வேண்டும். அமெரிக்கர்களுக்கு அது நூதனமானதாய்த் தோன்றாது. அம்மாதிரி திருஷ்டாந்தங்கள் பல அவர்கள் தங்கள் நாட்டிலேயே கேள்விப்பட்டிருக்கிறார்கள். கார்வல்ஹோ போன்றவர்களிருக்கும் தேசத்தில் பொருள்களுக்கு மிகுந்த கிராக்கி ஏற்படுவது திண்ணம். பொருள்களுக்கு கிராக்கி ஏற்பட்டால், பொருள்களின் உற்பத்தியும் பெருகுவது நிச்சயம். ஒவ்வொரு பின்தங்கிய தேசத்திலும் கார்வல்ஹோக்கள் நிறைந்து கிடக்கலாம்.

பிரேஸிலியத் தேகாரோக்கியம், எழுத்தறிவு, வாங்கும் சக்தி ஆகியவற்றை வளர்க்கச் சர்க்கார் பல பாகங்களைக் கொண்ட திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. அதில் அதிக தூரம் முன்னேறி இருப்பது வோல்ட்டா ரெடோண்டா என்ற இடத்தில் தோன்றியிருக்கும் எஃகுத் தொழிற்சாலையாகும். ஏழு கோடி டாலர் செலவில் கட்டப்படும் தொழிற்சாலைக்கு ஒரு பகுதிப் பணம் அமெரிக்க ஏற்றுமதி-இறக்குமதி பாங்க் கொடுக்கிறது. மற்றொரு பகுதி பிரேஸிலிய சர்க்கார் தருகிறது. இன்னொரு பகுதிச் செலவை பிரேஸிலிய முதலாளிகள் ஏற்கிறார்கள். உள்நாட்டிலேயே எஃகு கிடைக்க ஆரம்பித்தால், கூடிய சீக்கிரம் பிரேஸில் சொந்தமாகவே இருப்புப் பாதைகளைக் கட்ட முடியும்; புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடியும்; தென்னமெரிக்க நாடுகள் பலவற்றிற்கு இரும்புச் சாமான்கள் விற்க முடியும்.

பிரேஸிலுக்குள்ள இரண்டாவது முக்கிய வசதி ஸான் பிரான்ஸிஸ்கோ நதியாகும். அது பாலோ அல்பான்ஸோ நீர் வீழ்ச்சியின் மூலம் உலகத்திலேயே அதிக மின்சார சக்தி அளிக்கக்கூடிய சாதனங்களில் ஒன்றாக விளங்குகிறது. 1942-ம் ஆண்டில் பிரேஸிலுக்குச் சென்ற அமெரிக்கத் தொழில் நிபுணர்கள் கோஷ்டியின் தலைவரான மாரிஸ் எல். குக் அந் நீர்வீழ்ச்சியிலிருந்து 7,50,000 கிலோவாட்டுகள் மின்சார சக்தி கிடைக்கலாமென மதிப்பிடுகிறார்.

ஸான் பிரான்ஸிஸ்கோ நதியை உபயோகித்துக் கொள்ள ஆரம்பித்தால் பிரேஸிலின் வட கிழக்குப் பிரதேசங்களில் மக்கள் குடியேறி புதுத் தொழில்களைத் தொடங்கலாம். அதைப்பற்றி பிரேஸிலியர்களுக்குள்ள உற்சாகம் சொல்லி முடியாது. ஸான் பிரான்ஸிஸ்கோ நதிப் பள்ளத்தாக்கின் முன்னேற்றத்தைப்பற்றி அவர்கள் தங்களுடைய அரசியல் சட்டத்திலேயே ஒரு ஷரத்து ஏற்படுத்தியிருக்கிறார்கள். அத்துடன் அத்திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்காக தேசீய வருமானத்தில் ஒரு பகுதியையும் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்.

பிரேஸிலில் இன்னும் அதிகமாக மின்சார சக்தி அளிக்கக் கூடிய வசதிகளும் இருக்கின்றன. உதாரணமாகத் தெற்கே பாரானு நதி எழு நீர்வீழ்ச்சியின் வேகத்திலிருந்து 10,00,000 கிலோவாட்டுகள் மின்சார சக்தி உற்பத்தி செய்யலாம். "இகுவாஸ்ஸு நீர்வீழ்ச்சி உலகத்திலேயே மிகப் பெரிய நாலு நீர்வீழ்ச்சிகளில் ஒன்று," என்கிறார் குக். "பூலோகத்திலேயே மின்சார சக்தி பெறக் கூடிய மிகப் பெரிய வசதிகளில் அது ஒன்று."

பிரேஸிலில் உற்பத்தியாகும் மின்சார சக்தியில் 80 சத விகிதம் நீரோட்டத்திலிருந்து கிடைப்பது. ஆனால் நீரோட்ட வசதியில் 7 சத விகிதமே இப்போது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் பிரேஸிலிலுள்ள நதிகளிலிருந்து 2,10,00,000 கிலோ வாட்டுகள் மின்சார சக்தி உற்பத்தி செய்ய முடியும்.

நீரோட்டத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதைப் பெருக்குவதற்கு சால்டே திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி ஆறு ஆண்டுகளில் 50 கோடி டாலர் செலவில் 13,00,000 கிலோவாட்டுகள் மின்சார சக்தி அதிகமாக உற்பத்தி செய்யப்படும்.

பிரேஸிலிலுள்ள வசதிகளில் மிகுந்த வாதத்துக்கிடமானது அமேஸான் நதியாகும். உலகத்திலேயே மிகப் பெரிய நதி அது என்று சொன்னால் மட்டும் போதாது. அதைப் பற்றிய புள்ளி விவரங்கள்கூட தலை கிறுகிறுக்கச் செய்யும். அமேஸான் நதியில் ஓடும் தண்ணீர் உலகத்திலேயே இருக்கும் நல்ல நீரில் ஐந்தில் ஒரு பகுதியாகும். மற்ற எந்த மூன்று நதிகளைக் காட்டிலும் அதிக தண்ணீர் அந்நதியில் ஓடுகிறது. நதியின் அகலமும் அப்படித்தான். உள்ளூரில் நட்டாற்றில் கப்பல் சென்றால் கப்பலில் இருப்பவர்களுக்கு இரு கரைகளும் புலப்படா. அமேஸான் நதிப் பள்ளத்தாக்கில் ரப்பர், எண்ணெய், மரம், மணிலாக் கொட்டை முதலிய அரிய பொருள்கள் கிடைக்கின்றன. இப்பிரதேசம் என்றைக்காவது செழிப்போ

டிருந்து உலகத்துக்கு வேண்டிய பொருள்களைத் தருமா, அல்லது என்றும் மலேரியா ஜுரமுண்டாக்கும் அடர்ந்த காடாகவே இருக்குமா என்று யாரும் நிச்சயமாய்ச் சொல்வதற் கில்லை. அடுத்த அரை நூற்றாண்டில் தோன்றும் நிபுணர்க ளுக்கு அது ஒரு சவாலாக அமைந்திருக்கிறது.

## மெக்ஸிகோ

மெக்ஸிகோ நகரத்தைக் கடந்து அடுத்துள்ள காட்டுப் பிர தேசங்களுக்குள் நீங்கள் பிரவேசித்தால் அசாதாரணமாக மனிதர்கள் மும்முரமாய் உழைத்து வருவதைக் காண்பீர்கள். அங்கே தொழிலாளர்படை சேறும் புழுதியும் நிறைந்த நோ யுண்டாக்கும் பூமியைச் செழிப்பானப் பயிரிடக் கூடிய நிலமாக மாற்றி வருகிறது. வேலை செய்யும் தொழிலாளர்கள் நலனைக் கவனிக்கக் கூடாரங்களும் ஆஸ்பத்திரிகளும் இருப்பதைக் காண லாம்.

உஷ்ணப் பிரதேசமான இப் பகுதியைச் செழிப்பாக்கப் பாப்ப லோப்பம் நதியின் வசதியை உபயோகித்து வருகிறார்கள். அதன் உபநதிகளின் நடுவே நாலு பெரிய அணைக்கட்டுகள் எழுகின்றன. வேலைப்பாடுகள் முடிந்தால் பாப்பலோப்பம் நதியில் கடலிலிருந்து 149 மைல் வரை உள்நாட்டுக்குக் கப்பல் கள் போக முடியும். பாப்பலோப்பம் திட்டம் ஐந்து வருஷங் களில் பூர்த்தியாகும். 2,50,000 கிலோவாட்டுகள் மின்சார சக்தி அதிலிருந்து கிடைக்கும். அப் பிரதேசத்தில் இப்போதி ருக்கும் ஜனத்தொகை இரண்டு லட்சத்திற்கும் குறைவு. திட் டம் முடிவடைந்தால் ஜனத்தொகை மும்மடங்கு பெருகுமென் றும், திரள்திரளாக மக்கள் அங்கே குடியேறுவார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

1940-ம் ஆண்டிலிருந்து 1945-ம் ஆண்டிற்குள் மெக்ஸிகோவிலுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 13,510 லிருந்து 28,513 ஆகப் பெருகிற்று. மெக்ஸிகோவில் கிடைக்கும் உணவுப் பொருள்களில் 50 சத விகிதம் 30,00,000

எக்கர் நிலத்திலிருந்து கிடைக்கிறது. உணவுப் பொருள்களை நாட்டில் தேவையான அளவுக்கு உற்பத்தி செய்ய, 1952-ம் ஆண்டிற்குள் இன்னும் 30,00,000 ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. பொருளுற்பத்தியைப் பெருக்க மெக்ஸிகோ தீவிரமாக முனைந்திருக்கிறது. புதிதாகத் தோன்றும் தொழிற்சாலைகளுக்கு வரிப்பளு குறைக்கப்பட்டிருக்கிறது. அவற்றைப் பாதுகாக்க இறக்குமதி வரி அதிகப்படுத்தியிருக்கிறார்கள். தொழிலியல் முன்னேற்றத்துக்காக வகுக்கப்பட்ட ஆறு வருஷத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பல புதிய தொழிற்சாலைகள் அன்றாடம் தோன்றி வருகின்றன. பாதைகளும் இருப்புப் பாதைகளும் கட்டப்பட்டு வருகின்றன. துறைமுகங்கள் செப்பனிடப்பட்டு வருகின்றன. எண்ணெய்க் குழாய்கள் புதிதாகப் போடப்படுகின்றன.

இம் முன்னேற்ற வேலைகளுக்கு வேண்டிய பணத்தில் பெரும் பாகம் ஏற்றுமதி-இறக்குமதி பாங்கிடமிருந்தும், சர்வ தேச பாங்கிடமிருந்தும் மெக்ஸிகோ பெற்று வருகிறது. இப்போதுதான் வேலையைத் தொடங்கியிருப்பதால், போகப் போக மெக்ஸிகோவுக்கு இன்னும் அதிகமாக மூலதனம் வேண்டியிருக்கும். அதில் பெரும் பாகம் அமெரிக்காவில் தனிப்பட்டவர்களிடமிருந்து கிடைக்க வேண்டும். அரசியல் நிலைமையில் இப்போது ஒழுங்கு ஏற்பட்டிருப்பதால், 20 அல்லது 30 வருஷங்களுக்குமுன் நடந்ததைப்போல அயல்நாட்டு மூலதனத்தை ஸ்வாதீனமாக்கும் முயற்சிகள் இனி மேற்கொள்ளப்படமாட்டாவென நம்பலாம்.

## சிலி

சிலியிலுள்ள நீரோட்ட வசதியை மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்திக் கொண்டால் நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் கிடைக்கக் கூடிய மின்சார சக்தி உலகத்தின் மற்ற பாகங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் என்று சிலியர்கள் கூறுகிறார்கள். அத்தகைய பொக்கிஷத்தை வைத்துக்கொண்டு

ஜனங்கள் சும்மா இருப்பார்களா? 1943-ம் ஆண்டிலேயே சிலியன் முன்னேற்றச் சங்கம் பத்து கோடி டாலர் செலவாகக் கூடிய பதினெட்டு வருஷத் திட்டமொன்றை வரைந்தார்கள். அது பூர்த்தியானால் இருப்புப் பாதைகள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள் ஆகியவற்றிற்கு மின்சார சக்தி விநியோகிப்பதுடன், நாட்டுப்புறங்களிலுள்ள ஒவ்வொரு பண்ணைக்கும் மின்சார சக்தி கிடைக்கும் நிலைமை உண்டாகும்.

## பொலிவியா

துணிச்சலான புதிய திட்டத்தை ஆரம்பிக்க 450 லட்சம் டாலர்களை ஜனாதிபதி ட்ரூமன் காங்கிரஸிடம் கேட்டபோது, எந் நாட்டிற்கு உதவி அளித்தாலும், உதவி பெறும் நாடு சம்பந்தப் பட்ட திட்டத்தின் செலவில் ஒரு பகுதியைத்தானே ஏற்கும்படி வற்புறுத்தப்படும் என்று அவர் வாக்களித்தார். பொலிவியா சர்க்காருக்குச் சொந்தமான முன்னேற்றச் சங்கத்தை இவ் விதிக்கு உதாரணமாகச் சொல்லலாம். அச் சங்கத்தின் நிர்வாக அங்கத்தினர்கள் அறுவரில் மூவர் அமெரிக்க ஏற்றுமதி-இறக்கு மதி பாங்கால் நியமிக்கப்பட்டவர்கள். ஒரு முன்னேற்றத் திட் டத்தை நிர்வாக அங்கத்தினர்கள் அங்கீகரித்த பிறகும், பொலி வியர்களே ஓரளவுக்கு திட்டத்திற்கு வேண்டிய மூலதனம் போடவில்லையெனில் ஏற்றுமதி-இறக்குமதி பாங்க் கடன் கொடுக்க மறுக்கலாம்.

பொலிவியாவில் குறிப்பிடத்தக்க தொழிற்சாலைகள் ஏதும் இல்லை. குறைந்து வரும் தகரப் புதையலும், இன்னும் பூமியி லிருந்து எடுக்கப்படாத எண்ணெயும்தான் அந்நாட்டின் முக்கிய சொத்துக்கள். தற்சமயம் அந்நாட்டிற்குத் தேவை யானவை தொழிற்சாலைகள் அல்ல. விவசாய அபிவிருத்தியே முதன் முதல் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். அதுவு மின்றி பொலிவியாவுக்குக் கடல் வசதி கிடையாது. ஆகவே போக்கு வரத்து சாதனங்களை அபிவிருத்தி செய்வது அவசிய மாகிறது.

# பெரு

பெருவின் மேற்குக் கடற்கரையோரமாக ஓடும் ஸாண்டா நதி பூகோளப் படங்களில் பார்த்தால் மிகச் சிறிதாகத் தோன்றும். ஆனால் அதற்கு நன்மை பயக்கும் சக்தி அதிகமுண்டு. ஸாண்டா நதிப் பள்ளத்தாக்கை டென்னஸ்ஸி பள்ளத்தாக்குத் திட்டம் நிறைவேற்றப்பட்டதுபோல் அபிவிருத்தி செய்து வருகிறார்கள். அதற்காகப் பெருவின் ஸாண்டா சங்கம் நிறுவப்பட்டிருக்கிறது. வருஷத்தில் 55,000 டன்கள் உற்பத்தி செய்யக் கூடிய இரும்புத் தொழிற்சாலைகளை ஸ்தாபித்து பெருவில் நிறையக் கிடைக்கும் நிலக்கரியைத் தோண்டியெடுக்க வழி செய்து, துறைமுகங்களை அபிவிருத்தி செய்து, நீர்ப்பாசனத் திட்டங்களை நடத்தி வருகிறது இச் சங்கம். ஸாண்டா நதி போகும் பிரதேசத்தில் ஒரு பகுதியான அரைப் பாலைவனத்தில் 2,50,000 எக்கர் நிலம் இப்போது சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மின்சார உற்பத்திக்காக ஸாண்டா நதியின் போக்கையே மாற்றி அமைத்திருக்கிறார்கள் இந் நாட்டினர். அவ்வேலை பூர்த்தியானால் 1,25,000 கிலோவாட்டுகள் மின்சார சக்தி கிடைக்கும். இப்போதே 50,000 கிலோவாட்டுகள் உற்பத்தியாகின்றன.

இன்னும் மகத்தான திட்டங்களைப் பெரு தயாரித்திருக்கிறது. உருபாம்பா நதித் திட்டம் 1,20,000 கிலோவாட்டுகள் மின்சார சக்தி அளிக்கும். மன்டாரோ நதித் திட்டம் 7,40,000 கிலோ வாட்டுகள் உற்பத்தி செய்யும். மரனோன் நதித் திட்டத்தால் 20,00,000 கிலோவாட்டுகள் கிடைக்குமாம். இக் கடைசித் திட்டம் நிறைவேறினால் பெருவின் வட பாகத்தின் பொருளாதார நிலைமையே அடையாளம் தெரியாத அளவுக்கு மாறி விடலாம்.

# போர்ட்டோரிக்கோ

போர்ட்டோரிக்கோ அமெரிக்காவுக்குக் கீழ்ப்படிந்த தீவானலும், அது தென்னமெரிக்க நாடுகளுடன் சேர்ந்த பிரதேச

மாகும். கடந்த பத்து ஆண்டுகளில் அத் தீவில் ஏற்பட்ட மாறுதல்கள் உலகிலுள்ள ஒவ்வொரு பின்தங்கிய தேசத்திற்கும் நம்பிக்கையை யூட்டக்கூடிய விஷயமாகும். அமெரிக்காவில் ஒரு சதுர மைலுக்கு 50 பேர் விகிதம் மக்கள் வசிக்கிருர்கள். போர்ட்டோரிக்கோவில் ஒரு சதுர மைலில் 400 ஜனங்கள் வசிக்கிருர்கள். போதிய உணவின்றி, வறுமையும் நோயும் வாட்டப் போர்ட்டோரிக்கோ வாசிகள் வெகுநாட்கள்வரை வாழ்ந்து வந்தனர்.

போட்டோரிக்கோவில் விவசாய வசதிகள் அபரிமிதமாய் இருக்கின்றன. முக்கியமாகச் சர்க்கரை அங்கு ஏராளமாய் விளைகிறது. எனினும் சர்க்கரைத் தொழிலாளர்களுடைய வருமானம் ஓராண்டுக்கு 150 டாலர்களுக்கும் குறைவு. போர்ட்டோரிக்கோத் தொழிலாளர்களிடையே கரும்புத் தொழிலாளர்கள் தான் பிரபுக்கள் மாதிரி என்ருல் நிலைமையை நன்கு ஊகிக்கலாம். எத் தனி மனிதனே கம்பெனியோ போர்ட்டோரிக்கோவில் 500 ஏகர் நிலத்துக்கு அதிகமாய் வைத்திருக்கக்கூடாதென்று சட்டம் இருந்த போதிலும், 50,000 ஏகர்களுக்கு மேல் பயிர்த் தொழில் செய்யாது வெளியிடங்களில் உள்ளோர்களுக்குச் சொந்தமாய் இருந்தன.

500 ஏக்கர்களுக்குமேல் நிலம் ஒருவருக்குச் சொந்தமாய் இருக்கக்கூடாதென்ற சட்டத்தை அமெரிக்கப் பிரதம நீதி மன்றம் சரியானதென்று தீர்ப்புக் கூறியபிறகு போர்ட்டோரிக்கோ பெரிய கரும்புத் தோட்டங்களைப் பிரிக்க ஆரம்பித்தது. 1948-ம் ஆண்டிற்குள் 70,000 ஏக்கர் நிலம் சர்க்கார் வசமாயிற்று. இப்போது அந்நிலத்தைச் சிறு விவசாயிகள் தனியாகவும் கூட்டுறவுப் பண்ணைகள் மூலமாகவும் பயிர் செய்து வருகின்றனர். 1936-ம் ஆண்டிலிருந்து 1945-ம் ஆண்டிற்குள் மின்சார உற்பத்தி மும்மடங்கு பெருகியிருக்கிறது. வரி வருமானம் 1940-ம் ஆண்டிலிருந்ததை விட 1949-ம் ஆண்டில் 260 சத விகிதம் அதிகம்.

போர்ட்டோரிக்கோவின் தொழிலபிவிருத்திச் சங்கம் தனிப் பட்டவர்களிடமிருந்து மூலதனம் பெற முனேந்தது. கிடைக்காத இடங்களில் சர்க்கார் பணத்தை உபயோகித்தது. கண்ணுடித் தொழிற்சாலே ஒன்றை அது நிர்மாணித்திருக்கிறது. தொழிற் சாலேக் கட்டிடங்களே அது எழுப்பிப் பிறகுத் தனிப்பட்டோர் நடத்த அவர்களிடம் விட்டு வருகிறது. தனிப்பட்டோர் அத் தொழிற்சாலேகளே வாங்கிக் கொள்ளவும் முடியும். புதிய தொழிற்சாலேகளுக்கு வரி குறைக்கப்பட்டிருக்கிறது.

அதனுல், போர்ட்டோரிக்கோவுக்கு அமெரிக்க மூலதனம் வரவர அதிகமாகக் கிடைக்கிறது. 1942-ம் ஆண்டிற்குப் பிறகு 40 புதிய அமெரிக்கத் தொழிற்சாலேகள் போர்ட்டோரிக்கோவில் கிளம்பியிருக்கின்றன. மலேரியா முதலிய நோய்களால் நேர்ந்த மரணங்கள் பாதிக்குக் குறைந்திருக்கின்றன. ஆரம்ப பள்ளிக்கூடங்களில் குழந்தைகள் வந்துக் குமிகின்றனர்.

எனினும், போர்ட்டோரிக்கோ மாளிகை ஸ்தானத்தை அடைந்துவிடவில்லே. இன்னும் குடிசையாகவே காட்சியளிக் கிறது. நாட்டின் ஜனத்தொகை அதிகமாக இருப்பதால், பலர் நாட்டை விட்டு வெளியேறிஞல்தான் நலம். இன்னும் பத்து வருஷங்கள் கழிந்தபின், போர்ட்டோரிக்கோ அமெரிக்க ராஜ்ய மாக இருந்தாலும் சரி, தனிச் சுதந்திர நாடாயிருந்தாலும் சரி, முன்னேற்றமடைந்து சுபிட்சத்துடன் விளங்கும். பொருளா தாரச் சமுதாயச் சிக்கல்கள் எப்போதும் நிலேத்திராவென்பதைப் போர்ட்டோரிக்கோ நிரூபித்துவிட்டது. நாலாவது அம்சத் திட்டத் தில் போர்ட்டோரிக்கோவுக்கு முக்கிய பங்கு உண்டு. அதன் பிரச்னே கள் தென்னமெரிக்க நாடுகளின் பிரச்னேகளேப் போன்றவை. பாஷையும் ஒன்று. நாலாவது அம்சத் திட்டத்தின் தொழி லியல் நுட்பங்கள் அறியத் தென்னமெரிக்கர்கள் போர்ட்டோ ரிக்கோவில் தேர்ச்சி பெறலாமென்று போர்ட்டோரிக்கோ கவர் னர் கூறியுள்ளார். துணிச்சலான புதிய திட்டத்தின்கீழ் உதவி பெறுவது மட்டுமின்றிப் பிற நாடுகளுக்கு உதவி செய்யவும் துணிந்திருக்கிறது போர்ட்டோரிக்கோ.

# ஆர்ஜென்டினு

ஆர்ஜென்டினுவின் ஐந்து வருஷத் திட்டத்தின் நோக்கம் கிட்டத்தட்டப் பொருளாதாரத் துறையில் தன் தேவையைத் தானே பூர்த்தி செய்து கொள்ளும் நிலைமையை அடைவதாகும். 1943-ம் ஆண்டிலிருந்து அமுலிலிருக்கும் தொழில் முன் னேற்றத் திட்டம் 1951-ம் ஆண்டிற்குள் கீழ்க் கண்டவற்றைச் சாதிக்க நோக்கமாகக் கொண்டிருந்தது: ஆர்ஜென்டைன் தொழில் வளங்களின் மதிப்பை $43\frac{1}{2}$ சத விகிதம் உயர்த்துவது, உழைப்பாளிகளின் சம்பளங்களை 53 சத விகிதம் உயர்த்துவது, உழைப்பாளிகளின் எண்ணிக்கையை 34 சத விகிதம் உயர்த்து வது, மின்சார உற்பத்தியை 50 சத விகிதம் உயர்த்துவது. புதிதாக பொருளுற்பத்திக்கான திட்டங்களிற் பல இறக்குமதி யைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டவை. மற்றும் சில ஏற்றுமதி அதிகரிக்கும் நோக்கம் கொண்டவை. ஆர்ஜென்டி னுவிலுள்ள எஃகுத் தொழிற்சாலைகள் வருஷத்துக்கு 75,000 டன்கள் உற்பத்திச் செய்யத் திட்டம் போட்டிருக்கின்றன.

அநேகமாக எல்லாத் தென்னமெரிக்க நாடுகளிலும் ஒவ் வொரு தொழில் முன்னேற்ற ஸ்தாபனம் இருந்து வருகிறது. அது முழுவதுமாகவோ அல்லது ஒரு பகுதியோ சர்க்காருக்குச் சொந்தம். குறிப்பிட்ட ஸ்தாபனத்தின் நோக்கம் நாட்டின் இயற்கைச் சாதனங்களைக் கொண்டுத் தொழிலை விருத்தி செய்ய வேண்டுமென்பதாகும். ஆனுல் கிடைக்கும் பலன்கள் நிரந்தர மாக நிலைக்க வேண்டுமெனில், முன்னேற்றத் திட்டம் முதற் காரியங்களை முதலில் மேற்கொள்ளவேண்டும். தொழில் வள முன்னேற்றத்துக்கு அவசியமான தொழில் நுட்ப உதவி யைத் தென்னமெரிக்க நாடுகளுக்கு நாலாவது அம்சம் அளிக் கும். அத்துடன் முதலில் நடக்க வேண்டிய காரியங்களையும் கவனிக்கும்.

தென்னமெரிக்காவில் சுகாதாரத்தை வளர்த்தால்தான் பொருளாதார அபிவிருத்தியினுல் பலன் காண முடியும்.

உதாரணமாக, பிரேஸிலில் 1949-ம் ஆண்டில் தேர்ச்சி பெற்ற நர்ஸ்கள் பத்து பேர்தான் இருந்தனர். பொலிவியாவிலுள்ள அநேக நகரங்களில் குடி தண்ணீர் வசதி இடையாது. பிரஞ்சு கயானுவிலுள்ளவர்களில் 10 சத விகிதம் குஷ்ட ரோகத்தால் வாடுகின்றனர். பள்ளியில் பக்கத்திலிருக்கும் மாணவன் தொத்து வியாதியோடில்லாமலிருப்பதில் ஒரு மாணவனுக்கு எவ்வளவு அக்கரை இருக்க வேண்டுமோ அவ்வளவு அக்கரைத் தென்னமெரிக்க நாடுகளிலும் சுகாதாரமும் பொருளாதார மும் அபிவிருத்தியடைய வேண்டுமென்று அமெரிக்காவுக்கு இருக்கவேண்டியதவசியம். தென்னமெரிக்க நாடுகள் சுபிட் சமடைந்தால், உலகத்தின் மற்ற பாகங்களின் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்வது சுலபமாயிருக்கும்.

சுகாதாரத்தையும் பொருளுற்பத்தியையும் வளர்க்க நாலாவது அம்சம் சாதிக்கக் கூடிய பலன் ஒவ்வொரு நாளும் நிரூபிக்கப்பட்டு வருகிறது. பிரேஸிலில் 1939-ம் ஆண்டு 1,14,000 பேர் மலேரியாவில் பீடிக்கப்பட்டிருந்தார்கள். ராக் பெல்லர் ஸ்தாபனத்திலுள்ள நிபுணர்களை பிரேஸில் சர்க்கார் உதவிக்குக் கூப்பிட்டபிறகு இரண்டு வருஷங்களுக்குள் நாட்டி லிருந்து கொசுத் தொல்லையை அவர்கள் ஒழித்தார்கள். அதைப்போலவே அமெரிக்க உதவியால் வெனிஸூலா, ஹாய்ட்டி, பெரு முதலிய நாடுகளிலும் மலேரியாத் தொல்லையை வெல்ல முடிந்தது. விவசாயத்திலும் அப்படித்தான். உதா ரணமாக, குவாட்டமாலாவில், உள்நாட்டு நிபுணர்களும் அமெ ரிக்க நிபுணர்களுமாகச் சேர்ந்து நன்றாக விளையக்கூடிய விதை களை உபயோகிப்பதன் மூலம் காப்பி உற்பத்தியை மும்மடங்கு அதிகமாக்கியிருக்கின்றனர்.

நீர்ப்பாசனம், நில மீட்சி, தொழில் நுட்பம், சுரங்க வேலை, கல்வி, போக்கு வரத்து ஆகிய துறைகளிலும் நாலாவது அம்சம் போன்ற திட்டங்கள் பலனளித்து வருகின்றன. நாளாக ஆக, அவற்றின் வேகமும் வாய்ப்பும் அதிகரிக்கும். தென்னமெ ரிக்கர்களும் தென்னமெரிக்க சர்க்கார்களும் தங்கள் நாடுகளில்

சுகாதாரம், விவசாயம், கல்வி முதலிய துறைகளில் அபிவிருத்தி உண்டாக்கும்வரைத் தொழில் முன்னேற்றத் திட்டங்களைத் தள்ளி வைக்கச் சம்மதிக்க மாட்டார்கள். அவற்றிற்கு அவசிய மான பொருளாதார உதவி தேட அவர்கள் முயற்சி செய்து கொண்டுதான் இருப்பார்கள். அவ்வுதவி கிடைக்குமுன்னால் தொழில் நுட்ப உதவி எந்த அளவுக்குக் கிடைத்தாலும் அதைச் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்வார்கள். அந்நாடுகளிலுள்ள முன்னேற்ற ஸ்தாபனங்கள் அமெரிக்கத் தொழில் நிபுணர் கோஷ்டிகளுடன் சேர்ந்து வேலை செய்து வருகின்றன.

துரிதமான தொழில் வளர்ச்சியிலீடுபட்டிருக்கும் மற்ற பிர தேசங்களைப் போலவே தென்னமெரிக்க நாடுகளும் தேசீய நலன்களை உத்தேசித்து சர்வ தேச வர்த்தகத்தை தடுக்கும் முறைகளைக் கைக்கொள்கின்றன. தொழிற்சாலைகள் பெருகப் பெருகத் தொழிலாளர்கள் அதிகமாகப் பணம் சம்பாதிக்கின் றனர். வேண்டாத அந்நிய சரக்குகளை வாங்கிப் பணத்தை அவர்கள் விரயமாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியிருக் கிறது. அதுவுமின்றி உள்நாட்டுச் சரக்குகளுடன் போட்டி போடும் அந்நிய சரக்குகள் இறக்குமதியாவதைக் குறைக்கத் தீர்வை போடவேண்டியிருக்கிறது.

பொருளாதாரச் சுதந்திரத்திலுள்ள மோகத்தால்தான், அமெரிக்க ஐரோப்பிய எஃகை விட உள்நாட்டு எஃகின் விலை அதிகமாயிருப்பினும், பிரேஸில், ஆர்ஜென்டினு, சிலி, பெரு, மெக்ஸிகோ முதலிய நாடுகள் சொந்த எஃகுத் தொழிற்சாலை களை ஏற்படுத்தி இருக்கின்றன. இவையெல்லாம் சிக்கல்கள் நிறைந்த பிரச்னைகள். எல்லோருக்கும் திருப்தியளிக்கும்படி அப் பிரச்னைகளைத் தீர்த்து வைக்க முடியாது. தொழில் வளத் தில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளுக்கு இச்செயல்கள் ஆத்திரமூட்டும். அவை பொறுமையுடன் பின்தங்கிய நாடுக ளுடன் பேச்சு வார்த்தைகளில் பேரம் நடத்துவதுதான் உசிதம்.

தென்னமெரிக்க முன்னேற்றத் திட்டங்களை அநேகமாக சர்க்கார்கள்தாம் நடத்துமென்பதையும் அமெரிக்கர்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். இத்திட்டங்கள் பொதுநலனை வளர்ப்பதே நோக்கமாகக் கொண்டிருக்கின்றனவேயன்றித் தனிப்பட்ட முயற்சியையோ சர்க்கார் ஆதிக்கத்தையோ வளர்க்கும் நோக்கமன்று.

இன்னும் முக்கியமான விஷயம் ஒன்று. வேலையெங்கும் ஆரம்பமாகி நடந்து வருகிறது. பொருளாதார நெருக்கடிகள் வந்து போய்க்கொண்டிருந்தாலும், சர்க்கார்கள் கவிழ்ந்தாலும், ராஜதந்திரிகள் பேரம் நடத்திக்கொண்டிருந்தாலும், தொழிலபிவிருத்தி தடைபடாமல் தென்னமெரிக்க நாடுகளில் நடந்து வருகிறது. அமெரிக்கர்கள் முயன்றாலும், அதை அவர்கள் நிறுத்த முடியாது. ஆனால் அவர்கள் தங்கள் அநுபவத்தின் பயனாகக் கிட்டிய உதவி அளிக்கலாம். அமெரிக்கரின் அண்டை வீட்டுக்காரர்களான தென்னமெரிக்கர்கள் எதேச்சாதிகாரத்துக்குப் பதில் ஜனநாயகத்தையும், அடிமைத்தனத்துக்குப் பதில் சுதந்திரத்தையும், குரோதத்துக்குப் பதில் நட்பையும் அநுபவிக்கும்படி வழி காட்டலாம்.

அமெரிக்கரின் மூலதனமும் தொழில் நுட்பமும் தென்னமெரிக்கர் ஒழுங்கான முறையில் தங்கள் வேலையை ஆரம்பிக்க உதவலாம். ஆனால் தென்னமெரிக்காவின் எதிர்கால சுபிட்சத்துக்கு அமெரிக்கா எவ்வளவு உதவி செய்ய முடியுமானாலும், தென்னமெரிக்காவுக்கு அமெரிக்காவின் உதவி கிடைத்தால்தான் முன்னேற்றமடைய முடியும் என்ற நிலைமையில்லை. அத்தகைய நிலைமையில் தென்னமெரிக்கா இல்லாதிருப்பதே நலம்.

# ஆப்பிரிக்கா — இருள் விலகுகிறது

மனிதனையும் மனிதனுக்குச் சொந்தமான விலங்குகளையும் பேதமின்றி ஆயிரக்கணக்கில் கொன்று வீழ்த்தும் பறவை நாகம் ஒன்று ஆப்பிரிக்காவின் காடுகளிலும் காடுகளையடுத்த பிரதேசங்களிலும் வாழ்ந்து வருகிறது. சராசரி ஐரோப்பிய ராஜ்யத்தின் அளவுள்ள பிரதேசத்தில் மனித வாசனையே இல்லாமல் செய்து விட்டது அது. அத்தகைய கொடிய ஜந்து உருவத்தில் பெரிதல்ல. மங்கல் நிறத்துடன் கூடிய அப்பூச்சி சோளச் செடியிலுள்ள பூவின் அளவில்தானிருக்கும் ட்ஸெட்ஸெ என்ற அப்பூச்சி ரத்தத்தை உறிஞ்சி ஜீவிக்கிறது. உறிஞ்சப்பட்ட ஜந்து உயிரிழப்பது திண்ணம். கால்நடைகள் உடனே மடிந்துவிடுகின்றன. மனிதர்கள் ஒருவித உறக்க நோய் கொண்டு நாளாவட்டத்தில் சோர்ந்து விழுகிறார்கள்.

நாகரிக யுகத்தில் ஆப்பிரிக்கா கண்டமே உறக்க நோய்வாய்ப் பட்டிருந்ததாகத் தோன்றிய காலமுண்டு. உலகத்தின் மற்ற பாகங்கள் தள்ளாடியோ, தீர்மானத்தோடோ முன்னேறிச் செல்லும் போதுக் கரிய ஆப்பிரிக்கா வெயிலில் படுத்து வேதனையுடன் உறங்கிக்கொண்டிருந்தது. ஆனால் இன்றோ கரிய ஆப்பிரிக்கா எழுந்து உட்கார்ந்து, கண்களைத் துடைத்துக்கொண்டு, சுற்றுமுற்றிலும் பார்க்கத் தொடங்கி விட்டது. சில சமயங்களில் அதற்குத் தோன்றும் காட்சி நூதனமாயிருந்தது. சில சமயங்களில் அக்காட்சி அதற்கு எரிச்சலை உண்டுபண்ணியது.

இத்தகைய மாறுதல் ஏற்பட்டதற்கறிகுறியாக விஞ்ஞான ஆராய்ச்சி ட்ஸெட்ஸெ பூச்சியைக் கொல்ல மருந்து கண்டுபிடித்திருக்கிறது. மலேரியாவைப் போக்க பலூட்ரின் என்ற மருந்தைக் கண்டு பிடித்த அதே பிரிட்டிஷ் கம்பெனியாகிய இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் தண்ணீரில் கரைக்கக்கூடிய வெள்ளைப் பஸ்பம் ஒன்றைத் தாயரித்தது. அதைக் கொண்டு

1949-ம் ஆண்டில் 20,00,000 பசுக்கள், ஒட்டைகள், குதிரைகள் ட்ஸெட்ஸெ பூச்சியினுல் தாக்கப்படுவதினின்றும் காப்பாற்றப் பட்டன. அம் மருந்தினுல் மனிதருக்குக் குணமுண்டா என்று இன்னும் நிச்சயமாகவில்லை. ஆனுல் அம் மருந்தினுல் கிழக்கு ஆப்பிரிக்காவில் அநேகக் கால்நடைகள் உயிர்ப்பயமின்றித் திரிய முடிகிறது.

ஆப்பிரிக்கா உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய கண்ட மெனினும், அதன் ஜனத்தொகை உலக ஜனத்தொகையின் $7\frac{1}{2}$ சத விகிதம்தான். பூமியின் நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பங்காக ஆப்பிரிக்கா இருப்பினும், அதில் மூன்றில் ஒரு பங்கு பாலைவனம், மற்ருெரு பங்கு காட்டுப் பிரதேசம், மிகுதியில் பெரும்பாலும் பீடபூமி. உலக விவசாயப் பொருள் உற்பத்தி யில் மூன்று சத விகிதம்தான் ஆப்பிரிக்காவில் விளைகிறது. உலக இருப்புப் பாதையில் 5 சத விகிதமும் உலக வியாபாரத் தில் 5 சத விகிதமும் ஆப்பிரிக்காவின் பங்கு. ஆனுல் இவ் விஷயங்களில் ஆப்பிரிக்காவில் அபிவிருத்திக்கு நிறைய சந்தர்ப் பங்களுண்டு.

அமெரிக்காவுக்கு வெளியே அமெரிக்க மூலதனத்தை வசீகரிக்கும் சக்தி ஆப்பிரிக்காவுக்கும் மத்திய கிழக்கு பிரதே சங்களுக்கும் இப்போதிருப்பதாகச் சமீபத்தில் நியூயார்க் டைம்ஸ் என்ற பத்திரிகை எழுதியிருந்தது. அதற்கு ஒரு காரணம் இருள் சூழ்ந்த கண்டத்தில் கம்யூனிஸ்ட் கிளர்ச்சி அதிகரித்து வந்தாலும் நிலையில்லா உலகத்தில் அங்குதான் தைரியமாக மூலதனத்தைப் போடலாம். மூலதனத்துக்கு ஆபத்து வரும் என்ற நிலைமை இன்னும் ஏற்படவில்லை. அக்கண்டத்தின் பெரும்பகுதிகளை வசப்படுத்தியிருக்கும் பிரிட்டிஷ், பிரஞ்சு, பெல்ஜிய சர்க்கார்கள் அந்நியருக்குச் சொந்தமான தொழிற் சாலைகளைப் பறிமுதல் செய்யப் போவதில்லை. லாபத்தையும் டாலர் ரூபத்தில் பெறலாம். அபேதவாதம் நிலைத்தோங்கும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து வெளிக் கிளம்பும் தனிப்பட்டோர்

மூலதனமும் அமெரிக்க முதலாளிகளும் ஆப்பிரிக்காவை நோக்கிச் செல்கின்றனர்.

தென்னுப்பிரிக்காவில் மட்டும் 1947-ம் ஆண்டில் 3,721 புதிய கம்பெனிகள் 40 கோடி டாலர் முதலுடன் அமைக்கப்பட்டன. அதில் பெரும் பகுதியான பணம் இங்கிலாந்து உள்பட மேற்கு ஐரோப்பாவிலிருந்து வந்தது. 1948-ம் ஆண்டில் 10 கோடி டாலர்களை அமெரிக்க முதலாளிகள் தென்னுப்பிரிக்காவுக்கு அனுப்பி வைத்தனர். இருபது லட்சம் ஆப்பிரிக்கர்கள் கையில் பணத்துடன் இருக்கிருர்களென்றுல் வியாபாரிகள் உற்சாகப் படுவது இயற்கைதானே ?

அமெரிக்க அல்லது மற்ற அந்நிய முதலாளிகள் பழங் காலத்திலிருந்த காலனிச் சுரண்டல் முறையைப் பின்பற்றலா மென்ற எண்ணத்துடன் ஆப்பிரிக்காவுக்குச் சென்றுல் ஏமாந்து திரும்புவது திண்ணம். ஆனுல் சரியாக யோசிக்காமல் உதவாக் கரைத் திட்டங்களில் ஐரோப்பிய சர்க்கார்கள் கோடிக் கணக் கான டாலர்களைச் செலவிடுவதை விட ஏகாதிபத்தியச் சுரண்டல் ஆப்பிரிக்காவின் எதிர்காலத்துக்கு அதிக் கேடு விளைவிக்கும் என்று கேட்கலாம். அப்படி வெற்றியடையாத திட்டங்களில் பிரிட்டிஷாரின் டங்கன்யீகா நிலக்கடலைத் திட்டம் ஒன்று. மேற்கத்திய நாட்டார் அபேதவாதக் கொள்கைப்படிப் பண்ணை களை நடத்த செய்த பெரும் முயற்சி எதிர்பார்த்த அளவுக்குப் பலன் தராமல் போய்விட்டது.

நிலக்கடலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது "பின்தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய மேற்கொண்ட திட்டங்களுள் அது மிகவும் துணிச்சலானது, பல அம்சங்களைக் கொண்டது." என லண்டன் பத்திரிகை, டைம்ஸ் வர்ணித்தது. ஏட்டில் திட்டம் அழகாகத்தான் இருந்தது. உலகத்தில் எண்ணெய்க ளும் கொழுப்புப் பதார்த்தங்களும் உற்பத்தியாவது தேவையை விட, 60,00,000 டன்கள் குறைவு. பிரிட்டனுக்கு மட்டும் கிடைப் பதைவிட அதிகமாக 10,00,000 டன்கள் வேண்டும். வேர்க்

கடலைத் திட்டம் நிறைவேறினால் பிரிட்டனுக்கு 6,00,000 டன்கள் அதிகமாகக் கிடைக்கும். 1956-ம் ஆண்டிற்குள் பிரிட்டன் டங்கன்யீகாவிலும் கென்யாவிலும் வட ரோடீஷியாவிலும் 5,000 சதுர மைல் நிலத்தை சரிப்படுத்தி 32,50,000 ஏகர்களில் நிலக்கடலை, சூரியகாந்தி, புல் ஆகியவற்றை வளர்க்கத் திட்டம் போடப்பட்டிருந்தது. சுதேசிகளுக்குத் தொழில் நுட்பம் கற்றுக் கொடுக்கத் திட்டம் போடப்பட்டிருந்தது.

திட்டம் முடிவடைந்தால், டங்கன்யீகாவின் ஏற்றுமதி இரு மடங்காகுமென்று எதிர்ப்பார்க்கப்பட்டது. அதனால் ஆப்பிரிக்கரின் வாழ்க்கைத்தரம் உயரும். பிரிட்டிஷ் மக்களுக்கு உடனே தேவையாயிருக்கும் உணவுப் பொருள்கள் கிடைக்கும்.

ஆனால் 1946-ம் ஆண்டில் திட்டம் ஆரம்பமானதிலிருந்து ஏட்டில் தயாரித்திருந்த திட்டத்துக்கும் நடைமுறையில் சாத்தியமாவதற்கும் பெரிய வித்தியாசம் தோன்றலாயிற்று. நிலக்கடலையை உற்பத்தி செய்து என்ன பயன்? அதை அங்கிருந்து அப்புறப்படுவதற்குப் போக்கு வரத்து சாதனம் இன்னும் அமைக்கப்படவில்லையே. பிரிட்டிஷ் உணவு மந்திரி 1949-ம் ஆண்டில் வருத்தத்துடன் பின்வருமாறு தெரிவித்தார்: "நாங்கள் நினைத்ததைவிட எல்லாவற்றிற்கும் அதிக செலவாகிறது. ஆப்பிரிக்க சீதோஷ்ண ஸ்திதி தகுந்ததாயில்லை. ஆப்பிரிக்க நிலம் ஒத்துவரவில்லை. ஆப்பிரிக்கத் தொழிலாளர்களுக்கு வேலை தெரியவில்லை. நாங்கள் முதலில் வாங்கிய விவசாய மெஷின்கள் அங்குள்ள நிலைமையில் உபயோகப்படவில்லை. நிலக்கடலை உற்பத்திக்கென நாங்கள் தேர்ந்தெடுத்த சில இடங்களில் தண்ணீர் கிடைக்காததால் பிரயோசனப்படவில்லை. அத் திட்டத்தினால் பிரிட்டனின் உணவுப் பொருள் நிலைமையில் அபிவிருத்தி உண்டாகாது என்பதை நாங்கள் இப்போது உணர்கிறோம். நாம் உற்பத்தி செய்யும் உணவில் பெரும் பகுதி கிழக்கு ஆப்பிரிக்கர்களுக்கு வேண்டியிருக்கும். ஏற்றுமதி செய்வதற்கென ஏதாவது மீதியிருந்தாலும் அதை பிரிட்ட

னுக்கு எடுத்து வருவதை விடச் சமீபத்திலுள்ள ஊர்களில் விற்பது லாபகரமாயிருக்கும்.”

டங்கன்யீகாவில் பிரிட்டிஷார் வேர்க்கடலே உற்பத்திச்செய்ய லட்சக் கணக்கான பவுன்களைச் செலவு செய்து கொண்டிருக்கையில் நைஜீரியாவிலுள்ள காேே என்ற இடத்தில் வேர்க்கடலேப் போர் போராகக் குவிக்கப்பட்டிருந்தது. சந்தைகளுக்குத் துரிதமாகக் கொண்டுபோவதற்கு வேண்டிய இருப்புப்பாதை இல்லாததால் அதில் பெரும் பகுதி நாசமாய்க்கொண்டிருந்தது.

இதிலிருந்து தெரியும் உண்மை என்ன? பின்தங்கிய தேசங்கள் நடக்கப் பழகுவதற்கு மின் ஓடச் சொல்வதில் பயனில்லை. பெரிய திட்டங்கள் பயன்படுமா என்று சோதித்துப் பார்த்து முடிவு செய்யுமுன் அவற்றை மிகுந்த பொருள் செலவில் நிறைவேற்ற முற்படக்கூடாது. நாலாவது அம்சத்தின்கீழ் டங்கன்யீகா நிலக்கடலேத் திட்டம் வந்திருந்தால், முதலில் நிபுணர்கள் நிலத்தின் ஈரத்தையும் செழிப்பையும் பரிசோதித்திருப்பார்கள். விளைபொருள்களைச் சந்தைகளுக்கு கொண்டுபோக வசதியிருக்கிறதா என்று கவனித்திருப்பார்கள். தேவையான மெஷின்களும் தொழிலாளர்களும் உண்டா என்பதைத் தீர்மானித்திருப்பார்கள்.

சர்க்காரால் தயாரிக்கப்பட்ட டங்கன்யீகா திட்டத்தைப்போல் தனிப்பட்டோர் முயற்சியில் லைபீரியாக் குடியரசில் எட்வர்ட் ஆர். ஸ்டெட்டெனியஸ் (ஜூனியர்) அவர்கள் துவக்கிய முன்னேற்றத் திட்டம் எவ்வாறு நிறைவேறியதென்பது ஆராய்வது ருசிகரமாயிருக்கும். 1947-ம் ஆண்டின் இறுதியில் ஸ்டெட்டெனியஸின் லைபீரியாக் கம்பெனி அந்நாட்டின் இயற்கை வளத்தைப் புதிய முறைகளில் பயன்படுத்திக்கொள்ளும் உத்தேசத்தை அறிவித்தது. கம்பெனியின் மூலதனத்தில் 25 சத விகிதம் சர்க்காருக்குச் சேரும். அதில் கிடைக்கும் வருமானத்திலிருந்து பாதைகள் கட்டுவது போன்ற அடிப்படை அபிவிருத்தி வேலே

கள் செய்யப்படும். மூலதனத்தில் 10 சத விகிதம் லைபீரிய மக்களின் கல்விக்காக ஒதுக்கி வைக்கப்பட்டது.

அதற்கு ஈடாக லைபீரியாவின் வசதிகளை பயன்படுத்திக் கொள்ள பூர்ண உரிமை ஸ்டெட்டெனியஸ் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது. விமானப் போக்குவரத்து, கொக்கோ தோட்டங்கள், வியாபாரக் கம்பெனிகள் முதலியன ஆரம்பிக்கப் பட்டன. ஆனால் சீக்கிரத்தில் கம்பெனிக்குக் கஷ்டகாலம் ஆரம்பித்தது. ஸ்டெட்டெனியஸ் 1949-ம் ஆண்டில் மாண மடைந்ததால் கம்பெனி அவரது தலைமையின் பலனை இழந்து அதன் திட்டங்களைக் குறைத்துக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டதாகத் தெரிகிறது. கம்பெனியும் பெரிய தவறுகளைச் செய்திருக்கலாம். ஆனால் லைபீரியக் கம்பெனியின் தவறுதல் களால் மூலதனம் போட்டவர்கள் நஷ்டமடைவார்களேயன்றி, வரி கொடுப்போருக்கு நஷ்டமொன்றுமில்லை. திட்டங்கள் தவறிப்போய்விட்டால் அவற்றைக் கைவிட முடிந்தது. சாத்திய மில்லையென்றாலும் திட்டத்தைப் பூர்த்தி செய்து மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டிய அரசியல் நிர்ப்பந்தம் ஏதும் இல்லை.

லைபீரியாவில் பிரம்மாண்டமான காடுகள் இருக்கின்றன. தங்கம், கொக்கோ, கரும்பு, எண்ணெய் வகைகள் முதலியன நிறையக் கிடைக்கின்றன. உள்நாட்டிலோ இரும்பு, ஈயம், செம்பு முதலிய உலோகப் பொருள்கள் மலிந்து கிடக்கின்றன. வாஷிங்டனிலிருந்து வந்த ஒரு பொருளாதாரக் கோஷ்டி லைபீரியாவின் வசதிகளை ஆராய்ந்து எவ்விதம் அவற்றைக் கொண்டு தொழில் வளத்தைப் பெருக்கலாம் என்று அறிவித்தது. அதன்பிறகு அமெரிக்கக் கம்பெனிகள் பல லைபீரியாவில் மூலதனம்போட்டு தொழிலியல் ஸ்தாபனங்களை ஏற்படுத்த முயற்சி செய்து வருகின்றன. அடுத்த ஐந்து ஆண்டுகளில் அயல்நாட்டு வர்த்தகம் 25 சதவிகிதம் உயருமென லைபீரியா எதிர்பார்க்கிறது.

ஆப்பிரிக்காவில் காலனிகளையுடைய மேற்கத்திய நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், போர்ச்சுகல் இருண்ட கண்டம் ஒளிவீசும்படி தொழில் வள முன்னேற்றத்தில் ஈடுபட்டுவருகின்றன. அவை வெற்றிபெறுவது அமெரிக்க உதவியைப் பொறுத்திருக்கிறது. மேற்சொன்ன நாலு மேற்கத்திய நாடுகளுக்குச் சொந்தமாக ஆப்பிரிக்காவில் நிறைய நிலமிருக்கிறது. அவற்றில் பெல்ஜியர்களும் போர்ச்சுகீஸியர்களும் தங்கள் காலனிகளைத் தனிப்பட்டோர் முயற்சியாலேயே அபிவிருத்தி செய்ய முற்பட்டிருக்கிறார்கள்.

பெல்ஜியன் காங்கோவில் தங்கம், தகரம், செம்பு, நிலக்கரி, வைரம், துத்தநாகம், மாலிப்டெனம், மாங்கனீஸ், உரேனியம் ஆகிய தாதுப்பொருள்களைப் புது முறைகளில் சுரங்கங்களிலிருந்து எடுக்க ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. பெல்ஜியன் காங்கோ ரூவாண்டா உருண்டி ஆகிய இரு பிரதேசங்களின் அபிவிருத்திக்காக 84,70,00,000 டாலர்களை பெல்ஜிய சர்க்கார் ஒதுக்கி வைத்திருக்கிறது. ஆனால் விரிவான தொழிலியல் விவசாயத் திட்டங்களை நிறைவேற்ற அமெரிக்க உதவி அவசியமாகும். நாலாவது அம்சத்தின்கீழ் பெல்ஜியன் காலனிகளுக்குத் தனிப்பட்டோர் பண உதவி கிடைப்பது எப்படியென்ற விஷயத்தை அமெரிக்க பாங்க் அதிகாரி ஒருவரான விந்த்ராப் ஆல்ட்ரிச் பெல்ஜியத்தின் தலைநகருக்கு சமீபத்தில் சென்றிருந்தபோது விவாதித்தார்.

தொழில்வளம் பெருகுவதற்கு இன்றியமையாத பொருள்களில் சிமிட்டியும் ஒன்று. 1949-ம் ஆண்டின் இறுதியில் ஆப்பிரிக்காவில் பெரிய சிமிட்டித் தொழிற்சாலைகளை ஸ்தாபிக்கத் தேவையான மெஷின்களை அமெரிக்கக் கம்பெனிகள் அனுப்பின. இத்தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலதனம் தனிப்பட்ட போர்ச்சுகீஸியர்களால் கொடுக்கப்பட்டது.

ஆப்பிரிக்கக் காலனிகளை அபிவிருத்தி செய்வதில் தனிப்பட்டோர்களைவிட சர்க்கார் முயற்சிகளிலேயே பிரிட்டனும் பிரான்

ஸும் அதிகக் கவனம் செலுத்திவருகின்றன. நீர்ப்பாசன முறையில் இன்னும் 25,00,000 ஏகர் நிலத்தைச் சாகுபடி செய்யத் தன் ஆப்பிரிக்கக் காலனிகளுக்காக பிரான்ஸ் திட்டம் போட்டிருக்கிறது. பல திட்டங்கள் ஏட்டளவில்தான் இருக்கின்றன. ஆகவே நிறைவேற்றப்படுவதற்குள் அவற்றின் அளவு குறையலாம். ஒரு திட்டம் மட்டும் 1932-ம் ஆண்டிலிருந்து முன்னேறிவருகிறது. அது நைஜர் பள்ளத்தாக்கு நிர்வாகமாகும். ஓர் ஆப்பிரிக்க விவசாயி தன் விளை பொருள்களைச் சரியான உத்திகளை அனுஷ்டிப்பதால் பதினைந்து மடங்கு அதிகமாக்கலாம் என்பதை நைஜர் பள்ளத்தாக்கு நிர்வாகம் நிரூபித்திருக்கிறது.

வெயில் கடுமையான பிரஞ்சு மேற்கு ஆப்பிரிக்கப் பள்ளத்தாக்கில் உள்ள ஒரு கிராமத்துக்குச் சில எஞ்சினீயர்கள் சென்றிருந்தனர். அக்கிராமத்தில் ஒரு பழைய கதை வழங்கி வந்ததைக் கேட்டார்கள். ஒரு காலத்தில் ஒரு பெரிய நதி அப்பகுதியில் ஓடியிருந்ததாகவும், திடீரென ஒருநாள் அது உலர்ந்துவிட்டுப் பயிர்கள் அழிந்துவிட்டதாகவும் அன்றிலிருந்துதான் அப்பகுதியிலுள்ளோர் வறுமையால் வாடி உணவின்றித் தவிக்கின்றனர் என்றும் அங்குள்ள முதியோர்கள் சொன்னார்கள்.

எஞ்சினீயர்கள் புன்முறுவல் செய்தார்கள். கிழவர்கள் சொல்லுவதில் உண்மையிருக்கிறதென்பதை அவர்கள் அறிவார்கள். வெகு காலத்துக்கு முன்பு, அங்கே நைஜர் நதியின் கிளைநதி ஒன்று ஓடிற்று. எஞ்சினீயர்கள் சென்ற சில நாட்களுக்குப்பிறகு 600 அடி அகலத்துக்கு மறுபடி அப்பழைய ஆற்றுக்காலில் தண்ணீர் அலைமோதி வருவதைச் சுதேசிகள் கண்டு ஆச்சரியமுற்றனர். அக்கிளைநதி மறுபடியும் உயிருடன் திகழச்செய்தது நைஜர் பள்ளத்தாக்கு நிர்வாகம் செய்த முதல் காரியங்களில் ஒன்று. உலகின் பெரிய நதிகளில் ஒன்றான நைஜர் ஆற்றைக்கொண்டுச் சுற்று வட்டாரங்களைச் செழிப்பிக்க

பிரஞ்சு மேற்கு ஆப்பிரிக்காவில் நைஜர் பள்ளத்தாக்கு நிர்வாகம் ஸ்தாபிக்கப்பட்டது.

அத்திட்டத்திற்கிருந்த இடையூறுகளைவிட அதிகமாய் ஒரு சில முன்னேற்றத் திட்டங்களுக்குத்தான் இருந்திருக்கும். மற்ற நாடுகளில் விவசாயிகள் வியர்த்து வேர்க்க வேலை செய்வதற்குப் பதில் மெஷின்களை உபயோகிக்கும்படி அவர்களைத் தூண்டுவதில் சிரமமிருக்கும். நைஜீரியாவிலோ மனிதர்களுக்குப் பதில் மிருகங்களை உபயோகிப்பதே கடினமென்பதைத் தொழில் நுட்ப நிபுணர்கள் கண்டனர். நைஜீரிய எருதுக்கு வேலை செய்யும் கேவலமான வழக்கம் கிடையாது. யதேச்சையாய்க் காடுகளைச் சுற்றிவருவதில்தான் பிரேமை. அதை வேலைக்குப் பயன்படுத்திக் கொள்வதென்பது நாளாக நாளாகச் சாதிக்கவேண்டிய விஷயமாயிருந்தது. சிறு மண்வெட்டிக் குப்பதிலாக எருதுபூட்டிய கலப்பையைக் கொண்டு உழுதால் பயிர் நன்றாக விளையுமென்று விவசாயியை உணரவைப்பது அதைவிடக் கடினமாயிருந்தது.

அத்திட்டத்துக்கு இரண்டாவது இடையூறாக நேர்ந்தது இரண்டாவது உலக யுத்தம். காலனி அபிவிருத்திக்குப் பணம் செலவு செய்யும் நிலைமையில் பிரான்ஸ் அப்போது இல்லை. எனினும் யுத்தகால முழுவதும் எவ்வாறோ வேலை நிற்காமல் நடந்துவந்தது. ஜெர்மனி சரணடைவதற்குள் காடடர்ந்து ஒன்றும் விளையாதிருந்த 50,000 ஏகர் நிலம் மீட்கப்பட்டு நீர்ப்பாசனத்துடன் பயிர்கள் வளர்க்கப்பட்டன. சுமார் 20,000 நபர்கள் பிரஞ்சு நைஜீரியாவிலுள்ள அப்பிரதேசத்தில் குடியேறினர். முடிவில் நைஜர் பள்ளத்தாக்கு நிர்வாகம் நீர்ப்பாசன வசதி அளிப்பதுடன் சிறு தொழிற்சாலைகளுக்குத் தேவையான மின்சார வசதியும் அளிக்கும். சரிவர பயன்படுத்திக் கொண்டால் நைஜர் நதி பிரஞ்சு நைஜீரிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி அவர்களே மேற்கொண்டு ஆக்க வழிகளில் ஈடுபடும்படி செய்ய ஒத்தாசையாய் இருக்கும்.

ஆப்பிரிக்க முன்னேற்றத்துக்காக பிரிட்டன் இரண்டு ஸ்தா பனங்களை அமைத்திருக்கிறது. ஒன்று அயல்நாட்டு உணவு ஸ்தாபனம், மற்றொன்று காலனி முன்னேற்ற ஸ்தாபனம். முதலாவது உணவு உற்பத்தியை வளர்க்க அமைக்கப்பட்டது. இரண்டாவது ஸ்தாபனம் காலனிப் பிரதேச முன்னேற்ற வேலை களையெல்லாம் கவனித்துக் கொள்ளுகிறது. காம்பியாவில் வருஷத்துக்கு 2,00,00,000 முட்டைகள் உற்பத்தி செய்ய ஒரு திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. திட்டத்தின் செலவு சுமார் 20,00,000 டாலர்கள்.

1956-ம் ஆண்டில் பூர்த்தியாகப் பத்து வருஷத் திட்ட மொன்றும் ஆப்பிரிக்காவுக்காகக் காலனி முன்னேற்ற ஸ்தா பனம் தயாரித்திருக்கிறது. செலவு 80 கோடி டாலர்கள் ஆகும். அதில் காலனிகள் 57½ கோடி டாலர்களும், மீதி பிரிட்டனும் மூலதனமாகப் போடும்.

பிரிட்டிஷ் நைஜீரியாவின் முக்கிய தேவை உரமாகும். லட்சக்கணக்கான ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள தரிசு நிலத்தைச் செழிப்பாக்கினால், பிரிட்டனுக்குத் தேவையான உணவுப்பொருள் கள் இங்கு அபரிமிதமாக விளையும். இந்நிலையில் மேற்பகுதி யிலுள்ள பிரஞ்சு நைஜர் பள்ளத்தாக்கு நிர்வாகத்தைப்பற்றி பிரிட்டிஷ் அதிகாரிகள் குறைகூறுவது இயற்கையே. அத் திட்டத்தால் பிரிட்டிஷ் பிரதேசத்தில் நைஜர் 1,200 மைல் தூரத்துக்கு ஓடினாலும் அதனால் அதிக பயனில்லாமல் போகிற தென்று அவர்கள் கூறுகிறார்கள். அது உண்மையானால், புவன சாஸ்திரப்படியின்றி தேசீயத் தேவைகளையே பிரதான மாகக் கொண்டுத் திட்டங்களை அமைப்பதால் ஏற்படக்கூடிய கேடுகள் நன்கு புலனாகும்.

பிரிட்டிஷ் கிழக்கு ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷார் பொரு ளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் உதவியுடன் தொழில் வளத்தைப் பெருக்கி புது விவசாய முறைகளைப் பழக்கத்தில் கொண்டுவருகிறார்கள். ஆப்பிரிக்காவின் தாதுப்பொருள்களை

யும் விவசாய வசதிகளையும் உபயோகித்துக்கொள்ள மேற்கத்திய நாடுகள் துடிக்கின்றன. ஆனால் மனிதர்களின் வாழ்க்கை நிலையையும் உடனுக்குடன் விருத்தி செய்யவேண்டும். விஷவாயுப் பிரயோகத்துடன் கூடிய யுத்தத்தைக் காட்டிலும் இந்நாளில் வருஷத்துக்கு எட்டரை டாலர் வருமானத்தோடு காலங்கழிக்கும் மனிதர்களால் பெரிய ஆபத்து நேரிடும்.

ஆசியாவிலிருந்து பின்வாங்கிய பிரிட்டன் தன் ஆப்பிரிக்க உடைமைகளின் நலன்களைப் பயன்படுத்திக் கொண்டால்தான் தனது சுபிட்சம் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளமுடியும். ஆனால் அவ்வாறு பயன்படுத்திக்கொள்வது சாத்தியமாகவேண்டுமானால் ஆப்பிரிக்காவின் நிலத்தைச் செழிக்கச் செய்யவேண்டும், தொழில்களை அபிவிருத்தி செய்யவேண்டும், நாட்டு மக்களின் நலன்களையும் பாதுகாக்க வேண்டும்.

பிரிட்டிஷ் கிழக்கு ஆப்பிரிக்காவில் பத்து லட்சம் சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள பூமி விளைவின்றிக் கிடக்கிறது. அது உபயோகப்படவேண்டுமானால் முதலில் இருப்புப் பாதைகள் அவசியமாகின்றன. 1,000 மைல் நீளமுள்ள இருப்புப்பாதையைப் போடுவதற்கு ஆயத்தங்கள் நடந்துவருகின்றன. அந்த இருப்புப்பாதை கென்யா உகாண்டாவிலிருந்து ரோடீஷியாவரை செல்லும். டங்கன்யீகா காடுகளில் கிடைக்கும் பொருள்கள், நியாஸாலண்ட் வட ரோடீஷியா ஆகிய நாடுகளின் விவசாயப் பொருள்கள் அதன்மூலம் வெளிநாடுகளுக்குப் போகமுடியும்.

இருப்புப்பாதை போட்டபின்பு ஸாம்பஸி, காப்யூ நதிகளிலிருந்து மின்சார சக்தி உற்பத்தி செய்து ரோடீஷியா பிரதேசங்களில் தொழிற்சாலைகளை அமைக்கமுடியும். இன்னும் உகாண்டாவில் நைல்நதி தீரத்திலே ஓவன் நீர்வீழ்ச்சியை அடுத்துப் பெரிய அணைக்கட்டு கட்டுவதற்கு யோசனை இருக்கிறது. உகாண்டா அணைக்கட்டுப் பூர்த்தியானால் அது கிழக்கு ஆப்பிரிக்காவுக்கு மலிவாக 2,200 கோடி கிலோவாட்டுகள் மின்சார சக்தி அளிக்கும்.

இத்தகைய பெரிய அணைக்கட்டுகளை முன்னேற்ற வேலை ஆரம்பிக்கும் தருணத்தில் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம். அவற்றைவிட சிறு முன்னேற்றத் திட்டங்கள் தகுதியான பொருளாதார வளர்ச்சிக்கு உதவி செய்யும். ஆப்பிரிக்க முன்னேற்றம் போன்ற பிரம்மாண்டடமான முயற்சியில், ஆக்க வேலைகள் ஆரம்பமானால் எட்டுத் திட்டங்கள் உருமாறிவிடும். நடைமுறையில் உடனுக்குடன் சாத்தியமானவையே மிஞ்சும். வியாதியுள்ள மக்கள் நிறைந்துள்ள கண்டத்தில் தொழிலபிவிருத்தியடைந்த நாகரிக சமுதாயத்தை நிலைநாட்டுவது எளிதான காரியமல்லவென்பதைக் கொஞ்சம் கொஞ்சமாக பிரிட்டிஷ், பிரஞ்சு, பெல்ஜிய மக்கள் உணர்ந்து வருகிறார்கள்.

நூறு கோடி டாலர்கள் கிடைத்தால் ஆப்பிரிக்கா முன்னேற்றத்துக்காக என்ன நடவடிக்கைகள் எடுப்பீர் என்று தென்னாப்பிரிக்க பிரதம மந்திரியாக விருந்த ஜெனரல் ஸ்மட்ஸை ஒருதரம் கேட்டபோது அவர் அணைக்கட்டுகள் கட்டுவதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக, "அதைச் சுகாதாரம் வளர்க்க உபயோகிப்பேன்," என்றார் ஸ்மட்ஸ். சுகாதாரம் என்னும்போது மனித தேகாரோக்கியத்தை மட்டும் அவர் குறிப்பிடவில்லை. விலங்கின் சுகாதாரத்தையும், நிலத்தின் சுகாதாரத்தையும் அவர் அதில் சேர்த்துக்கொண்டார்.

நாலாவது அம்சத்தின் மூலம் அத்தகைய அடிப்படை அபிவிருத்தியை ஆப்பிரிக்கா மேற்கொள்ள அமெரிக்கா உதவி செய்யலாம், என்றார் ஸ்மட்ஸ்.

இன்றைய ஆப்பிரிக்காவின் தேவை நாலாவது அம்சத்தைப் போன்ற திட்டங்கள். நிலக்கடலைத் திட்டங்கள் அல்ல.

# பாலைவனத்தில் பூந்தோட்டம்

ஜிப்ரால்டரிலிருந்து ஆப்பிரிக்கக் காடுகளின் ஓரமாகக் கிழக்கு நோக்கிச் சென்றால் நீங்கள் இந்தியாவின் எல்லைப்புறத்தை அணுகுவதற்குள் 4,000 மைல் கடந்தாக வேண்டும். நீங்கள் இந்திய எல்லையைச் சேருமுன் அமெரிக்காவைப்போல் இரு மடங்குள்ள பிரதேசத்தின் வழியாகப் போகவேண்டும். அப் பிரதேசத்தில் சுமார் 20 கோடி மகம்மதியர்கள் வாழ்கிறார்கள். அப்பிரதேசத்தில்தான் முதன் முதலாக மனுஷ்ய நாகரிகமே உதயமாயிற்று. அதுவே ஒரு காலத்தில் நாகரிகத்தின் அஸ்தமனக்கட்சியாகவும் விளங்கும் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

இன்று மத்திய கேந்திரமாகிய இப்பிரதேசத்தில் மனிதப் பிறவிகள் மலேரியாவில் மடிந்து விழுகின்றனர். மற்றும் பல நோய்களால் கண்ணிழந்துக், காலிழந்து, நடக்கச் சக்தியற்று, உழைக்க உரமின்றித், தண்டிக்கப்பட்ட நாய்களைப் போல் ஊர்ந்து சென்று, சிறு எலும்புக்காகவும் மற்றவர்களைக் கொன்று உயிர் வாழுகிறார்கள். எலிகளைப் போல வம்சவிருத்தி. இருபத்தைந்து ஆண்டுகள் கழியுமுன் கிழவர்களாய்த் தோன்றுகிறார்கள். ஊழல்களுக்குப் பெயர் வாங்கிய மன்னர்களின் பிரஜைகள் அவர்கள். எழுத்தறிவின்றிச் சுகாதாரம் இன்னதென்றறியாமல் அரை வயிற்று உணவோடு, வறுமையும் பிணியும் விரட்ட அலைந்து திரிகிறார்கள். பிரம்மாண்டமான புராதன கட்டிடங்கள் இடிந்து கிடப்பதை இன்னும் அங்கே காணலாம். அண்டையிலேயே அணுகவொட்டாத குடிசைகளைக் கொண்ட கிராமங்களையும் காணலாம்.

ஒரு காலத்தில் அணைக்கட்டுகளும் வாய்க்கால்களுமிருந்த பிரதேசத்தில் இன்று அலைந்துதிரியும் மக்கள் விலங்கினைப் போல் அங்கும் இங்கும் உள்ள தாவரங்களைப் பறித்துத்தின்று

காலங்கழிக்கின்றனர். எனினும், அது ஏகாதிபத்தியங்கள் சந்திக்குமிடம். உலகத்தின் இதயபூமி.

தூரத்திலுள்ள மணலும் ஆடும் நிறைந்த பிரதேசத்தைப் பொறுத்திருக்கிறது தனது தேசத்தின் புகழும் செல்வாக்கும் நீடித்த அமைதியும் என்பது ஓர் அமெரிக்கன் நினைப்பதற்கு நூதனமாயிருக்கலாம். எனினும் அமேரிக்காவின் பாதுகாப்புக்கு மத்திய கேந்திரம் அவசியமானது. ஒரு படையெடுப்போ புரட்சியோ அப்பிரதேசத்தைக் கம்யூனிஸ்டுகளின் வசம் ஒப்பு வித்தால், மறுகணமே அமெரிக்கா ராணுவ நடவடிக்கை எடுப்பது நிச்சயம்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எந்த யுத்தத்தையும் நடத்த அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் மத்தியதரைக் கடல், சூயஸ் கால்வாய் வழியாகக் கப்பல்கள் செல்வதற்கு வசதி வேண்டும். மத்திய கிழக்கிலுள்ள விமான நிலையங்கள் அந்நாடுகளுக்கு வேண்டியிருக்கும். இந்தியாவுடன் கடல் மூலமாகவும் விமான மூலமும் போக்குவரத்து வைத்துக்கொள்ள ஸ்திரமான பாதை வேண்டும். அத்துடன், பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் மத்திய கிழக்கில் கிடைக்கும் எண்ணெய் (பெட்ரோல்) அவசியம் தேவை.

ரஷ்யாவும் மத்திய கேந்திரத்தை முக்கியமான பிரதேசமாகக் கருதுகிறது. மத்தயதரைக் கடலையும் இந்து மகா சமுத்திரத்தையும் தொடும் வெப்பமான துறைமுகங்களை அடைய ரஷ்யாவுக்கு மத்திய கேந்திரம் கோபுர வாயிலாக விளங்குகிறது. பீட்டர் மன்னர் காலத்திலிருந்து வெப்பமான துறைமுகங்களைப்பற்றிய கனவு ரஷ்யாவை வாட்டிவருகிறது. அக்கொள்கைக்குத் தற்சமயம் சூடேறியிருக்கிறது. அத்துடன் விரோத நாடுகள், பெர்ஷியாபோன் பிரதேசங்களை ராணுவ நிலையமாகக் கைப்பற்றிவிடக்கூடாதென்ற பீதியும் ரஷ்யாவுக்கிருக்கிறது. மற்றவர்களை நம்பாத ரஷ்யா பால்கன் பிரதேசத்திலும் கிரீஸ், துருக்கி, பெர்ஷியா ஆகிய நாடுகளிலும் தன் ஆதிக்கத்தை

நிலநாட்டினுலொழிய பயமற்று இருக்காது. கிரீஸ், துருக்கி, பெர்ஷியா, ரஷ்ய கேந்திரத்தில் சேர்ந்துவிட்டால், ரஷ்யா இந்து மகா சமுத்திரத்தை அடைவதைத் தடுக்க முடியாது.

வாஷிங்டன், லண்டன் போல மாஸ்கோவும் பெட்ரோலுக்கு அலேகிறது. ரஷ்ய சேனையில் அதிகமாக டாங்கிகளும் மோட்டார் லாரிகளும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ரஷ்ய பண்ணைகளிலும் அதிகமாக டிராக்டர்களும், மெஷின்களும் உபயோகத்திலிருக்கின்றன.

ஆகவே, மத்திய கேந்திரம் ஸ்திரமற்றிருந்தால், அந்நியர் குறுக்கிட நேரிடும். அதனுல் யுத்தம் மூளும். மத்திய கேந்திரம் நிமிர்ந்து உட்கார்ந்துத் தன் அலுவல்களேத் தானே கவனித்துக்கொள்ளும் சக்தியைப் பெற்ருல், உலக அமைதி நிலேத்திருக்கும்.

அதை உத்தேசித்தே 1946-ம் ஆண்டிலேயே ஜனுதிபதி ட்ரூமன் இரு உபாயங்கள் சொன்னுர்: ஒன்று பிற நாடுகள் பலாத்காரமாகவோ மறைமுகமாகவோ மத்திய கேந்திர சுயாதிபத்தியத்தில் தலேயிடக்கூடாது. இரண்டாவது, தமது நலங்களேப் பயன்படுத்திக்கொள்ளவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளவும் மத்திய கேந்திரம் உதவி செய்யப்படவேண்டும்.

மத்திய கேந்திரப் பொருளாதாரத்தைச் சீராக்க பிரிட்டிஷ் தொழில் மந்திரிசபை ஒரு திட்டத்தைத் தயாரித்திருந்தது. ஆனுல் அமெரிக்காவிடமிருந்து மூலதனமும் தொழில் நுட்பமும் கிடைக்கவில்லேயெனில், அத்திட்டம் நிறைவேற முடியாது. சுலபமாக நிறைவேற்றக்கூடிய சாதாரண சீர்திருத்தங்கள் எவ்வாறு மத்திய கேந்திரத்தின் நலனே அபிவிருத்தி செய்யுமென்பதை எகிப்தில் தானியத்தைச் சேமித்துவைக்கும் பிரச்னே விளக்கும். எகிப்திய விவசாயிகள் தானியத்தைச் சாக்கி விட்டுத்தான் வைப்பது வழக்கம். பூச்சிகளும் எலிகளும் அதை நாசம் செய்யாமல் தடுக்க வழியில்லே. பதினேழு மாதங்களுக்குச் சாக்குகளேக் குத்தகை எடுத்தால் ஆகும் செல

வில் உறைந்த களஞ்சியங்களைக் கட்டிக்கொள்ளலாம். இச் சிறிய சீர்திருத்தத்தை மேற்கொள்ளாமல் எலிகளும் பூச்சி களும் 1949-ம் ஆண்டில் உலகம் முழுவதும் சுமார் 3,30,00,000 டன்கள் தானியங்களை அழித்தன. அத்தானியங்களைக்கொண்டு ஒவ்வொரு தினமும் பதினைந்து கோடி மக்களுக்கு உணவு அளித்திருக்கலாம்.

சுகாதாரம், விவசாயம், போக்குவரத்து, எழுத்தறிவு ஆகிய துறைகளில் அபிவிருத்தியடைந்தால், மத்திய கேந்திர மக்க ளின் எதிர்காலம் மகத்தானதாய் இருக்குமென்பதில் சந் தேகமில்லை. அவர்கள் மறுபடியும் மத்திய கேந்திரத்தை பூந்தோட்டங்கள் நிறைந்த புன்னகை தவழும் பூமியாகச் செய்து விடுவார்கள்.

ஆப்பிரிக்கா கண்டத்தில் கரிய வனங்களுக்கு வடக்கே பெரியதொரு மணற்பாங்கு மத்தியதரைக்கடல்வரை நீடித் திருக்கிறது. அங்கே பிரஞ்சு ஆதிபத்யத்தின் கீழுள்ள மொராக்கோ, டுனிஸ், ஆல்ஜீரியா இருக்கின்றன. இரண் டாவது உலக யுத்தத்தின்போது போர்க்களமாயிருந்த லிபியா இருக்கிறது. செழிப்பான நிலங்களில் ஐந்தில் ஒரு பங்கைத் தன் உடைமையாக வைத்திருக்கும் மன்னன் அரசு செலுத்தும் எகிப்தும் அப்பிரதேசத்தில்தான் இருக்கிறது. எகிப் திலுள்ள இரண்டு கோடி மக்களில் 170 லட்ச மக்களுக்கு ஓரடிகூட சொந்த நிலம் கிடையாது. அந்நாட்டில் ஒரு தொழிலாளியின் வருஷத்திய வருமானம் 25 டாலருக்கு மேலிருந்தால் அவன் அதிர்ஷ்டசாலி.

வட ஆப்பிரிக்காவுக்கு முன்னேற்றத் திட்டங்கள் புதிதல்ல. 1936-ம் ஆண்டிலிருந்து 1947-ம் ஆண்டிற்குள் மொராக் கோவின் ஜனத்தொகை 40 சகித விகிதம் பெருகிற்று. பெருகி வரும் மக்களுக்கு உணவு அளிக்கும்பொருட்டு 8,15,000 ஏக்கர் களை அதிகமாக உழுவதற்கு பிரஞ்சுக்காரர்கள் ஒரு பத்து வருஷத்திட்டத்தைத் தயாரித்தனர். மின்சார உற்பத்தியை

யும் ஆறு மடங்கு அதிகப்படுத்தி வருகின்றனர். அம்மின் சாரத்தைக் கொண்டுச் சிறு தொழில்களை அமைக்க முயலு கிறார்கள். பிரான்ஸ், அந்நிய நாடுகள் ஆகியவற்றிலிருந்து வரும் தனிப்பட்டோர் முதலைக் கொண்டுச் சிமிட்டித் தொழிற் சாலைகள், கரும்பு ஆலைகள், மா மில்கள் முதலியன தோன்று கின்றன. ஆல்ஜீரியாவில் மாங்கனீஸ், ஈயம் போன்ற உலோ கங்களின் சுரங்கங்களை விருத்தி செய்துவருகிறார்கள்.

வட ஆப்பிரிக்காவில் எகிப்து மற்ற நாடுகளைவிடத் தொழில் வளத்தில் முன்னேறியிருக்கிறதெனச் சொல்லலாம். எனினும் அதுவும் நாட்டின் நிலையை அபிவிருத்தி செய்ய ஓர் ஐந்து வருஷத் திட்டத்தை 1945-ம் ஆண்டில் மேற்கொண்டிருக் கிறது. செலவு ஐந்து கோடி பவுன் ஆகும். மின்சார உற்பத்தியை அதிகரிக்கவும், சுக்கான் கல்லிலிருந்து கால்ஷியம் நைட்ரேட் என்ற உரம் 4,35,000 டன்கள் தயாரிக்கவும், 91,500 டன்கள் உற்பத்தி செய்யக்கூடிய எஃகுத் தொழிற் சாலையைக் கட்டவும், புதிதாக 7,50,000 ஏகர்களில் நீர்ப்பாசன முறையில் பயிரிடவும் அத்திட்டம் திடம்கொண்டிருக்கிறது.

கெய்ரோவுக்கு 500 மைல்களுக்கு மேலே நைல் நதிமீது ஓர் அணைக்கட்டை முடித்து வருகிறார்கள். அணுவைப் பிரித்த தால் மனிதப் பிறப்பின் சக்தியே அபரிமிதமாகப் பெரு கியதைப்போல், இந்த உயர்த்தப்படும் அஸ்வான் அணைக்கட்டு முடிந்தபிறகு அதனால் எகிப்தியத் தொழில்களுக்கு அளவு கடந்த மின்சார சக்தி கிடைக்கும். அத்துடன் நிலச் சீர்திருத்தமும் ஏற்பட்டால், இன்றைய எகிப்திய விவசாயத் தொழிலாளி நாளை நவ நாகரிக விவசாயியாகக் காட்சியளிப் பான்.

நைல் நதி தண்ணீரைக்கொண்டு ஸூடானில் லட்சக்கணக் கான ஏகர்களில் பயிர் விளைவிக்கக்கூடிய திட்டமொன்றைச் சமீபத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்டனர். அத்திட்டத் திற்கான எஞ்சினீயரிங் வேலையெல்லாம் முடிந்துவிட்டது.

பணம் கிடைத்ததும் ஆரம்பிக்க வேண்டியதுதான். அது முடிக்கப்பட்டால் உலகிலேயே மிகப் பெரிய நீர்ப்பாசனத் திட்ட மாக அது விளங்கும். வெண் நைல், நீல நைல் ஆகிய இரு நதிகள்மீது ஒவ்வோர் அணைக்கட்டு கட்டுவதால் உகாண்டா, எதியோப்பியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அது மின்சார சக்தி சப்ளை செய்யும். உகாண்டாவில் விக்டோரியா நைல்மீது கட் டப்படும் ஒவன் நீர்விழ்ச்சி அணைக்கட்டு ஆப்பிரிக்கத் தொழிற் சாலைகள் எல்லாவற்றிற்குமே மின்சார சக்தி சப்ளை செய்யும். இத்திட்டத்தின் செலவை எகிப்து, எதியோப்பியா, உகாண்டா, பெல்ஜியம், ஸூடான் ஆகிய நாடுகள் ஏற்றுக்கொள்ளும். திட்டம் முடிவடைய சுமார் 25 ஆண்டுகள் ஆகும் என்று மதிப்பிடப்படுகிறது.

நைல் நதி அணைக்கட்டுகளைவிட நூதனமான திட்டங்களும் வட ஆப்பிரிக்காவுக்காக யோசிக்கப்பட்டு வருகின்றன. லிபியர் பாலைவனத்தின் வட பகுதியில் கட்டாரா குழிவு என்ற பிர தேசமிருக்கிறது. குழிவு கடல் மட்டத்துக்கும் தாழ்ந்து இருக்கிறது. 35 மைலுக்கப்பாலுள்ள மத்தியதரைக் கடலி லிருந்து அக்குழிவுக்குக் கடல்நீரைப் பாய்ச்சுவதால் கிட்டத் தட்ட 2,00,000 கிலோவாட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்ய லாம் என்று மதிப்பிடப்படுகிறது. கடல் நீர் குழிவில் ஓர் உப்பு ஏரி போன்றிருக்கும். நீர் ஏரிப்பரப்பிலிருந்து ஆவி யாக மாறுவதால், அப்பிரதேசத்தில் மழை இருமடங்காகப் பெய்யும் என்று மதிப்பிடுகிறார்கள். எகிப்தில் மின்சாரத் தேவை அதிகமானாலொழிய இத்திட்டத்தை மேற்கொள்வது அனுவசியம்.

4,37,500 ஏகர் புதிய நிலத்துக்கு நீர்ப்பாசன வசதி செய்து வைக்கவும், மின்சார சக்தி உற்பத்தியைப் பெருக்கவும் தயா ரிக்கப்பட்டுள்ள ஐந்து வருஷ திட்டத்தை டுனிஸில் நிறை வேற்ற பிரஞ்சுக்காரர்கள் முற்பட்டிருக்கிறார்கள். அவ்வேலை முடிந்ததும், ஸஹாரா பாலைவனமே பசுமை நிறைந்த பூமி யாக்கும் எஞ்சினீயரிங் திட்டத்தை அவர்கள் பரிசோதிப்பார்கள்.

பிரமிக்கத்தக்க அக்காரியத்தை ஆரம்பிப்பதற்குள்ள இடையூறுகளில் முதன்மையானது "ஸஹாரா" என்ற வார்த்தையேயாகும். அவ்வார்த்தையை உச்சரிக்கும்போதே அதைச் செழிப்பாக்கும் திட்டமெல்லாம் பகற் கனவு என்று தோன்றிவிடுகிறது. எனினும் 1929-ம் ஆண்டிலேயே பிரஞ்சுப் பிரதம மந்திரியாயிருந்த ஆல்பர்ட் டார்டியோவும் மராமத்து மந்திரியாயிருந்த ஜூல்ஸ் காம்பன் அத்திட்டத்தை உற்சாகத்துடன் வரவேற்றார்கள். முஸோலினி அதை "ரோமன் கருத்து" எனப் புகழ்ந்து, அத்திட்டத்தின் முன்னேற்றத்தைப்பற்றித் தமக்கு அவ்வப்போது அறிவிக்கும்படி கேட்டுக்கொண்டார். ஐரோப்பாவின் உணவு நிலைமை மோசமாகிவருவதால், ஸஹாராவுக்கு நீரூற்றிப் பயிர் வளர்க்கும் வேலையை இந்நூற்றாண்டு முடிவதற்குள் தொடங்கினாலும் தொடங்கலாம்.

ஸஹாரா திட்டத்தை முதலில் பிறப்பித்தவர் பாஸ்டன் நகரைச் சேர்ந்த ட்வைட் பிராமன் என்பவர். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் அவர் கலிபோர்னியாவில் பல மகத்தான நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றியிருந்தார். கால்வாய்கள் வழியாக மத்தியதரைக் கடல்நீரைப் பாலைவனத்துள் பாய்ச்சுவதாலும், அட்லாஸ் மலையிலிருந்து தெற்கே பாயும் நதிகளை அணைப்பதாலும், பிஸ்க்ராவிலிருந்து டுனிஸின் கீழ்க் கரைவரை ஓர் உள் நாட்டுக் கடலைச் சிருஷ்டிக்கமுடியுமென பிராமன் கணக்கிட்டார். அதைச் சுற்றிலும் 10,000 சதுர மைல் விஸ்தீர்ணத்திற்குச் சாகுபடி செய்யக்கூடிய நிலம் தேறும். புதிதாகச் சிருஷ்டிக்கப்படும் பிராமன் கடல் மழையை அதிகரிக்கும்.

துணிச்சலோடுகூடிய இந்த பிராமன் கற்பனைக்கு ஒப்பிடக்கூடியது ஸூயல் கால்வாயை வெட்டிய பெர்டினுண்ட்டி லெஸ்ஸெப்ஸின் கற்பனைதான். தற்சமயம் அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டிய வேலைகளிலிருந்து மீண்டு மனிதனின் திறமையும் சக்தியும் ஸஹாரா பாலைவனம் மறுபடியும் செழிக்கும்படியான காரியத்தில் ஈடுபட இன்னும் பல வருஷங்கள் ஆகும்.

அதற்குமுன் மனிதர்கள் சுத்தமாய் இருக்க சோப் வேண்டும். மலேரியா தொலேய க்வினேன் வேண்டும். அபிவிருத்தி செய் யப்பட்ட விதை வேண்டும். சேமம் பண்ணிய பொருள்கள் வேண்டும். தேர்ச்சி பெற்ற தொழில் நிபுணர்கள் வேண்டும். ஸ்திரமான சர்க்கார்கள் வேண்டும்.

மனிதனின் சக்தியை மலேரியாவும் ட்ஸெட்ஸெ பூச்சியும் உறிஞ்சும் காலம் ஒழிந்த பிறகு, மனிதர்களுக்குப் போதிய உணவு கிடைக்கும்பொழுது, ஆணும் பெண்ணும் எழுதவும் படிக்கவும் கற்றுப் பெறுவாழ்வு வாழ விரும்பும்போது இன்று பகற்கனவாகத் தோன்றும் திட்டங்கள் பலிக்கும். துணிச்ச லான திட்டத்தின் இன்றைய வேலே நிம்மதியற்ற மாந்தர் துடித்தெழுந்து உலக நன்மைக்காக உழைக்க நம்பிக்கையை யூட்டும் சூழ்நிலேயை உண்டாக்குவதாகும்.

அதற்குப் பல நாட்கள் உழைத்தாக வேண்டும். அடிக்கடி மனசை உடைக்கக்கூடிய இடையூறுகள் தோன்றலாம். எனி னும், இரண்டாவது உலக யுத்தத்தில் பங்கெடுத்துக் கொண்ட வர்கள் மூன்ருவது உலக யுத்தத்தைக் காணுமல் அதற்குப் பதிலாகப் பாலேவனமும் ரோஜா மலரைப்போல் மலர்வதைக் காண வாழ்ந்திருப்பார்கள் என்று நம்புவோமாக.

# ஆசியாவின் மத்திய கேந்திரம்

மத்திய கிழக்கு நாடுகள் தங்களுக்குள் ஒத்துழைக்கக் கற்றுக்கொள்ளும்வரை அப்பிரதேசத்தின் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்கமுடியாது. ஈரானின் 65 கோடி டாலர் முன்னேற்றத்திட்டம், பாலஸ்தீனத்தின் ஜோர்டன் பள்ளத்தாக்குத் திட்டம்போன்ற பல மகத்தான திட்டங்களை இந்நாடுகள் தயாரித்து வருகின்றன. பல அமெரிக்கக் கம்பெனிகளும் அவற்றிற்கு உடந்தையாக அணைக்கட்டுகள் கட்டவும் எஃகுத் தொழிற்சாலைகளை அமைக்கவும் யோசித்து வருகின்றன. தங்கள் தேசியத்திட்டங்களுக்கு நாலாவது அம்சம் பண உதவி அளிக்குமென மத்திய கேந்திர நாடுகள் எதிர் பார்ப்பதில் ஆச்சரியமில்லை. நாலாவது அம்சம் அவ்வேலைகளை மேற்கொள்ளாது என்று அறியும்போது அவை ஏமாற்றமடையத்தான் செய்யும்.

நியூயார்க் நகரைச் சேர்ந்த ஓவர்ஸீஸ் கன்ஸல்டன்ட்ஸ் என்ற கம்பெனி ஈரானின் தொழிலியல் விவசாய விளைவை 200 சத விகிதத்துக்குமேல் அதிகமாக்க ஏழு வருஷத் திட்டமொன்றை 1949-ம் ஆண்டில் வெளியிட்டது. உள்நாட்டில் கிடைக்கும் வசதிகளைக்கொண்டே சிறு முன்னேற்றங்களைச் சாதிக்குமுன் பெருந்திட்டங்கள் ஒரு பின்தங்கிய நாட்டில் வெற்றிபெருமா என்ற கேள்வி பிறக்கும். ஹெஷ்மத் ஆலாய் என்னும் பாரசீகர் இது சம்பந்தமாக ஓர் அரிய கட்டுரை எழுதியிருக்கிறார். "உற்பத்தியைப் பெருக்கக்கூடிய, துணிச்சலான புது முயற்சிகளில் ஈடுபடக்கூடிய நடுத்தர வகுப்பு ஈரானில் முதலில் தோன்றவேண்டும்," என்கிறார் அவர். "அசையாமல் நிற்கும் பொருளாதாரம் முன்னேறத் தொடங்குவதே, முக்கிய விஷயம். அவ்வாறு முன்னேறுவதற்கு பொருள் உற்பத்தி, விநியோகம், ஜனங்களின் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் முதலில் மாறுதல்கள் ஏற்படவேண்டும். பாரசீகரின்

வாழ்க்கைத்தரமே பொருள் உற்பத்தி பெருகுவதற்குத் தடையாக இருக்கிறது. வயலில் உழைத்துவரும் தொழிலாளர்கள் மாறி மாறி வேலையை விட்டுவிட்டு இரண்டு மணி நேரம் மலேரியாக்குளிரைப்போக்க வெயிலில் போய் உட்கார்ந்திருப்பதால் வேலை செய்யக்கூடிய நேரம் எவ்வளவோ வீணுகிறது. அடிப்படையான தேவைப் பொருள்கள் மலிவாக முதலில் அவர்களுக்குக் கிடைக்கவேண்டும்."

அதிர்ஷ்டவசமாக ஈரானின் ஏழு வருஷத்திட்டத்தை மேற்பார்வையிடும் அமெரிக்க அதிகாரியான மாக்ஸ் தார்ன்பர்க் அதே கருத்தை வெளியிட்டிருக்கிருர். அவர் தலைமையில் திட்டம் முதலில் கவனிக்கவேண்டிய வேலைகளை முதலில் எடுத்துக்கொண்டு எஃகுத் தொழிற்சாலைகளைப் பற்றியும் எஞ்சின் உற்பத்தி சாலைகளைப்பற்றியும் பிறகு யோசிக்குமென எதிர்பார்க்கலாம்.

டெஹ்ரானுக்கருகே சமீபக் கிழக்கு ஸ்தாபனம் நிறைவேற்றிய பணியை தார்ன்பர்க் பின்பற்றலாம். இரண்டாவது உலக யுத்தம் முடிந்ததும் சமீபக்கிழக்கு ஸ்தாபனம் விவசாயிக்குச் செலவு ஒன்றுமில்லாமல் ஈரானில் முற்போக்கான விவசாய முறைகளைப் பழக்கப்படுத்தத் துணிந்தது. விவசாயிகள் பார்த்தார்கள். புதிய முறைகள் பலனைத் தந்தன வென்பதைக் கண்டதும், அவர்களும் அவற்றைப் பின்பற்றினுர்கள். கோடிக் கணக்கில் செலவிட்டு அணைக்கட்டுகள் கட்டும்வரை சமீபக் கிழக்கு ஸ்தாபனம் காத்திருக்கவில்லை. சொற்பச் செலவில் மோட்டார்கள் மூலம் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுத்து வயல்களுக்குப் பாய்ச்சியது. தண்ணீரைக் கண்டதும் விவசாயிகள் கிணறு தோண்ட ஏற்பட்ட செலவுக்குப் பணம் கொடுத்தார்கள்.

விவசாய முறைகளில் அபிவிருத்தியேற்பட்டதுபோல் மற்றத் துறைகளிலும் அபிவிருத்தி யுண்டாயிற்று. எழுத்தறிவின்மையைப் போக்க ஆரம்பப் பள்ளிகள் திறக்கப்பட்டன. மலேரியாவால் தொழிலாளரின் வேலைத்திறன் பாதிக்கப்பட்ட

தால் கொசு முதலிய பூச்சுசிகளை டீடீட்டி (D.D.T.) மூல கொல்ல ஏற்பாடுகள் நடந்தன.

இவற்றைப் பற்றி ஒரு கிராம விவசாயி கூறிய தமாஷான விஷயத்தை ஸ்தாபன அதிகாரியான லேல் ஜே. ஹேடன் குறிப்பிடுகிறார்: விவசாயி பூச்சிகள் எல்லாம் ஒழிந்தன என்பதை ஒப்புக்கொண்டார். ஆனால் அதனால் அறுவடை பாதிக்கப்படுமென்று அவர் சொன்னார். இரண்டுக்கும் என்ன சம்பந்தமென்பதை உணராத அதிகாரி அதெப்படிச் சாத்தியமென்று வினவினார். விவசாயி சொன்னார்: "நேற்று மத்தியானம் சாப்பிட்டவுடன் சிறிது ஓய்வு எடுத்துக்கொள்ளப் படுத்தேன். அப்படியே உறங்கிவிட்டேன். ஈயோ மூட்டைப் பூச்சியோ தொல்லைப்படுத்தாததால் சூரியாஸ்தமனத்திற்கு இரண்டு மணிநேரம் முன்புதான் நான் விழித்தேன். நான் எப்படி அறுவடையைக் கவனிப்பது?"

மாக்ஸ் தார்ன்பர்க் செயல் முறையில் ஈரானில் புகுத்த முயலும் பாடங்களையெல்லாம் அவர் துருக்கியில் மூன்று வருஷ காலமிருந்தபோது கற்றுக்கொண்டார். "துருக்கி, ஒரு பொருளாதார மதிப்புரை," என்ற புத்தகத்தில் அவற்றை அவர் தொகுத்திருக்கிறார்.

துருக்கியில் தேவையில்லாத புத்தம்புதிதான தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சோப், இருப்புக் கலப்பை முதலிய அத்தியாவசியமான பொருள்களை உற்பத்தி செய்யும் சிறு தொழிற்சாலைகள் இல்லை. மரக்கலப்பைக்கும் மாபெரும் தொழிற்சாலைக்கும் நடுவேயுள்ள மடுவைக் கடந்தாலொழிய உருப்படியான பொருளாதார திட்டம் பிறக்காது.

சிறிய அளவில் ஆரம்பியுங்கள் என்று தார்ன்பர்க் துருக்கியர்களுக்குக் கூறுகிறார். துருக்கிக்கு வேண்டிய ரயில்வண்டிகள் எத்தனையென்று கணக்கிட்டு கொண்டு இருக்காதீர்கள். ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து ஒழுங்காக நடத்துங்கள். ஐந்து லட்சம் டன் எஃகை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில்

உழைத்து உங்கள் முதுகெலும்பை உடைத்துக்கொள்ளாதீர்கள். ஐம்பது டன் இரும்பை உருக்கும் சாலையை முதலில் அமையுங்கள், என்கிறார் தார்ன்பர்க்.

தார்ன்பர்க்கின் புத்திமதியைத் துருக்கியர் முழுதும் ஏற்றுக்கொள்வார்கள் என்று சொல்வதற்கில்லை. பெருந்திட்டங்களில் மோகம் அதிகமிருப்பதால் அவையனைத்தையும் அவர்கள் ஒதுக்கிவைத்துவிட மாட்டார்கள். அவற்றில் பலவற்றைத் தள்ளிவைக்கவும் கூடாது. சிறு முயற்சிகளை முடிக்கும் வரை அவற்றை நிதானமாக எடுத்துக்கொள்ளலாம். அமெரிக்க முதலாளிகளும், அமெரிக்க சர்க்கார் பிரதிநிதிகளும் அவ்வாறு துருக்கியில் மட்டுமின்றி மற்ற எல்லா பின்தங்கிய நாடுகளிலும் வற்புறுத்தவேண்டும்.

மிகச் செலவுள்ள முன்னேற்றத் திட்டங்களைச் சில மத்திய கேந்திர நாடுகள் அமெரிக்க சர்க்கார் உதவியின்றி நிறைவேற்றியிருக்கின்றன. அதற்குக் காரணம் அந்நாடுகளில் எண்ணெய் உற்பத்தியாகிறது. எண்ணெயை வாங்க அமெரிக்கக் கம்பெனிகள் டாலர்களில் பணம் கொடுக்கத் தயாராயிருக்கின்றன. வெளிநாட்டில் அதிகமான மூலதனம் போட்டிருக்கும் அமெரிக்கக் கம்பெனி அராபிய அமெரிக்க எண்ணெய்க் கம்பெனி. அது 1948-ம் ஆண்டில் சவுதி அரேபியாவிலுள்ள 51 கிணறுகளிலிருந்து தினம் 2,60,000 பீப்பாய்கள் வீதம் எண்ணெய் எடுத்தது. அக்கம்பெனியில் வேலை செய்யும் அராபியர்கள் தினம் ஒரு டாலர் வீதம் சம்பளம் பெறுகின்றனர்.

பாலைவனம் மிகுந்த சவுதி அரேபியா நவநாகரிக நாடாவது சிரமமென்று தோன்றினும், தாம்மாம் என்ற இடத்தில் ஆழமுள்ள துறைமுகம் ஒன்றைக் கட்ட சர்க்கார் வேலை செய்து வருகிறது. அத்துறைமுகத்தை நாட்டின் தலைநகரான ரியாத்துடன் பிணைக்க 350 மைல் நீளத்தில் இருப்புப்பாதை போடப்படுகிறது. இம்மாதிரிப் பெரிய அராபியத் திட்டங்களில் நாலாவது அம்சம் பங்கெடுத்துக் கொள்ளாது. அதற்குப் பதில்,

பூமிக்கடியிலிருந்து தண்ணீர் எடுப்பதுபோன்ற பிரதானமான ஆக்க வேலைகளில் ஈடுபடும்.

அரேபியாவின் முக்கியத் தேவை தண்ணீர். பழங் காலத்தில் செழிப்பான நிலங்கள் அரேபியாவில் இருந்தனவென்பதை ஆல் டாய்ப் என்ற ஊருக்குச் சமீபத்திலுள்ள புராதன நீர்த் தேக்கங்கள் நிரூபிக்கின்றன. அச்செழிப்பை மீண்டும் அரேபியாவில் நிலைநாட்டவேண்டுமென்ற எண்ணம் காலஞ்சென்ற பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் உள்பட பல அமெரிக்கர்களை வசீகரித்திருக்கிறது. "எனக்குத் தெரிந்த ரூஸ்வெல்ட்" என்ற நூலை எழுதிய ஸ்ரீமதி பிரான்ஸிஸ் பெர்க்கின்ஸ் ஜனாதிபதி ஒரு சேனை எஞ்சினீயருடன் நடத்திய ருசிகரமான சம்பாஷணையை வெளியிட்டிருக்கிறார். ஜனாதிபதி யால்ட்டாவிலிருந்து அமெரிக்கா திரும்பும்போது அவருடைய விமானம் சவுதி அரேபியாமீது பறந்து சென்றது.

அங்கே தாவர வர்க்கங்கள் இல்லாததைக்கண்ட ரூஸ்வெல்ட் இங்கே ஏதாவது ஏன் விளைவிக்கக்கூடாது? இந்நிலத்தில் "ஒன்றும் விளையாதா?" என்று கேட்டார்.

"நிலம் நல்ல நிலம்தான். தண்ணீர் கிடைத்தால் அதை உபயோகப்படுத்தலாம்," என்று பதில் சொன்னார் எஞ்சினீயர்.

"நீர்ப்பாசனம் செய்வதுதானே அவர்கள்?" என்றார் ஜனாதிபதி.

"நீர்ப்பாசனம் செய்யத் தண்ணீரில்லாததால் அவர்கள் நீர்ப்பாசனம் செய்ய முடியாது," என்றார் எஞ்சினீயர்.

ஜனாதிபதி :—கொஞ்சமாவது தண்ணீர் இங்கே இருந்துதான் ஆகவேண்டும். ஜனங்கள் தண்ணீரைக் குடிக்க வேண்டுமே. விலங்குகளுக்குத் தண்ணீர் காட்டவேண்டுமே.

எஞ்சினீயர் :—ஆமாம். அங்கங்கே சில கிணறுகள் இருக்கின்றன. பசும்புல்தரைகள் இருக்கின்றன. அவ்வளவு

தான். தண்ணீரை அதிகவிலைக்கு இங்கு விற்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே."

ஜனாதிபதி :—சரி. அவர்களுக்குக் கிணறுகள் எப்படிக் கிடைத்தன ? தோண்டுகிறார்கள் அல்லவா ?

எஞ்சினீயர் :—ஆமாம்.

ஜனாதிபதி :—நிலப்பரப்புக்கு எவ்வளவு அடியில் தண்ணீர் தோன்றுகிறது ?

எஞ்சினீயர் :—சுமார் 50 அடி ஆழத்தில்.

ஜனாதிபதி :—அங்கே நிறையத் தண்ணீர் கிடைக்கிறதா ?

எஞ்சினீயர் :—கிடைக்கிறது.

ஜனாதிபதி :—அப்படியானால் நல்ல பம்புகளைக் கொண்டுத் தண்ணீர் இறைத்து நிலத்தை நீர்ப்பாசனம் செய்வதுதான் வழிபோலிருக்கிறது.

எஞ்சினீயர் :—அதிலொன்றும் பலனில்லை. இறைக்கும் தண்ணீரால் பூமி குளிருவதற்குள் தண்ணீர் ஆவியாகிவிடும். அவ்வளவு வெப்பம் இங்கே. நிலம் வரண்டு வெடித்து நிற்கும்.

ஜனாதிபதி :—ஆனால் இரவில் குளுமையாக இருக்கிறதே. ஏன் இரவில் தண்ணீர் இறைக்கக்கூடாது ? பூமி குளிருவதற்கும், நேரம் இருக்குமே. உணவு உற்பத்தி செய்வது சாத்தியமே. பூமிக்கடியில் தண்ணீர் இருக்கிறதென்றால், எப்படியாவது உணவு உற்பத்தி செய்யலாம்.

அராபிய மன்னரான இப்ன் சவுதை ஜனாதிபதி சந்தித்த போது இதைப் பிரஸ்தாபித்தார். பாலைவனத்தில் நீர் எடுக்க உதவி செய்யும் அமெரிக்கக் கம்பெனிகள் தயாராயிருக்கும் என்று ரூஸ்வெல்ட் கூறினார்.

மன்னர் அதில் அக்கரை கொண்டவராகக் காணேம் " எனக்கு வயசாச்சு, விவசாயம் எனக்கு வராது. என் சகோ தரன் மகன் பட்டத்துக்கு வந்தால் அவனுக்கு ஒருவேளை இதில் அக்கரை தோன்றினுலும் தோன்றலாம்," என்று மன் னர் பதிலளித்தார்.

ஜனுதிபதி இதை ஸ்ரீமதி பெர்க்கின்ஸிடம் சொல்லும்போது மேலும் கூறினுர் : "ஆனுல் அந்த யோசனையில் விஷயமிருக் கிறது. சமீபக் கிழக்கில் கிளர்ச்சி தோன்றுவதற்குக் காரணம் அங்குள்ள மக்கள் அவ்வளவு ஏழைகளாயிருப்பதால்தான். சாப்பிடுவதற்குப் போதுமான உணவு அவர்களுக்கில்லை. போதிய வேலையுமில்லை. அவர்களுக்கு வேண்டிய உணவு கிடைக்க வேண்டும். அதையும் அவர்களே உற்பத்தி செய்யவேண்டும். அதுவே அப்பிரதேசங்களிலுள்ள அதிர்ச்சியான நிலைமையை மட்டுப்படுத்தும். பாலஸ்தீனத்தில் யூதர்கள் செய்திருப்பதைப் பார்."

ஜனுதிபதி சிறிது யோசனையிலாழ்ந்துவிட்டு மீண்டும் பேச லுற்றுர் : " அமெரிக்க ஜனுதிபதியாயிருப்பது தீர்ந்ததும், இந்த பாழாய்ப்போன யுத்தம் நின்றபிறகு, நானும் என் மனைவி எலீனுரும் சமீபக்கிழக்குச் செல்லுவோம் என்று நினைக் கிறேன். அந்நாட்டை எவ்விதத்திலாவது உருப்படுத்த டென் னஸ்ஸி பள்ளத்தாக்கு நிர்வாகம்போல ஏதாவது செய்ய முடியுமா என்று பார்ப்பேன். அதைச் செய்ய எனக்குப் பிரியமாயிருக்கும், " என்றுர் ரூஸ்வெல்ட்.

மாரிஸன்-நட்ஸென் என்ற அமெரிக்கக் கம்பெனி ஒன்று இருக்கிறது. வேண்டிய பணம் கொடுத்தால் அது ஒரு தேசத்தையே தொழில் வளத்தில் ஐந்நூறு ஆண்டுகள் முன் னேறும்படிச் செய்துவிடும். கோடிக்கணக்கான டாலர்கள் செலவு செய்யப்படும் திட்டங்களைத்தான் அக்கம்பெனி ஒப்புக் கொள்ளுகிறது.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது பாதைகள் கட்டவும் தொழிலை வளர்க்கவும் ஒரு திட்டத்தை ஆரம்பிக்க ஆப் கனிஸ்தான் சர்க்கார் தீர்மானித்தது. ஆப்கனிஸ்தானம் ரஷ் யாவுக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள நாடல்லவா? திட் டத்துக்கு] வேண்டிய உதவியை அமெரிக்காவிலிருந்து பெறு வதை ரஷ்யா ஆட்சேபித்திருக்கும். ஆனால் அப்போது ரஷ் யர்கள் ஸ்டாலின்கிராட்டைக் காப்பதில் மும்முரமாகவிருந்தனர். இதைக் கவனிக்க அவர்களுக்கு நேரமில்லை. ஆகவே ஆப்கன் மராமத்து மந்திரியான மகம்மது கபீர்லுட்டீன் ஏலம்விட்டார். மாரிஸன்-நட்ஸென் வெற்றிபெற்றது. 1946-ம் ஆண்டில் 160 லட்சம் டாலர் பெறுமான காண்டிராக்ட் அக்கம்பெனிக்குக் கிடைத்தது. ரஸ்தா வேலைகள் 1947-ம் ஆண்டில் தொடங் கின.

அமெரிக்கக் கம்பெனி ஆப்கனியர்களுக்குத் தொழில் நுட் பத்தில் பயிற்சி அளித்துவருகிறது. ஆக்கவேலை முடிந்ததும் ஆப்கனியரே பாதைகளையும், மெஷின்களையும், நீர்ப்பாசனக் கால்வாய்களையும் கவனித்துக்கொள்வர்.

ஈரானைப்போலவே ஆப்கனிஸ்தானத்திலும் அஸ்திவாரம் போடுவதற்குள் கட்டிடத்தை எழுப்பக்கூடிய ஆபத்து இருக்கிறது. நாலாவது அம்சம் ஆப்கனிஸ்தானத்தில் சிறிய சீர்திருத்தங் களைக் கவனிக்கும். உதாரணமாக, ஆப்கனிஸ்தானத்தில் அநேகமாக இருப்பவை மண்குடிசைகள். மண் உலர்ந்து வெடித்துவிடுவதால், குடிசை ஆட ஆரம்பித்துவிடுகிறது. செங் கற்களால் சுவர்களைக் கட்டும்படி ஆப்கனியரைத் தூண்டினால், அசுத்தம் குறைந்து, சுகாதாரம் விருத்தியாகும். அதேபோல, ஆப்கனிஸ்தானத்தில் பள்ளிகளை ஆரம்பிக்கக் கட்டிடங்களுக்குக் குறைச்சலில்லை. ஆனால் உபாத்தியாயர்கள் போதாது. உபாத் தியாயர்களின் எண்ணிக்கை அதிகமானலொழிய அந்நாட்டில் புதிய கல்விமுறையைப் புகுத்தமுடியாது. புதிய கல்விமுறை தோன்றினலொழிய ஆப்கனியர் தங்கள் பொருளாதார முன் னேற்றத் திட்டங்களைத் தாங்களே கண்காணிக்க முடியாது.

பொருளாதார நிலைமையில் மாறுதல் ஏற்படுமுன் தொழில் ஸ்தாபனங்களை அமைப்பதிலுள்ள ஆபத்தை ஸிரியா நன்கு விளக்கியிருக்கிறது. யுத்த காலத்தில் ஸிரியா முதலாளிகள் பஞ்சாலைகளையும் கண்ணுடித் தொழிற்சாலைகளையும் கட்டினர் கள். துணியையும் கண்ணுடியையும் வாங்குவதற்கு ஸிரியர் களிடம் பணமில்லை. உற்பத்தியான பொருள்கள் மற்ற அரபு நாடுகளிலும் செலவாகவில்லை. அதன் பலன் என்ன? மத்திய கேந்திர வறுமை அதிகமாயிற்று. ஈராக்குடன் ஸிரியா ஐக்கியமாக வேண்டுமென்ற கிளர்ச்சி. ஸிரியாவில் ஓராண் டிற்குள் மூன்று ராணுவப் புரட்சிகள்.

மூவாயிரமாண்டுகளுக்குமுன் பாலஸ்தீனம் ஆப்ரஹாமுக் கும் அவன் சந்ததியாருக்கும் கடவுள் வாக்குத் தத்தம் செய்த இடமாயிருந்தது. ஆனால் முதல் உலக யுத்தத்தின் இறுதியில் மற்ற மத்திய கிழக்கு நாடுகளைப் போலவே பாலஸ் தீனமும் வறுமை பீடிக்கப்பட்டிருந்தது. இன்றும் சுதந்திர நாடான இஸ்ரேல் வறுமையில்தான் வாழ்கிறது. ஆனால் ஒன்றரை ஆண்டுகளில் 1949-ம் வருஷ இறுதியில் பொரு ளுற்பத்தி 20 சத விகிதத்துக்குமேல் அதிகமாகியிருக்கிறது.

முதல் உலக யுத்தத்துக்குமுன் பாலஸ்தீனத்தில் 60,000 யூதர்கள் இருந்தனர். இரண்டாவது உலக யுத்தம் ஆரம்ப மாகும்போது 5,00,000 யூதர்கள் அங்கே வசித்தனர். இன்று இரு மடங்கு அதிகமாக வாழ்கின்றனர். 1948-ம் ஆண்டில் அவர்கள் அரபுகளோடு போர்புரிந்துவந்த காலத்திலும் ஆக்க வேலைகளை மறக்கவில்லை. எகிப்திய விமானங்கள் மேலே பறந்து கொண்டிருந்தாலும் அவர்கள் நிராம் என்ற இடத்தி லிருந்து நெகவ் பாலைவனத்துக்கு ஐம்பது மைல் நீளத்துக்குத் தண்ணீர்க் குழாய்களைக் கட்டிக்கொண்டிருந்தனர். அப்பிர தேசத்தில் 6,00,000 ஏகர் நிலத்தை மீட்க முடியுமென யூதர்கள் கூறுகின்றனர்.

எனினும், வெளிநாட்டு மூலதனம் கிடைக்காததால் இஸ்ரேலின் பொருளாதார முன்னேற்றம் தடைபட்டு வருகிறது. புது கட்டிடங்களுக்கு முனிஸிபல் வரி விதிக்காமலும், மெஷின்களைச் சுங்கவரியின்றி இறக்குமதி செய்ய அனுமதித்தும், எட்டு வருஷங்களில் தொழிற்சாலைகளின் விலையை மீட்க முதலாளிகளுக்குச் சலுகை தந்தும் இஸ்ரேலி சர்க்கார் வெளிநாட்டு முதலாளிகளை வரவேற்க முயலுகிறது. ஆனால் அயல்நாட்டு முதலாளிகளுக்கோ, தொழிலாளர்களின் சம்பளம் அமெரிக்காவிலிருப்பதுபோல் உயர்ந்திருப்பதும், தற்கால மெஷின்களும் வசதிகளும் இஸ்ரேலில் இல்லாமலிருப்பதும், ஸோஷலிஸக் கொள்கையைச் சர்க்கார் ஏற்றுக் கொள்ளலாமென்பதும் பயத்தை விளைவிக்கிறது.

டென்னஸ்ஸி பள்ளத்தாக்கு நிர்வாகத்தின் தலைமையதிகாரியும், சமீபத்தில் மத்திய கேந்திரப் பொருளாதார பிரச்னைகளை ஆராய்ந்த கமிட்டியின் தலைவருமான கார்டன் ஆர். க்லாப் சமர்ப்பித்த அறிக்கையை ஐக்கிய நாடுகள் நிர்வாகம் பரிசோதித்து வருகிறது. மத்திய கேந்திர நாடுகளனைத்தையும் சுபிட்சமாக்கக்கூடிய ஜோர்டன் பள்ளத்தாக்கு நிர்வாகத் திட்டத்தைப்பற்றி அவர் அதில் மிக உற்சாகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜோர்டன் பள்ளத்தாக்குத் திட்டத்தை உருவாக்கியவர் அமெரிக்க நில நிபுணரான டாக்டர் வால்டர் ஸி. லவுடர்மில்க் என்பவர். பாலஸ்தீனத்தில் நீர்ப்பாசன நிலமாகவுள்ள 1,00,000 ஏகர்களைப் பத்து வருஷங்களில் ஏழு மடங்கு அதிகமாக்கவும், இன்னும் இருபது லட்சம் ஜனங்கள் அதிகமாக அப்பிரதேசத்தில் வசிக்கவும், மின்சார உற்பத்திக்கும் திட்டம் போடப்பட்டிருக்கிறது. திட்டத்தின் செலவு சுமார் 28 கோடி டாலர்கள்.

பாலஸ்தீனம்மீது விமானத்தில் செல்லும்போது லவுடர்மில்குக்கு ஜோர்டன் பள்ளத்தாக்குத் திட்டத்தைப் பற்றி

யோசனை தோன்றியது. ஜோர்டன் நதி, அதன் உபநதிகள் ஆகியவற்றின் நீரை என் தடுத்து வரண்டு கிடக்கும் பிரதேசத் துக்குக் கால்வாய்கள் மூலம் பாய்ச்சக்கூடாது என்று நினைத் தார். ஜோர்டன் நதியைத் தடுத்தால் அது பாயும் சாக்கடல் வற்றிப்போகும். ஆனால் அக்கடல் வற்றுமலிருக்க உயரத் திலிருக்கும் மத்தியதரைக் கடலிலிருந்து நீரை அதற்குப் பாய்ச்சலாமே. அவ்வாறு கொண்டுவரப்படும் ஜலம், 1,200 அடி உயரத்திலிருந்து கடலில் விழுந்தால் அதைப் பயன் படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் என்று லவுடர் மில்க் யோசித்தார்.

இத்திட்டத்தைப் பூர்த்தி செய்ய அரபு நாடுகளின் கூட்டுறவு வேண்டும். அத்தகைய கூட்டுறவு கிடைத்தால் பொது ஸ்தாப னங்களிலிருந்தும் தனிப்பட்டோரிடமிருந்தும் திட்டத்துக்கு மூல தனம் கிடைக்கலாம். அமெரிக்க எஞ்சினீயரான ஜான் எல். ஸாவாஜ் திட்டத்தின் செலவை ஐம்பது வருஷங்களில் மீட்கலாம் என்று மதிப்பிடுகிறார்.

இஸ்ரேலில் திறமையான எஞ்சினீயர்களும் தொழில் முத லாளிகளும் இருந்த போதிலும் கிலாப் கோஷ்டியார், ஜோர்டன் பள்ளத்தாக்குத் திட்டம் சம்பந்தப்பட்ட நாடுகள் அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நிலையை இன்னும் அடையவில்லை யெனக் கூறியிருக்கிறார்கள். ஜோர்டன் பள்ளத்தாக்குத் திட டத்தை ஆரம்பித்து நடத்தும்போது அதன் பயனாக அரசியல் மாறுதல்களும் ஏற்படலாம். மத்திய கேந்திரம் ஸ்திரமடைய அரபு-யூத லீக் அல்லது சமஷ்டி உருவாகலாம்.

உலகத்தின் அன்னையானப் புராதன பாபிலோனில் மூன்று கோடி மக்கள் வாழ்ந்து வந்தனராம். அதன் சந்ததியான இன்றைய ஈராக்கில் அந்த ஜனத்தொகையில் பத்தில் ஒரு பங்குகூட இல்லை. எகிப்தைப்போல் நிலம் தரிசானதால் பாபி லோன் நாகரிகம் வீழ்ச்சியடையவில்லை. சாதாரண நீர்ப்பாசன முறையால் இன்றும் ஈராக்கில் யேசு பிறப்பதற்கு 500 ஆண்டு

களுக்கு முன்பிருந்த செழிப்பை உண்டாக்கலாம். 1939-ம் ஆண்டுக்குப் பிறகு நீர்ப்பாசனத்துக்குத் தகுதியான இரண்டு கோடி ஏகர்களில் 50 லட்சம் ஏகர் நிலம் டைகரிஸ் நதிமீதுள்ள குட் அணைக்கட்டிலிருந்தும் யூப்ரடீஸ் நதியிலுள்ள ஹின்டியா அணைகட்டிலிருந்தும் தண்ணீரைப் பெற்றது.

இன்னும் 10 அணைக்கட்டுகள் கட்டுவதன் மூலம் 3,75,000 நிலத்தைச் சாகுபடி செய்யத் திட்டமிருக்கிறது. ஈராக் தன் ரஸ்தாக்களையும் விஸ்தரித்து வருகிறது. கிழக்கே ஈரானிலிருந்து மேற்கே மத்தியத்தரைக் கடல் துறைமுகப் பட்டினமான ஸிரியாவின் ட்ரிபோலி வரை ஒரே இருப்புப் பாதையை ஏற்படுத்த வேலைப்பாடுகள் நடந்து வருகின்றன.

மேற்சொன்ன திட்டங்கள்கூட அப்பிரதேசத்திலுள்ள செழிப்பான பூமி முழுவதையும் பயன்படுத்திக் கொள்ளாது. பிரதேசம் முழுவதும் சுபிட்சமடைய நியூயார்க் எஞ்சினீயரான லாஸரஸ் வைட் என்பவர் ஒரு திட்டத்தை வெளியிட்டார். அவர் திட்டம் ஈராம் மட்டுமின்றி ஸிரியா, லெபனுன், ஜோர்டன், துருக்கி, பாலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கும் பயன்படும். ஒரு வாய்க்காலை நதி விழுங்கிவிடுவதுபோல் இத்திட்டம் ஜோர்டன் பள்ளத்தாக்கு நிர்வாகத் திட்டத்தையே தன்னுள் அடக்கிக் கொள்ளும்.

ஸிரியாவில் மெஸ்கின் என்ற இடத்தில் யூப்ரடீஸ் நதியை அணைகட்ட வைட் யோசனை கூறுகிறார். அணைக்கப்பட்ட தண்ணீர் குழாய்கள் வழியாகப் பாலைவனத்தைக் கடந்து டமாஸ்கஸுக்கு எடுத்துச் செல்லப்படும். அதன் வழியே ஜோர்டன், லிட்டானி, யார்முக் நதிகளிலிருந்தும் அது தண்ணீரைப்பெறும். அத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் இஸ்ரேல் தண்ணீரைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. தன் ஜனத்தொகையை நாலு மடங்கு பெருக்கிக் கொண்டாலும் அது சமாளிக்கலாம்.

"தேவையான ஆராய்ச்சிகள் பூர்த்தியாகும்வரை யூப்ரடீஸ் திட்டத்தின் செலவை மதிப்பிடக்கூட முடியாது. முதலில்

இஸ்ரேல், ஜோர்டன், லெபனுன், ஸிரியா, ஈராக், துருக்கி ஆகிய சம்பந்தப்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்றுய்ச் சேர்ந்து உட்கார்ந்து அதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும். அவ்வாறு செய்யவே இன்னும் அந்நாடுகள் ஆரம்பிக்கவில்லை. அதற்குப் பதில், தங்கள் தனித் திட்டங்களால் எவ்வளவு தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அவ்வளவு பயன்படுத்திக் கொள்ளவும் மற்ற நாடுகள் முதலில் அதை அநுபவிக்க முடியாதபடி செய்யவும் ஒவ்வொரு சர்க்காரும் முனைந்து வருகிறது.

பாலஸ்தீன யுத்தத்தால் மனக் கசப்பு ஏற்பட்டிருந்தாலும், மத்திய கேந்திரம் அமெரிக்காவைச் சுயநலமற்ற நண்பனுக்கீடாக மதிக்கிறது. அச்சந்தர்ப்பத்தை அமெரிக்கா பயன்படுத்திக் கொண்டால், மத்திய கேந்திரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான சூழ் நிலையைச் சிருஷ்டிக்கலாம். மத்திய கேந்திரம் ஸ்திரமாக இருந்தால் மற்ற எல்லா பாகங்களை ஸ்திரமாக்குவது சுலபமாகும்.

# ஆசியாவை ஆசியர்கள்தாம் காப்பாற்ற வேண்டும்

## தென்கிழக்கு ஆசியா

யுத்த பிற்கால நிகழ்ச்சிகளைக் கொண்டு பார்த்தால், தூரக் கிழக்குப் பிரதேசத்திலுள்ள முக்கிய பூமியைக் கம்யூனிஸத் திடமிருந்து காப்பாற்ற முடியுமென்று நம்புவதற்கில்லை. அதுவும் அமெரிக்கா அதைக் காப்பாற்ற முடியுமென நம்புவதற்கில்லை.

யுத்த தளவாடங்களுக்காகவும், மற்ற பொருள்களுக்காகவும் கோடிக் கணக்கான டாலர்களை அமெரிக்கா உதவியாக அளித் தும் தேசீய சீன சர்க்கார் அழுகிய ஆப்பிளைப் போல விழுந்தது. சீன மக்கள் ஜப்பானியரை எதிர்த்ததுபோல் தீவிரமாகக் கம்யூ னிஸ்டுகளையும் எதிர்த்திருந்தால் கம்யூனிஸ்டுகள் வெற்றியடைந் திருக்க முடியாது. பணத்தாலும் ராணுவ உதவியாலும் சீனு விலிருந்து கம்யூனிஸ்டுகளை அமெரிக்கா விரட்டியிருந்தாலும், சீனு வெகுண்ட காலனியாகவே அமெரிக்காவின் தோளில் வீற்றிருக்கும்.

ஆப்பிரிக்கா, மத்திய கேந்திரம், ஐரோப்பா ஆகிய பிரதேசங் களைப் போலவே ஆசியா விஷயத்திலும் ஓர் உண்மையைச் சொல்லலாம். மொத்தத்தில் யாரையும் எதனிடமிருந்தும் அமெரிக்கா காக்க முடியாது. அவையே தம்மைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு சந்தர்ப்பமளிப்பதுதான் அமெரிக்கா செய்யக் கூடியது.

அமெரிக்காவின் பழங்கால நேச நாடாகிய சீனுவை அமெ ரிக்கா காப்பாற்ற முடியவில்லையெனில், பிரஞ்சு இந்தோ-சைனு, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு அமெரிக்கா என்ன செய்ய முடியும்?

பறிப்பதற்குத் தயாராயுள்ள பழங்களைப் போல இம்மக்களை விடத் தயாராக வேறு யார் இருக்க முடியும்? அடிக்கடி ஊழல்கள் நிறைந்த சர்க்கார்களால் இம்மக்கள் ஆளப்படுகிறார்கள். அவர்கள் பொல்லாத ஜமீந்தாரி முறையால் கட்டுண்டுக் கிடக்கிறார்கள். காலனி ஆட்சியையும் வெள்ளையர் இறுமாப்பையும் வெறுக்கும் இவர்கள் "ஆசியா ஆசியருக்கே" என்ற சுதேசக் கோஷம் கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள். அமெரிக்கக் கொள்கையிலுள்ள தயக்கங்கள் வேறு அவர்களுக்கு மனத் தளர்ச்சி உண்டுபண்ணியிருக்கிறது.

இந்த நிலைமையில், எவ்வித மாறுதலும் நல்லதுக்குத் தான் என்று அவர்களுக்குத் தோன்றுவது இயற்கைதானே. சீனாவைப் பிடித்துவிட்டு, மற்ற பிரதேசங்களில் தங்கள் கை வரிசையைக் காட்ட கம்யூனிஸ்டுகள் ஆயத்தம் செய்து வருவதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது?

பௌதிக வாதத்தை நீங்கள் நையாண்டி செய்யலாம், தூஷிக்கலாம். ஆனால் வாழ்க்கைத் தரம் குறைந்த அளவுக்கும் கீழே போய்விட்டால் உடல் மட்டுமல்ல ஜீவனும் க்ஷீணதசை அடைகிறது. பன்னிரண்டு வயதில் கணவனுக்கு வாழ்க்கைப் படும் இந்தியப் பெண்ணை எடுத்துக் கொள்ளுங்கள். புள்ளி விவரங்கள்படி அவள் பத்து குழந்தைகளோ இன்னும் அதிகமாகவே பெற வேண்டுமென அவள் தலையில் எழுதியிருக்கிறது. அக் குழந்தைகளில் ஒன்றாவது பிறக்கும்போதே இறந்துவிடும். இன்னும் மூன்றோ சிசுக்களாகவே மரணமடையும். அதிர்ஷ்டமிருந்தால், மிஞ்சியிருக்கும் குழந்தைகளில் ஒன்று என்றைக்காவது ஒரு நாள் தன் பெயரைத் தானே எழுதக் கற்றுக் கொள்ளலாம். இது அவள் விதியென்றால் அவளுக்குச் சுகமேது? சொரணையற்றபடி நடப்பது நடக்கட்டும் என்றுதான் உற்சாகத்தை இழந்துவிடுவாள்.

வாழ்க்கையில் ஒளி வீசும் என்று அவள் எதிர்ப் பார்ப்பதற்கில்லையென்றால், அவளது கணவன் கதிமட்டுமென்ன? பிரகாச

மான திட்டங்களைப் பற்றி நினைக்க அவனுக்கு அவகாசமேது, உற்சாகமேது ? எந்த வேனிற் காலத்திலும் 1943-ம் ஆண்டின் வங்காளப் பஞ்சம் போன்ற நெருக்கடி ஏற்படலாம். வங்காளப் பஞ்சம் குறைந்தது 15 லட்சம் ஜனங்களைப் பலியாகக்கொண்டது. நல்ல காலத்தில்தான் என்ன ? மரக் கலப்பையைக் கொண்டு அரை காணி நிலத்தை உழுது உயிர்த்தப்ப வேண்டும். முப்பது வயதை எட்டிப்பார்க்கும் முன்பு அவனுக்கு ஜீவன் போனாலும் போய் விடலாம். சுடுகாட்டில் பிடி சாம்பலாய்ப் போவதுதான் அவன் கண்ட வாழ்க்கையின் நியதி.

கம்யூனிஸத்தினின்றும் தென் கிழக்கு ஆசியாவைப் பாது காக்க அமெரிக்காவுக்கு வழிகள் இருக்கின்றன. ஒவ்வொன் றும் ஓரளவுக்குப் பலனை அளிக்கும்.

1. ஜனநாயகம், முதலாளித்துவம் ஆகிய அரசியல் பொரு ளாதாரத் தத்துவங்களின் அழகையும் ஆற்றலையும் அவர்க ளிடம் வர்ணிக்கலாம். துரதிர்ஷ்டவசமாக, அவர்கள் அதைப் புசிக்க முடியாது.

2. அமெரிக்கா அங்குள்ள சர்க்கார்களுக்குப் பண உதவி அளிக்கலாம், கட்டாயம் அளிக்கவும் செய்யும். பண உதவி யால் அமெரிக்காவுக்குப் பிற்காலத்தில் ஏற்படக்கூடிய பலன் என்னவென்று பார்ப்பதானால், 1945-ம் ஆண்டிலிருந்து 1949-ம் ஆண்டுவரை சீனாவில் அமெரிக்கா 300 கோடி டாலர்களைப் போட்டதினால் நேர்ந்த பலன் ஒரு திருஷ்டாந்தமாக விளங்கும்.

3. அமெரிக்கா மெதுவாக அப் பிரதேசத்தில் உள்நாட்டுச் சீர்திருத்தங்களை ஆதரிக்கலாம்—சீனாவில் செய்ததுபோல.

4. தேசீயத்தை வளர்க்கலாம். நாளைத் தள்ளிப் போடுவ தற்கு அது சரியான பேரம். எத்தனை நாட்களுக்கு அதனால் பலனுண்டு என்பது முன்பு அந்நிய ஆட்சியின் கீழ் இருந்த வர்கள் சுதந்திரமடைந்துவிட்டபோதிலும், முன்போலவே உணவற்றுத்தான் கிடக்கிறோம் என்பதை உணர ஆகும் நாட் களைப் பொறுத்திருக்கிறது.

5. கம்யூனிஸத்தை எதிர்த்து ஓர் ஆசிய ஐக்கிய அணியை உண்டாக்கி, அதற்குப் பக்கபலமளிக்க ஒப்புக் கொள்ளலாம். ஆனால் பெயரளவிலாவது கம்யூனிஸ்ட் புரட்சிகள் சுதேசிகளைக் கொண்டு தோன்றுவது சகஜமாகையால், அமெரிக்கர்கள் யாரை எதிர்த்துப் போராடுவார்கள் ?

மேற் சொன்ன யோசனைகளை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். அவற்றிற் சிலவற்றினால் ஏதாவது பயனேற்படலாம். கீழ்த்திசை வாசிகளின் வாழ்க்கைத் தரம் உயரும்படி சாமர்த்தியமான திட்டத்தை மும்முரமாக நிறைவேற்றினாலொழிய மேற் சொன்ன யோசனைகள் நீடித்த பலனைத் தரா.

கீழ்த்திசை வாசிகளின் வாழ்க்கைத் தரத்தை அமெரிக்கா தன் முயற்சியாலேயே உயர்த்திவிட முடியாது. ஒரு கரண்டியைக் கொண்டு நான் ஏரியை வற்ற முயலுவதுபோலத்தான் முடியும். ஏரியின் கீழ்ப் பாகத்திலுள்ள அணையில் ஒரு துவாரம் பண்ணினால், ஏரியின் நீர் மட்டம் தானாகவே விழுந்துவிடும். தூரக் கிழக்குப் பிரதேசம் முன்னேறுவதைத் தடுத்துவரும் அணைக்கட்டில் துவாரம் பண்ணுவதுதான் இன்று அமெரிக்காவுக்கிருக்கும் முக்கிய பணிகளில் ஒன்று.

“முதலாளித்துவத்துக்குச் சாதகமாக மக்களுக்கு உருப்படியானது ஏதாவது காண்பியுங்கள்,” என்றார் பாகிஸ்தான் பொக்கிஷ மந்திரி குலாம் மஹம்மது (இப்போது கவர்னர்-ஜெனரல்). அவர் மேலும் சொன்னார் : “அமெரிக்காவில் ஒரு சதுர மைலில் 42 பேர் வசிக்கிறார்கள். எங்கள் நாட்டில் 229 பேர் வசிக்கிறார்கள். உங்களது உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை காப்பாற்றிக் கொள்வதில் நீங்கள் அக்கறை கொண்டிருப்பதாக நீங்கள் எங்களிடம் சொன்னால், என் நாட்டினர், எக்கேடாவது கெட்டுப் போங்கள், என்று பதில் சொல்லி விட்டு, மற்றவர்கள் பக்கம் திரும்புவார்கள்.”

அமெரிக்க ராணுவ உற்பத்தியால் அமெரிக்கா மற்றொரு நாட்டைப் பாதுகாப்பதற்குத் தனக்குள்ள வலிமையைப்பற்றி

அதிகமான மதிப்பு வைத்திருக்கிறதென்று குலாம் மஹம்மது கூறினர். "கம்யூனிஸம் விஸ்தரித்து வருவதைத் தடுக்க அதைவிட நிச்சயமான வழி இருக்கிறது. எந்த ஆசிய சர்க்காரும் உதவியின்றிச் சாதிக்க முடியாததைச் சாதித்துக் காட்டுங்கள். ஒரு தானியம் விளையும் இடத்தில் இரு தானியங்கள் விளையும்படி செய்ய உதவுங்கள்," என்றார் அவர்.

தென்கிழக்கு ஆசியாவின் தேவையே அதுதான் எனில், பதில் கையிலேயே இருக்கிறது. கீழ்நாடுகளில் உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்கக் கூடிய தொழில் நுட்பங்கள் இருக்கின்றன. பல இப்போதே செயல் முறையில் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

உதாரணமாக, ஆடு மாடுகளுக்குக் காணும் கோமாரி நோய் விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அந்நோய் ஆசியா பூராவும் வருஷத்துக்கு இருபது லட்சம் ஆடு மாடுகளை அழித்து விடுகிறது. சீனவில் மட்டும் பத்து லட்சம் ஆடு மாடுகளை அது கொன்று விடுகிறது. நிலத்தை உழுவதற்குச் சீன விவசாயிகள் பசுவையும் எருமையையும் நம்பியிருக்கிறார்கள்.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது நடந்த போராட்டத்தில் கோமாரி நோய்தான் தோல்வி அடைந்தது. இக் கொடிய நோயை அமெரிக்காவில் புகுத்த ஜெர்மானியர் சூழ்ச்சி செய்து வந்தார்கள் என்பதை பிரிட்டிஷ் உளவாளிகள் கண்டு பிடித்தார்கள். அமெரிக்க சர்க்காரின் ஒத்துழைப்போடு ஒரு ரகசிய ரஸாயன ஆராய்ச்சி சாலை ஸெண்ட் லாரென்ஸ் நதியைச் சேர்ந்த ஒரு தீவில் அமைக்கப்பட்டது. அங்கே நடந்த சோதனைகளின் பயனாகக் கோமாரி நோயை நிச்சயமாகத் தொலைக்கக் கூடிய கோமாரி நோய் வாக்ஸின் என்ற மருந்து கண்டு பிடிக்கப்பட்டது.

அம் மருந்தைச் சொற்பச் செலவில் அபரிமிதமாய் உற்பத்தி செய்ய 1948-ம் ஆண்டில் தேசீய சீன சர்க்கார் ஒத்துழைப்போடு

ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய நிர்வாகம் ஒரு வழியை அநுஷ்டித்தது. உள்நாட்டு யுத்தம் தென்சீனாவுக்குப் பரவு முன், அங்கே 150 லட்சம் மிருகங்களுக்கு ஊசி குத்தும் திட்டம் நடந்து வந்தது. பத்து வருடங்களில் அதிக செலவில்லாமல் கோமாரி நோயின் தொல்லையை உலகத்திலிருந்தே நீக்கிவிடலா மென்று உணவு விவசாய நிர்வாகம் மதிப்பிடுகிறது.

அடுத்தபடி அரிசி, உலகத்திலுள்ள மக்களில் பாதிபேருக்கு அது முக்கிய உணவு. இன்று விளையும் நெல் மிகவும் குறைவு. எல்லோருக்கும் போதாது. யுத்த காலத்தில் சாகுபடி செய்யா மல் விடப்பட்ட ஒன்றரை கோடி ஏக்கர் நிலத்தில் இன்னும் உழவு துவக்கவில்லை. இன்னும் இரண்டரை கோடி ஏக்கர்களில் நெல் விளையலாம். இன்று அந்நிலம் தரிசாகக் கிடக்கிறது. ஒவ்வொரு வருஷமும் பூச்சி அரிப்பதாலும், ஒழுங்காகச் சேமித்து வைக்காததாலும் 120 லட்சம் டன்கள் அரிசி நஷ்ட மாகிறது, அதாவது சர்வதேச வியாபாரத்துக்கு வரும் அள வுக்கு நாலு மடங்கு அதிகம். அடிக்கடி, போக்குவரத்து சாதனமின்மையால் எல்லா அரிசியும் சாலைக்கு வருவதும் முடியாமல் போகிறது. விற்பனைக்கு வரும் அரிசியிலும் பத்தி லிருந்து 25 சத விகிதம் உணவுச் சத்து அதிகமாகத் தீட்டப் படுவதாலும் சரியாகச் சமைக்காததாலும் நஷ்டமாகிறது.

நெல் உற்பத்தியை அதிகரிக்க கோடி-டாலர் திட்டங்கள் தேவையில்லை. அபிவிருத்தி செய்யப்பட்ட நெல்லையும் இப் போது கிடைக்கும் நெல்லையும் வைத்துக்கொண்டே விளைவைப் பத்து சத விகிதத்துக்குமேல் அதிகரிக்கலாம் என்று உணவு விவ சாய நிர்வாகம் அறிவிக்கிறது. நோயைத் தடுக்கும் விதைவகை களை உபயோகித்தால் உற்பத்தி 50 சத விகிதம் அதிகரிக்கலாம்.

ஜனங்களுக்கு எப்படி என்று காண்பித்துக் கொடுத்தால் அவர்கள் அரிசியை ஒழுங்காகச் சேமித்து வைக்க முடியும். பூச்சியால் அழிவுறுவதைக் குறைக்க முடியும். உணவுச் சத்து குறையாதபடி அரிசியைத் தீட்டிச் சமைக்க முடியும்.

அதிக அரிசி இருந்தால், மக்கள் வயிருரச் சாப்பிடலாம். வயிறு நிறைய உண்டிருப்போர் மலேரியா போன்ற நோய்களுக்கு அதிகமாய் இலக்காக மாட்டார்கள். ஸயாமில் மட்டும் ஒரு வருஷத்தில் **30** லட்சம் பேர் மலேரியாவால் வாடுகின்றனர்.

இந்தியாவில் ஓராண்டுக்கு நாலு கோடி டன்கள் உணவுத் தான்யங்கள் விளைகின்றன. இருபத்தைந்து கோடி டாலர் செலவில் **25** லட்சம் டன்களை வெளி நாடுகளிலிருந்து தருவிக்கிறது. எனினும் இந்தியருக்கு உணவு போதாது. இந்தியாவில் யுத்த காலத்திலிருந்த உணவுப் பங்கீடு முறை இன்னும் அமுலிலிருந்து வருகிறது. இரண்டு கோடி இந்தியர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு பத்து அவுன்ஸ் உணவுத் தானிய ரேஷன் கிடைக்கிறது. எனினும் இந்தியாவில் போதிய உணவுக்கும் போதாத உணவுக்குமுள்ள வித்தியாசம் பத்து சத விகிதம்தான். நாலு கோடி டன்களுக்குப் பதிலாக **4.44** கோடி டன்கள் விளைந்தால் இந்தியாவில் உணவுத் தேவை நீங்கிவிடும்.

இந்தியா இன்னும் அதிகமாக உணவை உற்பத்தி செய்ய முடியுமா என்பதைப்பற்றி ஒரு கேள்வியுமில்லை. ஓர் ஏக்கர் நிலத்தில் இந்தியன் **1,133** பவுண்டு அரிசி விளைவித்தால், அமெரிக்கன் **2,293** பவுண்டு அரிசி விளைவிக்கிருன். இந்திய நிலத்தில் **1,133** பவுண்டு அரிசிதான் விளைய வேண்டுமென்று பூமிதேவி தீர்மானித்திருக்கவில்லை. அமெரிக்காவில் நிலத்தைத் தயார் செய்வது போல் இந்தியாவில் செய்தால் அங்குள்ள விளைவே இந்தியாவிலுமிருக்கும்.

ஆசியாவின் மற்ற பகுதிகளைப் போலவே இந்தியாவிலும் பயிர்களை அதிகப்படுத்த வசதி இருக்கிறது. உணவு விவசாய உற்பத்தி டைரக்டரான டி. ஆர். சேத்தி **1945**-ம் ஆண்டில் சொன்னுர் : நீர்ப்பாசன முறையால் மட்டும் விளைவை ஐம்பதிலிருந்து **100** சத விகிதம் வரை அதிகரிக்கலாம். எருவும் உரமும் போடுவதால் **20** அல்லது **30** சத விகிதம் அதிகமாக்கலாம். ஒன்பது கோடி ஏக்கர், அதாவது இந்தியாவில்

சாகுபடி செய்யக் கூடிய நிலத்தில் 26 சத விகிதம்—உபயோகப் படாமலிருக்கிறது.

நூதனமான விவசாய முறைகளைக் கற்றுப் பயனடைய ஆசியர்கள் தயாராயிருக்கிறார்கள். வட இந்தியாவில் அலகா பாத்திலிருக்கும் மிஷனரி அலகாபாத் விவசாயச் சங்கம்போன்ற பள்ளிகளின் அநுபவங்களிலிருந்து இது நன்கு விளங்கும். அலகாபாத் விவசாயச் சங்கம் இந்திய உழவுச் சாலின் அக லத்தை இருமடங்காக்க எஃகு கலப்பைகளைத் தயாரித்தது. சுதேசிகள் உடனே அவற்றைப் பெற விரும்பினர். பால் உற்பத்தி பெருகச் சங்கம் பசுக்களின் இனங்களைக் கலந்தது. இந்தியர்கள் அதைப் பின்பற்றினார்கள்.

கீழ்க்கோடிப் பிரதேசங்களுக்கு வேண்டிய உணவை உற் பத்தி செய்யும் வேலையில் ஒரு பகுதியைத்தான் மேற்சொன்ன எளிய, செலவற்ற திட்டங்கள் சாதிக்க முடியும். அதிமுக்கிய மாக நிலச் சீர்திருத்தம் அவசியம். திறமையாக சாகுபடி செய்வது சாத்தியமாகும்படி பாத்திகள் பெரிதாயிருக்க வேண்டும். மாறுபட்ட உரம் போடும் வழக்கம் உண்டாகவேண் டும். செயற்கை உரம் விவசாயிகள் வாங்கக்கூடிய மலிவான விலைக்குக் கிடைத்தால்தான் அது சாத்தியமாகும். நீர்ப்பாச னத்துக்கும் இன்னும் அதிக தண்ணீர் கிடைக்க வேண்டும். என்றாவது ஒரு நாள் பண்ணைகளில் மெஷின்களை உபயோகித் தாக வேண்டும். இம்மாறுதல்கள் ஏற்பட நாளாகும், பணமும் அதிகம் செலவாகும்.

தென்கிழக்கு ஆசியாவில் சாதாரணமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் நிலம்கூடக் கிடையாது. அதற்கு மாறாக அமெரிக் காவில் ஒரு பண்ணை 145 ஏக்கர் விஸ்தீர்ணமுள்ளது. ஆசியா வில் அடிக்கடி நிலம் துண்டுகளாகப் பிரிக்கப்படுகிறது. நிலச் சீர்திருத்தமும் விவசாயி முன்னேற்றமடையக் கூட்டுறவு சங்க மும் ஏற்படுத்துவதாகக் கோஷ்டமிட்டுச் சீனாவில் கம்யூனிஸ்டு கள் வெற்றியடைந்தார்கள். சீனாவின் கதி தங்களுக்கும் நேரக்

கூடாதெனில், கீழ்க்கோடியின் மற்ற நாடுகளில் நிலச் சீர்திருத்த மும் கூட்டுறவு இயக்கமும் அத்தியாவசியமாகும்.

உரமிடும் வழக்கம் அபிவிருத்தியடைய வேண்டும். "கீழ் நாடுகளில் வழங்கிவரும் விவசாய முறைகள் மிகக் கடின மான பரிட்சையில் தேறியிருக்கின்றன. பழைய காடையும் நீலக் கடலேயும் போன்று அவை நிரந்தரத்தன்மை பெற்றவை. உதா ரணமாகச் சீனுவிலுள்ள சிறு வயல்களில் இன்னும் விளைவு குறையாமலிருந்து வருகிறது. நாற்பது நூற்றுண்டுகளின் உப யோகத்துக்குப் பிறகும் செழிப்பு குலையவில்லை," என்று ஸர் ஆல்பர்ட் ஹோவர்ட் கூறுகிருர். அது வாஸ்தவமாயிருக்கலாம்.

ஆனுல் மற்ற புள்ளி விவரங்கள் அவ்வளவு உற்சாகமான காட்சியை அளிக்கவில்லை. சீனுவில் 13,40,00,000 ஏக்கர்களும், இந்தியாவில் 16,70,00,000 ஏக்கர்களும் இனி உபயோகப்படாத அளவுக்குச் சீரழிந்து விட்டன என்று புள்ளி விவரங்கள் அறி விக்கின்றன. சீனுவில் காடுகள் அழிக்கப்பட்டதால் நாட்டில் நாசத்தை விளைவிக்கும் வெள்ளங்கள் அடிக்கடி தோன்று கின்றன. தென்கிழக்கு ஆசியா முழுவதுமே நிலம் பல இடங்களில் செழிப்பிழந்து கிடக்கிறது. பசுச் சாணத்தை நிலத் திலும் போடாமல் அடுப்பிலிட்டு எரிப்பதால், இந்தியாவில் நிலம் பழுதடைகிறது. வைக்கோலே உரமாக உபயோகிக்காமல் மாட் டுக்குத் தீனியாகக் கொடுக்கிருர்கள். அடுப்பு மூட்டுவதற்கும் ஆடுமாடுகளுக்குத் தீனி போடுவதற்கும் வேறெதையும் வாங்க விவசாயியிடம் பணமில்லேயாதலால், அவனே எவ்வளவு தூண்டி ணுலும் அப் பழக்கங்களே விட்டுவிடமாட்டான்.

பண்ணைகளில் மெஷின்களே உபயோகிப்பதென்பது உடனே சாதிக்க வேண்டிய வேலேயல்ல. மற்ற பின்தங்கிய பிரதேசங் களேப் போலவே தென்கிழக்கு ஆசியாவிலும் நல்ல அரிவாளே யும் மனிதர்களுக்குப் பதிலாக எருதுகளேயும் கோவேறுக் கழுதைகளேயும் உபயோகிப்பதால் மகத்தான அபிவிருத்தியைச் சாதிக்கலாம். இறுதியில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின்

உதவியால் தனிப்பட்டவர்களோ கோஷ்டிகளோ விவசாய மெஷின்களை வாங்கிக் கொள்ளலாம்.

தொழில் வளத்தில் மத்திய கேந்திரத்தைவிடத் தென் கிழக்கு ஆசியா முன்னேறியிருக்கிறது. ஆகவே, பெரிய அபி விருத்தித் திட்டங்களால் பயனடையக் கூடிய சக்தி அதற்கு இருக்கிறது. மலிவாக உரம், மின்சார சக்தி, நிலப் பாது காப்பு முறைகள், தண்ணீர் ஆகியவற்றைத் தரும் டென்னஸ்ஸி பள்ளத்தாக்கு நிர்வாகம் போன்ற பிராந்திய அபிவிருத்தித் திட்டங்களை வரவேற்க இப்பிரதேசம் தயாராக இருக்கிறது. அத்தகைய பல திட்டங்கள் இதற்குள்ளாகவே ஆரம்பிக்கப்பட் டிருக்கின்றன, அல்லது ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

உதாரணமாகக் கீழ் இலங்கையில் மாரிஸன்-நட்ஸென் என்ற அமெரிக்கக் கம்பெனிப் பெரிதான கால் ஓயா அணையைக் கட்டி வருகிறது. அதனால் நீர்ப்பாசனம் விருத்தியாகும். மின் சார உற்பத்தி பெருகும். வெள்ளங்கள் கட்டுப்படுத்தப்படும். ஓர் அமெரிக்கன் உபயோகிக்கும் மின்சார சக்தியில் நூற்றில் ஒரு பங்குதான் இன்று ஓர் இலங்கைவாசி உபயோகிக்கிறான். கால் ஓயா அணைக்கட்டு 1953-ம் ஆண்டுக்குள் 1,20,000 ஏக்கர் களுக்கு நீர் பாய்ச்சும். அதனால் 5,00,000 பேர்களுக்குப் போதிய உணவு உற்பத்தியாகும். மற்றும், கிடைக்கும் மின்சார சக்தி 20 சத விகிதம் அதிகமாகும். இன்னொரு முன்னேற்றத் திட்டம் யோசிக்கப்பட்டு வருகிறது. அதனால் 2,50,000 ஏக்கர் களுக்குத் தண்ணீர் கிடைக்கும். 50,000 கிலோவாட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்யலாம்.

ஸயாமின் முக்கியமான நெல் உற்பத்தி பிரதேசமாகிய மத்திய சமவெளியில் ஸயாமியர் சாவ் பியா திட்டத்தை நிறை வேற்றி வருகிறார்கள். ஐம்பது லட்சம் ஏக்கர் நிலத்தைப் பாதிக் கும் பதினாலு தனி நீர்ப்பாசனத் திட்டங்கள் அதில் அடங்கி யிருக்கிறது.

சீக்கிரத்தில் நிறைவேறக் கூடிய மாபெருந் திட்டம் இந்தியாவில்தான் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தற்சமயம் அவசியமாயுள்ளது 44 லட்சம் டன் தானியங்களெனினும், இந்திய சர்க்கார் அதிகப்படியாக ஒரு கோடி டன் தானியம் உற்பத்தி செய்ய முயலுகிறது. அநேகமாக எல்லா முக்கிய நதிகளுக்கும் அணைகள் கட்ட இந்தியா திட்டம் போட்டிருக்கிறது. கோசி, டிஸ்டா, கோதாவரி, துங்கபத்ரா, திராங்கர், சம்பால், தாமோதர், கேஷவ், பக்ரா, லார்ஜி என்ற அழகான பெயர்களுடைய நதிகளுக்குத் திட்டங்கள் தயாராகியிருக்கின்றன. அணைக் கட்டுகள் வெள்ளங்களைக் கட்டுப்படுத்தி, நிலத்தைச் செழிப்பாக்குவதுடன், ஐம்பது லட்சம் ஏக்கர்களுக்குத் தண்ணீர் வசதியளிக்கும். இந்தியாவின் மின்சார உற்பத்தியையும் நாலு மடங்கு அதிகரிக்கும். அதனுல் இந்தியா முதல்தர தொழில் வள நாடுகளில் ஒன்ருக விளங்கும்.

உலக உணவு பற்ருக்குறைத் தற்சமயம் பத்து சத விகிதத்துக்கு மேலிராது என நாரிஸ் இ. டாட் மதிப்பிட்டிருக்கிருர். கீழ்த்திசை நாடுகளைப் பொறுத்தவரை, "ஜனத்தொகை பெருகினுல் இப்போதுள்ள உணவு பற்ருக் குறையைப் போக்கி, ஏராளமான உணவு உற்பத்தி செய்யலாம்," என்று அவர் கூறுவது பொருந்தும் எனவே தோன்றுகிறது.

ஆனுல் மலேயா, பர்மா, இலங்கை, பிரஞ்சு இந்தோ-சைனு, ஸயாம் ஆகிய நாடுகளில் நூதன விவசாய முறைகளைப் பரிச்சயப் படுத்துவதற்கு அவகாசமில்லாமல் போகலாம். இந் நாடுகளுக்கும் சக்தி பொருந்திய கம்யூனிஸ்ட் சீனுவுக்கும் நடுவே ராணுவச் சுவரை எழுப்பினுலொழிய, விவசாயச் சீர் திருத்தத்தைப் பூர்த்தி செய்வது இயலாத காரியம்.

இக்காரணத்துக்காக, அமெரிக்கா இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் உதவி செய்வதில் மும்முரமாக ஈடுபட வேண்டுமென வாஷிங்டனில் செல்வாக்குடையவர்களிற் சிலர் வற்புறுத்தி வருகின்றனர். இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் உள்ள சர்க்

கார்கள் பலம் பொருந்தியவை. கம்யூனிஸ்ட் இயக்கம் அந் நாடுகளில் இன்னும் செல்வாக்குப் பெறவில்லே. பொருளா தாரச் சீர்திருத்தம் ஏற்பட்டால் புரட்சியையோ படையெடுப்பை யோ எதிர்த்துத் தடுக்கலாம் என்று அவர்கள் தர்க்கம் செய்கின்றனர்.

சீனக் கம்யூனிஸ்டுகளுக்குக் கிடைத்த வெற்றிகளே அவர்கள் ஜீர்ணிப்பதற்கு நாளாகுமென்றும், அதுவரை ஆசியாவின் மற்ற பாகங்களில் அமைதி நிலவலாம் என்றும் வைத்துக் கொண்டாலும், நிலச் சீர்த்திருத்தமும், உணவு உற்பத்திப் பெருக்கமும் மட்டும் கீழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப் போதா.

உணவு அதிகமாகக் கிடைக்க ஆரம்பித்தால் ஜனத்தொகை யும் பெருகும் என்பதை நாம் ஆராய்ந்திருக்கிரேம். ஆகை யால், விவசாய அபிவிருத்தியைத் தொடர்ந்து, தொழில்வள முன்னேற்றத்துக்கும் சமூக சீர்திருத்தத்துக்கும் அடிகோலும் விரிவான திட்டங்களேத் துரிதமாக நிறைவேற்றிலுலொழிய, முன்போலக் கஷ்டமான வாழ்க்கையை அதிக ஜனங்கள் அனுப விப்பார்கள்.

ஜனத்தொகைப் பெருக்கத்தை தொழிலபிவிருத்தி சமா ளிக்கவேண்டுமாகையால் துரிதமாகத் திட்டங்களே மேற் கொள்ளுவது அவசியமாகிறது. "தொழிலபிவிருத்தி நிதான மாக நிறைவேறிலுல், பிறப்பு விகிதாசாரம் குறைவதற்கு அதிக காலம் தாமதமாலுல், ஆசிய நாடுகளில் வறுமை உழன்று வரும்," என்று சர்வதேசத் தொழிலாளர் காரியால யம் கூறுகிறது.

மேற்கு ஐரோப்பாவில் தொழிலியல் புரட்சியுண்டானபின் எழுபத்தைந்து ஆண்டுகள்வரைப் பிறப்பு விகிதாசாரம் அங்கே உயர்ந்தே இருந்தது. மரண விகிதாசாரம் விழுந்து வந்தது. அம்மாதிரி ஜனத்தொகைப் பெருக்கம், இப்போதே அதிக

ஜனத்தொகையுள்ள ஆசியாவில் பொருளாதார அபிவிருத்திக்கு ஆபத்தாக விளையும்.

ஆகையால் இந்தியாவின் தொழிலபிவிருத்தித் திட்டமான பம்பாய்த் திட்டம் மொத்த வருமானத்தை 15 ஆண்டுகளில் மூன்று மடங்கு அதிகமாக்க முற்படுகிறது. சராசரி வருமானம் இரட்டிப்பாகும். மெதுவாகவும் சிறிது சிறிதாகவும் தொழில்கள் வளருவதை அத்திட்டம் ஆதரிக்கவில்லை.

அதிக ஜனத்தொகையுள்ள விவசாய நாடு பல நூற்றுண்டுகளுக்குப் பின்தங்கியிருந்து விட்டு, ஒரே மூச்சில் ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் விடச் சீக்கிரமாகத் தொழில் வளத்தை பெருக்கத் தீர்மானித்தால், அதற்குப் பல இடையூறுகளும் முட்டுக் கட்டைகளும் இருக்கின்றன வென்பது வாஸ்தவம். ஆனால் கடந்த நூற்றுண்டில் இல்லாத மூன்று அனுகூலங்கள் தென்கிழக்கு ஆசியாவுக்கு இருக்கின்றன. இப்போது உற்பத்தி நுட்பங்கள் முன்னேற்றமடைந்திருக்கின்றன. பழைய காலத்தைப் போலச் சோதனைகளில் காலத்தையும் பொருளையும் விரயப்படுத்த வேண்டியதில்லை. அக்குத்தொக்காக இல்லாமல், விரிவான திட்டப்படி தொழில்களை விஸ்தரிக்கலாம். மூலதனமும் மெஷின்களும் மட்டுமின்றி தொழில் நுட்பமும் பயிற்சியும் கூட அந்நிய நாடுகளிலிருந்துப் பெறலாம். இன்னும் ஒரு வசதியும் தென்கிழக்கு ஆசியாவுக்கு இருக்கிறது. முழு நேரத்துக்கு வேலையில்லாத ஜனங்கள் ஏராளமாயிருக்கின்றனர். அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதனுல் ஏற்படக்கூடும் அநுகூலத்தைப் பொதுவாக மேனுட்டுப் பொருளாதார நிபுணர்கள் குறைந்தே மதிப்பிட்டிருக்கிறுர்கள்.

இந்தியா விஷயத்தில் தொழில்வள அபிவிருத்திக்கான அடிப்படை இப்போதே இருக்கிறது. பின்தங்கிய தேசமாயினும், தொழில் வளத்தில் அது சீனுவைக் காட்டிலும் நூறுண்டுகள் முற்போக்கானது. அந்த வித்தியாசம் இந்திய வருமானத்தில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தியிலிருந்து நன்கு

விளங்கும். வருமானம் மிகவும் மெதுவாக அதிகரித்து வருகிற தென்றாலும், தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 1867-68-ம் ஆண்டில் தலைக்கு 44.2 ரூபாய் வருமானமாயிருந்தது, 1895-ம் ஆண்டில் 55.2 ரூபாயாகவும், 1929-ம் ஆண்டில் 78 ரூபாயாக வும் அதிகரித்திருக்கிறது. 1935-ம் ஆண்டில் இந்தியாவில் ஒரு நபருக்கிருந்த மூலதனம் அமெரிக்கனின் மூலதனத்தில் ஐந்தில் ஒரு பங்குதான் எனினும், அது சீன தேசத்தவனது மூலதனத்துக்கு மூன்று மடங்கு மேலானது.

தொழில்வள அபிவிருத்திக்கு வேண்டிய மின்சாரம் புது வசதிகள் மூலம் கிடைப்பது அத்தியாவசியம். அதனால்தான் கீழ்க்கோடி அணைக்கட்டுகள் மூலம் மின்சார உற்பத்தி செய்வது அவ்வளவு முக்கியத்துவத்தை அடைந்திருக்கிறது.

ஆசியாவில் எவ்வளவு குறைவாக மின்சாரத்தை உபயோ கிக்கிறார்கள் என்பதைச் சாதாரணமாக ஓர் அமெரிக்கன் உணர முடியாது. கண்டத்தில் உற்பத்தி செய்யக்கூடிய மின்சார சக்தி யில் ஐந்து சத விகிதம்தான் இப்போது பயனாகிறது. இந்தியா வும் பாகிஸ்தானுமாகச் சேர்ந்து, நாற்பது கோடி ஜனங்கள் ஓராண்டில் பதினைந்து கோடி அமெரிக்கர்கள் ஒரு வாரத்தில் உபயோகிக்கும் மின்சார சக்தியைத்தான் உபயோகிக்கிறார்கள். ஜனத்தொகையில் நூற்றில் 90 பேருக்கு மின்சார வசதியே கிடையாது. ஜனத்தொகைப்படி கணக்கிட்டால் ஆசியர்களைப் போல் 180 மடங்கு அமெரிக்கர்கள் மின்சாரத்தைச் செலவு செய்கிறார்கள். ஆகையால், புதிதாக மின்சார சக்தியை உற் பத்தி செய்ய வேண்டுமென்று பம்பாய்த் திட்டம் முதலில் வற்புறுத்துகிறது.

அத்திட்டத்தில் இரண்டாவது முக்கியத்துவம் பெறுவது போக்கு வரத்து அபிவிருத்தி. சிறிய வண்டிகள், கோவேறுக் கழுதைகள், கழுதைகள், மனுஷ்யத் தோள்கள் போக்குவரத்து சாதனங்களாக விளங்கும் ஒரு நாட்டில் விளை பொருள்கள் உள்ளூரிலேயேதான் செலவாக வேண்டும்.

ஒரு சமவெளியில் பஞ்சமிருக்கலாம். குன்றுகளுக்கப்பால் அடுத்துள்ள சமவெளியில் வீணுகப் போகுமளவுக்கு உணவு உபரியாயிருக்கலாம். சீனுவைப்பற்றிப் பின்வருமாறு சொல்வதுண்டு. "ஷாங்ஹாயிலுள்ள ஆலே முதலாளிகளுக்கு ஷென்ஸி மாகாண விவசாயிகள் தங்கள் தானியத்தை வெகு மதியாகக் கொடுக்கிருர்களென்று வைத்துக்கொள்வோம். அப்போதுகூட அதை ஷென்ஸியிலிருந்து ஷாங்ஹாய்க்குக் கொண்டு வருவதைக் காட்டிலும், தானியத்தை ஸியேட்டிலிலிருந்து இறக்குமதி செய்வது மலிவாக இருக்கும். ஹாங்சோவில் அரிசி விலே 10 டாலர் என்ருல் அதே மாகாணத்தில் மலேப் பிரதேசங்களில் அரிசி விலே 15 டாலராக இருக்கிறது. கிழக்குக் கடற்கரைப் பிரதேசத்தில் கோதுமை விற்கும் விலேயில் பத்தில் ஒரு பங்குதானிருக்கும் ஷெஷ்வான் பிரதேசத்தில். சீனுவில் சில பகுதிகளில் நெல் விளேவிக்க ஆகும் செலவைவிட அதிகமாக ஆகும் அதை 50 மைல் தூரத்துக்கு எடுத்துச் செல்ல." போக்கு வரத்து சாதனங்களேப் பொறுத்த வரை, இந்தியா சீனுவைவிட உயர்ந்த நிலேயில் இல்லே.

தொழிற்சாலேகள் கிளம்புமுன், தொழில் கல்வி பெருக வேண்டும். எழுத்தறிவற்றவர்கள் மெஷின்களே ஓட்ட முடியாது. தொழிற்சாலேகளில் உற்பத்தியாகும் பொருள்களுக்குக் கிராக்கி இருக்க வேண்டும். அவற்றை வாங்கக் கூடிய சக்தி ஜனங்களுக்கிருக்க வேண்டும். வயல்களில் நூதன விவசாய முறைகளால் விளேயும் அதிகமான உணவை வாங்க முடியும்படி தொழிற்சாலேகளில் வேலே செய்யும் தொழிலாளர்களின் வருமானம் அமைய வேண்டும். "இல்லேயெனில், அதிகமாக விளேவிக்கப்பட்ட விவசாயப் பொருள்கள் விற்காமல் குவிந்து போகும், அல்லது நெருக்கடி தோன்றக் கூடிய அளவுக்கு விலேகள் குறைந்து போகும்," என்று உணவு விவசாய நிர்வாகம் குறிப்பிட்டுக்காட்டுகிறது.

தென்கிழக்கு ஆசியாவில் வெற்றியடையக்கூடிய முன்னேற்றத் திட்டங்களேச் சாதாரணமாகத் தனிப்பட்ட முயற்சியோ

கம்பெனிகளோ நடத்த முடியாது. அமெரிக்காவிலேயே அம் மாதிரித் திட்டங்களைச் சர்க்காரோ அல்லது பிராந்திய நிர்வாகங் களோ நிறைவேற்றுகின்றன. தேசீய அளவில், சில சமயங் களில் சர்வதேச அளவில் அவற்றைத் தயாரிக்க வேண்டி யிருக்கிறது. சர்க்கார்களுக்குச் சக்தியை யளிக்கும் திட்டங்களை அமெரிக்கரின் தனிப்பட்ட மூலதனம் ஆதரிக்கலாமா? அவ் வாறு ஆதரிப்பதால் அமெரிக்க வாணிபம் கடைப்பிடிக்கும் தனிப்பட்டோர் முயற்சிக் கொள்கைக்கே ஈனம் ஏற்படாதா?

இந்தியாவைப்போல், அவசரமாகக் காரியத்தை நிறை வேற்றவேண்டிய இடங்களில் தனிப்பட்டோர் மூலதனத்தைப் போட அக்கரை காட்டுமுன்பே பொதுஜன மூலதனம் வேண்டி யிருக்கும் என்பதை யாவரும் தெரிந்து கொள்ள வேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்களில் உதவி செய்வதற்கு நிபந்தனை யாகத் தனிப்பட்டோர் மூலதனத்தைப் பாதிக்கும்படியான நட வடிக்கை எதும் சர்க்கார் எடுக்கக்கூடாது என்று கேட்கலாம். இல்லையெனில் தனிப்பட்டோர் முயற்சி என்ற நாமதேயமே ஆசியாவிலிருந்து ஒருவிதமாக மறைந்துவிடும்.

இந்தியா தனக்கு டாலர்கள் தேவையென்பதை உணர்ந் திருக்கிறது. ஆகவே அது தனிப்பட்டோர் முயற்சி மீதுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தியிருப்பதுடன், பத்து வருஷங்களுக் குப் பாதுகாப்பும் அளிப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறது. பத்து வருஷங்களுக்குப் பிறகுத் தனிப்பட்டோர் முயற்சிக்கு ஆபத்து ஏற்படுமாவென்பது எதிர்பார்க்கமுடியாத பல விஷயங்களைப் பொறுத்திருக்கிறது. இந்திய, அயல்நாட்டு முத லாளிகள் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்பதும் அவற் றில் ஒன்றாகும்.

ஆசிய முதலாளிகளுக்கு வழிகாட்டிகளாகவும் நண்பர்க ளாகவும் துணை புரிவதே அமெரிக்க முதலாளிகள் செய்யக் கூடிய முக்கியமான பணிகளில் ஒன்றாகும். வாடிக்கைக் காரர்களுக்குச் சேவை புரிந்து தொழிலாளர்களைச் சரியாக நடத்

தும் முதலாளிகளே நீடித்து நல்ல லாபம் அடைவார்கள் என்பதை அநேக அமெரிக்க முதலாளிகள் அநுபவத்தால் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்தியத் தொழில் முதலாளிகள் ஒரு சிலரே. அவர்கள் கர்நாடகமானவர்கள். அவர்கள் அப் படிப்பினையை இதற்குள் அறிந்து கொண்டார்களா என்பது சந்தேகமே. தொழில் வளம் பெருகப் பெருக, ஆசியாவில் போட்டியை வளர்க்கவும், முதலாளிகளுக்குள் சீர்கேடான வியாபார வழக்கங்கள் தோன்றாமல் தடுக்கவும், வாழ்க்கைத் தரம் உயருவதைப் பாதுகாக்கவும் அமெரிக்க முதலாளிகள் உதவலாம்.

இந்தியாவின் இருப்புப் பாதை வசதிகளை விஸ்தரிக்கச் சமீபத்தில் இந்தியாவுக்குத் தனிப்பட்டோர் மூலதனத்திலிருந்து கடன் கொடுக்கப்பட்டது. அக்கடனால் கஷ்டம் நீங்குவது மட்டுமின்றி, தொழில் வளமும் அபிவிருத்தியாகிறது. நியூயார்க் டைம்ஸ் என்ற பத்திரிகை கூறியது போல "நடை முறையில் சாத்தியமாகக் கூடிய காரியத்துக்குத் திரும்பிப் பெறக்கூடிய கடன் கொடுக்கலாம் என்கிற எண்ணத்தில் 'ஏதோ உலகத்தில் நன்மை செய்யலாம்' என்ற கருத்து ஒன்றுமில்லை. அது நாலாவது அம்சத்தை நடத்தி வைப்பதாகும்."

ஆனால் பல திட்டங்கள் விஷயத்தில் தனிப்பட்டோர் மூலதனம் போடக்கூடிய தருணம் இன்னும் வரவில்லை. தனிப்பட்ட மூலதனத்தை வசீகரிக்கும் நிலைமை ஏற்பட முதலில் துணிச்சலான புதிய திட்டம் சுகாதாரம், விவசாய உற்பத்தி, தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

நாலாவது அம்சத்தில் யோசிக்கப்படும் திட்டங்களில் முதன்மையானது கீழ்க்கோடியில் நதி தீரத் திட்டங்களால் எவ்வாறு மின்சார உற்பத்தியோடு நிலத்தையும் பாதுகாக்கலாம், பிறகு தொழில்களைப் பெருக்கலாம் என்பதைக் காண்பிக்கும்.

மேற்கத்திய நாடுகள் வழிகாட்டியான திட்டங்களைத்தான் நிறைவேற்ற முடியும். பின்தங்கிய தேசங்கள் மற்றவைகளைத் தாமே கவனித்துக் கொள்ள வேண்டும். அமெரிக்கா ஆசியாவைக் கம்யூனிஸத்திடமிருந்து காப்பாற்ற முடியாது. ஆனால், அமெரிக்க உதவியுடன் ஆசியர்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள முடியும்.

# ஓஷினியாவும் சீனவும்

கிழக்கு ஆசியாவின் கழுத்தைச் சுற்றித் தீவுகளால் ஆக்கப்பட்ட மாலே பிரகாசிக்கிறது. பிடரில் ஜப்பான் இருக்கிறது. அத்துடன் தொங்கணியான நியூஜிலந்தைத் தங்க வளேயங்களான பார்மோஸா, பிலிப்பைன்ஸ், இந்தோனீஷியா, நியூகினி ஆகியவை பிணைக்கின்றன.

கீழ்நாட்டு அபிவிருத்தி திட்டங்களேப்பற்றிய முறையீடுகள் ஆசியாவின் முக்கிய நாடுகளிலிருந்து மட்டும்வரவில்லே. ஆசியாவின் கரைக்கு அப்பாலுள்ள இத்தீவுகளிலிருந்தும் வருகின்றன. "கீழ்க்கோடியிலுள்ள நாடுகளில் விவசாயத் தொழிலியல் நடவடிக்கைகளே அபிவிருத்தி செய்வது அவசியம். தேவையான பொருளாதார ஆராய்ச்சி செய்து, அமெரிக்கத் தொழில் நுட்பங்களேக் கற்றுக்கொடுக்க அமெரிக்க நிபுணர்கள் அப்பிரதேசங்களுக்கு அனுப்புவது உடனே செய்ய வேண்டிய காரியமாகும்," என பிலிப்பைன் தீவைச் சேர்ந்த ஜெனரல் கார்லோஸ் பி. ரோமுலோ 1949-ம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் மன்ருடினுர்.

கீழ்க்கோடி அபிவிருத்தி திட்டம் ஒன்றை நிறைவேற்ற பிரிட்டிஷ் டொமினியன்களும் அமெரிக்காவும் ஒத்துழைக்க வேண்டுமென ஆஸ்திரேலியப் பொருளாதார நிபுணரான டக்லஸ் பெர்ரி கோப்லண்ட் முறையிட்டார். ஆஸ்திரேலியா மட்டிலுமே அமெரிக்க மூலதனம் கிடைத்தால் ஓராண்டுக்குப் பத்து கோடியிலிருந்துப் பதினைந்து கோடி டாலர்கள் வரை உபயோகித்துக்கொள்ள முடியுமென அவர் மதிப்பிட்டார். ஆஸ்திரேலியாவைச் சுற்றியுள்ள மற்ற தீவுகள், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளுக்கும் அவர் திட்டம் மூலம் உதவி கிடைக்கும்.

ஓஷினியாவின் நன்மையைப் பொறுத்தவரை உலகத்தி லுள்ள மக்களில் பாதிபேர் பொருளாதார முன்னேற்றமடைய உண்டாக்கும் திட்டமே ஆசிய மாலையின் விலையெனத் தோன்று கிறது. அப்படிப்பட்ட திட்டம் ஒருவேளை மேற்கு ஐரோப்பா அமெரிக்கா ஆகிய இரு பிரதேசங்களின் உதவியைக் கொண்டு நிறைவேறலாம்.

ஓஷினியா முன்னேற்றத் திட்டத்தில் ஆசிய மாலையின் பிடிப்பாக விளங்கும் ஜப்பானைச் சேர்க்காமலிருக்க முடியாது. ஆனால் ஜப்பானைத் தெற்கே அடுத்துள்ள தீவுகள் நம்புவதற்கோ அதனுடன் சிநேக பாவத்துடன் பழகுவதற்கோ நாட்களாகும். அத்தீவுகள் ஜப்பானுடன் ஒத்துழைக்கத் தயாராயிருப்பினும் அவற்றிற்குரிய முன்னேற்றத் திட்டத்தை தென்கிழக்கு ஆசியா வின் முன்னேற்றத் திட்டத்துடன் இணைத்தாலும், முக்கியமான பிரச்னை தீராது. அம்முக்கிய பிரச்னை சீனு. சுற்றுப்புறத் தில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய சக்திகளுக்குச் சீனு நிலைக்களமாயிருக்கும்வரை, அத்தீவுகள் பாதுகாப்பற்றே விளங்கும்.

அமெரிக்கா ஆரம்பித்து பண உதவி செய்து, வற்புறுத்தும், முன்னேற்றத் திட்டம் அமெரிக்காவிடம் அவநம்பிக்கை கொள் வதில்தான் ஓஷினியாவையும் ஆசியாவையும் பிணைக்கும். ஆனால் நாம் விரும்பும் முடிவை அடைவதற்கு வேறு வழி இருக்கிறது.

ஆசிய நாடுகளே தங்களுக்குள் ராணுவ, ராஜீய, பொரு ளாதார ஒப்பந்தம் செய்துகொண்டால், அதன்பிறகு அமெரிக்கா நாலாவது அம்சத்தின்கீழ் உணவு உற்பத்தியைப் பெருக்க வும், தொழில்களை அபிவிருத்தி செய்யவும், வாழ்க்கைத் தரங்களை உயர்த்தவும் அந்நாடுகளுக்குத் தொழில் நுட்ப உதவி அளிக்கலாம்.

சீனு தனியாக நின்றுலும் மற்ற கீழ்க்கோடி நாடுகள் ஸ்திரமாக இருந்து, தங்கள் பிரச்னைகளைத் தர்க்க ரீதியான

முறைகளைத் தீர்த்துக்கொள்ள முயன்றால் கொஞ்சம் கொஞ்சமாக அமெரிக்காவிலிருந்து தனிப்பட்டோர் மூலதனம் கிடைக்கலாம். சாத்தியமான முன்னேற்றத் திட்டங்களுக்கு உலக பாங்கிலிருந்து கடன்கள் கிடைக்கலாம். ஓர் ஆசிய ஐக்கிய ராஜ்யம் ஏற்பட்டு, சம்பந்தப்பட்ட நாடுகளில் சமுதாய, பொருளாதார நிலைமை அபிவிருத்தி அடைந்தால், உலக வியாபாரப் பொருள்களை அனுபவிக்காத கம்யூனிஸ்ட் சீனாவுக்கு அத்தகைய ஐக்கிய ராஜ்யத்திடம் மதிப்பு இருக்கும். அப்படிப்பட்ட திட்டத்துக்கு அமெரிக்காவும் ஏராளமான உதவி செய்யலாம். ஆனால் ஆசியர்கள்தாம் ஆசியாவைக் காப்பாற்ற முடியும்.

துணிச்சலான புதிய திட்டம் தனிப்பட்ட முதலாளிகளின் ஆதரவை எதிர்பார்க்கும் அளவுக்கு அத்திட்டத்தில் குறை இருக்கிறது. முதன் முதலில் நாலாவது அம்சத்தின்கீழ் முன்வரும் தனிப்பட்டோர் மூலதனம் அமெரிக்காவுடன் ஒப்பிட்டால் பின்தங்கிய நாடுகள் என்று சொல்லக்கூடிய பிரதேசங்களுக்குப் போகுமே ஒழிய உண்மையிலேயே பின்தங்கிய தேசங்களுக்குச் செல்வது கடினம். அனுபவத்திலிருந்து பார்த்தால் இது நன்கு தெரியவரும். உதாரணமாக, கானடாவில் இப்போதே அமெரிக்க மூலதனம் 450 கோடி டாலர்கள் பெறுமானது. எத்தியோப்பியாவிலிருக்கும் அமெரிக்க மூலதனம் 20 லட்சம் டாலர்கள்தான். எனினும் அமெரிக்க முதலாளி சாதாரணமாகக் கானடாவுக்குப் பணம் அனுப்பத் தயாராயிருப்பாரே தவிர எத்தியோப்பியாமீது நாட்டம் செல்லாது. ஆனால் கானடாவைவிட எத்தியோப்பியாவுக்கே அந்நிய மூலதனம் அவசியம் வேண்டும். அதே போல அவர் இந்தோனிஷியா போன்ற பின்தங்கிய கீழ் நாடுகளுக்குப் பதில் ஆஸ்திரேலியாவுக்கு அல்லது நியூஜிலந்துக்குப் பணம் அனுப்புவது இயற்கை.

அமெரிக்கர்களைவிடத் தாங்கள் சுபிட்சமாக வாழ்வதாக நியூஜிலந்து வாசிகளுக்கு நினைப்பு. வேலையில்லாத் திண்

டாட்டமென்பதே நியூஜிலந்தில் கிடையாது. ஆகவே புதிதாக அயல் நாடுகளிலிருந்து ஜனங்கள் குடியேறினலொழிய அங்கே பொருளாதார அபிவிருத்திக்கு அதிக சந்தர்ப்பம் இல்லை. நியூஜிலந்திலும் ஆஸ்திரேலியாவிலும் இப்போதே முன்னேற்றத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

சென்ற நூற்றுண்டில் தூற்றுக்காடுகளை எரித்ததன் விளைவாக நிலம் பழுதுபட்டதை நியூஜிலந்து சரிப்படுத்திவருகிறது. காகித உற்பத்தியை 10 கோடி டாலர்கள் செலவில் விஸ்தரித்து வருகிறது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யும் இறைச்சியையும் பாலையும் 25 சதவிகிதம் அதிகரிக்கத் திட்டம் போட்டிருக்கிறது.

நியூஜிலந்தின் உத்தரத்தீவிலும் தக்ஷிணத்தீவிலும் மின்சார உற்பத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதிலிருந்து அந்நாட்டின் தொழில் விஸ்தரிப்பைப்பற்றி ஓரளவு தெரியவரும். உத்தரத்தீவில் காய்ட்டாவா, மராட்டாய், வாக்கமாரு ஆகிய இடங்களில் புது மின்சார உற்பத்தி சாலைகள் ஏற்படுத்தப்படுகின்றன. தக்ஷிணத்தீவில் வைட்டாகியிலும் டெக்காப்போவிலும் புதிய உற்பத்திசாலைகள் கிளம்புகின்றன. காப் நதி டாக்காக்கா நதியைச் சேர வருமிடத்தில் 1,500 அடி உயரத்திலிருந்து கீழே பாய்கிறது. அங்கேயுள்ள 12,000 கிலோவாட்டு மின்சார ஸ்டேஷன் 24,000 கிலோவாட்டுகள் சக்தியை உற்பத்தி செய்ய ஏற்பாடாகியிருக்கிறது. ராக்ஸ்பர்க் திட்டம் என்ற பெரிய நதித்தீரத்திட்டம் 1962-ம் ஆண்டில் பூர்த்தியானல் 3,60,000 கிலோவாட்டுகள் உற்பத்தியாகும்.

ஆஸ்திரேலியாவை எடுத்துக்கொண்டாலோ, அதன் வருமானம் 1947-48-ம் ஆண்டில் யுத்தத்துக்கு முன்னிருந்த வருமானத்துக்கு இருமடங்காகியிருக்கிறது. பிரஜைகள் வருமான விஷயத்தில், ஆஸ்திரேலியா செல்வம் மிகுந்த நாடுகளில் ஒன்றுகும். ராமி என்ற நாரிலிருந்து மலிவாகவும் சுலபமாகவும் நூல் தயாரிக்கும் முறையை ஷிட்னித் தொழில்

முதலாளியான மார்க் எம். ஒய்ஸ் என்பவர் கண்டுபிடித்திருப்பதிலிருந்து ஆஸ்திரேலியாவின் தொழில் நுட்பத்திறமை நன்கு விளங்கும். ராமியிலிருந்து பட்டைப்போல மெல்லிய துணி நெய்யலாம், அல்லது வலிமை பொருந்திய கயிறும் கூட தயாரிக்கலாம். அத்தோடு, பஞ்சாலை உற்பத்தியிலேயே ராமி ஒரு புரட்சியை உண்டுபண்ணுவதோடு, இன்னும் சிறிதுகாலத்தில் ஆஸ்திரேலியாவுக்கு கோடிக்கணக்கான பவுன்களைச் சம்பாதித்துத் தரலாம்.

ராமி நாரிலிருந்து நூலைத் தயாரிக்கும் வழியைக் கண்டுபிடிப்பதில் ஆஸ்திரேலியா தன் திறமையைக் காட்டியதுபோலவே மற்ற தேசீய முன்னேற்ற வேலைகளிலும் தன் சாமர்த்தியத்தை நிரூபித்துவருகிறது. உதாரணமாக தென் ஆஸ்திரேலியாவின் தென்கிழக்குப் பகுதியில் 6,000 சதுரமைல் விஸ்தீர்ணமுள்ள பெரிய பாலைவனப் பொட்டை இருந்தது. அங்கே ஆடுகளை விட்டுவைத்தால் ஓராண்டில் மடிந்துவிடும். அப்பிரதேசத்தில் ஓயா உழைப்பால் ஆஸ்திரேலியர்கள் இன்று 50 எக்கருக்கு ஓர் ஆடு வீதம் வளர்த்துவருகிறார்கள்.

பூமி என் சத்தற்றுக் கிடந்தது? ஆடுகள் என் ஒரு வருஷத்துக்குள் அங்கே மடிந்துவிட்டன? ஆராய்ச்சியாளர்கள் அதைக் கண்டுபிடிக்க முற்பட்டனர். ஆடுகளுக்கு வயிற்றுக் கோளாறு ஏற்படாதிருக்க ஒரு மருந்தைக் கண்டுபிடித்தனர். அதுமட்டுமல்ல. பாலைவனமாக இருந்த இடத்தில் புல் பூண்டு விளையச் செய்வதற்கும் வழி கண்டுபிடித்தார்கள். முன்பு உபயோகமற்றதாயிருந்த நிலத்தில் 20,00,000 எக்கர்களில் இப்போது க்லாவர் என்ற ஒருவிதமான பரிமளமான புல்லை வளர்க்கிறார்கள் ஆஸ்திரேலியர்கள். கூடிய சீக்கிரம் முன்பு பாலைவனமாயிருந்த பிரதேசத்தில் 80 லட்சம் ஆடுகள் மேயலாம். ஓராண்டில் 300 கோடி பவுண்டு இறைச்சி அதிகமாகக் கிடைக்கும்.

ஆஸ்திரேலியாவில் பிரதானமாகக் கடினமான மரம்தான் கிடைக்கும். நாற்காலி முதலியன செய்வதற்கும் வீடுகளுக்

குப் பயன்படுத்திக்கொள்வதற்கும் வேண்டிய மரம் வெளி நாடுகளிலிருந்து வந்துகொண்டிருந்தது. டாலர் கட்டுப்பாட்டி னல் அமெரிக்காவிலிருந்தும் கானடாவிலிருந்தும் வந்திருந்த மரம் அநேகமாக நின்றுவிட்டது. ஆகவே மெதுவான மரங் களை ஆஸ்திரேலியா வளர்க்க ஆரம்பித்தது. இன்று 2,50,000 ஏக்கர்களில் அவ்வித மரங்கள் இருக்கின்றன.

ஆஸ்திரேலியாவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் முன்னேற்றத் திட்டங்களில் மிகப் பெரிது ஸ்நோவி நதி தீரத்திட்டம். அதனல் ஆஸ்திரேலியாவின் மின்சார உற்பத்தி இருமடங்காகும். அத் திட்டம் 55 கோடியிலிருந்து 64 கோடி டாலர்வரைச் செல வாகும். எட்டு வருஷங்கள் வேலைப்பாடு நடந்த பின்னரே நீர்ப்பாசனத்துக்குத் தண்ணீர் கிடைக்கும். திட்டம் பூர்த்தி யாவதற்கு ஒரு வேளை 25 ஆண்டுகள் ஆகலாம்.

ஆஸ்திரேலியாவுக்கும் ஜப்பானுக்குமிடையேயுள்ள தீவுகளில் தொழில் வளர்ச்சி எதிர் காலத்தில் ஏற்படக்கூடியது. கீழ் நாடுகளில் அமெரிக்க வாழ்க்கையின் அம்சங்கள் அதிகமாகத் தென்படக்கூடிய பிலிப்பைன் தீவுகளிலும்கூட முதலில் சுகா தாரம், விவசாயம், கல்வி ஆகிய துறைகளில் அபிவிருத்தி ஏற்படவேண்டும். பிறகுதான் முற்போக்கான பொருளாதாரம் வளர சாத்தியமாகும். ஓஷினியாவில் நாலாவது அம்சம் அளிக்கக்கூடிய முதல் உதவி சுகாதாரம், அடிப்படைப் பொரு ளாதாரம் ஆகிய துறைகளில்தானிருக்கும். ஆனல் கூடவே முன்னேற்றத் திட்டங்களும் எடுத்துக்கொள்ளப்படும்.

உதாரணமாக, நூறுகோடி டாலர் செலவாகக்கூடிய ஐந்து வருஷத் திட்டத்தைப் பிலிப்பைன் தீவுகள் தயாரித்திருக்கின்றன. இந்தோனேஷியா அமெரிக்க ஏற்றுமதி—இறக்குமதி பாங்கிட மிருந்தும் உலக பாங்கிடமிருந்தும் கடன்கள் வாங்கித் தொழில் வளத்தை அபிவிருத்தி செய்ய உத்தேசித்திருக்கிறது.

ஜப்பான் ஆசியாவைச் சேர்ந்த நாடு. ஆசியா பாது காக்கப்பட்டால், ஜப்பானும் பாதுகாக்கப்படும். ஆசியா கை

விடப்பட்டால், சுதந்திர ஜப்பான் நிலைப்பது கடினம். "ஜப்பானின் பொருளாதாரம் மற்ற கீழ்க்கோடி நாடுகளுடன் பிணைக்கப்பட்டால்தான், ஜப்பானின் பிரச்னைகள் தீரும். ஜப்பானில் மட்டும் முயற்சிகள் செய்யப்பட்டால் அவை வெற்றிபெருது," என்று ஜெரோம் பி. கோஹன் என்பவர் கூறுகிருர்.

அத்தகைய பொருளாதாரத் திட்டமும், ஸ்திரமான கிழக்கு ஆசியாவும் சாத்தியமாஞல், நியாயமான வாழ்க்கைத் தரத்துடன் வாழ்வதற்கு அவசியமான சரக்குகளை ஜப்பான் இறக்குமதி செய்து, அவற்றிற்கு ஈடான பொருள்களை ஜப்பான் ஏற்றுமதி செய்யலாம்.

ஆசிய அளவுகோலை வைத்துப் பார்க்கும்போது ஜப்பான் தொழில்வளத்தில் மிகவும் முன்னேறியுள்ள நாடு எனத் தோன்றிஞலும், அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது அது இப்போதுதான் தொழிலபிவிருத்தி வேலையை ஆரம்பித்திருக்கிறது எனலாம். உதாரணமாக, 1949-ம் ஆண்டின் இறுதியில் 100 பேர்களுக்கு $11\frac{1}{2}$ டெலிபோன்கள் ஜப்பானில் இருந்தன. அமெரிக்காவிலோ மூவருக்கு ஒரு டெலிபோன்வீதம் டெலிபோன்கள் இருக்கின்றன.

1953-ம் ஆண்டுக்குள் சாதிப்பதென ஜப்பான் போட்டிருக்கும் திட்டம் நிறைவேறுவது மிகக் கஷ்டமெனினும், முடியாததென்று சொல்லமுடியாது. ஆஞல், ஜப்பானில் அடிப்படைப் பொருள்கள் அதிகமாகக் கிடையாது. உதாரணமாக, 1936-ம் ஆண்டில் ஜப்பான் தனக்குத் தேவையான எண்ணெயில் பத்து சதவிகிதம்தான் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்திருக்கிறது.

ஆஞல் உணவு உற்பத்தியில் ஜப்பான் யுத்தத்துக்கு முன்னிருந்த நிலைமையை அடைந்துவருகிறது. 1948, 1949-ம் ஆண்டுகளில் தனது தேவையில் 80 சத விகிதத்தை ஜப்பான் உற்பத்தி செய்துகொண்டது. இந்த அபிவிருத்தி உண்டானதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. மூன்று வருஷ நிலச்சீர்திருத்தத் திட்டத்தின்கீழ் 50 லட்சம் ஏக்கர் நிலம்

குடியானவர்களுக்குச் சொந்தமாயிற்று. முன்பு அந்நிலத்தைக் குடியானவர்கள் குத்தகைக்குப் பயிர் செய்துவந்தார்கள். அநேகமாக ஜப்பான் முழுவதிலும் அபிவிருத்தி செய்யப்பட்ட விதையே உபயோகிக்கப்படுகிறது.

ஜப்பான் எவ்வித முன்னேற்றமடைந்தாலும் கடைசியில் ஏற்றுமதி செய்தே சுபிட்சமாயிருக்க முடியும். அப்படி அது ஏற்றுமதி செய்வதற்கு முக்கிய மார்க்கெட்டாக விளங்குவது சீனு. இப்போது சீனு கம்யூனிஸ்ட்கள் வசம் இருக்கிறதே, அதன் நிலைமையென்ன ?

முதல் உலக யுத்தத்துக்குப் பிறகு சீனக்குடியரசின் பிதாவான டாக்டர் ஸன் யாட்-ஸென் நூதன விவசாய முறைகள், போக்குவரத்து, தொழில்கள் ஆகியவற்றை நிலைநாட்டத் திட்டம் ஒன்றை வெளியிட்டார். சமீபகாலம் வரை, அமெரிக்க உதவியைக் கொண்டு ஸன் யாட்-ஸென் திட்டத்தை இருபது ஆண்டுகளில் நிறைவேற்றலாம் என சீனர்கள் நம்பிவந்தனர். ஆனால் யுத்த பிற்கால வருஷங்களில் திட்டம் வகுத்தவர்கள் நினைத்ததுபோல காரியங்கள் நடக்கவில்லை. கடைசியில், சீனுவின் தொழிலபிவிருத்தியைச் சாதிக்கக்கூடிய அமெரிக்க உதவி கிடைக்காமற்படி சீனக்கம்யூனிஸ்ட்கள் செய்துவிட்டார்கள்.

ஐம்பது வருஷங்களாக அமெரிக்கர் சீனருக்கு நம்பத்தகுந்த நண்பர்களாயிருந்து வந்தார்கள். எந்த நாட்டின் கட்டுப்பாட்டிலுமில்லாத சுதந்திர தேசமாகச் சீனு விளங்குவது அமெரிக்க நலனுக்கு உகந்ததாகும். மற்ற வல்லரசுகளை எதிர்த்தும் அமெரிக்கா அக்கொள்கைக்காகப் பலதடவைகளில் நின்றிருக்கிறது. இனியும் சீனுவின் சுதந்திரத்துக்காகவும் ஒற்றுமைக்காகவும் அமெரிக்கா உழைத்துவரும். மாஸ்கோ தன் நட்புக்காக எவ்வளவு உயர்ந்த கைம்மாறைக் கேட்கிறதென்பதைப் புரிந்துகொள்ளும்போது சீன மக்கள் அமெரிக்க நட்பின் விசேஷத்தை அறிந்துகொள்வார்கள். அந்நாள் வரும்போது அமெரிக்கா மறுபடியும் சீனுவுக்கு உதவிபுரியத் தொடங்கும்.

பல திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்குத் தயாராயிருக்கின்றன. அணைக்கட்டுத் திட்டங்களால் சீனாவின் மின்சார உற்பத்தி இருபது ஆண்டுகளில் பதினைந்து மடங்கு அதிகமாகும். என்றாவது ஒரு நாள் யாங்ஸே, டெடுஹோ, மாபியன்ஹோ, மிங்கியாங், க்வான்ஹெஹன், டாங்லாங்சுவான், லுங்சிஹோ, மஞ்சள் ஆறு முதலிய நதிகள்மீது அணைக்கட்டுகள் தோன்றும். ஆனால் தொழில் முன்னேற்றத்தால் சமுதாய அபிவிருத்தி ஏற்படவேண்டும். ஒரு சிலர் மட்டுமின்றிப் பலர் பலனடைய வேண்டும். ஷாங்ஹாயில் முன்பே தொழில் வளம் பெருகியிருந்தது. ஆனால் அதனால் நாட்டுப்புற வாசிகளுக்குப் பலன் எதும் உண்டாகவில்லை. நகர வாசிகள் விவசாயிகளைச் சுரண்டுவதாக முடிந்ததே தவிர, விவசாயிகளுக்குத் தொழில் முன்னேற்றத்தின் அனுகூலங்கள் கிட்டவில்லையென்று மாரிஸ் குக் என்பவர் கூறியிருக்கிறார்.

நாலாவது அம்சத்தின்கீழ் சீனாவுக்கு உதவியளிக்க முடியாதெனினும், சீனாவில் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் செய்துவந்த சேவையை அடிப்படையாகக் கொண்டு ஆசியாவின் பல பாகங்களில் நாலாவது அம்சத் திட்டத்தை நிறைவேற்றலாமென அதிகாரிகள் நம்புகின்றனர். பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் கிராமப்புனருத்தாரணக் கமிஷன் ஒரு வருஷத்துக்குள் விவசாயிகள் நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுத்துவந்த குத்தகையைக் குறைப்பதில் சீனாவின் சில மாகாணங்களில் வெற்றிபெற்றது. கோமாரி நோய், காலரா முதலிய வியாதிகளைத் தடுக்க ஏற்பாடுகளைச் செய்தது. இச்சேவைகளால் லட்சக் கணக்கான விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் அபிவிருத்தியாகியிருக்கிறதென அமெரிக்க விவசாய இலாகாவைச் சேர்ந்த டபிள்யூ. ஐ. லேடஜின்ஸ்கி கூறுகிறார். அதனால் அமெரிக்காவிடம் அவ்விவசாயிகளுக்கு உண்டாகியிருக்கும் மதிப்பு கம்யூனிஸ்ட் ஆட்சியிலும் மறைந்துவிடாது என்கிறார் அவர்.

கம்யூனிஸ்ட் சீனாவின் ஆதிக்கம் வளராமலிருக்க ஆசிய லீக் ஒன்றைத் தோற்றுவிப்பது அவசியமாயிருக்கலாம். ஆனால் அது மட்டிலும் போதாது. ஆசியாவின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து, சர்வதேச நல்லுறவை வளர்க்கக்கூடிய சங்கம் தோன்றினால் அது ஆசியாவைக் காப்பாற்றலாம். கீழ்க் கோடி நாடுகளின் புனருத்தாரணத்துக்கு நாலாவது அம்சம் செய்யக்கூடிய உதவி அதிசயத்தை விளைவித்துவிடாது. ஒரு நாளைக்குள் வறுமையைப் போக்கிவிடாது. கம்யூனிஸ்ட்களை ரஷ்ய எல்லைக்கு அந்தப்புறமாக ஓட்டிவிடாது.

எனினும் ஷாங்ஹாய்க்குள் கம்யூனிஸ்டுகள் பிரவேசிக்கு முன் அந்நகரத்தின் வெளியில் ஐக்கிய நாடுகளின் புன ருத்தாரணச் சங்கத்திற்குச் சொந்தமான 3,000 டிராக்டர்கள் துருப்பிடித்துக் கொண்டிருந்தன. அந்த டிராக்டர்களை உப யோகப்படுத்திக் கொள்வதற்கு நாலாவது அம்சம் சீன விவ சாயிகளுக்குக் கற்றுக்கொடுத்திருக்கும். சாதாரண நத்தை யிலிருந்து உண்டாகும் ஒருவித விஷத்தால் சீனா, பிலிப்பைன் தீவுகள், கொரியா, பர்மா, ஸயாம், கிழக்கு இந்தியத் தீவுகள் ஆகிய நாடுகளில் லட்சக் கணக்கில் ஜனங்கள் மடிகின்றனர். நாலாவது அம்ச உதவியால் அந்நத்தையை அழிக்கலாம்.

சேனைக்குச் சொந்தமான சிறிய பம்பு ஒன்றினால் நீர் பாய்ச்சும் விதத்தைக் கிழக்கு வங்காளத்தில் காண்பித்தபோது அக்காட்சியைக் காண விவசாயிகள் நூறு மைல்கள் நடந்து வந்தனர். அம்மாதிரி வழிகளை ஆசியாவிலுள்ள ஒவ்வொரு சுதந்திர தேசத்திலும் நாலாவது அம்சம் காண்பித்துக் கொடுக் கலாம். போதிய படகுகளும் கப்பல்களுமில்லாததால் கீழ் நாடுகளின் கடற்கரைகளில் அரிசி நாசமுறுகிறது. புதிய கப்பல்களையும் படகுகளையும் கட்டுவதற்கும், பழையவற்றைப் பழுது பார்க்கவும் நாலாவது அம்சம் நிபுணர்களையும் எஞ்சி னீயர்களையும் அனுப்பிவைக்கலாம்.

இந்நாடுகளிலுள்ள பிரச்னைகளின் அடிப்படை வறுமையே என்பதை எத்தனை தரம் வற்புறுத்தினாலும் மிகையாகாது. இந்தியர்கள், இலங்கை வாசிகள், இந்தோனேஷியர்கள் ஆகியோரைக் காட்டிலும் சீனாவில் கம்யூனிஸ்டுகள் துரிதமாக வறுமையைப் போக்கினால், இந்தியர்கள், இலங்கை வாசிகள், இந்தோனேஷியர்கள் ஆகியோர் கம்யூனிஸ்டுகளாக மாறிவிடுவார்கள். அவ்வாறின்றி, சீனாவின் பொருளாதார நிலைமை தேக்கமுற்று, மற்ற அண்டை நாடுகளின் பொருளாதார நிலைமை செழிப்புற்றால், சீனப் பறவை நாகம் மறுபடியும் துள்ளியெழும். கம்யூனிஸ்டுகளுக்கும் கோமின்டாங் கட்சியினருக்கும் மஞ்சு வம்சத்தினருக்கும் நேர்ந்த கதி நேரிடும்.

சீனப் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்யச் சில முக்கிய விஷயங்களைக் கம்யூனிஸ்டுகள் மேற்கொள்வார்களென எதிர்பார்க்கலாம். உதாரணமாக, அவர்கள் லட்சக்கணக்கான விவசாயிகளை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தி, பாதைகள், அணைக்கட்டுகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் போன்றவற்றைக் கட்ட உபயோகிக்கலாம். வயல்களில் அதே சமயத்தில் புதிய விவசாய முறைகளைக் கைப்பற்றினால், அவர்கள் விவசாயப் பொருளுற்பத்தியும் குறைந்து போகாமல் பார்த்துக்கொள்ளலாம். ஆகவே, கம்யூனிஸ்ட் அரசாட்சியின்கீழ், சீனா பொருளாதாரத் துறையில் அபிவிருத்தியடையாது எனத் துணிவது மடமையாகும்.

கம்யூனிஸ்ட் சீனாவில் பெரிய முன்னேற்ற வேலைகள் மும்முரமாக நடப்பினும், ஆசியாவின் மற்ற பாகங்கள் அதனால் பாதிக்கப்படாது. மற்ற ஆசிய நாடுகளில் வேண்டிய அளவுக்கு உற்சாகமும் தீர்மானமுமிருந்தால், அவைகளும் பாதைகளையும் அணைக்கட்டுகளையும் கட்டிக்கொள்ளவேண்டிய ஆள் பலம் மலிவாகக் கிடைக்கும்.

சுதந்திர சமுதாயத்தில் தொழிலாளர்களைச் சுதந்திர மனிதர்களாக நடத்தப்படவேண்டுமென்பது வாஸ்தவமே. ஒரு

ரஷ்யாவிலோ சீனுவிலோ நடத்தப்படுவதுபோல், சுதந்திர நாடுகளில் வாழும் தொழிலாளர்களே, அவர்களுக்கு விருப்பமிருப்பினும் சரி இல்லாவிடினும் சரி, குறிப்பிட்ட வேலையைச் செய்ய வேண்டுமெனக் கட்டாயப்படுத்தமுடியாது. ஆனல் இறுதியில் அடிமையைக்காட்டிலும், நியாயமான சம்பளத்துக்கு வேலை செய்யும் சுதந்திர மனிதன் அதிகமாகவே உற்பத்தி செய்வான். அத்துடன் சீனு தனக்கு வேண்டாமென உதறிவிட்டிருக்கும் அனுகூலத்தையும் சுதந்திர ஆசியா அடையலாம். அதாவது மேற்கத்திய உலகத்தின் மெஷின்கள், மூலதனம், தொழில் நுட்பம், ஜனநாயகப் பண்பாடு ஆகியவற்றின் உதவியையும் சுதந்திர ஆசியா பயன்படுத்திக்கொள்ளலாம்.

மனித சமூகத்தின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த உபயோகப்படக்கூடிய பல வசதிகளில் முக்கியமாக விளங்குவது மனிதர்களே. மெஷின்களுக்குப் பதிலாகத் தங்கள் கரங்களைக் கொண்டு உழைத்தாலும், மனிதர்கள் தாம் முக்கியமானவர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

# சுதந்திர ஐரோப்பா—உடலில்லை

ஓர் எரிமலை குமுறிப், புகை கக்கித், தணிந்து, மறுபடியும் குமுறுவதுபோல் ஐரோப்பாவின் டாலர் பற்றுக்குறை யுத்த பிற்காலச் சரித்திரத்தைச் சிதற அடித்துவருகிறது.

அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது, ஐரோப்பா தற்சமயம் பின்தங்கியிருக்கிறதென்பதுதான் டாலர் பற்றுக்குறையின் அர்த்தம். இருமகா யுத்தங்களின் விளைவாக ஐரோப்பாவின் குடல் கிழிக்கப்பட்டுக் கிடக்கிறது. ஐரோப்பாவின் இளைஞர்கள் அழிக்கப்பட்டுவிட்டனர். அதன் செல்வம் இடிந்து மண்ணும் கல்லுமாய்க் காட்சியளிக்கிறது. அதன் தொழிற்சாலைகள் பயனற்றுப் போய்விட்டன. விளைபொருள்களை விற்கக்கூடிய மார்க்கெட்டுகள் கையைவிட்டு நழுவிவிட்டன. இந்நிலையில் ஐரோப்பாவின் பொருளாதாரம் தேக்கமுற்றிருப்பதில் ஆச்சரியமில்லை. அமெரிக்காவுடனே, உலக மார்க்கெட்டிலோ சரிக்குச் சரியாக வர்த்தகத்தில் போட்டியிடும்படித் திறமையாக ஐரோப்பா இன்று பொருள்களை உற்பத்தி செய்யமுடியாது. உள்நாட்டிலேயே சரக்குகளை விற்கமுடியும்படி ஐரோப்பிய மக்களின் வாங்கும் சக்தியும் உயர்ந்திருக்கவில்லை.

யுத்தத்துக்குமுன்பே, ஐரோப்பிய குடும்பங்களின் வாங்கும் சக்தி அமெரிக்கக் குடும்பங்களின் வாங்கும் சக்தியை விடக் குறைந்தேயிருந்தது. இன்று அமெரிக்க உற்பத்தித் திறமை பிரிட்டனைவிட இருமடங்கும், பிரான்ஸைவிட மூன்றரை மடங்கும் உயர்ந்து இருக்கிறது.

நாணயமாற்று ஜகஜ்ஜாலங்கள், சுங்கவரி, சிக்கனம், தேசீய வருமானத்தை மாற்றி அமைத்தல் ஆகிய வித்தைகளால் பிரச்னை தீர்ந்துவிடாது. நீர் ஒரு காலுறையைச் செய்யும் நேரத்தில் நான் மூன்று காலுறைகளைச் செய்யமுடிந்தால்,

எந்த குறிப்பிட்ட கால அளவிலும் உம்மைப்போல் நான் மூன்று மடங்குக் காலுறைகளைச் செய்து வைத்திருப்பேன். அந்த நிலைமை மாறவேண்டுமானால், நீங்கள் துரிதமாகக் காலுறையைச் செய்யப்பழகிக் கொள்ளவேண்டும், அல்லது நான் மெதுவாகச் செய்யவேண்டும்.

காலனிகள் போன்ற பிரதேசங்களில் ஜனங்களின் வாங்கும் சக்தியை அதிகரித்தால், அவர்கள் ஐரோப்பிய பொருள்களை அதிகமாக வாங்குவார்கள். டாலர் பற்றுக்குறை தீர நாலாவது அம்சம் கையாளும் வழிகளில் அது ஒன்று. ஆனால் தனது சொந்த காலனிகளில்கூட ஐரோப்பா அமெரிக்கப் பொருள்களுடன் வெற்றிகரமாய்ப் போட்டியிடவேண்டுமானால், அக்காலனிகளில் அமெரிக்கப் பொருள்களின் மீது சுங்கவரி போடவேண்டியிருக்கும், அல்லது உயர்த்த வேண்டியிருக்கும். அந்நடவடிக்கையால், சர்வதேசக் கூட்டுறவு நிலைக்காது.

இறக்குமதிகளை அதிகரித்து, அமெரிக்கர் வெளிநாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்யும் வழக்கத்தை வளர்த்து, மூலப் பொருள்களைச் சேமித்து டாலர் பற்றுக்குறையை அமெரிக்கா ஒரு விதமாகத் தீர்க்கலாம், தீர்க்கவேண்டும். ஆனால் இப் பற்றுக்குறை அடியோடு ஒழிய வேண்டுமாயின், ஐரோப்பா இன்னும் அதிகமாக உணவையும் சரக்குகளை குறைந்த விலைக்கு உற்பத்தி செய்யவேண்டும். தான் உற்பத்தி செய்யும்பொருள்களில் பெரும்பாகத்தை ஐரோப்பா உள்நாட்டிலேயே செலவாவதற்கான வழியையும் தேடவேண்டும்.

பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தைச் சேர்ந்த பால் ஹாப்மன் அவர்கள் தீவிரமாக முயற்சி செய்தும்கூட, குறுகிய அளவிலுள்ள டாலர் மார்க்கெட்டுக்காகவே மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பலத்த போட்டி இருந்துவருகிறது. பிரிட்டிஷ் பவுனின் மதிப்பைக் குறைத்த பிறகும் கூட, பிரிட்டனின் டாலர் க்ஷேமம் க்ஷீணித்துவருகிறது. ஐரோப்பிய நாடுகளுக்கிடையேயுள்ள சுங்கவரிகளைக் குறைக்க நடவடிக்கைகளைக் கைக்கொண்

டாலும், சுதந்திரமான பொருளாதார நிலைமை ஏற்படுவதைத் தடைசெய்யும் வர்த்தகர்களின் போக்கும் நடத்தையும் நீடித்து வருகின்றன. ஐரோப்பிய நாடுகளுக்கிடையே வர்த்தகம் வளருவதாகக் காணோம். ஆகவே அத்தகைய வர்த்தகம் அபிவிருத்தியடைவதற்கான வழியையும் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் பின்பற்றிவருகிறது.

பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் தனது வேலையை வெற்றிகரமாய்ச் செய்து முடித்தாலும் கூட, அமெரிக்காவுடன் ஒப்பிட்டால் ஐரோப்பா பின்தங்கியிருப்பதாகவே தோன்றும். தீவிர முயற்சிகளாலும், அமெரிக்காவின் பேருதவியாலும், ஐரோப்பாவில் 1938-ம் ஆண்டிலிருந்த உற்பத்தி நிலைமையை அது இப்போது அடைந்திருக்கிறது. ஆனால் 1938-ம் ஆண்டுக்குப் பிறகு அமெரிக்காவின் உற்பத்தித்தரம் இருமடங்குக்கு மேல் அதிகமாகியிருக்கிறது. அதன் பலன் என்னவென்றால் வெளிநாடுகளில் மார்க்கெட் தேவையாயிருக்குமளவுக்கு ஐரோப்பாவின் உற்பத்தித் தரம் உயர்ந்திருக்கிறது. ஆனால் அமெரிக்காவுடன் சரிக்குச் சரியாகப் போட்டியிடக்கூடிய அளவுக்கு அது உயரவில்லை.

ஐரோப்பா இறக்குமதி செய்யும் உணவுப்பொருள்களின் அளவைக் குறைத்துக்கொள்ள, பழங்கால நிலவுரிமைப் பழக்க வழக்கங்களைச் சீர்திருத்திக்கொள்ள வேண்டும். இப்போதிருக்கும் நிலத்திலேயே இன்னும் அதிகமாகச் சாகுபடி செய்ய வேண்டும். உற்பத்தித் தரத்தை உயர்த்திக்கொள்ள ஐரோப்பா அமெரிக்கத் தொழில் நுட்ப முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். உதாரணமாக, பிரிட்டனில் தொழில் முதலாளிகளுக்குப் போதிய மின்சார சக்தி கிடைப்பதில்லை. ஆனால் பிரிட்டனின் மின்சார சக்தியில் 15 சத விகிதம் உபயோகிக்காமலே வீணாகிறது.

ஆகவே, வெகுதூரம்வரை ஐரோப்பிய பிரச்னை தொழில் நுட்பப் பிரச்னையாக இருந்துவருகிறது. அதனால்தான்,

தொழிற்சாலைகள், போக்குவரத்து சாதானங்கள், நிர்வாகம், விவசாயம் ஆகிய துறைகளில் திறமையை விருத்தி செய்ய ஐரோப்பாவில் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் நிபுணர்கள் பாடுபட்டுவருகிறார்கள். அப்படிச் செய்வதில் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் நாலாவது அம்சக் கொள்கையைப் பின்பற்றிவருகிறது.

நாலாவது அம்சக் கொள்கையினால் பூர்ண பலன் கிடைப்பதற்குமுன் ஐரோப்பாவில் ராஜீய, பொருளாதார, சமுதாய சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டும். உதாரணமாக, ஜெர்மனி கிழக்கு பாதி, மேற்கு பாதியென, பிரிக்கப்பட்டிருப்பதைத் துணிச்சலான புதிய திட்டம் மாற்றமுடியாது. அதேபோல் மேற்கு ஐரோப்பாவுக்கும் கிழக்கு ஐரோப்பாவுக்குமுள்ள பிளவை அது போக்கமுடியாது. ஆனால் அது செய்யக் கூடிய பணிகள் பல உள :

1. விவசாயப் பிரதேசங்களில் தொழில் நுட்ப உதவி அளிப்பதால், ஐரோப்பா தனக்குத் தேவையான உணவில் இன்னும் அதிகமான பகுதியை அதுவே உற்பத்தி செய்து கொள்ளும்படி செய்யலாம். அதனால் அதன் சுகாதார நிலைமையையும் அது அபிவிருத்தி செய்துகொள்ளலாம்.

2. டாலர் மூலதனம் போட்டுத் தொழில் நுட்ப உதவியும் செய்வதன்மூலம் ஐரோப்பியத் தொழில் உற்பத்தித் தரத்தை உயர்த்தலாம்.

3. பிராந்திய முன்னேற்றத் திட்டங்களை ஆதரிப்பதன் மூலம், உள்நாட்டில் பொருள்கள் செலவாவதை அதிகப்படுத்தலாம். உற்பத்தித் தரமும் சுபிட்சமும் சேர்ந்தே உயருகின்றன.

4. தொழில் நுட்பத் திட்டங்களிலும் தொழில் பெருக்கத் திட்டங்களிலும் சர்வதேசக் கூட்டுறவு ஏற்படுவதன்மூலம், ஐக்கிய மேற்கு ஐரோப்பா உண்டாவது சாத்தியமாகும். அதனால் பிறகு கிழக்கு ஐரோப்பாவுடன் சகஜமான வர்த்தக உறவு

மீண்டும் உண்டாகலாம். இரும்புத் திரைக்குப் பின்னுள்ள தேசங்கள் உணவையும் மூலப்பொருள்களையும் அனுப்பாத வரையில், மேற்கு ஐரோப்பா உடலில்லாத தலையாகவே விளங்கும்.

ரத்தம் சிந்தாமல் நடந்துவரும் யுத்தம் நமக்குப் பழகிப் போய்விட்டதால் மேற்கு, கிழக்கு ஐரோப்பாக்களுக்கிருக்கும் பிணைப்பை நாம் அநேகமாய் மறந்துவிட்டிருக்கிறோம். மேற்கு ஐரோப்பாவுக்குத் தேவையான தானியங்கள், தாதுப்பொருள்கள், மூலப்பொருள்கள் அபரிமிதமாய்க் கிழக்கு ஐரோப்பாவில் கிடைக்கின்றன. கிழக்கு ஐரோப்பாவுக்குக் கிடைக்காத மெஷின்களும் தொழில் நுட்பங்களும் மேற்கு ஐரோப்பா அளிக்கமுடியும். மேற்கு ஐரோப்பா சிரசு, கிழக்கு ஐரோப்பா உடல். இரண்டும் சேர்ந்து ஓர் இயற்கையான உலகப்பகுதியாக விளங்கும். பிரிக்கப்பட்டால், தலைக்கு மூளை இருக்கலாம். உடலுக்கு வலிமையிருக்கலாம். ஆனால் இரண்டும் உயிரற்றுக் கிடப்பதால் அவற்றை உபயோகிக்க முடியாது.

ஆகையால், மேற்கு ஐரோப்பாவில் பொருளாதாரக் கூட்டுறவு ஏற்படுவதோடு, இன்றோ நாளையோ மேற்கு ஐரோப்பா இரும்புத்திரைக்குப் பின்புறமுள்ள நாடுகளுடன் வர்த்தகம் செய்யத் தொடங்கவேண்டும். ஆனால் விவசாய அபிவிருத்தியும் தொழில் முன்னேற்ற திட்டங்களும் அதிக உணவு உற்பத்தி செய்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடும். உடல் நலம் செழிப்புற்றால் மற்ற அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்ப்பது எளிது.

பண முதலாளிகள், பொருளாதார நிபுணர்கள், அரசியல் வாதிகள் ஆகியோர் யுத்தம் முடிந்ததிலிருந்து ஐரோப்பாவைச் சீர்தூக்க முயன்று வந்திருக்கிறார்கள். அதில் அவர்கள் பிரமாதமாக வெற்றியடைந்துவிடவில்லை. அவர்கள் எஞ்சினீயர்களுக்காகத்தங்கள் இடங்களைக் காலி செய்து கொடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

# அடிமை ஐரோப்பா—தலையில்லாப் பிண்டம்

ஐரோப்பா உயிருள்ளதோர் ஜந்துவாய் இருப்பின் டான்யூப் நதி அதனுடைய மிகப்பெரிய ரத்தக் குழாயாக இருக்கும். 3,80,000 சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள டான்யூப் பள்ளத் தாக்கில் 7,50,00,000 மக்கள் உயிர் வாழ்கின்றனர்.

சுயேச்சையான எல்லைகள், பொருளாதாரத் துறையில் அர்த்தமற்ற இரும்புத் திரைகள் போன்ற மனிதனால் ஏற்படுத்தப் பட்ட கோட்பாடுகளை டான்யூப் நதி அசட்டை செய்கிறது. டான்யூப் நதி பாய்ந்துவரும்வரை, ஐக்கிய கிழக்கு ஐரோப்பா நிறுவப்பட்டு அது சிநேகபாவத்துடன் மேற்கு ஐரோப்பாவுடன் வர்த்தக உறவு வைத்துக்கொள்ள வேண்டுமென மனிதர்கள் விரும்புவதை நிறுத்தமாட்டார்கள்.

இப்போதே, தன் வசப்பட்ட நாடுகளுக்கும் உலகத்தின் மற்ற பாகங்களுக்குமிடையே ரஷ்யா போட்டிருக்கும் அரணை டான்யூப் நதி துளைத்துத்தானிருக்கிறது. பல்கேரியா, செக்கோஸ்லொவேகியா, ஹங்கேரி, ருமேனியா, யுகோஸ்லோவியா ஆகிய நாடுகளில் மக்களுக்கும் அரசு புரிவோருக்கும் பொதுவாக டான்யூப் நதி ஓர் உண்மையை விளக்கி வருகிறது: அதாவது, மனிதன் என்ன தந்திரம் செய்தாலும் நதிகள் கடலை அடைந்தே தீருகின்றன.

டான்யூப் நதிக்கும் ரைன் நதிக்குமிடையே 370 மைல் நீளமுள்ள கால்வாய் ஒன்றை வெட்டிவிடவேண்டுமென்ற பேச்சு இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு இருந்துவந்தது. டான்யூப் நதி தீரத்தில் அம்மாதிரிப் பல நாடுகள் ஒன்று சேர்ந்து ஒரு முன்னேற்றத்திட்டத்தை நிறைவேற்றினால் போக்கு

வரத்து சாதனம் விருத்தியாகும். விவசாயம் பெருகும். மின்சார உற்பத்தி அதிகமாகும்.

அம்மாதிரி திட்டத்தை நிறைவேற்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிடையே மிகுந்த உற்சாகம் தோன்றவேண்டும். ஆனால் நடைமுறையில் ரஷ்யாவுக்குக் கட்டுப்பட்டுள்ள அந்நாடுகளுக்குப் போதிய மெஷின்களும், தொழில்நுட்ப வசதியும் கூட்டுறவு மனப்பான்மையும் இல்லை.

முதலாளித்துவமாகட்டும், கம்யூனிஸமாகட்டும், கூட்டுறவின்றிக் கிழக்கு ஐரோப்பா தழைக்க முடியாது. ஐரோப்பாவின் மற்ற பகுதியான மேற்கத்திய நாடுகளுடன் ஒன்று சேராமல் கிழக்கு ஐரோப்பா தனக்குண்டாகக்கூடிய உன்னத நிலையை அடைய முடியாது. ரஷ்யாவும் கிழக்கு ஐரோப்பாவும் இரும்புத்திரையை விலக்கி மேற்கத்திய நாடுகளுடன் நேச உறவு ஏற்படுத்திக்கொண்டாலொழிய அவை, அமெரிக்கா கிடக்கட்டும், மேற்கு ஐரோப்பாவின் சுபிட்சத்தின் நிலையைக் கூட அடைய முடியாது.

ஸ்டாலின் தர்பாரில் சோவியத் யூனியனில் உற்பத்தி அதிகமாகி இருப்பதைத் தங்கள் மதத்தின் பலன்களுக்கு அத்தாட்சியாக உலகமெங்கும் கம்யூனிஸ்டுகள் பறைசாற்றிவருகிறார்கள். ஆனால் சோவியத் யூனியனின் இன்றைய உற்பத்தித் தரம் 1900-ம் ஆண்டின் உற்பத்தித் தரத்தைவிட உயர்ந்திருக்கவில்லை. அமெரிக்கத் தொழிலாளியின் உற்பத்தித்தரம் 1900-ம் ஆண்டுக்கு மூன்று மடங்கு உயர்ந்திருக்கிறது. இன்று ஒரு ரஷ்யன் ஒரு மணிக்கு உற்பத்தி செய்யும் பொருள்களைப் போல் எட்டரை மடங்கு ஓர் அமெரிக்கன் உற்பத்தி செய்கிறான்.

சோவியத் யூனியனுக்கு இரும்புத்திரை மனப்பான்மையிருக்கும்வரை, உற்பத்தித் தரத்தில் பிரமாத அபிவிருத்தி ஏற்படுவது சாத்தியமில்லை. முப்பத்திரண்டு வருஷங்களாக ஓயாது உழைத்தும், சமாதான காலத்தில் உலக மார்க்கெட்டுகளைப் பிடிக்கவோ, யுத்தத்தில் உலகத்தை ஜெயிக்கவோ

வேண்டிய தொழில் வளமும் தொழில் நுட்பமும் ரஷ்யாவுக்குக் கிடையா.

தொழில்வள முன்னேற்றத்தில் ரஷ்யாவே பின்தங்கியிருக்கையில், அதன் அடிமைகள் அதைவிடத் துரிதமாக முன்னேறுமென எதிர்பார்க்கமுடியுமா? திறமையான முறையில், தொழில்வளம் பெருக வேண்டுமாயின் தொழில் நுட்பம் சிறப்புற்றிருக்க வேண்டும். அத்தகைய நுட்பத்தை 30 வருஷங்களாக அரும்பாடுபட்ட பின்பும் அடையமுடியாத நிலைமையில் ரஷ்யா இருக்கிறது. மெஷின்களை உற்பத்தி செய்யும் மெஷின்கள் வேண்டும். அவை கிழக்கு ஐரோப்பாவில் இல்லை, மேற்கு ஐரோப்பாவில் இருக்கின்றன.

ரஷ்யாவுக்கு அடங்கியிருக்கும் நாடுகள் மேற்கத்திய நாடுகளைவிட இன்னும் மோசமாகப் பின்நோக்கிச் செல்லலாம் என்பதற்கு அத்தாட்சி இருக்கிறது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து ரஷ்யா மூலப்பொருள்களைப் பெறவிரும்புகிறதே தவிர, அவை தொழிற்சாலைகளை நிறுவிப் பொருள்களை உற்பத்தி செய்வதை ரஷ்யா விரும்புவதாக சூசனைகள் ஏதும் கிடையா.

கிழக்கத்திய உடலுக்கு மேற்கத்திய தலை அவசியமானதென்பது, மார்ஷல் திட்டம் வெளியிடப்பட்ட புதிதில் போலந்தும் செக்கோஸ்லொவேகியாவும் அத்திட்டத்தில் கலந்துகொள்ளத் தங்களுக்கிருக்கும் விருப்பத்தை வெளிப்படையாகக் கூறியதிலிருந்து தெரியவரலாம். ரஷ்யா கண்டிப்பாகக் கூடாதெனக் கட்டளையிட்டதனால்தான் அவ்விரு நாடுகள் மார்ஷல் திட்டத்தில் சேரவில்லை.

சோவியத் கூடாரத்திலிருந்து மார்ஷல் டிட்டோவின் யுகோஸ்லோவியா வெளிக்கிளம்பியதிலிருந்து கிழக்குக்கு மேற்கின் அவசியம் இன்னும் தெளிவாக விளங்கியது.

யூகோஸ்லோவியா தொழில் வளத்தைப் பெருக்க விரும்பியது. ரஷ்யாவோ அதை மூலப்பொருள்களை உற்பத்தி செய்யும் நாடாக வைத்திருக்க ஆசைப்பட்டது. அதிலிருந்து தான் பொருளாதாரத் துறைகளில் ரஷ்யாவுடன் மார்ஷல் டிட்டோவுக்குத் தகராறு ஏற்பட்டது. ரஷ்யா வேறுவிதமாக விரும்பியிருந்தாலும் அண்டையிலிருக்கும் நாடு தொழில்வளம் பொருந்திய தேசமாக விளங்க உதவி செய்யும் நிலைமையில் ரஷ்யா இல்லை. உடனேயோ அல்லது சில காலம் கழிந்த பிறகோ டிட்டோ தொழில்வள வளர்ச்சியைக் குறைத்துக் கொண்டிருக்கவேண்டும் அல்லது யந்திரங்களும் தொழில் நுட்ப உதவியும் அளிக்குமாறு மேற்கத்திய நாடுகளை அணுகியிருக்க வேண்டும்.

கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகமான கோமின்பார்ம் டிட்டோவைத் தீவிரமாகக் கண்டித்துவந்தது டிட்டோ ஒரு முடிவுக்கு வர உதவியது. கோமின்பார்ம் தாக்குதல் டிட்டோவை இரும்புத்திரையைக் கிழித்துக்கொண்டு வரும்படி வற்புறுத்தியது. அதனால் டிட்டோ அமெரிக்க டாலர்களையும் மேற்கத்திய மெஷின்களையும் பெறமுடிந்தது.

கூடிய சீக்கிரத்தில் டிட்டோவைத் தொலைக்காவிட்டால், அல்லது பணியவைக்க வில்லையானால் கோமின்பார்ம் கும்பலிலிருந்து விலகியதின் பயனாக கிழக்கு ஐரோப்பாவிலுள்ள பின் தங்கிய தேசங்களில் யூகோஸ்லோவியா மட்டுமே தன் முன்னேற்றத் திட்டத்தினால் மதிப்பிடத்தக்க பலன்களை அடையும் நாடாக விளங்கலாம்.

தன் சுரங்கங்களை விருத்திசெய்ய யூகோஸ்லோவியா ஏற்றுமதி-இறக்குமதி பாங்கிடமிருந்து இரண்டு கோடி டாலர் கடன் பெற்றிருக்கிறது. இரண்டரை கோடி டாலர் கடன்கொடுக்க உலக பாங்க் சம்மதித்திருக்கிறது. கோமின்பார்ம் நாடுகள் அதைப் பகிஷ்கரிக்க, யூகோஸ்லோவியா சுதந்திர நாடுகளுடன் தன் வர்த்தகத்தை அதிகரித்துவருகிறது. 61,60,00,000 டாலர்

பெறுமான வர்த்தக ஒப்பந்தத்தை பிரிட்டனுடன் செய்து கொண்டதால் யூகோஸ்லோவியப் பொருளாதாரம் வலுவடைந் திருக்கிறது.

பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமாக யூகோஸ்லோவிய வில் தாதுப்பொருள்கள் விசேஷமாக இருக்கின்றன. யூகோஸ்லோவிய மக்களும் உறுதியும் ஊக்கமும் உடையவர் கள். ஆனால் ஐரோப்பாவிலேயே யூகோஸ்லோவியா மிகவும் குறைந்த வாழ்க்கைத்தரமுள்ள நாடுகளில் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. தொழிலியல் வசதியின்மையால் யூகோஸ் லோவிய மக்கள் அவர்களுடைய மூதாதையர்கள் 500 வரு ஷங்களுக்குமுன் எப்படி வாழ்ந்தனரோ அப்படியே சமீப காலம்வரை வாழ்ந்துவந்தனர்.

ஆகையால் மின்சார உற்பத்தியைப் பெருக்குவதே யூகோஸ் லோவியாவின் முன்னேற்றத் திட்டத்தின் முதல் குறிக்கோள். அந்த நோக்கத்தை நிறைவேற்ற யூகோஸ்லோவியர் அந்நியர் உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கவில்லை. முழங்கால் தண் ணீரில் நின்றுகொண்டு மெஷின்களை நிறுவிக் கால்வாய்களை வெட்டலாயினர். கைகளாலேயே பாறைகளை உடைத்து பாதை களைக் கட்டினர். பல நதிகளின்மீது அணைகளைக் கட்டிக்கொண் டிருக்கின்றனர்.

யூகோஸ்லோவியா அரசியல் துறையில் பிரிந்துபோய்விட்டதால் ஸ்கடார் முன்னேற்றத் திட்டத்தில் அதனுடன் அல்பேனியா ஒத்துழைக்க மறுத்து விட்டது. அதன் பலனாக "யுகோஸ் லோவியப் பகுதியிலுள்ள மண்ணும் சக்தியுமான நிலம் செழிப் புள்ள பூமியாக மாறும்போது ஏரிக்கு அந்தப்புறமுள்ள அல் பேனியர்கள் சேற்றிலும் செதுப்பு நிலத்திலும் வறுமையுடன் நோயுற்று வாழ்ந்து வருவார்கள்," என்று யூகோஸ்லோவியா வின் அதிகார வர்க்கத்தின் தினப் பத்திரிகையான போர்பா கூறுவது உண்மையாகும்.

நூற்றாண்டுகளில் உண்டாகக் கூடிய முன்னேற்றத்தை ஐந் தாண்டுகளில் சாதிக்க யூகோஸ்லாவியர்கள் முயற்சி செய்து வருகின்றனர். இப்போது முடியுமெனத் தோன்றுவதுபோல், மேற்கத்திய நாடுகளின் உதவியைக்கொண்டு யூகோஸ்லோவிய முன்னேற்றத் திட்டம் மதிப்பிடத் தகுந்த வெற்றியடைந்தால், ரஷ்யாவுக்கடங்கியுள்ள மற்ற நாடுகளும் மேற்கத்திய நாடுக ளுடன் வர்த்தக உறவு வைத்துக்கொள்ள ஆவல் கொள்ளும். அதைப் பலாத்காரமாகவே ரஷ்யா அடக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம்.

ரஷ்யாவுக்கே மேற்கத்திய உதவி வேண்டியிருக்கிறது. உலக விவகாரங்களில் தனக்குள்ள செல்வாக்குக்கு ஈடாக தொழில் வளத்தைப் பெருக்கிக்கொள்ளச் சரித்திரப் பிரசித்தி பெற்ற அந்நாடு முனைந்து வருகிறது. அந் நிலைமையை அடைய அது இன்னும் அதிக தூரம் செல்ல வேண்டும். 1949-ம் ஆண்டில் ரஷ்யாவின் பொருளாதார வசதி அமெரிக்க வசதி யில் 25 சத விகிதத்துக்கும் குறைவு. யுத்தத்துக்கு முன் அது உற்பத்தி செய்துவந்த எண்ணெய் அவ்வளவுகூட 1949-ம் ஆண்டில் உற்பத்தி செய்ய முடியவில்லை. ரஷ்யாவின் எஃகு உற்பத்திக்கு நாலு மடங்கு அமெரிக்கா உற்பத்தி செய்கிறது.

அதனால் ரஷ்யாவின் உற்பத்தித்தரம் உயரவே உயரா தென்றோ, பெரிய முன்னேற்றத் திட்டங்களை அது நிறைவேற்ற வில்லையென்றோ சொல்வதாக அர்த்தமில்லை. சோவியத் மத்திய ஆசியாவில் 1937-ம் ஆண்டின் இறுதியில் பத்து வருஷங்களுக் குள்ளாக தொழில் உற்பத்தியும் விவசாய உற்பத்தியும் இரண் டரை மடங்கு அதிகரித்திருப்பதாக ஹார்வார்ட் பல்கலைக் கழகத் தைச் சேர்ந்த வாரன் வில்ஹெல்ம் மதிப்பிடுகிறார். அதே விதமாக முன்னேற்றமடையும் திட்டங்கள் இப்போது நிறை வேற்றப்பட்டு வருகின்றன.

ரஷ்யாவும் அதற்குட்பட்ட நாடுகளும் அவ்வளவு தீவிரமாக முன்னேற்றத் திட்டங்களில் முனைந்திருந்தும், மேற்கத்திய நாடுக

ளுக்குச் சமமான நிலையை அடையாமல் அவை ஏன் பின்னேக்கிப் போகின்றன ? சுதந்திரத்தின் இளகுந்தன்மை அந்த நாடுகளில் இல்லாததுதான் என்ற ஒரே பதில்தான் எனக்குத் தோன்றுகிறது. அதே காரணத்தால்தான் நாலாவது அம்சத்தின்கீழ் சர்க்கார் மூலதனத்தைவிடத் தனிப்பட்டோர் அதிக மூலதனம் போடவேண்டுமெனத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவிலுள்ள டென்னெஸ்ஸி பள்ளத்தாக்கு நிர்வாகம் ஒரு பொதுஜன ஸ்தாபனம். அது நிலத்தைப் பண்படுத்தி, வெள்ளங்களைத் தடுத்து, மின்சார சக்தியை உற்பத்தி செய்தது. ஆனால் அந்த ஸ்தாபனம் பள்ளத்தாக்கை வசீகரமானதாக்கியவுடன், தனிப்பட்டோர் அங்கே முதல் போட ஆரம்பித்தனர். சிறிதும் பெரிதுமான பல தொழிற்சாலைகள் இளம்பின. தேவைக்குத் தகுந்தவாறு அப்பகுதி அபிவிருத்தியடைந்தது.

சர்க்கார் அபிவிருத்திக்கவசியமான கருவியை அளித்ததேயொழிய அதை எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென நிபந்தனை போடவில்லை. நிர்வாகத்தின் நிபுணர்கள் யோசனை சொல்வதற்குத் தயாராயிருந்தார்கள். ஆனால் பிராந்தியப் பிரமுகர்களே முடிவுகள் செய்தனர்.

ரஷ்யாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் முன்வந்து ஆக்க வேலையிலீடுபடுவதற்குத் தனிப்பட்டோர் மூலதனம் இல்லை. புதிதாகக் கிடைக்கும் மின்சார வசதியைச் சர்க்கார் திட்டங்களைக் கொண்டுதான் உபயோகித்துக்கொள்ள வேண்டும். சர்க்கார் டிராக்டர்களை உற்பத்தி செய்கிறதேயொழிய ஜனங்களுக்கு உபயோகமாகும் மோட்டார் கார்களை உற்பத்தி செய்யவில்லை.

ஜனநாயகத்தில் போட்டியில் வளரும் தனிப்பட்டோர் முயற்சியால் டிராக்டர்கள், மோட்டார் கார்கள் ஆகிய இரண்டும் செய்யப்படும் என்பது முக்கிய அம்சமல்ல. சர்க்காரைவிடத் துரிதமாகவும், நன்ருகவும் மலிவாகவும் தனிப்பட்டோர் செய்து முடிப்பார்கள் என்பதே முக்கியமான அம்சம். தொழிலாளர்

கள் நலன்களையும் தனிப்பட்டோர் அதிக சிரத்தையுடன் கவனித்துக் கொள்வார்கள். இளகும் தன்மையுடன் சுறுசுறுப்பாகவும் திறமையுடனும் தொழில்களை நடத்தினால்தான் தனிப்பட்டோர் பிழைக்க முடியும்.

பின்தங்கிய தேசங்களிலுள்ள தனிப்பட்டோர்கள் தொழில் அபிவிருத்திக்காக மூலதனம் போடுவதை ஆதரித்து உற்சாக மூட்டி, ஸ்திரமான நடுத்தர வகுப்பை ஸ்தாபிப்பதே நாலாவது அம்சத்தின் அடிப்படையான நோக்கங்களில் ஒன்று. தனிப்பட்டோர் முயற்சியால் சாதிக்க முடியாத நியாயமான பெரி திட்டங்களுக்கு அமெரிக்க சர்க்காரோ உலக பாங்கோ கடன் கொடுத்து உதவும். ஆனால் தனிப்பட்டோருக்கு வசதியளிக்க வில்லையெனில், அணைக்கட்டுகளும் கால்வாய்கள் உதவாக் கரைத் திட்டங்களின் சின்னங்களாகவே நிற்கும். சர்க்காரின் கட்டுப்பாடுகள் அதிகரிக்கும். சுதந்திரம் நிலைத்திருக்கும் பிரதேசங்களின் விஸ்தீர்ணமும் குறைந்து போகும்.

பெரிய பெரிய திட்டங்களை நிறைவேற்றியுங் கூட ரஷ்யா மெஷின்களுக்கு வாடுகிறது. பொது ஜனங்களுக்குத் தேவையான சாதாரண பொருள்கள் வெகு குறைவு. இன்னும் பல ஆண்டுகள் வரை இப்பற்றுக் குறை தீரவும் வழியில்லை. அதேபோல விஞ்ஞான ஆராய்ச்சியிலும் தொழில் நுட்பத்திலும் கூட பற்றுக் குறையால் ரஷ்யா கஷ்டப்படுகிறது.

பொருளாதார அரசியல் துறைகளில் தனித்து நிற்பதால், அறிவு விசாலமும் தடைப்படுகிறது. வெளி நாடுகளிலேயே தங்கி விடுவார்களோ, அல்லது மனமாற்றம் அடைந்து விடுவார்களோ என்ற அச்சத்தால் ரஷ்யா தன் விஞ்ஞானிகளை மேற்கத்திய நாடுகளுக்கு அனுப்ப முடியவில்லை. ரஷ்யாவின் குதர்க்கத்தாலும், மார்க்ஸீய கொள்கையின் முரட்டுத்தனத்தாலும் விஞ்ஞானத்துக்கு உண்டாகும் கெடுதல்களால் உலகம் முழுதுமே பாதிக்கப்படுகிறது. ஆனால் ரஷ்யர்களுக்கும் அவர்களுக்கு அடங்கியிருக்கும் மற்ற தேசத்தினருக்குமே அதனால் பெரியநஷ்டம்.

மூலப் பொருள்களிலும், கற்பனு சக்தியிலும், பச்சாத்தாப மில்லாத தீவிரத்திலும் குறைவில்லாத ரஷ்யாகூட தனியாக முன்னேறுவது சாத்தியமாகாது. மேற்கத்திய நாடுகளுடன் ரஷ்யாவின் உறவு இரு யுத்தங்களுக்குமிடையே இருந்த காலத்தில் சுமுகமாக இருந்திருப்பின், உலக விவகாரங்களில் ரஷ்யாவின் செல்வாக்குப் பொருளாதார முன்னேற்றத்தால் வலுவடைந்திருக்கும்.

இந்த பலஹீனத்தை உணரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதால், கூடிய சீக்கிரம் மேற்கத்திய நாடுகளில் பலத்த மந்தம் உண்டாகுமென்ற மார்க்ஸீய கருத்தில் ரஷ்யர்கள் நம்பிக்கை வைத்து, அவர்கள் போடும் நிபந்தனைக்குட்பட்டு மேற்கத்திய நாடுகள் கீழ்நாடுகளுடன் மீண்டும் வர்த்தக உறவு கொண்டாடுமெனப் பகற் கனவு காண்கிறார்கள்.

ரஷ்யாவும் கிழக்கு ஐரோப்பாவும் அவை மேற்கொண்டுள்ள அரசியல் பொருளாதார முறையால் கட்டுண்டு முன்னேறிப் போகாமல் திண்டாடுகின்றன. இன்னும் பின்னேக்கிச் செல்வதையும் அவை தடுத்துக்கொள்ள முடியாது. அமெரிக்காவும் மற்ற மேற்கத்திய நாடுகளும் இரும்புத்திரைக்குப் பின்னுள்ள பிரதேசங்களில் சரியான பொருளாதார முன்னேற்றம் உண்டாக்க ஆவலுற்றாலும், ராஜ்ய அடிமைத்தனத்தால் ஏற்படும் வரட்சியை அந் நாடுகளின் முயற்சி தவிர்க்க முடியாது.

தனிப்பட்டோர் சுதந்திரம் முன்னேற்றத்தின் ஏவலாள். பொதுஜன நலத்துக்குட்பட்டு, மனிதன் புது முயற்சிகளில் ஈடுபட, தவறுகள் புரிய, கற்றுக்கொள்ள, மறுபடியும் புது முயற்சிகளைத் துவக்க, தனிப்பட்ட நோக்கங்களோடு உழைக்க, தனிப்பட்ட விதத்தில் பலன்களையடைய அவனுக்குச் சுதந்திரம் அவசியம். கம்யூனிஸ்ட் ரஷ்யாவும் அதற்கு அடங்கியுள்ள மற்ற நாடுகளும் அத்தகைய சுதந்திரத்தின் அவசியத்தை ஒப்புக்கொள்ளும்வரை, அவை அமெரிக்கருடன் போட்டியிட முடியாது. அப்படிப்பட்ட சுதந்திரத்தை அந்நாடுகள் ஒப்புக்கொண்டால், அதற்குப்பிறகு அவை கம்யூனிஸ்ட் நாடுகளாக இருக்காது.

## மூன்றும் பாகம்

# முன்னுரை

துணிச்சலான புதிய திட்டத்தை நிறைவேற்றுவது தொழில் நுட்ப வசதியும் அமெரிக்க டாலர்களும் கிடைப்பதை மட்டும் பொறுத்திருக்கவில்லை. மனிதர்கள் ஒத்துழைக்க ஆவலுடன் இருக்கவேண்டும். இயற்கை வளமும் அவர்களுடைய ஒத்து ழைப்புக்குத் தக்க பலனை அளிக்க வேண்டும். தேசங்கள் இதுவரை ஒத்துழைத்ததைவிட அதிகமாகச் சுயநலமற்று வேலை செய்ய வேண்டும். தொழில் வளம் மிகுந்த உலகம் சுபிட்ச மாக இருக்கப் போதிய இயற்கை வசதிகள் இருக்கின்றன என்ற கருத்தில் நாலாவது அம்சத் திட்டம் உதித்திருக்கிறது. அமெ ரிக்காவிலும், விவசாயி, தொழிலாளி, முதலாளி, சர்க்கார் உத்தியோகஸ்தன் ஆகிய பலதரத்தினரிடையே சுதந்திரத்தில் பூர்ண நம்பிக்கை இருக்க வேண்டும்.

# கூட்டுறவே திறவுகோல்

இரண்டாவது உலக யுத்தத்தில் அச்சு நாடுகளைச் சாட்டை கொண்டடிக்க ஒவ்வொரு ராணுவ, பொருளாதாரத் துறையிலும் நேச நாடுகளிடையே கூட்டுறவு வேண்டியிருந்தது. அறியாமை, வறுமை, துன்பம் ஆகிய சக்திகளை அழிக்க அதேபோன்ற நெருங்கிய தொடர்பை நிலைநாட்ட நாலாவது அம்சம் முயற்சி செய்கிறது.

1949-ம் ஆண்டில் நிகழ்த்திய பேருரையில் ஜனாதிபதி ட்ரூமன் கூறினார்: "உலகத்திலுள்ள சுதந்திர மக்கள் தங்கள் முயற்சிகளாலேயே அதிக உணவையும், துணியையும், வீடு கட்டும் சாமான்களையும், தங்கள் சுமையைக் குறைப்பதற்கான சக்தியையும் உற்பத்தி செய்ய உதவுவதே நமது குறிக்கோளா யிருக்க வேண்டும். இந்த வேலையில் தங்கள் தொழில் நுட்ப வசதிகளை ஒன்று சேர்க்கும்படி நாம் மற்ற நாடுகளை அழைக்கி றோம். அவர்களுடைய உதவி உற்சாகத்துடன் வரவேற்கப்படும். கூடியவரை ஐக்கிய நாடுகளுடனும் அச்சபையின் தனித்தன்மை வாய்ந்த சங்கங்களுடனும் சேர்ந்து எல்லா நாடுகளும் வேலை செய்யும் கூட்டுறவு முயற்சியாக இது இருக்கவேண்டும். அமைதியையும், சுபிட்சத்தையும், சுதந்திரத்தையும் உண்டாக்க உலகம் முழுதும் செய்யும் முயற்சியாக அது இருக்கவேண்டும்."

மற்ற நாடுகள் தனிப்பட்ட திட்டங்களை மேற்கொண்டிருக்க லாம். துணிச்சலான புதிய திட்டம் ஒரு பெயருடன் தோன்றுவ தற்கு முன்பு அமெரிக்க சர்க்கார் காரியாலயங்கள் வெளி நாடுகளுக்குத் தொழில் நுட்ப, விஞ்ஞான விஷயங்களைப் பரப்பி வந்தன. நாலாவது அம்சத்தின் கீழ் அவ்வித பணிகள் அதிக மாக்கப்படுகின்றன. தனிப்பட்டோர் மூலதனத்துக்கு உதவி யாக ஒப்பந்தங்கள், உத்தரவாதங்கள், வரி விகிதத்தில் மாறு தல்கள், செய்து கொள்ளப்படும். சர்க்கார் கோஷ்டிகளுக்குத்

தொழில் நுட்ப உதவி, நிபுணர்கள் உதவி, தொழில் நுட்பம் கற்றுக் கொடுப்பது ஆகிய துறைகளில் தனிப்பட்ட நிர்வாகங் கள் சகாயம் புரியும்.

முக்கியமாக முதல் கட்டத்தில், ஐக்கிய நாடுகள் மேற் கொள்ள இயலாத ஆக்க வேலைகளைச் செய்து முடிக்க அமெரிக்கா மற்ற நாடுகளுடன் தனித்தனியாக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம். ஐக்கிய நாடுகளின் வசதிகள் பெருகினால், அமெரிக்க நலன்கள் சம்பந்தப்படாத திட்டங்களை அச்சபை ஏற்று நடத்தலாம். வெகு காலம்வரை செய்து முடிப்பதைவிட அதிக மாக எங்கும் தேவை இருக்குமாதலால், நாலாவது அம்சத் திட்டம் தனிப்பட்ட, தேசீய, சர்வதேசத் துறைகளில் நிறை வேற்றப்படும்.

ஜனாதிபதி ட்ரூமனின் நாலாவது அம்ச யோசனையின் பல னாக, உலக முன்னேற்றத்துக்கான தன் கூட்டுறவுத் திட்டங்களை ஐக்கிய நாடுகள் சபை பத்து மடங்கு அதிகமாக விஸ்தரித்துக் கொண்டிருக்கிறது. பின்தங்கிய நாடுகளிலிருந்து உதவி கோரி வரும் மனுக்களைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள ஒரு நிபுணர்கள் நிறைந்த நிர்வாகத்தை ஐக்கிய நாடுகள் ஸ்தாபித்திருக்கிறது.

1949-ம் ஆண்டிலேயே வெவ்வேறு ஐக்கிய நாடுகளின் நிர்வாகங்களும் சங்கங்களும் ஒத்துழைக்க ஆரம்பித்துவிட்டன. "சுகாதாரக் கல்வியை முக்கியமாகக்கொண்ட அடிப்படைக் கல்வித் திட்டத்தை நிறைவேற்ற உலகச் சுகாதார நிர்வாகமும், ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாசார நிர்வாகமும் ஒன்றாகச் சேர்ந்து வேலை செய்தன," என்று ஐக்கிய நாடுகளின் பொதுக்காரியதரிசி அறிவிக்கிறார். "தென் ஆசியாவில் மலே ரியாவைக் கட்டுப்படுத்தவும், உணவு உற்பத்தி செய்யவும் பொது வான திட்டமொன்றுக்கு உலகச் சுகாதார நிர்வாகத்தையும், உணவு விவசாய நிர்வாகத்தையும் சேர்ந்த அதிகாரிகள் கூட்டு முறையில் வேண்டிய அடிப்படையான வேலைகளைச் செய்து

வருகின்றனர். ஒரு குறிப்பிட்ட திட்டத்துக்காக ஒரு நிர்வாகத்தின் அதிகாரிகளை மற்றொரு நிர்வாகத்தின் உதவிக்காக அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, மூலதனம் போடுவதற்காக விவசாயத் திட்டங்களின் தரத்தை மதிப்பிட உலக பாங்குக்கு ஒத்தாசை செய்ய உணவு விவசாய நிர்வாகத்தின் நிபுணர்கள் அனுப்பப்படுகின்றனர்," என்று அவர் கூறுகிறார்.

நாம் ஏதாவது செய்ய முடிவதற்கு முன்னால் என்ன செய்ய வேண்டுமென்பதை அறிந்து கொள்ள வேண்டும். நாலாவது அம்சக் கோஷ்டிகள் பின்தங்கிய நாடுகளில் பிரயாணம் செய்து, அவற்றின் தேவைகளையும் வசதிகளையும் அறிந்து, எந்த திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும், எத்திட்டங்களை ஒத்திப் போடவேண்டுமெனத் தீர்மானிக்கும். சில ஐக்கிய நாடுகளின் சார்பாகச் செல்லும். சில அமெரிக்காவின் பொறுப்பிலேயே அனுப்பிக்கப்படும். தொழில் நுட்பங்களில் நுண்ணிய பயிற்சி ஒவ்வொரு தேசத்து மக்களுக்கும் அளிக்கப்படும். 1949-ம் ஆண்டில் ஸராவக், காம்பியா, ட்ரூக் போன்ற நாம் முன்பின் அறியாத இடங்களிலிருந்து 24,800 மாணவர்கள் அமெரிக்காவுக்கு வந்து பயிற்சி பெற்றனர். நாலாவது அம்சத்தின்கீழ் இன்னும் மூவாயிரத்திலிருந்து 5,000 பேர் வரை அமெரிக்காவுக்கு வந்து தொழில் நுட்ப பயிற்சி பெறுவர்.

அமெரிக்க விவசாய இலாகா, உணவு விவசாய நிர்வாகம் ஆகியவற்றிலுள்ள நிபுணர்கள் நிலத்தைப் பண்படுத்துதல், சீர்திருத்த முறையில் ஏர் உழுதல், ஆடுமாடுகளைக் கவனித்தல், நீர்ப்பாசனம், வெள்ளத்தைத் தடுத்தல், காடுகளை வளர்த்தல் போன்ற துறைகளில் பயிற்சி அளிப்பார்கள்.

நிபுணர்கள் விதைகளைப் பரிசோதித்து, நல்ல விதைகள் கிடைக்குமாறு ஏற்பாடுகள் செய்வார்கள். நாலாவது அம்ச நிபுணர்கள் செய்ய வேண்டிய பணியைச் சொல்லி முடியாது. கீழ்க்கோடியில் பூச்சிகள் ஒவ்வொரு வருஷமும் 1,20,00,000

டன் அரிசியை அழித்துவிடுகின்றன. கருப்புப் பூச்சி மெக்ஸி கோவில் ஆரஞ்சுச் செடிகளை நாசமாக்கி வருகின்றன.

நாலாவது அம்சத்தின் கீழ்அமெரிக்கா பூச்சிகளை அழிக்கும் திட்டத்தை நிர்வகிக்க நிபுணர்களை அனுப்பும். அவர்கள் பூச்சி களை அழிக்கும் வழிகளைப் போதிப்பார்கள். அவற்றைப் பற்றிய சமாசாரங்களை அறிந்துகொள்ள உணவு விவசாய நிர்வாகம் பிராந்திய, சர்வதேசக் கூட்டங்களை ஏற்படுத்தும். ஒவ்வொரு பிரதேசமும் தனக்கு எவ்வித விவசாய மெஷின்கள் தேவை என்பதைத் தீர்மானிக்கும். குறிப்பிட்ட பிரதேசங்களுக்குத் தகுதியான மெஷின்களை முதலாளிகள் செய்யுமாறு ஏற்பாடு செய்யப்படும்.

ஒரு தொத்து வியாதியைத் தொலைப்பதால் சில சமயங்களில் ஒரு பிரதேசத்தின் உணவு உற்பத்தி 50 சத விகிதத்துக்குமேல் அதிகமாகியிருக்கிறது. தொத்து வியாதிகள் இன்று விமான மூலம் தேசிய எல்லைகளையும் கடந்துவிடும். அவை இன்று இந்தியாவில் தோன்றலாம், நாளை கெய்ரோவில், அடுத்த நாள் லண்டனில் தொடரலாம். உலக சுகாதார நிர்வாகம் துறை முகங்களிலும் விமான நிலையங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கை களை எடுத்துக்கொள்ள முயலுகிறது.

அடிக்கடி சுகாதாரம் போஷணையிலிருந்து பிரிக்க முடியாத தென்று அறிகிறோம். சரியான போஷணையிருந்தால் பெரிபெரி போன்ற வியாதிகளைத் தடுத்துவிடலம். அது உணவு விவசாய இலாகாவின் வேலை. நல்ல நீர் கிடைக்கும் கிணறுகளை வெட்ட வும், சுகாதார வசதிகளைச் செய்து கொள்ளவும், சுத்தமான கடைகளை அமைத்துக்கொள்ளவும் நாலாவது அம்சக் கோஷ்டி கள் தென்னமெரிக்கர், ஆப்பிரிக்கர், ஆசியர் ஆகியோருக்குத் துணை புரியும்.

சுலபமாகக் கிடைக்கும் சாமான்களைக் கொண்டு கிராமங்களில் தெருக்களைக் கட்டுவதெப்படி என்று நாலாவது அம்சக் கோஷ்டி கள் காண்பிக்கும். ரயில்வே நிர்வாகத்தில் பயிற்சி அளிக்கும்.

அடிப்படையான பொருளாதாரத்தைச் சீராக்கும் பல்வேறு வேலைகளைச் சேர்த்து நடத்துவது பிரமாதமான காரியம். அதனால் சிறந்த பலனும் கிடைக்கும். தொழில் நுட்பத் துறையில் ஒத்துழைக்க ஆரம்பித்தால் பின்பு அரசியல் பொருளாதாரத் துறைகளிலும் ஒத்துழைக்க முடியும். நாலாவது அம்சத்தின் கீழ் கூட்டுறவோடு வேலைச் செய்யப் பழகிய தேசங்கள் அப்பழக்கத்தை லகுவில் விட்டுவிடா. அக் கூட்டுறவு முயற்சியால் உலகம் பூராவும் தொழிலபிவிருத்தி பெறத் தயாராகும். தனிப்பட்டோர் மூலதனத்துக்கு அதிக கிராக்கி ஏற்படும்.

திட்டத்தை நடத்த ஆரம்பித்த பிறகு அதன் பலன்கள் நாம் எதிர்பார்ப்பதற்கு முன்பே தோன்றலாம். தொழிலபிவிருத்திக்கு முதல் படியாகப் பின்தங்கிய தேசங்களுக்கென ஒரு பழுதுபார்க்கும் நிலையத்தை மாரிஸ் குக் ஏற்படுத்தியிருக்கிறார். அதற்குச் செலவு 2,600 டாலர்கள்தான் ஆகும். அந்நிலையத்தை வெகு சுலபமாக ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு மாற்றலாம். நிலையத்தில் சில அத்தியாவசியமான கருவிகளே இருக்கும். அலாஸ்கா, பாலஸ்தீனம், இந்தியா, பிரேஸில் ஆகிய தேசங்களில் எங்கு வேண்டுமானாலும் அதை நிறுவலாம். விவசாயக் கருவிகள், படகுகள், வண்டிகள் ஆகியவற்றை அது செப்பனிடும். பழுது பார்க்கும் நிலையத்தில் வேலை செய்யத் திறமை பெற்ற பிறகே லட்சக் கணக்கான மக்கள் உண்மையான யந்திர சாலையில் வேலை செய்யத் தயாராவார்கள். அதற்கப்புறமே உண்மையான தொழிலபிவிருத்தி உண்டாகும்.

விவசாயம், சுகாதாரம், போக்குவரத்து, கல்வி, சிறு தொழில்கள் ஆகியவற்றில் ஒவ்வொரு வருஷமும் முன்னேற்றம் தோன்ற ஆரம்பித்து விட்டால் பின்தங்கிய பிரதேசங்கள் அதற்குப் பிறகு பிற்போக்கான நாடுகளாய் இரா. அரசியல் நிலைமை சந்தர்ப்பமளித்தால், அவை தனிப்பட்டோர் மூலதனத்தையும் பொதுஜன நிர்வாகங்களின் முதலையும்

பெறத் தயாராயிருக்கும். அதனால் அவையும் பலனடையும். மூலதனம் போட்டவர்களும் லாபம் அடைவார்கள்.

அதற்குப் பிறகு நாலாவது அம்சத்தின் இரண்டாவது கட்டம் ஆரம்பமாகும். பொருளாதார வாழ்க்கையின் வேகம் அதிகரித்தால், நதிதீரத் திட்டங்களில் மூலதனம் போடப்படும். அயல்நாடுகளிலிருந்து தனிப்பட்டோர் மூலதனத்தைப் பெறுவதென்ற அடிப்படையான கருத்தைப் பின்தங்கிய தேசங்கள் இப்போது அவ்வளவாக எதிர்ப்பதில்லை.

பல பின்தங்கிய பிரதேசங்களிலேயே உள்நாட்டு மூலதனம் சாதாரணமாக மதிப்பிடப்படுவதற்கு அதிகமாக இருக்கிறது. அது மண்ணில் புதைக்கப்பட்டிருக்கலாம், பத்திரமாக அறைகளில் பூட்டப்பட்டிருக்கலாம். அல்லது நகைகள் ஆபரணங்கள் போன்றவையாக இருக்கலாம். அம்மூலதனம் தனது கடமையைச் செய்ய ஆரம்பித்தாலொழிய வெளியிலிருந்து சுமத்தப்படும் முன்னேற்றங்கள் வேறிழந்து எந்நேரத்திலும் இடிந்து விழத் தயாராயிருக்கும்.

துணிச்சலான புதிய திட்டத்தின் முதல் கட்டத்தில் பலதிறப்பட்ட தொழில் நுட்ப நிர்வாகங்களுக்குள் ஒத்துழைப்பு அவசியமென்றால், இரண்டாவது கட்டத்தில் வெளிநாட்டு முதலாளிகளும் உள்நாட்டு முதலாளிகளும் ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறே தனிப்பட்ட முதலாளிகளும், சர்க்காரும் அமெரிக்காவிலும் அயல்நாடுகளிலும் ஒத்துழைக்க வேண்டும்.

அத்தகைய கூட்டுறவு ஏற்பட்டால், தொழில்கள் தழைக்கும். அயல்நாட்டு மூலதனத்துக்கு இன்றுள்ள அபாயங்கள் மறைந்து போகும்.

" கூட்டுறவே திறவுகோல்."

# வேண்டிய சக்தி இருக்கிறதா?

உலகின் மற்ற பாகங்களில் தொழில்களை அபிவிருத்தி செய்வதால், பூமியிலிருந்து கிடைக்கும் தாதுப் பொருள்கள் சீக்கிரமாகத் தீர்ந்துவிடாதா? அதனால் அமெரிக்க தொழில் வாழ்வு பாதிக்கப்படாதா? மூலத்தாதுப் பொருள்களைப் பொறுத்தவரை இக் கேள்விகளுக்கு இல்லையென்றுதான் பதில் சொல்ல வேண்டும். பூமியில் நிறைய இரும்பும் செம்பும் கிடக்கின்றன.

ஆனால் பூமியிலிருந்து கிடைக்கும் நிலக்கரி, எண்ணெய் சீக்கிரம் தீர்ந்து போகலாம் என்று பலர் கூறுகின்றனர். அவை தீர்ந்து விட்டால் நாம் நமது தொழிற்சாலைகளை விட்டு விட்டு வெகு சீக்கிரம் வயல்களை நோக்கிச் செல்ல வேண்டுமென சில பயந்தாங்கொள்ளிகள் எதிர்பார்க்கின்றனர்.

அவர்கள் எதிர்பார்து நியாயமானதானல், கப்பல் கவிழ்ந்த மாலுமி படகிலுள்ள குடிக்கும் தண்ணீரைக் காப்பது போல அமெரிக்கா பூமிக்கடியிலுள்ள எண்ணெயையும் நிலக்கரியையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். மற்ற பிரதேசங்களிலிருந்தும் அப்பொருள்களை நிறைய வாங்கிக்கொள்ள வேண்டும். அப் பிரதேசங்கள் தொழிலபிவிருத்தியின் பயனாக அவற்றை உபயோகித்துச் செலவு செய்வதையும் தடுக்க வேண்டும்.

ஆனால் நாலாவது அம்சம் உலகம் முழுவதிலும் தொழில் வளர்ச்சி உண்டாக உதவி செய்ய முன் வருகிறது. ஆகவே நிலக்கரி, எண்ணெய் நிலைமை அவ்வளவு மோசமாக இல்லை, அல்லது நாலாவது அம்சத்தை ஆதரிக்கும் கும்பல்கள் நெருக்கடியை உண்டாக்கக் கூடிய தவறைச் செய்ய உதவி செய்கின்றன. இதில் உண்மை எது?

சக்தி குறைந்துவிடும் என்று பயப்படுவோர் பல உண்மைகளை ஆதாரங்களாகக் கொண்டிருக்கின்றனர். முதலாவதாக இன்றைய தொழில் வளம் பொருந்திய அமெரிக்கா நிலக்கரி எண்ணெயைக் கொண்டு கட்டப்பட்டது. இரண்டாவதாக, நிலக்கரியையும் எண்ணெயையும் அமெரிக்கா அதிகமான அளவில் செலவு செய்து வருகிறது. மூன்றாவதாக, ஒருதரம் செலவாகி விட்டால், மனிதன் பூமியில் வாழும் காலத்தில் மறுபடியும் அப்பொருள்கள் கிடைக்கமாட்டா. இப்போது பெட்ரோல் அமெரிக்காவில் உற்பத்தியாகும் அளவில் உற்பத்தி செய்துகொண்டே போனால் இருபது வருஷங்களில் அமெரிக்காவிலுள்ள எண்ணெய்க் கிணறுகள் வற்றிப்போகுமென ஒருவர் மதிப்பிடுகிறார். இப்போது செலவாகும் அளவில் நிலக்கரி எண்ணெய் போன்ற பூமிக்கடியில் கிடைக்கும் சக்தியை உபயோகித்து வந்தால், 350 ஆண்டுகளுக்குள் அவ்வித சக்தி எல்லாம் போய்விடுமென சில எஞ்சினீயர்கள் சொல்லுகிறார்கள்.

எதிர் வாதம் செய்பவர்கள் பூமிக்கடியில் கிடைக்கும் நிலக்கரியும் எண்ணெயும் தீர்ந்துவிடாது என்று சொல்லவில்லை. அவர்கள் பின்வருமாறு வாதிக்கின்றனர்: அமெரிக்கா மட்டுமின்றி மற்ற பிரதேசங்களிலுள்ள எண்ணெயையும் நிலக்கரியையும் உபயோகித்துக்கொள்ளலாம். இதுவரை கண்டுபிடிக்கப்படாத புதிய சுரங்கங்களையும் கிணறுகளையும் வெட்டலாம். அப் பொருள்களால் உண்டாகும் சக்தியைத் திறமையான முறைகளால் அதிகரிக்கச் செய்யலாம். அணுச்சக்தியை உபயோகிக்கலாம்.

மேற் சொன்ன வாதங்களோடு நின்று விட்டால், பயந்தாங்கொள்ளிகள் சொல்வதுபோல அமெரிக்கா உற்பத்திக்கு வேண்டிய சக்தியை இழந்து வருகிறது என்பது ருசுவாகிவிடும். நாலாவது அம்சத்தின் குறிக்கோளான உலகத் தொழில் முன்னேற்றமும் பயித்தியக்காரத்தனமானதாய் விளங்கும்.

ஆனுல் தொழில் வளர்ச்சிக்கு நிலக்கரியும் எண்ணெயும் இன்றியமையாதவையா ? நம் கண்முன்னுல், தீர்ந்து போக முடியாத சக்தி தரும் நலன்களை மனிதன் பயன்படுத் திக்கொண்டு வருகிருன். தண்ணீரிலிருந்தும், காற்றிலிருந் தும், காடுகளிலிருந்தும், பூமியிலிருந்தும் அவன் சக்தியை உண்டாக்குகிருன். அவற்றையெல்லாம்விட மேலாக, அவன் சூரியனிடமிருந்து சக்தியை கிரஹிக்க முற்பட்டிருக்கிருன்.

ஐந்தாறு வருஷங்களுக்கு முன்பு, யுரேனியம், தோரியம் ஆகியவற்றின் அணுவைப் பிளப்பதன்மூலம் அமெரிக்காவி லுள்ள உற்பத்திக்குத் தேவையான சக்தியின் வளம் பிரம் மாண்டமாக அதிகரிக்கப்பட்டது. தொழில் வளம் பெருகும் உலகில் நிலக்கரி எண்ணெய் நெருக்கடி ஒருவிதமாகத் தீர்ந்து போகுமென அணுச்சக்தியைச் சில உற்சாகிகள் வரவேற்ருர்கள்.

ஆனுல் அணுச்சக்தியைத் தொழிலியலில் உபயோகிக்கும் நாள் சமீபத்திலில்லை. ஒரு பவுண்டு நிலக்கரியிலிருந்து கிடைக் கக்கூடிய அணுச்சக்தியைக் கொண்டு ராணி எலிஸெபத் போன்ற பெரிய கப்பல் நியூயார்க்கிலிருந்து பிரஞ்சு நகரமான செர்போர்க் வரை செல்லலாமென்பது வாஸ்தவமாயிருக்கலாம். ஆனுல் நிலக்கரியிலிருந்து அணுச்சக்தியை ஏற்படுத்த இன்னும் எவ்வித வழியையும் கண்டு பிடிக்கவில்லை. இதுவரை யுரேனி யம், தோரியம் ஆகிய பொருள்களிலிருந்துதான் அணுச்சக்தி யை உண்டாக்கியிருக்கிருர்கள். இப்பொருள்கள் அமெரிக்கா வில் 50,000 டன்களும் உலகம் முழுவதிலும் 500,000 டன்க ளும் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. இப்போதே அமெரிக்கா வில் உபயோகமாகும் யுரேனியம், தேசத்திலுள்ள சேமிப்பில் முப்பதில் ஒரு பங்கு என்று சொல்லப்படுகிறது. ஆகையால் அமெரிக்காவிலுள்ள யுரேனியத்தையே அந்நாடு நம்பியிருந் தால் 30 ஆண்டுகளில் உள்ள யுரேனியம் தீர்ந்துபோகும்.

அணுவைத் தவிர மற்ற நலன்களும் உள. உலகில் தண்ணீரிலிருந்து கிடைக்கக் கூடிய சக்தியில் பத்தில் ஒரு பங்கு

தான் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இச்சக்தியைப் பூரண மாக உபயோகித்துக் கொண்டாலும் அது உலகத்தின் சக்தித் தேவையில் கால்வாசிதான் ஆகும். பின்தங்கிய பிரதேசங்க ளில் புதிதாகத் தொழில்களை நிர்மாணிக்கும்போது நதிகளி லிருந்து கிடைக்கும் சக்தியை உபயோகித்துக் கொள்ளலாம். ஆனால் தொழில் வளம் பெருக ஆரம்பித்து விட்டால், நதி தீரங்களிலிருந்து கிடைக்கும் சக்தி போதாது.

நூற்றுக்கணக்கான தனிப்பட்ட ஆராய்ச்சி நிலையங்களும், அமெரிக்க, ரஷ்ய சர்க்கார்களும் இன்னும் மற்ற தேச சர்க்கார் களும் சூரியனிடமிருந்தே சக்தியை உண்டாக்க முயன்று வரு கின்றன. மறைமுகமாகப் பூமியில் உண்டாகும் எல்லாவித சக்திகளுமே சூரியனிலிருந்துதான் உண்டாகின்றன. சூரிய னது சக்தியில் 200 கோடியில் ஒரு பங்குதான் பூமியில் படுகிறது. அதிலும் பெரும் பகுதி பிரகாசத்தில் வீணாகிவிடுகிறது. மிஞ்சி யுள்ளது உலகத்தின் சக்தித் தேவையைப் போல் 50 மடங் காகும்.

வெகு காலம்வரை சூரியனது சக்தியை நேராகவே உபயோ கித்துக் கொள்ள ஏதாவது வழி யிருக்கவெண்டுமென விஞ் ஞானிகள் யோசித்து வந்தனர். அதன்பலனாக, கண்ணாடி யைக் கொண்டு சூரியனிலிருந்து உஷ்ணத்தை கிரஹிக்கும் வீடுகள் பரீட்சார்த்தமாக கட்டப்பட்டன. குளிரான பிரதேசத் திலும் வெளியில் சுன்னம் டிகிரிக்கும் குறைவாக சீதோஷ்ண நிலைமையிருக்கும் நாளில் சரியான முறையில் வீடுகட்டினால் வீட்டுக்குள் 70 டிகிரி உஷ்ணம் இருக்கச் செய்யலாம். பத்து அல்லது 12 சூரியனில்லா நாட்கள் வரை சூரிய உஷ்ணம் நிலைக்கும்படி அதைத் தண்ணீரிலோ கெமிகல் போன்ற பொரு ளிலோ அடைத்து வைக்கலாம்.

இன்னும் துணிச்சலான வழியொன்று கற்பனை உலகிலிருந்து யதார்த்த உலகிலேயே தோன்றியிருக்கிறது. உலகிலுள்ள மெஷின்களையே சூரியன் உதவியால் ஓட்ட முடியும் என்று ருசுப்

படுத்தப்பட்டிருக்கிறது. ஜூலியஸ் ஏ. க்ரூக் உள்நாட்டுக் காரிய தரிசியாயிருக்கையில், சூரிய சக்தியை உற்பத்தி சாதனமாக உபயோகிக்கத் தனிப்பட்ட ஆராய்ச்சி செய்த முயற்சிகளை அமெரிக்க உள்நாட்டு இலாகா பரிசீலனை செய்து வருவதாக அவர் அறிவித்தார். இத்துறையில் ஆராய்ச்சியை விஸ்தரிக்க அமெரிக்க காங்கிரஸைப் பண உதவியளிக்குமாறு கேட்கலாம் என்றும் அவர் கூறினார்.

பூமியிலுள்ள நிலத்தில் பாதி பாலைவனமாகக் கிடக்கிறது. பாலைவனத்தில் படும் சூரிய வெளிச்சத்தைப் பயன்படுத்திக் கொண்டால், வேண்டிய அளவு சக்தியை உற்பத்தி செய்ய வேண்டிய பிரச்னை தீர்ந்து விடும். மத்திய ஆசிய தொழிற்சாலைகள் சிலவற்றிற்கு சூரிய சக்தியை உண்டுபண்ண ஒருவிதக் கண்ணாடிகளை ரஷ்யா உபயோகித்து வருவதாகச் செய்தி.

நிலக்கரியைக்கொண்டு மின்சார சக்தியை உண்டாக்குவதற்கு ஆகும் செலவில் சூரிய சக்தியிலிருந்து மின்சார சக்தியை உண்டு பண்ண அமெரிக்காவில் டாக்டர் ஸி. ஜி. ஆப்பட் என்பவர் ஒருவிதக் கண்ணாடி சாலையைக் கண்டுபிடித்திருக்கிறார். அமெரிக்காவுக்குத் தேவையான சக்தியை உண்டாக்க 25,000 சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள கண்ணாடி நிலையத்தை நிறுவிக்க வேண்டி வரும்.

தாவர வர்க்கங்கள் சூரிய வெளிச்சத்தைக் கிரஹித்துக் கொள்கின்றன என்பது தெரிந்த காலத்திலிருந்து மனிதர்கள் எவ்வாறு தாவர வர்க்கங்கள் சூரிய கிரணத்தைக் கிரஹித்துக் கொள்கின்றன என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இப்போது அதைக் கண்டுபிடித்து வருவதுடன், கிரஹிக்கும் சக்தியை அதிகமாக்கவும் கற்று வருகிறார்கள். இன்னும் பத்து ஆண்டுகளில் தாவர வர்க்கங்கள் மூலம் சூரிய சக்தியைப் பெருவது சாத்தியமாகலாம்.

ஆகையால், உலகத்தின் நிலக்கரி, எண்ணெய்ச் சொத்து என்றைக்கும் பூராவும் தீர்ந்துபோக வேண்டுமென்ற நியதி

யில்லை. நாளை ஒரு காலத்தில் வேறுவிதமாகச் சக்தி கிடைப்ப தால், நிலக்கரிச் சுரங்கங்களையும் எண்ணெய்க் கிணறுகளையும் மனிதர்கள் விட்டுவிடலாம். பள்ளி மாணவர்கள் அவற்றை அபூர்வமான காட்சிகளாகப் பார்த்துவிட்டுப் போகக்கூடும். உணவு வசதி தீர்ந்து விடும் என்பது போல சக்தி வசதி தீர்ந்து போகும் என்ற பூச்சாண்டிக்கு நாம் அஞ்சவேண்டியதில்லை. அத்தகைய ஆபத்து நேரலாமென்பதைப் பரிசோதிக்க வேண்டுமே தவிர, அதற்கு நடுங்கிவிடக் கூடாது.

# மெஷினும் பணமும்

உலக ஜனத்தொகையில் ஏழு சத விகிதமே அமெரிக்காவில் வசித்தாலும், இன்று அமெரிக்கா உலகில் உற்பத்தியாகும் சக்தியில் பாதியை உபயோகிக்கிறது. நவ நாகரிக வாழ்க்கையின் சாதனங்களில் பாதி 15,00,00,000 அமெரிக்கர்களுக்குக் கிடைக்கிறது. மிகுதியுள்ள பாதியை 200 கோடிக்கு மேலுள்ள மக்கள் பங்கிட்டுக்கொள்ள வேண்டி யிருக்கிறது. ஓர் அமெரிக்கனது வாழ்க்கைத் தரம் மற்றவர்களின் வாழ்க்கைத் தரத்தைப் போல் எட்டு மடங்கு உயர்ந்தது.

“இன்னும் நூறு ஆண்டுகள் கழிந்த பிறகு, அமெரிக்கர் வாழ்க்கைத்தரம் இன்றிருப்பதைவிட 16 மடங்கு உயர்ந்து விளங்கும். அது ஏதோ பிரமாதமாகத் தொனிக்கலாம். ஆனால் நீங்கள் கணக்கிட்டுப் பார்த்தால் அது மூன்று சத விகிதம் கிடைக்கும் வட்டிக்குக் குறைவாகவே இருக்கிறதென்பது உங்களுக்கு விளங்கும். தகராறு என்னவென்றால் ஜனங்கள் 3 சத விகிதத்தைப் பார்த்ததும், பொறுமையை இழந்து விடுகிறார்கள். சில சந்ததிகளில் ஏற்படக் கூடிய அசாத்திய முன்னேற்றத்தை அவர்களால் ஊகிக்க முடிவதில்லை,” என்று ஒரு பொருளாதார நிபுணர் ஜெனரல் மோட்டார்ஸ் கம்பெனியைச் சேர்ந்த சார்லஸ் இ. வில்ஸனிடம் கூறினாராம்.

அடுத்த 30 ஆண்டுகளில் அமெரிக்கர்கள் இப்போதிருப்பதை விட இன்னும் 50 சத விகிதம், ஒரு வேளை 75-லிருந்து 100 சத விகிதம் வரை, அதிகமாகப் பண்டங்களை உபயோகிப்பார்கள் என ஹார்வார்ட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பொருளாதார நிபுணர் ஸம்னர் ஸ்லிட்செர் கூறுகிறார். அதைவிட அதிகமான அளவில் உலகின் மற்ற பாகங்களிலுள்ள மக்கள் பண்டங்களை உபயோகிப்பார்கள். அமெரிக்கர் 1750-ம் ஆண்டிலிருந்த நிலைமையில் மற்றவர்கள் இன்று இருக்கிறார்கள். அவர்களுடைய

தொழில முன்னேற்றம் அமெரிக்கருடைய தொழில் முன்னேற்றத்தைப் போலவே சென்ருல், அமெரிக்கர் 50 சத விகிதம் அதிகமாகப் பண்டங்களே வாங்கும்போது மற்றவர்கள் அதைவிட நாலு அல்லது ஐந்து மடங்கு அதிகமாக வாங்குவார்கள்.

நாலாவது அம்சம் பிரமாதமான வெற்றியடைந்தபோதிலும் ஓர் எத்தியோப்பியனது வாழ்க்கைத் தரம் அமெரிக்கனது வாழ்க்கைத் தரத்துக்கு ஈடாகப் போவதில்லே. ஆனல் எத்தியோப்பியன் முன்னேற்றத்தையும் சுபிட்சத்தையும் அடையும் மார்க்கத்தில் செல்ல ஆரம்பித்திருப்பான்.

ஒரு தேசத்தின் வருமானத்தைக் கண்டு பிடிக்க பொருளாதார நிபுணர்கள் ஒரு சுலபமான வழியைக் கையாளுகிருர்கள். அத் தேசத்தின் உணவுத் தேவையை உற்பத்தி செய்ய எத்தனே ஆட்கள் வேண்டியிருக்கிறதென்று அவர்கள் கேட்கிருர்கள். விவசாயிகள் அதிகமாக வேண்டியிருந்தால், அத் தேசத்தின் வருமானம் குறைந்ததாயிருக்கும். 1930-ம் ஆண்டில் சீனுவில் வேலே செய்யும் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு பயிர்த் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். சீன வருமானம் தலேக்கு ஓராண்டில் 20 டாலரிலிருந்து 50 டாலருக்குள் இருந்தது. இந்தியாவில் விவசாயிகள் 62 சத விகிதம் இருந்தனர். தேசீய வருமானம் 90 டாலர்கள். இத்தாலியில் தொழிலாளர்களில் 43 சத விகிதம் மற்றவர்களுக்கு உணவு உற்பத்தி செய்தனர். தேசீய வருமானம் 154 டாலர்கள். நார்வேயில் 35 சத விகிதம் விவசாயிகள், தேசீய வருமானம் 237 டாலர்கள்

ஐந்து தொழிலாளர்களில் நால்வர் உணவு உற்பத்திக்கு அவசியமானல் ஒரு தொழிலாளிதான் மற்ற பொருள்களே உற்பத்தி செய்ய மிஞ்சுகிருன். ஆனல் ஒரு தொழிலாளி மற்ற நால்வருக்கும் தனக்கும் உணவு உற்பத்தி செய்ய முடிந்தால், நால்வர் மற்ற தேவையான பொருள்களே உற்பத்தி செய்து விநியோகிக்கலாம். சீனுவில் 15 சத விகிதம் விவசாயிகள்

வேறு தொழில்களுக்குச் செல்ல முடிந்தால், தனி ஆள் வருமானம் இரு மடங்காக உயரும். உலகிலுள்ள 80,00,00,000 தொழிலாளர்களில் 60 சத விகிதம் பயிர்த் தொழில் செய்து வருகின்றனர். அந்த எண்ணிக்கையில் மூன்றில் ஒருவர் வேறு தொழிலிலேயோ வர்த்தகத்திலேயோ கவனம் செலுத்தினுல், உலக வருமானம் 30,000 கோடி டாலருக்குமேல் அதிகப்படியாகும்.

ஒரு தேசத்தின் தொழில் வளர்ச்சியை அது எவ்வளவு சக்தியை உபயோகிக்கிறது என்பதிலிருந்து அளக்கலாம். ஒருவன் தன் கைகளால் ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் வீதம் வேலை செய்தால், ஓராண்டில் 180 கிலோவாட் மணி சக்திக்குச் சமமானதை உற்பத்தி செய்வான். மெஷின்கள் அதிகமாயிருந்தால், அதிகமான சக்தி வேலையில் ஈடுபடுகிறது. அதனுல் செல்வம் அதிகரிக்கிறது.

1937-ம் ஆண்டில் சராசரியில் ஓர் அமெரிக்கன் 7,000 கிலோவாட்-மணி சக்தியை உபயோகித்தான். அதனுல் அவனுக்கு 508 டாலர்கள் கிடைத்தன. ஒரு பிரஞ்சுக்காரன் 2,800 கிலோவாட்-மணி சக்தியைத்தான் உபயோகித்தான். அவனது வருமானம் 298 டாலர்கள். 1,250 கி-ம சக்தியை உபயோகித்த ஜப்பானியனது வருமானம் 114 டாலர்கள்.

இந்தியாவில் நிறைவேற்றப்படும் திட்டங்களால் வருஷத்தில் இந்தியன் உபயோகிக்கும் சக்தி 180 கி-ம. விலிருந்து 240 கி.-ம. ஆகப் பெருகும். அவனது வருமானமும் அநேகமாக 90 டாலர்களிலிருந்து 130 டாலர்களாக உயரும்.

பின்தங்கிய நாடுகளில் வருமான அளவை உயர்த்துவதனுல் துணிச்சலான புதிய திட்டம் மற்ற நாடுகளின் வருமான அளவையும் உயர்த்தும்.

ஜனுதிபதியின் தேசீய ஆலோசனைக் கவுன்ஸில் 28 தேசங்களைப் பின்தங்கிய நாடுகள் எனக் கணக்கிட்டிருக்கிறது. அந்

நாடுகளில் 156,50,19,000 மக்கள் வசிக்கின்றனர். 1936–40-ம் ஆண்டுகளில் சராசரி வருமானம் ஓராண்டுக்கு 41 டாலர்கள்.

ரஷ்யாவையும் அதற்கு அடங்கியுள்ள ஐரோப்பிய நாடுகளையும் சேர்த்து 10 நாடுகள் ஓரளவு முன்னேற்றமடைந்த நாடுகளாகக் கருதப்படுகின்றன. ஜனத்தொகை 48,88,22,000. சராசரி வருமானம் 154 டாலர்கள்.

பதினைந்து தேசங்கள் தொழில் முன்னேற்றமடைந்தவையெனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவற்றில் 38,42,38,000 மக்கள்தான் இருக்கிறார்கள். ஆனால் சராசரி வருமானம் 389 டாலர்கள். மொத்த வருமானம் உலகத்தின் மற்ற பாகத்தினர் எல்லோரையும்விட அதிகம்.

பின்தங்கிய நாடுகள் நடுத்தர நாடுகளாக மாறினால், அவற்றின் வருமானம் 17,500 கோடி டாலர்கள் அதிகமாகும். பின்தங்கிய நாடுகளும் நடுத்தர நாடுகளும் முன்னேற்றமடைந்த நாடுகளின் நிலைமையை அடைந்துவிட்டால் உலகம் முழுவதும் சுபிட்சம் தாண்டவமாடும்.

அமெரிக்க வர்த்தகம் விருத்தியாவதற்கு மற்ற நாடுகளின் வருமானம் உச்ச நிலை அடையும்வரை காத்திருக்கவேண்டியதில்லை. உதாரணமாக, பின்தங்கிய நாடுகளில் தொழில் முன்னேற்றத்தின் முதல்படி நதிநீரத்திட்டங்களும் அணைக்கட்டுத் திட்டங்களும் எனக் கருதப்படுகின்றது. ஏனெனில் அவற்றால் விவசாயம் விருத்தியாகிறது. தொழில்வளமும் பெருகுகிறது. தொழில் நுட்ப உதவி மட்டுமின்றித் திட்டங்களுக்குத் தேவையான மெஷின்களும் சாமான்களும் அமெரிக்கா உற்பத்தி செய்து அனுப்ப வேண்டியிருக்கும். ஆசிய முன்னேற்றத் திட்டங்களுக்குத் தற்சமயம் வேண்டிய சாமான்கள் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் சுமார் 75 கோடி டாலர்கள் பெறுமானதாயிருக்கும்.

அணைக்கட்டுகளைக் கட்டிமுடித்த பிறகுப் பின்தங்கிய தேசங்களில் புதிதாக உண்டாகும் மின்சார சக்தியை உபயோகிக்க எஞ்சின்கள் தேவையாயிருக்கும். ஒரு சந்ததிவரையில், புதிதாகத் தொழில் வளம் விருத்தியாகும் நாடுகளில் ஜனங்களுக்குத் தேவையான பொருள்களை உண்டாக்கும் மெஷின்களையும் அம் மெஷின்களை உற்பத்தி செய்யும் பெரிய யந்திரங்களையும் அமெரிக்கா தயாரித்து அனுப்பவேண்டியிருக்கும். அதன் பலனாக அமெரிக்க வியாபாரம் அபிவிருத்தியடைந்து பொருளாதார மந்தம் அடிக்கடி தலைகாட்டுவது நின்றுவிடும்.

இப்போது பிற்போக்கான நாடுகளாக இருப்பவை தம் இஷ்டப்படி வெளிநாடுகளில் பொருள்களை வாங்கும் ஸ்திதி ஏற்படும்போது துணிச்சலான புதிய திட்டத்தின் முழுப்பலன்கள் தெரியவரும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதை ஊகிக்க நாம் கானடாவை உதாரணமாகக் கொள்ளலாம். தொழிலியல் முன்னேற்றமடைந்திருக்கும் 1,20,00,000 கானடியர்கள், விவசாய நாடுகளான இந்தியா சீனா ஆகிய நாடுகளிலுள்ள 80 கோடி மக்களை விட அதிகமாக அந்நிய பொருள்களை வாங்குகிறார்கள். சீனாவின் ஜனத்தொகையில் பத்தில் ஒரு பங்கு உள்ள பிரிட்டன் சீனாவைப் போல் 17 மடங்குப் பொருள்களை அயல்நாடுகளிலிருந்து தருவிக்கிறது.

தொழில்கள் இல்லாததால், இந்தியாவும் சீனாவும் அவற்றின் ஜனத்தொகை உலக ஜனத்தொகையில் 30 சத விகிதமிருந்தும், உலக வியாபாரத்தில் ஐந்து சதவிகிதமே பங்கு எடுத்துக்கொள்ளுகின்றன.

# மகத்தான முடிவு

"உலகிலுள்ள நாடுகளில் செல்வத்திலும் பலத்திலும் முதன்மை ஸ்தானம் வகிப்பது பயங்கரமான பொறுப்பாகும்," என்று அமெரிக்காவின் உதவி ராஜாங்கக் காரியதரிசியாயிருந்த வில்லர்ட் தார்ப் கூறுகிறார்.

மொத்தத்தில் அப்பொறுப்புக் கேற்றவாறு அமெரிக்கர்கள் நடந்துகொள்ளும் விதத்தைப்பற்றி அவர்கள் அவமானப்பட வேண்டியதில்லை. தயக்கத்துடன், சில சமயங்களில், என்ன செய்கிறோம், எதற்காகச் செய்கிறோம் என்பதைச் சரியாக உணராதுபோல, அமெரிக்கர்கள் சர்வதேச விவகாரங்களில் முற்போக்கான சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கையை வளர்த்து வந்திருக்கிறார்கள். அதைச் சாதுர்யமாக நிறைவேற்றினால், அமெரிக்காவும் மற்ற நாடுகளுக்கும் நன்மையே விளையும்.

அவர்களுக்கும் தெரியாமல் அமெரிக்கர்கள் ஒரு மகத்தான முடிவைச் செய்திருக்கிறார்கள். பாதுகாப்புள்ள உலகில் அவர்கள் பாதுகாப்புடன் வாழ முடியும். பலம்பொருந்திய உலகில் அவர்கள் பலசாலிகளாயிருக்க முடியும். சுபிட்சமான உலகில் அவர்களும் சுபிட்சத்துடன் இருக்கலாம். அமைதியான உலகில் அவர்கள் அமைதியுடன் வாழலாம் என்ற முடிவுக்கு அமெரிக்கர்கள் வந்திருக்கிறார்கள்.

ஆனால் அந்த அடிப்படையான முடிவுக்கு வந்த பிறகு அனுதினமும் புதிய முடிவுகள் செய்ய வேண்டிய சந்தர்ப்பங்கள் தோன்றிவரும். நிலப் பிரச்னைகளையும் ஜனத்தொகை பிரச்னைகளையும் ஆராய்ச்சி செய்திருக்கும் சமர்த்தரான வில்லியம் வாக்ட் என்பவர் சேர்ந்தாற்போல் சீக்கிரமாக அமெரிக்கா முடிவு செய்ய வேண்டிய சில நாலாவது அம்சப் பிரச்னைகளைக் கணக்கிட்டார்.

தகர்ந்துவிடக்கூடிய சூழ்நிலையில், விஞ்ஞானம் சூழ் நிலையை மாற்றும்போது லட்சக்கணக்கான மக்கள் பழைய, தற்கொலைக்கொப்பான வழிகளையே பின்பற்றுவது முதல் முக்கிய பிரச்னையென வாக்ட் கூறுகிறார்.

அவர் சொல்லும் மற்ற பிரச்னைகள் :

பல வருஷங்களுக்கு மட்டுமல்ல, பல பத்து வருஷங்களுக்குத் தொடர்ந்து நாலாவது அம்சத் திட்டத்தை நடத்த வேண்டிய அவசியம்.

அமெரிக்க, அந்நிய விஞ்ஞானிகள், தொழில் நிபுணர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகப் பெருகவேண்டிய அவசியம்.

ஏகாதிபத்தியச் சுரண்டலைத் தவிர்க்கவேண்டிய அவசியம்.

சர்க்கார் கட்டுப்பாடுகளைத் தவிர்க்க வேண்டிய அவசியம்.

தேவையான பிரதேசங்களில் நாலாவது அம்சத்தை நிர்மாணிப்பதன் அவசியம்.

அமெரிக்க முயற்சிகளைப் பலவேறு திசைகளில் செலுத்தி வீணாக்காமல், சில பொறுக்கியெடுக்கப்பட்ட பிரதேசங்களில், உதாரணமாகத் தென்னமெரிக்காவிலும், மத்திய கேந்திரத்திலும் முதலில் கவனம் செலுத்தவேண்டிய அவசியம்.

ஜனத்தொகையைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம்.

எல்லாவற்றையும்விட முக்கியமாக, நிலத்தைச் சரிவர உபயோகப்படுத்த பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம்.

நல்லுறவும் விடாமுயற்சியும் இருந்தால் வாக்ட் கூறும் பிரச்னைகளில் சிலவற்றைத் தீர்க்கலாம். மற்றவை, முக்கியமாக ஜனத்தொகைக் கட்டுப்பாடு, வாதத்துக்குரிய விஷயங்கள். விவசாயிகள் நிறைந்த ஜனத்தொகை அபரிமிதமாகப் பெருகு

வது சாத்தியமானதாய் இல்லாவிட்டால், விவசாய முறைகளைச் சீர்திருத்தி நிலத்தைப் பழுதுபார்ப்பதுடன் நாலாவது அம்சத் திட்டம் நின்றுவிடலாம். ஆனால் அது அப்படி நின்று விட்டால், அதிகமாகக் கிடைக்கும் உணவும் போதாத அள வுக்கு ஜனத்தொகை விருத்தியாகிவிடும்.

ஜனத்தொகை குறைய ஆரம்பிக்குமுன், தொழில் வளர்ச்சி யால் ஜனத்தொகை அதிகரிக்கும். அதிக ஜனத்தொகை யுள்ள சில பிரதேசங்களிலிருந்து மற்ற பிராந்தியங்களுக்கு மக்கள் குடியேறுவதால் நிலைமையை ஓரளவுக்குச் சமாளிக்க லாம். மற்ற பிரதேசங்களில் ஆரோக்கியமான தொழிலாளர் களின் தொழில் அபிவிருத்தியால் ஜனத்தொகையின் விஸ் தரிப்பைச் சமாளிக்கலாம். பண்டைக்காலத்தில் ஜனத்தொகை அபிவிருத்தியின் பயனாகப் பல சரித்திர சம்பந்தமான மாறு தல்கள் உண்டாகி முன்னேற்றம் ஏற்பட்டது. அதேபோல் இன்று ஜனத்தொகைப் பெருக்கம் இயற்கையோடு நமக்குள்ள சம்பந்தத்தையும் நமக்குள்ளிருக்கும் உறவையும் பரிசோதிக்கச் செய்கிறது. அதனால் நாம் நாச வழிகளை மேற்கொள்ளலாம், அல்லது பயனளிக்கக்கூடிய விதங்களைக் கண்டுபிடித்துச் சமா ளித்து உயிர்வாழலாம்.

வாக்ட் கூறிய முடிவுகள் மட்டுமின்றி, அமெரிக்கக் கொள் கையை முன்னிட்டு அமெரிக்கர் சில தியாகங்களையும் அல்லது தியாகங்கள்போல் தோன்றுபவையையும் மேற்கொள்ளவேண் டும். உதாரணமாக, பிறநாடுகளிலிருந்து அமெரிக்கா முக்கிய மான மூலப்பொருள்களை இன்னும் அதிகமாக வாங்க வேண்டும். உலகம் அமெரிக்காவுக்கு அனுப்பக்கூடிய எல்லா துத்தநாகத் தையும், தகரத்தையும், செம்பையும், ஈயத்தையும் அமெரிக்கா பயன்படுத்திக்கொள்ள முடியும். பிறநாடுகளும் அமெரிக்க டாலர்களை உபயோகித்துக் கொள்ளலாம். ஒத்துழைக்க விருப்ப முள்ள நாடுகளின் பொருள்கள்மீது விதிக்கப்படும் தீர்வை களை அமெரிக்கா குறைத்துக்கொள்ள இணங்கவேண்டும்.

அமெரிக்கா இன்னும் ஒரு முக்கிய தீர்மானம் செய்து கொள்ளவேண்டும்: துணிச்சலான புதிய திட்டத்தைப் பிரதானமாகத் தனிப்பட்டோர் முயற்சியைக் கொண்டு நிறைவேற்றவேண்டுமா அல்லது பொதுஜன முயற்சியைக் கொண்டு நடக்கவேண்டுமா ?

சர்க்காரின் மகத்தான முயற்சியில் தனிப்பட்ட முதலாளிகள் ஒத்துழைக்க முன்வந்தால்தான் துணிச்சலான புதிய திட்டம் வெற்றிபெறமுடியும். அப்படியே விவேகிகளும் இம் முயற்சியில் முதலாளிகளைப் பங்குதாரர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இப்போது வரையறுத்துள்ளபடி, நாலாவது அம்சம் முதலாளியின் கூட்டுறவைப் பெரிதும் நம்பியிருக்கிறது. அலாதீனின் கனவுக்கும் எட்டாத அளவுக்கு அமெரிக்கர்கள் செல்வந்தர்களான அதே வழிகளில் பின்தங்கிய நாடுகளிலும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுதான் சரியென நாலாவது அம்சம் துணிந்திருக்கிறது. இந்த சரித்திரப் பிரசித்திபெற்ற பணியில் தனிப்பட்ட முயற்சி வெற்றியடையாமல் போகலாம். ஆனால் தனிப்பட்ட முயற்சியின் ஒத்துழைப்பின்றிச் சர்க்கார் இத்திட்டத்தை நிறைவேற்ற முடியாதென்பது திண்ணம்.

ஒரு சில நாடுகளைத் தவிர, பொதுவாக ஐரோப்பிய தேசங்கள் தனிப்பட்ட முயற்சியென்றால் எப்போதும் பயந்துவந்திருக்கின்றன. இங்குமங்குமாக முதலாளித்துவக் கொள்கையை அனுசரித்தாலும் அந்நாடுகள் தொழிலாளர்களையும் தொழில் முதலாளிகளையும் சர்க்கார் கட்டுப்படுத்தும் கொள்கையை மேற்கொண்டு வந்திருக்கின்றன. எனினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய பாகத்துக்குள் அதற்கு முந்திய நூற்றாண்டுகளில் கனவிலும் நினைக்காத அளவுக்கு ஐரோப்பிய முதலாளித்துவம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியிருக்கிறது.

“ நூறே ஆண்டுகளின் ஆட்சியில் அதற்கு முந்திய சந்ததிகளனைத்தையும் விட அதிகமானப் பிரம்மாண்டமான உற்

பத்தி சக்திகளை நடுத்தர வகுப்பினர் சிருஷ்டி செய்திருக்கிறார்கள்," என்று மார்க்ஸும் எஞ்செல்ஸும் அவர்களது "கம்யூனிஸ்ட் விளக்கம்" என்ற நூலில் கூறியிருக்கின்றனர். துரதிர்ஷ்டவசமாக, வெகுதூரம் அதே மார்க்ஸ், எஞ்செல்ஸ் வாழ்க்கைகளின் பலனாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பிய முதலாளித்துவத்தின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. முதலாளிகள் சர்க்காரின் பாதுகாப்பை மேலும் மேலும் நாட ஆரம்பித்தனர். முதலாளித்துவம் போட்டியிடுவதையும் விஸ்தரிப்பதையும் நிறுத்திக்கொண்டது. அபேதவாதமும் பொருளாதாரத் தேசீயமும் அடுத்தடுத்து வளர ஆரம்பித்தன. யுத்தம் அவ்வளர்ச்சியை அதிகரித்தது. இருபதாம் நூற்றாண்டில் 25 வருஷங்களுக்குள் ஐரோப்பா பொருளாதார, அரசியல், சமுதாயத் துறைகளில் தேக்கமுற்றது. வாழ்க்கைத்தரம் உயருவது குறைய ஆரம்பித்தது.

அதற்கு நேர்மாறாக, "கம்யூனிஸ்ட் விளக்கம்" வெளியான அடுத்து நூற்றாண்டுக்குள் போட்டியில் தழைக்கும் முதலாளித்துவ அமெரிக்காவில் ஜனங்களின் உண்மை வருமானம் 11 மடங்கு உயர்ந்தது. அமெரிக்க பொருளாதார நியதிப்படி, அது திடகாத்திரமாயிருக்க வேண்டுமாயின் அது விஸ்தரித்துக் கொண்டேபோக வேண்டும். ஆகையால், நாலாவது அம்சத்துக்கு முதலாளிகளின் உதவி அவசியமாயிருப்பதுபோலவே, முதலாளித்துவ வளர்ச்சிக்கும் நாலாவது அம்சம் அத்தியாவசியமாகும்.

பிரம்மாண்டமான தேச நலன்களினால் அமெரிக்க உற்பத்தி பெருகிற்று என்பது வாஸ்தவமே. ஆனால் இளகும் தன்மையோடு கூடிய அமெரிக்கத் துணிச்சலும் முயற்சியும் இல்லையெனில் அமெரிக்கர் இப்போதிருக்கும் உன்னத நிலையை அடைந்திருக்க மாட்டார்கள். அதன் உண்மையில் யாருக்காவது சந்தேகமிருப்பின் அவர் கடந்த 100 ஆண்டுகளில் அமெரிக்க, ரஷ்ய முன்னேற்றங்களை ஒப்பிட்டுப் பார்க்கலாம். ரஷ்யாவுக்கும் பிரம்மாண்டமான தேசநலன்கள் இருந்தன.

ரஷ்யாவுக்கும் பெரிய மார்க்கெட் இருந்தது. ஆனால் அன்றும் இன்றும் ரஷ்யாவுக்கு இல்லாதது இளகும் தன்மையுடைய சுதந்திரமே.'

"தவறுகளைத் திருத்திக்கொண்டு, சில சிறிய மாறுதல்களை அனுஷ்டித்துக்கொண்டு, அத்தியாவசியமான சுதந்திரங்களைப் பாதுகாத்துக்கொண்டு, தனிப்பட்ட முயற்சி தனது வெற்றியின் மூலம், அபேதவாதம் தவிர்க்கமுடியாதது என்ற நினைப்பை ஒழிக்கலாம்." என்று மார்க்விஸ் டபிள்யூ. சில்ட்ஸ் கூறுகிறார். "அதற்கு நல்லுணர்ச்சி தேவை. சிறிய மாறுதல்களையும் எதிர்த்து, 'ஸோஷலிஸம்' என்ற கூச்சலைக் கிளப்பிக்கொண்டிருந்தால், அமெரிக்க முதலாளித்துவ முறை விறைத்துப்போகும். மாறிவரும் நுட்பங்களுக்கும், நிலைமைகளுக்கும் தகுந்தவாறு சமாளித்துக் கொள்ளும் திறமையை நாம் இழந்து விட்டோம் என்றுதான் அதற்கு அர்த்தம்," என்கிறார்அவர்.

சென்ற நூற்றாண்டில் இருப்புப்பாதைகள் போடவும், விவசாயப்பண்ணைகளை ஏற்படுத்தவும் தனிப்பட்ட முயற்சி தாராளமாகச் சர்க்கார் நிலத்தைப் பெற்றுக்கொண்டது. இந்த நூற்றாண்டிலும் சமுதாயத்துக்கு உபயோகமான காரியங்களில் சர்க்கார் மான்யங்களைப் பெறத் தனிப்பட்ட முயற்சி தயங்கவில்லை. வருமானவரி, எட்டுமணி நேர வேலை, குழந்தைத் தொழிலாளிப் பகிஷ்காரம் போன்ற சீர்திருத்தங்களை வெகு காலம்வரை ஸோஷலிஸ்ட் முறைகள் என முதலாளிகள் எதிர்த்துவந்தபோதிலும், கடைசியில் அவற்றை ஒப்புக்கொண்டார்கள். அதனால் அவர்கள் பலனே அடைந்தார்கள். இன்று அமெரிக்க வருமான வரி மட்டிலுமே ரஷ்ய வருமானத்தைவிட அதிகமாக இருக்கிறது. இருந்தும் அமெரிக்கா முதலாளித்துவ நாடாக விளங்குகிறது.

ஆகவே, எதிர்காலத்தில் முதலாளிகளும் சர்க்காரும் ஒத்துழைக்கமுடியுமா என்பது கேள்வியல்ல. அவர்கள் ஒத்துழைப்பார்களா என்பதுதான் கேள்வி.

தனிப்பட்ட முயற்சியின் பாதுகாப்புக்கு அது சொந்த உத்தர வாதங்களைச் சிருஷ்டித்துக்கொண்டால், தனது சக்திக்கேற்ற வாறு பொது நலன்களைப் பாதுகாத்து, நோயாளிகளுக்கும் வயது முதிர்ந்தவர்களுக்கும் உதவி செய்து, லாபத்தைத் தொழிலாளர்களுடன் பங்கிட்டுக்கொண்டால், பொதுவாகத் தன் சக்திக்கேற்ற பொறுப்பையும் ஏற்றுக்கொண்டால், அமெரிக்க சமூகத்தில் தனிப்பட்ட முயற்சியின் எதிர்காலம் அசைக்கமுடி யாதது.

அதற்குப்பதிலாக, வீடுகள் கட்டவோ, நோயாளிகளுக்கு வைத்தியவசதி அளிக்கவோ, பள்ளத்தாக்குத் திட்டங்களை மேற் கொள்ளவோ பணம் கேட்கும்போதெல்லாம் முரண்டால், தானு கவே தனிப்பட்ட முயற்சி அவ்வசதிகளை ஏற்படுத்த முற்பட வில்லையானால், தனிப்பட்ட முயற்சி அழிந்துவிடுவது திண்ணமே. உலக சரித்திரத்திலேயே தனி ஸ்தானம் வகிக்கும்படி அமெ ரிக்காவை வளர்த்த பல குணதிசயங்களும் தனிப்பட்ட முயற்சி யோடு அழிந்துவிடும்.

நாலாவது அம்சம் இன்னும் வளரக்கூடிய திட்டம். அது கடைசியில் எந்த உருவத்தைப் பெறுகிறதென்பது இப்போது நிச்சயமாகச் சொல்லமுடியாத நிலைமைகளைப் பொறுத்திருக் கிறது. சர்க்கார் ஊதாரித்தனத்துடன் அத்திட்டத்தைப் பிணைத் துப்பேசுகிற முதலாளிகள் தம் அறியாமையைத்தான் வெளிப் படுத்துகிறார்கள். பூர்ணமாக யோசிப்பதற்குப் பதில் சில கோடி டாலர்களை வியர்த்தமாக்கத் தயாராயுள்ள ஆட்கள் சர்க்கார் ஊழியத்திலும் இருப்பதால், அவ்வாறு முதலாளி கள் நினைப்பது இயற்கையே.

நாலாவது அம்சம் சர்க்கார் ஆதிக்கத்தை வளர்க்கும் புது முயற்சி என்று நினைப்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அதற்கு நேர்மாறாக அது இருக்கமுடியும். தனிப்பட்ட முயற்சி தன் திறமையைக் காண்பிக்க இந்நூற்றாண்டிலே அளிக்கப் பட்ட சந்தர்ப்பங்களில் மிகப் பெரிதானதாக அது விளங்கக்

கூடும். ஆனால் இன்று உலகத்திலும், அமெரிக்காவிலும்கூட சர்க்கார் கட்டுப்பாடு விஸ்தரித்து வருகிறது. சர்க்கார் பணத்தை உபயோகித்துத் துணிச்சலான புதிய திட்டம் பெரிய பொதுஜன நிர்வாகமாக மாறிவிடுவது வெகு சுலபம். அவ்வாறு ஏற்பட்டுவிட்டால் தனிப்பட்ட முயற்சிக்கு அதில் பங்கே இருக்காது. இருந்தால் வெகு குறைவாக இருக்கும். அப்படி நேரிடாமலிருக்கச் சர்க்காரே தனிப்பட்ட முயற்சிக்குச் சந்தர்ப்பமளித்திருக்கிறது. நாலாவது அம்சத்தில் தனிப்பட்ட தொழில் முதலாளிகள் முக்கிய பங்கு எடுத்துக்கொள்வதன்மூலம் சர்க்கார் ஆதிக்கத்தைக் குறைக்கலாம்.

லாபகரமாகப் பங்கெடுத்துக் கொள்ளக்கூடிய துறைகளில் முதலாளிகள் முற்படவில்லையெனில், அவர்களுக்கே அவர்கள் மாற்றப்பட முடியாத தீங்கை இழைத்துக்கொண்டவர்களாவார்கள். தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காவது, உலகம் ஸ்திரம் பெறவும், உலக வர்த்தகம் பெருகவும் அமெரிக்கா வழி தேடவேண்டுமென்பது நிச்சயம்.

1945-ம் ஆண்டுக்கும் 1948-ம் ஆண்டுக்குமிடையே, 200 கோடி டாலர் தனிப்பட்ட அமெரிக்க மூலதனம் வெளிநாடுகளுக்குப் போயிற்று. அதில் 75 சதவிகிதம் பத்து அமெரிக்கக் கம்பெனிகள் போட்டது. அதில் பெரும்பங்கு கானடா, பிரேஸில், வெனிஸூலா, பனமா, மத்திய கேந்திரம் ஆகிய சில நாடுகளுக்கே போயிற்று. மூன்றில் இரண்டு பங்கு பெட்ரோல் உற்பத்தியைப் பெருக்கச் செலவிடப்பட்டது. தனிப்பட்ட தொழில் முதலாளிகள் 200 கோடி டாலர்களை மூலதனமாக அனுப்பிய காலத்தில் அமெரிக்க சர்க்கார் வெளி நாடுகளுக்கு 1,200 கோடி டாலர்களுக்கு அதிகமாகக் கொடுத்தது. அதல்லாமல் 10,000 கோடி டாலர்கள் மான்யமாக அளிக்கப்பட்டன.

தனிப்பட்ட மூலதனம் அதிகமாகப் போனாலொழிய, சர்க்கார் அயல்நாடுகளுக்கு பண உதவி செய்துவருவது தொடர்ந்தே

வரும். அதுமட்டுமில்லே, அயல்நாடுகளில் அமெரிக்க சர்க் கார் செலவும் அதிகரிக்கும். அப்போதுதான் சர்க்கார் ஆதிக் கம் தலைதூக்க ஆரம்பிக்கும். அமெரிக்கா சுதந்திரத்தை ஏற்றுமதி செய்வதை நிறுத்திஞல், மற்ற அமெரிக்க பொருள் களின் ஏற்றுமதி பயன்பெருது.

அமெரிக்காவில் தனிப்பட்ட முயற்சி மானமிழந்து, பல வீனமடைந்தால், பின்தங்கிய நாடுகளில் அது பிறக்குமுன்பே இறந்துவிடும்.

முதலாளிகள் சர்க்காரைச் சந்தேகிப்பதால் எப்படி நாலாவது அம்சத்துக்கு ஆபத்து உண்டாகுமோ அதேபோல மிதவாதிகள் முதலாளிகளே நம்பாததாலும் நாலாவது அம்சம் பாதிக்கப் படும். கடந்த சில வருஷங்களாகச் சர்க்காரின் அதிகாரம் அமெரிக்காவில் பெருகிவரும் நிலைமையை நேர்மையான மித வாதிகள் ஆதரித்து வந்திருக்கின்றனர். சர்க்காரே தங்களுக்கு இயற்கையாக ஏற்படக்கூடிய தோழனென்று அவர்கள் கருதி ஞர்கள். பலர் இன்னும் கருதிவருகிருர்கள். பிற்காலத் தில், அவர்களுடைய கருத்து தவருனது என்பது தெரியும். சமுதாய, பொருளாதாரத் தவறுகளைத் திருத்துவதற்கு ஜன நாயக சர்க்கார் உபயோகமான கருவி. ஆனுல் அதிக சக்தி வாய்ந்த சர்க்கார் தனிமனிதனின் இயற்கையான எதிரி. சிறிது காலம் அவனுக்குப் பணிவிடை செய்யும்படி அதைக் கட்டாயப் படுத்தலாம். ஆனுல் அது எதிர்த்து நின்று சீறலாம்.

முதலாளிகள் சேர்ந்து நடத்துவதால் நாலாவது அம்சத்தின் குணம் கெட்டுவிடுவதாகச் சில மிதவாதிகள் உள்ளூர நினைக் கிருர்கள். துணிச்சலான புதிய திட்டத்தைச் சர்க்காரே பூர்ண மாகக் கட்டுப்படுத்தி நடத்தவேண்டுமென்ற முயற்சிகள் பல செய்வார்கள்.

நாலாவது அம்சத்தைப் பற்றி பிலடெல்பியாவில் நடந்த ஒரு வாக்குவாதத்தில், திட்டம் போதிய அளவுக்கு முற்போக் கானதாயில்லையென ஒரு பிரசித்தி பெற்ற மிதவாதி கண்டித்

தார். முக்கியமாக, தனிப்பட்டோரின் பண உதவியைத் தவிர வேறு ஒன்றுக்கும் திட்டத்தில் இடம் இல்லையென்றார். தனிப் பட்டோர் பண உதவியென்பது எந்த சுயமரியாதையுள்ள நாடும் ஒப்புக்கொள்ள முடியாத நிபந்தனைகளுடன் கூடியதாகவே யிருக்கும் என்று அவர் கருதினார். தனிப்பட்டோரின் சுயேச் சையான முயற்சியை உலகம் பூராவும் பிரசாரம் செய்வதற்கு நாலாவது அம்சம் ஒரு கருவியாக விளங்குகிறதென அவர் கண்டித்தார்.

மற்றொரு பேச்சாளர் பொருளாதார மந்தம் ஏற்படாம லிருக்க அமெரிக்கா ஒவ்வொரு வருஷமும் 2,000 கோடி டாலர்களை எறிந்துவிடவேண்டியிருக்கிறதென்று கூறினார். அப் பணத்தைத் தற்சமயம் அமெரிக்கா தற்காப்புக்கான பொருள் களை உற்பத்தி செய்வதற்குச் செலவிடுகின்றதென்றும், அதற் குப் பதிலான உலக முன்னேற்றத்துக்குச் செலவிடப்படவேண்டு மென்றும் அவர் வாதாடினார். துணிச்சலான புதிய திட்டம் தனிப்பட்டோர் எடுத்து நடத்தமுடியாதபடி, அல்லது பங்கெடுத் துக்கொள்ளவும் முடியாதபடி மகத்தானதாய் இருக்கவேண்டு மென அவர் குறிப்பிட்டார்.

தற்காப்புத் திட்டங்களும் ஐரோப்பாவுக்கு அளிக்கும் உதவி யும் வேண்டாத பணத்தை வீணாக்க எடுத்துக்கொண்ட வழி கள் என்ற கருத்து அநேகமாக எல்லா அமெரிக்கர்களும் ஆமோதிக்கக்கூடியதல்ல. அமெரிக்கா தானே செலவாக்கு வதைவிட அதிகமாக உற்பத்தி செய்கிறதென்பது வாஸ்தவமே. உற்பத்தி செய்யும் பொருள்களையெல்லாம் அமெரிக்கர்கள் உப யோகித்துவிடாததற்குக் காரணம் அவ்வாறு உபயோகித்து விட்டால் தற்காப்பு இல்லாமல் போகுமென்பதேயாகும்.

ஆனால், 1949-ம் ஆண்டில் அமெரிக்க இறக்குமதியைக் காட்டிலும் ஏற்றுமதிப் பொருள்கள் 550 கோடி டாலர் அதிக மாக இருந்தன. அந்த வித்தியாசத்தை அமெரிக்கா குறைக் கலாம். அமெரிக்கா இன்னும் அதிகமாகப் பிறநாடுகளி

லிருந்து. பொருள்களைத் தருவிக்கலாம். தற்காப்புச் செலவு குறைய குறைய, பின்தங்கிய நாடுகள் பணத்தைத் தகுந்த முறையில் உபயோகித்துக்கொள்ளக் கற்றுக்கொண்டால், இன்னும் அதிகமாக வெளிநாடுகளுக்கு மூலதனம் அனுப்பலாம்.

வர வர, வெளிநாடுகளுக்குச் செல்லும் மூலதனம் ஒரு புதிய ரூபத்தை அடைந்துவருகிறது. பொதுஜனப் பணமும் தனிப்பட்டோர் பணமும் சேர்ந்து கலப்பிடமாக இருக்கிறது. உலக பாங்க் கடன்களை அதற்கு உதாரணமாய்ச் சொல்லலாம். தனிப்பட்டோர் முதலை பொதுஜன நிர்வாகம் கட்டுப்படுத்தி வருகிறது. பல பிரதேசங்களில் இத்தகைய கலப்பு முன்னேற்றமே எதிர்காலத்தில் விளங்கும் பொருளாதார முறையாக இருக்கலாம்.

தனிப்பட்ட முயற்சி நிச்சயமாகக் கெடுதலானது என்று சில அமெரிக்கர்கள் எப்படியோ கருதுகிறார்கள். அமெரிக்காவின் சக்தியும் சுபிட்சமும் தனிப்பட்ட முயற்சி முறையையும் மீறி உண்டானவை என்பது அவர்களுடைய நினைப்பு. எந்த எதேச்சாதிகார நாடும் சுதந்திர உலகத்தின் உன்னத ஸ்தானத்தை அடையவில்லையென்றாலும் அரசாங்கத்தின் அதிகாரம் அதிகரிப்பது கடாட்சமென்று அவர்கள் நினைக்கிறார்கள். அத்தகைய நினைப்பினால் நாலாவது அம்சம் நலியுறுவதோடன்றி அமெரிக்க வாழ்க்கை முறைக்கே ஆபத்து ஏற்படும். நல்ல வேளையாக புத்திசாலத்தனமான மிதவாதிகள் இந்த ஆபத்தை உணர்ந்திருக்கிறார்கள். "ஓர் அரசாங்கம் எவ்வளவு தூரம் வளரலாம்?" என்று அவர்கள் யோசிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

உலக நன்மையைப் புறக்கணித்துத் தனிப்பட்டோர் லாபமடைய நாலாவது அம்சம் உபயோகப்படாமலிருக்கப் பார்த்துக் கொள்வது மிதவாதிகளின் கடமை. திட்டம் அரசாங்கத்தின் அதிகாரத்தை வளர்க்காமலிருக்கக் கவனித்துக்கொள்வது முதலாளியின் கடமை. ஒரு தரத்தார் மற்றொரு தரத்தார் மிதமிஞ்சி நடக்காமல் கவனித்துக்கொள்ளலாம்.

சர்க்கார், தனிப்பட்டோர் ஆகிய இருதரப்பினருடைய பணம் அதிகமாகச் செலவு செய்து உலக முன்னேற்றத்திட்டத்தை நிறைவேற்றுவது விரும்பத்தக்கதாயும் சாத்தியமானதாயும் இருக்கலாம். ஆனால் அதற்கு இன்னும் சர்ந்தர்ப்பம் வாய்க்க வில்லையென்பதை முதலாளிகள் உணரவேண்டும். விதை விதைக்குமுன் நிலத்தை உழுது தயார் செய்யவேண்டுமென்பதை முதலாளிகள் அறியவேண்டும். தென்னமெரிக்கா, ஆசியா, மத்தியகேந்திரம் ஆகிய பிரதேசங்களில் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த உதவி செய்வது பாங்க் முதலாளியின் கணக்குப்படி சாத்தியமானதுமட்டுமல்ல. அது அமெரிக்காவின் நாடியைத் தட்டியெழுப்பும் லட்சியம். அது அமெரிக்க தன்மைக்கு இயற்கையாக உகந்தது.

நாலாவது அம்சத்தை எதிர்த்துக் கூறப்படும் வாதங்களை ஆராயவோ, அவற்றிற்குப் பதில் கூறவோ வேண்டியதில்லை யென்று சொல்லலாம். வெளிநாடுகளில் போடப்படும் மூல தனத்தைப் பாதுகாப்பது ஒப்பந்தங்களைப் பொறுத்திருக்கிறது. ஆனால் ஒப்பந்தங்களை நாடுகள் மீறலாம். ஆகையால் நாலா வது அம்சம் கூடாதெனச் சில பத்திரிகைகள் வாதம் செய் கின்றன. இவ்வாதத்தின் அபத்தத்தை நாலாவது அம்ச ஒப்பந்தம் மட்டுமின்றி எவ்வித ஒப்பந்தத்தைப்பற்றியும் சொல் லலாம். ஆனால் தனித் தேசங்கள் இருக்கும் வரை ஒப்பந்தங்கள் செய்துகொள்ளும் வழக்கமும் இருந்துவரும்.

மற்ற நிறத்தைச் சேர்ந்த மக்களுக்கு உதவி செய்து அவர் களை முன்னேறச் செய்வது அமெரிக்க நலனுக்கு உகந்ததல்ல ; அப்படிச் செய்வதால் ரஷ்யக் கரடிக்காகக் கோழிக்குஞ்சை வளர்ப்பதாகவே ஆகும் ; அல்லது ஜப்பானியர் ராணுவ பலம் பெற்று பூலோகத்தைத் தவிடுபொடியாகச் செய்ய உதவுவதே யாகும் என்று சிலர் வாதாடுகிறார்கள்.

சந்தேகமின்றி, பிரஸ்தாப ஆபத்து இருக்கத்தான் செய் கிறது. பின்தங்கிய தேசம் அபிவிருத்தியடைய அமெரிக்கர்

உதவி செய்தாலும் செய்யாவிட்டாலும், கம்யூனிஸ்டுகள் அத் தேசத்தைத் தங்கள் வசமாக்கிக் கொள்ளலாம். அல்லது தொழிலில் முன்னேற்றமடையும் உற்சாகத்தில் பின்தங்கிய நாடு தலைகால் தெரியாமல் நடந்துகொள்ளலாம். ஆனால் அத்தகைய ஆபத்து நாலாவது அம்ச உதவியில்லையென்றால் நிச்சயமாக ஏற்படக்கூடியதென்றால், நாலாவது அம்ச உதவி பெற்றால் அவ்வித ஆபத்து ஏற்படுவதற்குள்ள சந்தர்ப்பம் குறைவு என்று சொல்லலாம்.

சோவியத் சேனை சமீபத்தில் இருக்கிறது என்ற காரணத்தைத் தவிர, ஒரு நாடு கம்யூனிஸ்ட் கொள்கைக்கு இலக்காவதற்குள்ள ஒரே காரணம், அந்நாடு தன்னுடைய வறுமையையும், அறியாமையையும், சமூக அநீதிகளையும் உணர்வதேயாகும். அதைத் தடுப்பதற்குள்ள சிறந்த வழி அந்நாட்டின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும். அண்டை நாடுகளிலுள்ள செல்வத்தின்மீது மோகங்கொண்டு சோவியத் அரசாங்கம் அந்நாடுகளை ஜயிக்க விரும்பலாமென்றால், அந்நாடுகளின் ஸ்திரமும் பலமும் மேற்கத்திய நாடுகளின் கவனமும் ரஷ்யா அவ்வித முயற்சியில் ஈடுபடாமலிருக்கும்படி செய்யும்.

நியாயமிருக்கிறதோ இல்லையோ, ரஷ்யா தான் தாக்கப்படும் என அஞ்சுகிறதென்பதைப் பலர் மறந்துவிடுகிறார்கள். அமைதியான நாலாவது அம்சத்திட்டம் ரஷ்யாவுக்கும் மேற்கத்திய நாடுகளுக்குமிடையே நல்லுறவை வளர்க்கலாம்.

இந்தியாவோ, பிரேஸிலோ தொழில் முன்னேற்றம் அடைய அமெரிக்கா உதவி செய்தால் பிராங்கன்ஸ்டீன் பூதத்தைச் சிருஷ்டி செய்வதாகும் என்று சிலர் நினைக்கிறார்கள். சிலர் செல்வந்தர்களாகிப் பலர் வறுமையுடனே காலங்கழிக்குமாறு தொழில் முன்னேற்றம் உண்டாகுமென்று அவர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். அமெரிக்கா தன் அனுபவத்தைக் கொண்டு வழிகாட்டுவதால் அம்மாதிரிக் கோரமானத் தொழிலியல் வளர்ச்சிப் பின்தங்கிய நாடுகளில் ஏற்படாவண்ணம் பார்த்துக்

கொள்ளலாம். தீவிர தேசீய உணர்ச்சியோ, ஏகாதிபத்தியப் போக்கோ உண்டாகமால் கவனித்துக் கொள்ளலாம்.

ஒரு பின்தங்கிய தேசம் தானுகவே தொழில்வளத்தைப் பெருக்கிக்கொண்டால், பண்டைக்காலத்தில் பிற நாடுகள் செய்த பிழைகளை அதுவும் செய்வது இயற்கையே. அவ்வித தவறு கள் நேரிடாவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டுமானுல் அமெ ரிக்கா அந்நாட்டுடன் ஒத்துழைத்து உதவிபுரியவேண்டும்.

பிற நாடுகள் பலம்பொருந்தியவைகளாக இருப்பது அமெ ரிக்காவுக்கு ஆபத்து என்று கூறுவோருக்குப் பிறநாடுகள் பலவீனமாயிருப்பதால் அமெரிக்காவுக்கு அதைவிட ஆபத்து என்றுதான் பதில் சொல்லவேண்டும்.

மூலதனத்தோடு முதலாளித்துவத்தையும் அமெரிக்கா வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது என்று குற்றம் சாட்டப்பட்டால், அமெரிக்கா அக்குற்றத்தை ஒப்புக்கொள்ள லாம். பின்தங்கிய நாடுகளின் துயரம் தீர ஒரே வழியெனப் பொதுவுடைமைக் கொள்கை தீவிரமாகப் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. சரியான விதத்தில் தனிப்பட்டோர் முயற்சியை உபயோகித்துக்கொண்டால், அதைவிட எவ்வளவு உயர்ந்த பலன் கள் கிடைக்குமென்று கோடிக்கணக்கான மக்கள் உணர்ந்து கொள்ளச் சந்தர்ப்பமளிப்பதுப்பற்றி அமெரிக்கா அவமானப்பட வேண்டிய அவசியமில்லை.

நாலாவது அம்சம் உலகத்தினிடம் நம்பிக்கை வைக்கும் செயல். அமெரிக்க ஆதரவோடு, உலகத் தொழிலபிவிருத்தி பொது நன்மைக்காகவும், அமைதிக்காகவும், உயர்ந்த தத்து வத்துக்காகவும் உழைக்கும் என்ற உறுதியில் அத்திட்டம் பிறந்திருக்கிறது.

அனுபந்தம்—1

# இந்தியாவில் தயாராகிவரும் பிரதான முன்னேற்றத் திட்டங்கள்

**தாமோதர் நதி :**—வங்காளத்தில் தாமோதர் நதியில் வெள்ளங்கள் பாய்ந்து வரும்போது, அவை கரையோரத்திலுள்ள சொத்துக்களையும் மேல் மண்ணையும் அடித்துக் கொண்டுபோய் விடுகின்றன. பல குடும்பங்களையும் அடித்துக்கொண்டுபோய் விடுகின்றன. சில சமயங்களில் தாமோதர் நதி வெள்ளங்களால் மூன்று மாதங்களுக்குமேல் கிழக்கு இந்தியப் பாதையில் போக்குவரத்து தடைப்பட்டுவிடுகிறது. தாமோதர் நதி மீதும் அதன் உபநதிகள்மீதும் ஒன்பது அணைகள் கட்டுவதன் மூலம் வெள்ளங்களைக் கட்டுப்படுத்துவார்கள். அத்துடன் நீர்ப்பாசனம் 1,86,000 எக்கர்களிலிருந்து 7,50,000 எக்கர்களாக அதிகரிக்கப்படும். தாமோதர் பள்ளத்தாக்கிலுள்ள நிலக்கரிச் சொத்தை உபயோகித்துக்கொள்ளச் சுமார் 10,00,000 கிலோ வாட்டுகள் மின்சாரம் உற்பத்தியாக்கக்கூடிய யந்திரங்கள் நிர்மாணிக்கப்படும். இத்திட்டம் முடிய 10 வருஷங்களாகும். சுமார் 16 கோடி டாலர்கள் செலவாகும். திட்டத்தினால் 50 லட்சம் ஜனங்கள் பலனடைவார்கள்.

**ஒரிஸ்ஸா நதிகள் :**—வறுமை மிகுந்த ஒரிஸ்ஸா பள்ளத்தாக்கு வழியாக ஓடும் தண்ணீர் போல்டர் அணைக்கட்டு நீர்த்தேக்கத்தை மூன்று தரம் நிரப்பக்கூடியதாகும். மஹாநதியில் ஓடும் நீரைத் தடுத்துச் சேமித்தால் 10,00,000 எக்கர்களுக்கு நீர்ப்பாய்ச்சலாம். ஒரிஸ்ஸா, மத்திய பிரதேசம், கிழக்கத்திய ராஜ்யங்கள் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் மலிவாகக் கிடைக்கும். கால்வாய்கள் வழியாகக் கடலிலிருந்து மத்தியப்பிரதேசம் வரை 350 மைல்களுக்கு மேல் உள்நாட்டில் கப்பல்கள் செல்லலாம்.

**கோதாவரி நதி :**—அதற்கும் தெற்கே கோதாவரி நதியோரமாக உலகத்திலேயே மிக விரிவான வாய்க்கால் முறையை இந்தியர் சிருஷ்டி செய்துவருகிறார்கள். அதனால் 37,50,000 ஏக்கர்கள் பலனடையும். சுமார் 20,00,000 ஏக்கர்கள் நீர்ப்பாசனம் செய்யப்படும். சென்னை ராஜ்யத்தின் உணவுப்பற்றுக் குறை 50 சத விகிதத்துக்கு மேல் குறைந்து போகுமளவுக்கு அதிகப்படி நெல் இங்குள்ள நஞ்சை நிலங்களில் விளையக்கூடும். வாய்க்காலில் ஓடும் தண்ணீரிலிருந்து 75 கோடி கிலோவாட்டு-மணிகளுக்குச் சமமான மின்சாரம் உற்பத்தி செய்யலாம். தற்சமயம் பெரியதொரு மின்சார நிலையம் கட்டப்பட்டு வருகிறது. ஏழரை கோடி டாலர் செலவாகும் கோதாவரி திட்டம் இரும்புத் தொழிற்சாலைகள், காகிதத் தொழிற்சாலைகள், சிமிட்டித் தொழிற்சாலைகள், உரம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆகியவற்றிற்கு மின்சார சக்தி அளிக்கும். இரும்பு, மைக்கா, மாங்கனீஸ், காரீயம், சுண்ணாம்புக்கல் போன்ற சுரங்கங்களைத் திறந்து தாதுப்பொருள்களை எடுக்க இத்திட்டம் உதவும்.

**துங்கபத்ரா நதி :**—இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தரம், பருவங்கள் தோன்றுவதைப் போல் தவறாமல், தென்னிந்தியாவில் வறண்டுள்ள தக்ஷிணத்தில் மக்கள் உணவுப் பற்றுக் குறையாலோ அல்லது பஞ்சத்தாலேயோ வாடுகின்றனர். இங்கே ஏழரை லட்சம் ஏக்கர்களுக்கு நீர்ப்பாய்ச்சவும், எண்பது கோடி காலன்கள் தண்ணீரை அடக்கிவைக்கக்கூடியதுமான நீர்த்தேக்கத்தை இந்தியர்கள் கட்ட முயன்றுவருகிறார்கள். துங்கபத்ரா அணைக்கட்டுகளினால் உற்பத்தியாகும் 50 கோடி கிலோவாட்டு-மணி மின்சார சக்தியைப் புது தங்கச் சுரங்கங்கள், சர்க்கரைச் சுத்தகரிப்புச் சாலைகள், எண்ணெய் மில்கள் முதலியன உபயோகித்துக்கொள்ளும்.

**டிஸ்டா நதி :**—தண்ணீர் ஓடும்போது, வங்காளத்திலுள்ள சிறு நதிகள் சுற்றுப்புறத்திலிருப்பது மிகவும் நன்றாக இருக்கிறது என்கிறார்கள் இந்தியர்கள். ஆனால் அவற்றில் இன்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும், நாளை அவை வறண்டு

கிடக்கும். அதனால், மகத்தான கங்கை, டிஸ்டா, பிரம்ம புத்ரா நதிகளிலிருந்து தண்ணீர் எடுத்து இச்சிறு நதிகளில் எப்போதும் நீரோட்டம் இருக்கத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. கீழ் ஹிமாலயத்தில் தோன்றப்போகும் டிஸ்டா அணைக்கட்டுத் தண்ணீரை 40 மைல்களுக்குப் பின்னடக்கி, கால்வாய்கள் மூலம் சிறு ஓடங்களுக்குத் தண்ணீரை அளிக்கும். ஓராண்டில் ஒரு பயிர் விளையுமிடங்களில் இரு பயிர்கள் விளையும். அதனால் உலகிலேயே மிகப் பெரிய வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையென்று சொல்லப்படும் தொந்தரவு தீரும். கோடிக் கணக்கான இந்திய விவசாயிகளுக்கு வருஷத்தில் ஆறு மாதங்களுக்கு இப்போது வேலையில்லை. இத்திட்டத்தினால் அவர்களுக்கு வேலையிருக்கும்.

## அனுபந்தம்—2 *

# இந்திய-அமெரிக்கத் தொழில் நுட்ப ஒப்பந்தம்

1952-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ந் தேதியன்று இந்திய சர்க்காரும் அமெரிக்க சர்க்காரும் தொழில் நுட்ப ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டன. அன்று கையெழுத்தான ஒப் பந்தத்தைப்பற்றி இந்திய சர்க்கார் அறிக்கை பின்வருமாறு :

புது டில்லியில் இன்று இந்தியாவும் அமெரிக்காவும் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இந்தியாவில் பொரு ளாதார அபிவிருத்தித் திட்டங்கள் வேகமாக நடைபெறு வதற்கு அவ்வொப்பந்தப்படி அமெரிக்க நிதி உதவி கிடைக்கும். ஒப்பந்தத்தில் இந்தியாவின் சார்பாகப் பிரதம மந்திரி, ஸ்ரீ ஜவஹர்லால் நேரு கையெழுத்திட்டார். அமெரிக்க சர்க்கார் சார்பாகக் கையெழுத்திட்டவர் இந்தியாவுக்கு அமெரிக்க ஸ்தா னிகராயுள்ள மிஸ்டர் செஸ்டர் பௌல்ஸ்.

இந்த ஒப்பந்தப்படி அமெரிக்க சர்க்கார் ஐந்து கோடி டாலர் கொடுத்து உதவுவதாக ஒப்புக்கொண்டுள்ளது. இத் தொகை 1952-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் தேதிக்குள் இதற்கென ஒதுக்கிவைக்கப்படும். அது இந்திய-அமெரிக்கத் தொழில் நுட்ப ஒத்துழைப்பு நிதி என்ற பெயர் பெறும் ஒரு நிதியில் போட்டுவைக்கப்படும். இந்த நிதியினால் பொரு ளுதவி பெற்று நடத்தப்படும் திட்டங்களுக்கு இந்திய சர்க்காரும்

---

*இது ஆங்கில மூலத்தில் இல்லை. நாலாவது அம்சத்தைப்பற்றி வாசிக்கும் தமிழர்கள் இந்திய-அமெரிக்க நாலாவது அம்ச ஒப்பந்தத்தின் ஷரத்துகள் பூராவையும் அறிய விரும்பலாமாகையால் அது இந்நூலில் சேர்க்கப்பட் டிருக்கிறது.

ரூபாய்களாக நிதி உதவி செய்ய இணங்கியுள்ளது. ஆகவே திட்டத்திற்கு இவ்வாறு கிடைக்கக்கூடிய மொத்த தொகை 50 கோடி ரூபாய்க்கும் அதிகமாகவே இருக்கும். அதாவது 10 கோடி டாலராக இருக்குமென மதிப்பிடப்படுகிறது.

இந்நிதியைக் கொண்டு நடத்தப்படும் திட்டங்கள் இந்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்துடன் இணைக்கப்படும். மத்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார்கள் ஆகியவற்றின் நெருங்கிய ஒத்துழைப்பைப் பெற்று அத்திட்டங்கள் நடத்தப்படும். முக்கியமாக, விவசாயத்தின் தரத்தை உயர்த்தி, நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்க முனையும் திட்டங்களுக்கே இந்நிதி பெரும்பாலும் பயன்படுத்தப்படும். இதனால் உணவுக்கு வெளிநாட்டு இறக்குமதியைச் சார்ந்திருக்கும் இந்தியாவின் தற்கால நிலைமை திருந்தும். இந்தியா ஓராண்டுக்குச் சராசரி 50 லட்சம் டன்கள் வரை உணவுப் பொருள்களை இறக்குமதி செய்கிறது. அதனால் நாட்டுக்கு 250 கோடி ரூபாய் செலவாகி, வெளிநாடு செல்லுகிறது. இந்நிலைமை இல்லாவிட்டால் மிகவும் தேவையாயுள்ள புதிய கைத்தொழில்களை விருத்தி செய்ய அந்தப் பணமெல்லாம் கிடைக்கக்கூடும்.

இந்த நிதியின் மூலமாய்ச் சமுதாய அபிவிருத்தித் திட்டம் ஒன்றை நடத்தவும் இரு சர்க்கார்களும் இணங்கியுள்ளன. இச்சமுதாய அபிவிருத்தித் திட்டம் மிக • மிக முக்கியமானதொன்றாகும். இந்த திட்டம் நாட்டின் பல்வேறு இடங்களில் 50 நகர்-நாட்டுப்புற அபிவிருத்தி வட்டாரங்களை அமைக்க எண்ணியிருக்கிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் மொத்தம் சுமார் இரண்டு லட்சம் மக்கள் கொண்ட சுமார் 300 கிராமங்கள் இருக்கும். இந்த வட்டாரங்களில் பல புதிய ஆற்றுப்பள்ளத் தாக்குத் திட்டங்கள் நடக்கும் இடங்களையொட்டி இருக்கும், வேறு சில வட்டாரங்கள் இப்புதிய நிதியினாலும் மத்ய சர்க்காரினாலும் ராஜ்ய சர்க்காரினாலும் பொருளதவி பெற்றுப் புதிதாய் நடக்கும் குழாய்க் கிணறு அபிவிருத்தித் திட்டங்கள் உள்ள இடங்களைச் சுற்றி அமையும்.

உத்தரப் பிரதேச சர்க்கார் எட்டாவா ஜில்லாவில் ஏற்கனவே ஓர் அபிவிருத்தித் திட்டத்தை நடத்திவருகிறது. பரீதாபாத், நீலக்கோடி என்ற இடங்களில் அகதிகளுக்காக குடியிருப்பு கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றால் பெற்ற அனுபவம் மேலே குறிப்பிட்ட நகர-நாட்டுப்புற அபிவிருத்தித் திட்டத்துக்குப் பெருந்துணையாக இருக்கும். எட்டாவாவில் 100 சதுர மைல் பரப்புள்ள இடத்தில் 102 கிராமங்களில் வாழும் 79,000 பேர் தங்களுடைய ஒத்துழைப்பினாலும், திட்ட வட்டமான முயற்சியினாலும் மூன்று ஆண்டுகளுக்குள் உணவு உற்பத்தியை மிகவும் பெருக்கியுள்ளனர் என்பது நினைவிருக்க லாம். மலேரியாவையும், ஆடுமாடுகளுக்கு வரும் கழிச்சல் முதலிய நோய்களையும் அவர்கள் பெரிதும் நீக்கிவிட்டனர். எழுத்தறிவும் அதிகமாகியுள்ளது. பரீதாபாத், நீலக்கோடி ஆகிய இடங்களில் நல்ல திட்டம் அமைத்ததினாலும் மக்கள் ஊக்கமாய் உழைத்ததினாலும் மூன்று ஆண்டுகளுக்குள் நவீன அமைப்புடைய குடியிருப்புகள் அமைக்கப்பட்டன. வீடுகள் இன்றைய வசதிகளெல்லாம் கூடியதாய்க் கட்டப்பட்டன. நல்ல பள்ளிக்கூடங்களும், சீர்திருந்திய பொதுஜன சுகாதார வசதி களும், தொழில் துறையில் பலதிறப்பட்ட வகைகளும் வாய்ப் புகளும் ஏற்பட்டுள்ளன.

அபிவிருத்தித் திட்டங்களில் சிலவற்றிற்குக் கிடைக்கும் தொகை கடனாகக் கொடுக்கப்படும். கடனைத் திருப்பி அடைக்க அடைக்க, இப்பணம் புதுத் திட்டங்களுக்குப் பயன் படுத்தப் படும். இந்தியா-அமெரிக்க நிதியின் வேலையைப் பெருக்கு வதற்கு, இனிவரும் ஆண்டுகளில் மேன்மேலும் அதிகமாக நிதிகள் கிடைக்குமெனவும் நம்பப்படுகிறது.

இந்திய மத்தியக் கமிட்டி ஒன்றை நிறுவுவதற்கும் இந்த ஒப்பந்தம் வழி வகுத்துள்ளது. ஒப்பந்தத்தால் நடைபெறப் போகும் திட்டங்களைப்பற்றிய கொள்கைகளை நிர்ணயிப்பதும், அத்திட்டங்களைப் பொதுப்படையாய் மேற்பார்ப்பதும் அந்த மத்தி-

யக்கமிட்டியின் வேலையாகும். அக்கமிட்டியின் அங்கத்தினர்கள் இந்திய சர்க்காரால் நியமிக்கப்படுவர். இந்தியாவில் அமெரிக்கத் தொழில் நுட்ப ஒத்துழைப்பு நிர்வாகத்தின் பிரதிநிதியாக இருக்கும் கிளிபோர்டு வில்சன் அக்கமிட்டி ஆலோசகராக துணை செய்வார். கமிட்டி இந்தியாவின் பல இராஜ்யங்களிலுள்ள தக்க அதிகாரிகளைக் கலந்தாலோசித்து அமெரிக்கா அளித்துள்ள உதவி எவ்வகைத் திட்டங்களில் மிகுந்த பலனளிக்கும் என்பதை உணர்ந்து, அவ்வகையான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களையும் தொழில் நுட்ப ஒத்துழைப்புத் திட்டங்களையும் வளர்க்கும் பொறுப்புடையதாகும்.

அமெரிக்கா அளிக்கின்ற தொகை போட்டு வைக்கப்படும் நிதியாகிய இந்திய அமெரிக்க நிதி கூட்டாக நிர்வகிக்கப்படும். இதற்கு இந்திய சர்க்கார் நியமிக்கும் அதிகாரி மத்திய நிதி மந்திரி காரியாலய அதிகாரியாக இருப்பார். கிளிபோர்டு வில்சன் அமெரிக்க சர்க்கார் நியமிக்கும் அதிகாரியாக இருப்பார். இத்துறையில் அவர் இந்தியாவில் உள்ள அமெரிக்க ஸ்தானீகரின் கீழ் வேலை பார்ப்பார். பொருளாதார அபிவிருத்தித் திட்டம் ஒவ்வொன்றையும் மத்திய கமிட்டி அங்கீகரித்ததும், இந்த நிதியிலிருந்து அதற்குப் பணம் கொடுக்கப்படும். கூட்டாக நிர்வாகம் செய்பவர் இரு சாராரும் அதை சரியென்று ஒப்புக்கொள்வார்கள்.

இவ்வாறு நடக்கும் ஒவ்வொரு திட்டத்தைப்பற்றியும் மத்திய கமிட்டி அறிக்கை தயாரிக்கும்; மேலும் கால் வருஷத்துக்கு ஒரு முறையும் ஒரு அறிக்கை தயாரிக்கப்படும். கால் வருஷ அறிக்கை பல்வேறு திட்டங்களும் எவ்வளவு எவ்வளவு நடந்தேறியுள்ளன என்று விளக்கும் திட்டத்தைப் பற்றிய அறிக்கையோ நடந்த வேலை அனைத்தையும், அதன் நோக்கங்களையும், அதற்குக் கிடைத்த பொருளுதவியையும், மற்றும் அதற்குரிய விஷயங்களையும் பற்றிய முழுக் குறிப்புகள் எல்லாம் அடங்கியிருக்கும்.

ஆண்டு அறிக்கையொன்றும் இந்திய சர்க்காரால் தயா ரிக்கப்படும் : இது ஒவ்வொரு திட்டமும் எவ்வளவு நடந்தேறி யுள்ளது என்றும், இந்தியாவின் பொருளாதார செழு மைக்கு அதனுல் என்ன நன்மை ஏற்படக்கூடும் என்றும் இந்திய அமெரிக்க நிதிக்கு வருவாயும் செலவும் என்னென்ன என்றும் எடுத்துக்கூறும்.

அமெரிக்க வெளிநாட்டு இலாகா கீழ்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளது :—

1951-ம் நிதி வருஷத்தில் விவசாயம், தொழில் வளர்ச்சி, கல்வி, பொது சுகாதாரம், கிராம அபிவிருத்தி, உலோக, மின் சார முன்னேற்றம், கைத்தொழில், விஞ்ஞானச் சோதனைகள் இவற்றிற்கு 7,11,000 டாலர் நாலாவது அம்சத் திட்டத்தின்படி ஒதுக்கி வைக்கப்பட்டது.

" இதுகாறும் ஏறக்குறைய 15 லட்சம் டாலர் மேற் கூறிய காரியங்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டாயிற்று. அதில் 1,85,000 டாலர் 48 இந்தியர் மேற்கூறிய துறைகளிலும் அவற் ருேடு தொடர்புள்ள துறைகளிலும் பயிற்சி பெறுவதற்கு அளிக் கப்படும்.

இந்த ஆண்டில் அடுத்த நிதி வருஷத்தில் இன்னும் 25 லட்சம் டாலர் அதிகமாக அமெரிக்கா கொடுக்கும். அத் தொகை அமெரிக்கத் தொழில் நுட்ப நிபுணர்கள் இந்தியாவில் வேலை செய்வதற்குச் செலவழிக்கப்படும். எனவே (புதிய ஒப்பந்த) நிதியேயன்றி, இந்தியா 40 லட்சம் டாலரும் பெறு கின்றது.